# கிளைவ் முதல் . . . 
# . . . ராஜாஜி வரை

(இந்திய சரித்திரத்தில் இரு நூற்றாண்டு)


பி. ஸ்ரீ.

எழுதியது.



அசோகா பப்ளிஷிங் ஹவுஸ்,

250, குட்ஸ் ஷெட் தெரு, மதுரை.



உரிமை பெற்றது]



[விலை ரூ. 3-0-0

முதல் பதிப்பு —1949
இரண்டாம் பதிப்பு—1954

Printed at the B. N. Press, Mount Road, Madras.



PHOTO: *Copyright, Dept. of Archaeology.*

# அணிந்துரை

வரலாற்றுப் பாடம் என்றால் மாணவர் சிலர்க்கு வேப்பங் காயாக உள்ளது. காரணம் இரண்டு: ஒன்று, தேர்வுகளில் கேள்வி கேட்பவர், மாணவர்களின் அறிவை எதிர்பார்க்கும் கேள்விகள் கேட்காமல், நினைவாற்றலை எதிர்பார்க்கும் கேள்விகள் கேட்பது. நினைவில் நிற்பதற்காக மாணவர்கள் மனப்பாடம் செய்யவேண்டியிருப்பதால், திரும்பத் திரும்பப் படிப்பதைச் சுமையாகக் கருதி வெறுக்கின்றனர். மற்றொரு காரணம், வரலாற்று நூல்கள் எழுதுவோர், வாழ்க்கைச் சுவை தோன்ற அவற்றை எழுதாமல், அரசர் முதலானவர்கள் பிறந்த நாள் இடம் போர்கள் நிகழ்ந்த இடம் காலம் நிலைமை முதலியவற்றைப் பட்டி போல் அடுக்கிவைத்து எழுதுவது. இந்த இரண்டாம் குறை இல்லாமல் சுவை பட எழுதப்படும் வரலாற்று நூல்களைக் காண்பது அரிதாக உள்ளது. கிளைவ் முதல் ராஜாஜி வரை என்ற இந்நூல் இந்தக் குறை இல்லாமல் சுவை மிகுந்த அமைப்புடன் நல்ல தமிழில் விளங்கும் வரலாற்று நூல் ஆகும்.

கிளைவ் வரலாறும் கிளைவால் மாறிய இந்திய வரலாறும் கண்முன் நடப்பனபோல் காட்டப்பட்டுள்ளன. இந்த நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டு நிலையும் தமிழர் நிலையும் இவ்வாறு இருந்தன என்று படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. எழுத்தாலும் பேச்சாலும் செல்வாக்காலும் நாட்டை அவ்வப்போது நல்வழிப்படுத்தி

வந்த தலைவர்களின் பெருமையும் தக்க இடங்களில் எடுத்துரைக்கப்படுகின்றது. 'மிகினும் குறையினும் நோய் செய்யும்' என்பது புகழுரைக்கும் பொருந்துகின்றது. அவ்வாறு குற்றம் ஏற்படாதவாறு அளவுபட அமைந்த புகழுரைகள் நடுநிலைமை என்னும் சிறப்புடன் விளங்குகின்றன.

உலகப் போக்கும் அதற்குரிய அளவில் ஆராய்ந்து உரைக்கப்பட்டுள்ளது. இராமலிங்க அடிகளின் சன்மார்க்கம் முதல் அன்னிபெசண்ட் அம்மையாரின் இயக்கம் வரையில் யாவும் அங்கங்கே போதுமான விளக்கம் பெற்றுள்ளன. புதிய இந்தியா, தேசத் தந்தை என்ற பகுதிகள் உள்ளத்தை உருக்குகின்றன. 'ஜவாஹரும் ராஜாஜியும்' என்னும் இறுதிப் பகுதியில் கிளைவின் மதியையும் விதியையும் மீண்டும் நினைவூட்டி முடிப்பது அழகாக உள்ளது.

இந்திய சரித்திரத்தில் இரண்டு நூற்றாண்டுகளை— நம் காலத்துடன் பின்னிக்கிடக்கும் இரண்டு நூற்றாண்டுகளை ஆசிரியர் திறம்பட எழுதியுள்ளார். சுவை மிக வேண்டும் என்ற காரணத்திற்காக, காலம் இடம் முதலிய குறிப்புக்களைப் புறக்கணிக்கவில்லை. அவற்றை விடாமல் அமைத்து நயமுற விளக்குவதுதான் வரலாற்றுக்கலை. இந்தக் கலையில் வல்லவர்க்கே இது கைகூடும். இலக்கியக் கலையில் தோய்ந்த ஆசிரியர் பி. ஸ்ரீ. அவர்கள் இந்தக் கலையிலும் தேர்ந்தவராக இருப்பது பாராட்டத் தக்கது. ஆங்கில அறிஞர் டாக்டர் ஜான்ஸனின் வரலாற்றை யார் வேண்டுமானாலும் எழுதியிருக்கலாம்.

ஆனால் பாஸ்வெல் எழுதியதைப்போல் சுவையாக எழுதி யிருக்க முடியுமா என்பது ஐயம். பாஸ்வெல், வாழ்க்கை யோடு இயைந்த இலக்கியக் கலையில் திளைத்தவராக இருந்த காரணத்தால்தான் அந்த வரலாற்றிற்கு உயி ரூட்டி எழுத முடிந்தது. உயிரூட்டும் இந்த ஆற்றல் இலக்கியம் பயின்றவர்களுக்கு இயல்பாக அமையும் என் பதற்கு இந்த நூல் சான்றாக உள்ளது. மனோன்மணீய ஆசிரியரின் கருத்தோவியங்களும் பாரதியாரின் கவிதை மலர்களும் வரலாற்று உண்மைகளுக்கு அணி செய்து விளங்குவதையும் இதில் காணலாம்.

ஆசிரியரின் நன்முயற்சி, தமிழகம் மகிழ்ந்து வரவேற் கத் தக்கதாகும்.

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

# முகவுரை

'சரித்திரத் தேர்ச்சி கொள்' என்பதும் 'ரஸத்திலே தேர்ச்சி கொள்' என்பதும் பாரதியாரின் புதிய ஆத்தி சூடி. சரித்திரத்தை விஞ்ஞான மனப்பான்மைக்குக் குறைவின்றி இலக்கியச் சுவை தோன்ற ஒரு புதுமுறை யில் ஆராய்ந்து எழுதிப்பார்க்க வேண்டுமென்பது எனது நெடுநாள் அவா. இத்தகைய சரித உணர்வு நம் மக்க ளிடையே—சிறப்பாக இளைஞர்களிடையே—தழைக்கும் போது, அண்மையில் விடுதலை பெற்றிருக்கும் தாய்நாட் டில் கடமைகளையும் உரிமைகளையும் உண்மையாக அறிந்து பொறுப்புக்களை நன்குணர்ந்து தொண்டாற்றும் மனநிலை ஏற்படும். இம் மனநிலை விரைவில் ஏற்பட வேண்டும் என்னும் பேரவா 'ஆனந்த விகட'னில் 'கிளைவ் முதல் ராஜாஜி வரை' என்னும் தலைப்புடன் சில கட் டுரைகளை எழுதும் முயற்சியில் என்னைத் தூண்டிவிட் டது. அக் கட்டுரைகளில் சென்ற இரண்டு நூற்றுண்டு களின் சரிதத்தையும், அத்தகைய சரிதப் பின்னணியில் 'வாராது போல வந்த மாமணி'யாகிய சுதந்திரம் வந்து சேர்ந்த கதையையும் நூற்றுக் காட்ட முயன்றேன்.

நமது தேசத்தின் நீண்டகால வரலாற்றிலே இந்த இரண்டு நூற்றுண்டுகளுக்கும் நம் காலத்துடன் நெருங் கிய தொடர்பு இருப்பதால், இச்சரிதத்தைத் தற்கால இந் தியாவின் சரிதமென்று கூறுகிறோம். சாதாரணமாக இந்தச் சரித்திரத்தை எழுதுவோர் ஆங்கில ஆதிக்கத்தின் தொடக்கத்திலிருந்து தொடங்கி, '1757-ல் கிளைவ் பிளாசியில் அடைந்த வெற்றி' '1760-ல் வந்தவாசி யுத்தம்' '1764-ல் பக்ஸார் யுத்தம்' '1770-ல் வங்காளப் பஞ்சம்'

'1774-ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் முதல் கவர்னர் ஜெனரலானது' '1775-ல் முதல் மகாராஷ்டிர யுத்தமும் நந்தகுமாரைத் தூக்கிலிட்ட நிகழ்ச்சியும்' என்றெல்லாம் செய்திகளைப் பெய்து கடைசியாகக் கடைசி கவர்னர் ஜெனரலாக ராஜாஜி வந்ததையும், சுதந்திரம் பிறந்ததையும் சொல்லி முடித்துவிடக் கூடும். இத்தகைய சரித்திரத்தில் மக்கள் நிலையும், அந்த நிலையை உருவாக்கியுள்ள நாட்டு நடப்பும், மொழி வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி, கருத்து வளர்ச்சி, சமுதாய முன்னேற்றம் முதலான முக்கிய அம்சங்களும் வற்புறுத்தப்படுவதில்லை. பொது மக்கள் வாழ்க்கையுடன் நெருங்கி உறவாடும் ஜனப் பிரதிநிதிகளைக் காட்டிலும் அவ்வப்போது வந்துபோன அரசப் பிரதிநிதிகளும் கவர்னர் ஜெனரல்களும் வாசகர்களின் உள்ளத்தைக் கவருவதுண்டு. இத்தகைய சரித்திரத் தேர்ச்சி மாணுக்கர்கள் பின்னுளில் தேசத் தொண்டாற்றிச் சுதந்திர இந்தியாவை உலகத்திற்கே ஒரு புதுமையாகக் கட்டி நிறுத்துவதற்குப் பயன்படுமா? இவ் வரலாற்றுப் படிப்பில் சுவைதான் ஏற்படுவதுண்டா? எனவே என் கட்டுரைகளை அத்தகைய குறைகளுக்கு இடமின்றி உருவாக்க முயன்றேன்.

இப்போது அக்கட்டுரைகளை மாணுக்கர்களுக்குப் பெரிதும் பயன்படும் முறையில் முற்றத் திருத்தியும் புதுக்கியும் ஒழுங்கு செய்து இப்புத்தக வடிவமாக்கியுள்ளேன். இந்நூலில் நம் தமிழகத்திற்கும் இந்நாட்டின் உரிமைச் செல்வமாகிய கருத்தோவியங்களுக்கும் உரிய இடம் கிடைத்திருப்பதையும் காணலாம். அதே சமயம் 'கூவலாமை' மனப்பான்மையின்றி மூட நம்பிக்கையின்றி நம் தமிழ் மக்கள் சரிதநூலைப் பகுத்துணர்ந்து இந்தியப் பெருமக்களாகவும் உலக நாகரிக மக்களாகவும், 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்பதாகத் தொன்றுதொட்டு

வந்திருக்கும் தனிப் பெருங் குறிக்கோளுடன் வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற கருத்தும் இலைமறை காய்போல் இப்புத்தகத்தினிடையே புலனுகும்.

இந்நூற்பதிப்பைத் தமது அணிந்துரையால் அணிந்து அன்புடன் சிறப்பித்து உதவிய டாக்டர். மு. வரதராசனுருக்கு என் நன்றி உரியதாகும்.

பி. ஸ்ரீ.

# பொருளடக்கம்


| அத். | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பிளாசியும் சென்னையும் | ... | 13 |
| 2. | விதியும் மதியும் | ... | 24 |
| 3. | தமிழர் நிலை | ... | 32 |
| 4. | ஏகாதிபத்திய வெற்றி | ... | 49 |
| 5. | காரிருளில் ஒரு கைவிளக்கு | ... | 69 |
| 6. | புரட்சி—வெள்ளம் | ... | 81 |
| 7. | புரட்சிப் போருக்கு முன்னும் பின்னும் | ... | 101 |
| 8. | தமிழர் வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு | ... | 116 |
| 9. | காங்கிரஸின் தோற்றமும் பிள்ளைப் பருவமும் | ... | 141 |
| 10. | புதிய இந்தியா | ... | 159 |
| 11. | தேசத் தந்தையார் | ... | 180 |
| 12. | ஜவாஹரும் ராஜாஜியும் | ... | 199 |

# கிளைவ் முதல் ராஜாஜி வரை

## (இந்திய சரித்திரத்தில் இரு நூற்றாண்டு)

---

## அத்தியாயம் 1

## பிளாசியும் சென்னையும்

பள்ளிச் சிறுவன் ஒருவன் தேர்வுத்தாளில் "கிளைவ் பிளாசியில் நடைபெற்ற போரிலே வெற்றி பெற்ற தெப்படி?" என்ற வினாவைப் பார்த்ததும், வாக்கியமாகவோ வார்த்தையாகவோ ஒன்றும் விடையெழுதாமலே எந்த ஆசிரியரும் எதிர்பார்த்திருக்க முடியாத எழுத்துச் செட்டுடன் அழுத்தமாகப் பளிச்சென்று ஒரு பெரிய வியப்புக்குறியை மாத்திரம் பொறித்துவிட்டானும். வரலாற்றுப் பாடம் படித்திராத மாணுக்கனுக்குக் கிளைவ் துரையின் வெற்றி ஒரே வியப்பாகத்தான் தோன்றியது. அந்தப் போர் குறித்து வரலாற்றுப் புத்தகங்களை வாசிப்பவரும், "**இந்தியாவில் கிளைவுடன்**" என்னும் புத்தகத்தின் ஆசிரியர் திரு.ஜி. ஏ.ஹெண்டி (G.A. Henty) கூறியவாறு சுமார் மூவாயிரம் பேர் கொண்ட சிறு படையுடன் கிளைவ் துரை, ஐம்பதினுயிரம் காலாளும் ஆயிரக் கணக்கான குதிரை வீரரும் கொண்ட பெரிய சேனையுடன் போரிட்ட எதிரியை எவ்வாறு தாக்கி வென்றெழித்தானென்பது குறித்து வியப்புறுவது இயற்கையே. ஆனல் வரலாற்று முறையில் ஊடுருவி உண்மை காண்போருக்கு வியப்புணர்வு தோன்றக் காரணமில்லை.

1757-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ந் தேதி காலை எட்டு மணி; இளம்பரிதியின் கதிர்களில் ஒளியும் இனிமையும் மாறிச் சூடு பிடித்துவந்த தருணம். வெறி பிடித்தவர்போல், அணிவகுத்து நின்றவர்கள் ஒருவரையொருவர் சுடத் தொடங்கிவிட்டனர். முதலில் பிரெஞ்சு வீரர் ஆங்கிலேயப் படைவீரர் சிலரைக் குறி தவருது சுட்டுத் தள்ளினர். கிளைவின் படை சற்றுப் பின் வாங்கி ஒரு மாந்தோப்பில் தங்கியது. எதிரியான நவாப் **சுராஜ் உத்தௌலா**வுக்குப் பிரெஞ்சுக்காரரின் உதவியும் கிடைத்திருந்தது. பிரெஞ்சு வீரரைத் தொடர்ந்து வெற்றி முழக்கத்துடன் நவாபின் பீரங்கிப் படைகள் முன்னேறிச் சுடத் தொடங்கின; ஆனால் தோப்பு மறைவிலிருந்தவர்களைக் குறி தவருமற் சுட இயலவில்லை. ஆங்கிலேயர்களின் குண்டுகளோ குறி தவருமல் அடித்து எதிரிகளை வீழ்த்தின. பிளாசிச் சண்டையின் தொடக்கம் இது.

திடீரென்று பெருமழை பொழியத் தொடங்கி ஒரு மணி நேரம் சோனுமாரியாகக் கொட்டிவிட்டது. நவாபின் படை வீரர்களுக்கு வெடிமருந்தை மூடிவைத்துக் கொள்ள வசதியில்லை. "கடவுளை நம்புங்கள்; ஆனால் வெடி மருந்தை நனையவிடாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள்!" என்று பேர்பெற்ற ஓர் ஐரோப்பிய தளபதி தன் படைவீரர்களுக்கு எச்சரிக்கை செய்ததாக வரலாறு கூறுகின்றது. கிளைவின் ஆங்கிலேயரோ ஒருமையுள்ளத்துடன் முன்னெச்சரிக்கையாகத் தங்கள் வெடிமருந்தை நனைந்து போகாத வண்ணம் மூடிப் பாதுகாத்து வைத்திருந்தனர். நவாபின் பெரும்படை ஆங்கிலச் சிறுபடையை நசுக்கிவிடலாமென்று நிமிர்ந்து முன்னேறி வந்தது. ஆங்கிலேயரும் தங்களைப் போல் வெடிமருந்தை நனையவிட்டிருப்பார்களென்ற தப்பெண்ணத்துடன் நவாபின் முக்கிய தளபதி தன் குதிரைப்படையுடன் வந்து தாக்கினுன். அவர்கள் நெருங்கி வந்ததும் ஆங்கிலேயர் நெருப்பு மழை

பொழிந்தனர். குதிரைகள் மருண்டோடி நவாபின் காலாட் படைமீதே பாய்ந்தன. அடுத்தடுத்துப் பாய்ந்த குண்டுகளால் குதிரைப் படை வீரர்கள் தொப்புத்தொப் பென்று விழுந்தனர். முக்கிய தளபதி படுகாயமுற்றான்; அந்தத் தீரனைச் சுமந்தவண்ணம் படுகளத்தினின்றும் குதிரை ஓட்டமெடுத்தது. தனது நம்பிக்கைக்குரிய அப் படைத் தலைவன் இறந்ததால் நவாபும் படைகளும் தத் தளித்தனர். வேறொரு படைத் தலைவனான மிர்ஜாபர், உடனே ஓடிப்போய்விட வேண்டுமென்று நவாபுக்கு ஆலோசனை சொன்னான். அவன், "இப்போது திரும்பிப் போய் இரவில் இளைப்பாறிவிட்டு நாளைக் காலையில் புதிய ஊக்கத்துடன் நானே தலைமை வகித்துப் போர் நடத்து வேன்" என்று உறுதி கூறினான். நவாபு வெருண்டு வேகமாய்ச் செல்லும் ஒட்டகத்தின் மீது ஏறிக்கொண்டு போய்விட்டான். மிர்ஜாபர் நவாபின் கூடாரத்தை விட்டு வெளியே வந்ததும், "உடனே வந்து தாக்குங்கள்" என்று கிளைவுக்குச் செய்தி அனுப்பினான்.

பிளாசிச் சண்டையில் நவாபுக்குத் தீங்கிழைத்து ஆங்கிலேயருக்குத் துணைபுரிவதாக மிர்ஜாபர் ஏற்கெனவே வாக்களித்திருந்தான். எனினும் "யார் வெல்லப்போகி றாரோ?" என்று ஐயமுற்றவனாய்ப் போர் தொடங்கியதும் மிர்ஜாபர் கிளைவுக்கு உதவியாக வந்துவிடவில்லை. ஆனால் இப்போதுள்ள நிலையை மிர்ஜாபர் வாயிலாகக் கிளைவ் தெரிந்துகொண்டதும், 'இதுதான் தக்க சமயம்' எனக் கருதி, மருண்டு தயங்கி நின்ற நவாபின் படைகள் மீது தன் படைகளை ஒருங்கே திரட்டித் திடீரென்று ஏவிவிட் டான். சேறுபட்டிருந்த அந்த இடத்தில் பீரங்கி வண்டி களை இழுத்துக்கொண்டு வந்து நவாபின் படைவீரர் களால் எதிர்த்தாக்குதல் செய்ய இயலவில்லை. விரைவில் எங்குப் பார்த்தாலும் ஓட்டமும் குழப்பமுமாகி நவாபின் பெருஞ்சேனை சின்னபின்னமாகி விட்டது. மாலை ஐந்து

மணிக்குள் — அதாவது தொடங்கிய ஒன்பது மணி நேரத்திற்குள்—பிளாசிப் போர் முடிந்துவிட்டது. இந்தப் போரிலே கிளைவின் படைவீரர்களில் ஏழு ஐரோப்பியர்களும் பதினறு இந்தியச் சிப்பாய்களுமே கொல்லப்பட்டனரென்றும், பதின்மூன்று ஐரோப்பியரும் முப்பத்தாறு சிப்பாய்களுமே காயமுற்றனரென்றும் திரு. ஜி. ஏ. ஹெண்டி தெரிவிக்கிருர். நவாபின் பெரும் படையிலும் ஐந்நூறு பேர்களே கொல்லப்பட்டதாக வரலாற்றுப் பேராசிரியர் ஸர். யதுநாத ஸர்க்கார் அறிவிக்கிருர். 'ஒரு குண்டு ஒருவனைத் தானே கொல்லும்' என்ற கணக்குந் தெரியாமல் பல்லாயிரக் கணக்கான இந்தியர்கள் ஓட்டம் பிடித்த விந்தையைப் பிளாசிச் சண்டை காட்டுகிறது.

புராணங்களில் முழங்குகின்ற "தேவாசுர ராமாயண மாபாரதம் என்னும் ஓவா உரை ஓயும்படி உளது" என்று சிலர் பிரமாதப்படுத்துகின்ற 'பிளாசி' இப்போது எவ்வளவு அற்பமாய்த் தோன்றுகிறது! உண்மையிலேயே இது ஓர் அற்ப நிகழ்ச்சிதான் என்று இன்றைய வரலாற்றுத் தலைமைப்புலவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். ஆனல் இப்போர் கிளைவுக்குக் கனவிலும் கண்டிராத பெரும் புகழை அளித்துவிட்டது. 'ஆங்கிலப் பேரரசின் அடிப்படை அமைத்த சிற்பி' என்றல்லவோ கிளைவைச் சுட்டிக் காட்டுகிருர்கள்? பிளாசிப் போரைக் 'கதிரோன் மறைதல் செய்தறியாத' ஓர் உலக வல்லரசின் அடிப்படையென்றல்லவோ வரலாறு பேசுகின்றது? இப்போர், பேராண்மைப் பெரும்புகழையாவது போரறிவுப் பெருந்திறனையாவது வெளியிடவில்லையென்பது திண்ணம். இந்தப் போர் வெற்றி, சூழ்ச்சித் திறனுக்கு வெற்றி; உள்நாட்டுச் சச்சரவுகளாலும் 'கோட்டைக்குள்ளேயே குத்தும்வெட்டும்' என்பது போன்ற உட்பகையாலும் சதிகளாலும் விளைந்த வெற்றி. நவாபு நம்பியிருந்த பாய்

மரம் பழுதாயிற்று. கிளைவின் படையில் ஆங்கிலப்போர் வீரர்களைக் காட்டிலும் தென்னிந்தியச் சிப்பாய்களே அதிகமாயிருந்து தங்கள் மாகாணத்திற்கு வடக்கே வெகு தூரத்திலுள்ள வங்க நாட்டில் பிளாசிப் போரின் வெற்றிக்கும் காரணமாயினர்.

வங்காள நவாப் சுராஜ் உத்தௌலா உலக அனுபவம் பெருது சிறு பிராயம் முதல் அரண்மனையில் சுக போகங்களுக்கிடையே காலங்கழித்தவன்; ஆண்தொழிலாற்றலும் அறிவுக்கூர்மையும் இல்லாதவன். தான் பட்டத்திற்கு வந்த சில மாதங்களில் பொது மக்களின் வெறுப்பிற்கும் செல்வாக்குள்ளவர்களின் சீற்றத்திற்கும் இலக்காகிவிட்டான். அறிவிலும் அனுபவத்திலும் மூத்த பெரியோர்களைத் துணைக்கொள்ளாது வஞ்சகர்களின் புகழ்ச்சிக்குச் செவிசாய்த்தான். அத்தகைய வஞ்சகர்களிற் பலர் சுராஜைப் பதவியிலிருந்து நீக்கச் சூழ்ச்சி செய்தனர். அச்சதிக்கும்பலில் நவாபின் படைத்தலைவனுகிய மிர்ஜாபரும் ஒருவன். வரி செலுத்தாது வர்த்தகம் செய்துவந்த ஆங்கிலேயர்களின் அந்த உரிமையை நவாபு தடுக்க முயன்றதால் அவர்களுக்குச் சினம் மூண்டது. அந்நாளில் கல்கத்தா ஆங்கிலேயர்களுக்கு முக்கிய வர்த்தகத் தலமாயிருந்தது. அவர்கள் தங்களுடைய கோட்டை கொத்தளங்களை உறுதிப்படுத்தத் தொடங்கியதும் நவாப் சுராஜ் உத்தௌலா 1756-ல் போர் தொடங்கினுன். இந்தச் செயல் நவாபின் நாட்டுப்பற்றுக்கு ஒரு சான்ருகும் என்றே திரு. ஜி. ஏ. ஹெண்டி குறிப்பிடுகிருர்.

தன்னை நவாபாக நியமித்தால் ஆங்கிலேயர்களுக்குப் பல உரிமைகளை வழங்குவதாக மிர்ஜாபர் வாக்களித்திருந்தான். மிர்ஜாபரின் மகன், தோல்வியுற்று ஓடிவந்த சுராஜ் உத்தௌலாவை இரக்கமின்றி வதஞ் செய்தான். எதிர்பார்த்த அளவிற்கு மிர்ஜாபர் துணை புரியாவிட்டாலும் வெற்றிக்குப் பின் கிளைவ் 'வங்காள நவாபே வருக'

என்று வரவேற்றுப் பதவியிலும் அமர்த்திவிட்டான். ஆனால் அப்படிக் கிடைத்த நவாபுப் பதவியே மிர்ஜாபரின் அழிவிற்கும் காரணமாயிற்று. ஆங்கிலேயர்களுக்குக் கடன்பட்டிருந்த புதிய நவாபு தன் மக்களின் வரிச் சுமையைத் தாங்க முடியாத பெருஞ்சுமையாக்கி விட்டான். வங்க ஆட்சி சீர்குலைந்தது. பிளாசிச் சண்டைக்கு முன் செல்வமும் செழிப்புமாயிருந்த வங்க நாட்டில் வறுமையும் குழப்பமும் அதிகரித்தன. அந்த நிலைமைக்கு மிர்ஜாபரே பொறுப்பாளியென்று முடிவு செய்து ஆங்கிலேயர்கள் மிர்ஜாபரைப் பதவியிலிருந்து விலக்கி அவனுடைய மருகனை அரியணை ஏற்றினர். 'வஞ்சகன் வஞ்சிக்கப்பட்டான்' என்னும் விதி மிர்ஜாபர் வாழ்க்கையில் பலித்து விட்டது. வங்க நாட்டில் நிகழ்ந்த இத்தகைய நிகழ்ச்சிகள் தென்னிந்தியாவில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் காட்டிலும் இந்தியாவின் வரலாற்றில் பெரிய மாறுதல்களை உண்டாக்கி விட்டன.

பிளாசிச் சண்டைக்கு 157 ஆண்டுகட்கு முன்பே—அதாவது 1600-ம் ஆண்டிலேயே—ஆங்கிலேயக் கிழக்கிந்திய வர்த்தகக் கழகம் லண்டன் மாநகரில் அமைக்கப்பட்டது. 1639-ம் ஆண்டிலே இப்போது சென்னை நகரமாக விளங்கும் இடத்தில் அவ்வர்த்தகக் குழுவினர் ஒரு பண்டசாலையை ஏற்படுத்திக் கொண்டனர். அப்போது வர்த்தக நோக்கம் தவிர வேறு நோக்கம் ஆங்கிலேயருக்கில்லை. சென்னைக்கு வருவதற்கு முன் ஆங்கில வியாபாரக் கழகத்தினர் தென்னிந்தியாவில் மசூலிப்பட்டினத்திலே வர்த்தகசாலை வைத்திருந்தனர். அங்கேயிருந்த ஆங்கில வியாபாரிகள் **பிரான்ஸிஸ் டே** என்பவனைக் கடற்கரை யோரமாகத் தெற்கு முகமாய்க் கப்பலோட்டிப் பார்த்து ஒரு நல்ல துறைமுகத்தைத் தேர்ந்தெடுக்கும்படி அனுப்பி வைத்தார்கள். அதற்கு முன்பே மயிலாப்பூர்-ஸாந்தோமில் போர்த்துகேசியர் குடியேறி

யிருந்தனர். அங்கே அவர்கள் கட்டியிருந்த மாதா கோயிலின் உச்சியைக் கப்பலில் இருந்தபடியே கண்ணுற்ற பிரான்ஸிஸ் டே உச்சி குளிர்ந்தவனாய் மேரி மாதாவின் அருளால் அதற்கு அருகிலேயுள்ள கடலோரம் வியாபாரத்திற்குப் பொருத்தமா யிருக்குமென்று கப்பலை நங்கூரம் பாய்ச்சி ஸாந்தோமிலிருந்து மூன்று மைல் வடக்கேயுள்ள குப்பத்தில் இறங்கினான். அப்போது போர்த்துகேசியரும் ஆங்கிலேயரும் நண்பராயிருந்தனர். மழைக் காலம்: கூவம் நதியில் வெள்ளம் பெருகிப் பார்வைக்கு அழகாயிருந்தது. அன்று கூவம் இன்றைய கூவம்போல் இல்லை. பிரான்ஸிஸ் டேயின் உள்ளத்திலே எண்ணங்கள் வெள்ளமிட்டன; "இந்த அழகான ஆற்றங் கரையிலே ஒரு பட்டினம் வளர்ந்தோங்கும்; நம் மக்களின் வியாபாரத்திற்கு நல்ல வாய்ப்பும் கிடைத்து விடும்; ஏராளமாக இந்நாட்டிலிருந்து பொருளீட்டிப் போகலாம்" என்றெல்லாம் இன்பக் கனவுகள் கண்டான். 'வியாபாரப் பாதுகாப்பிற்காக இங்கு ஒரு கோட்டையும் கட்டலாம்' என்று மனக் கோட்டையும் கட்டினான். எனினும் கோட்டையும் கூவமும் நாளடைவில் பனிவரை முதல் குமரிமுனை ஈறுகவுள்ள இந்த உபகண்டம் முழுவதையும் தங்களுக்கே சம்பாதித்துக் கொடுத்து விடும் என்று அந்த மனக் கோட்டைக்காரன்தான் கனவிலும் கருதியிருக்க முடியுமா?

இன்று நமது 'நகரங்களின் அன்னை' யாகவுள்ள சென்னை அந்நாளில் செம்படவர் குப்பமாகவே யிருந்தது. பெரும்பாலும் மீன் பிடிப்பவரும் தோணிக்காரரும் குடியிருந்தனர். கூவம் நதி முகத்துவாரத்திற்கு அருகிலிருந்த அக்குப்பத்திற்கு **மதராஸ் பட்டினம்** என்பது பழைய பெயர். கடற்கரை யோரமாக ஐந்து மைல் நீளமும் ஒரு மைல் அகலமும் உள்ள அக்குப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளப் பிரான்ஸிஸ் டே சந்திரகிரி அரசனின் அனுமதி

வேண்டினான். அந்த அரசனிடமிருந்து சென்னப்பா என்ற நாயக்க அரசனின் புதல்வன், ஆங்கில வியாபாரிகள் ஆண்டு தோறும் வரி கட்டி மதராஸ் பட்டினத்தை உபயோகித்துக் கொள்ளுமாறு அனுமதி வாங்கிக் கொடுத்து, அந்த இடத்தைத் தன் அருமைத் தந்தையின் பெயரால் 'சென்னபட்டினம்' என்று அழைக்க வேண்டுமென்றும் ஆங்கில வியாபாரிகளைக் கேட்டுக் கொண்டான். சென்னப் பட்டினத்தின் குறுகிய பெயர் சென்னை. நாளடைவில் ஆங்கிலேயர்கள் மறுபடியும் சென்னையைப் பழைய மதராஸ் ஆக்கிவிட்டார்கள். தமிழ் மக்களே இன்றும் 'சென்னை' 'சென்னப்பட்டினம்' 'சென்னப்பட்டணம்' என்ற பெயர்களில் சென்னப்ப நாயக்கரை மறவாமல் வைத்துள்ளார். சென்னப்ப நாயக்கரும் அவர் புதல்வரும் சந்திரகிரி அரசனுக்கு உட்பட்ட சிற்றரசர்கள்; பூவிருந்தவல்லியில் வதிந்தனர். சந்திரகிரி அரசன் ஒரு காலத்தில் இந்து மகாராச்சியமாக இருந்து மறைந்து போன விஜயநகரப் பேரரசின் நினைவுக் குறியாகக் கதிரவனிருந்த இடத்தில் மின்மினி கொலுவிருப்பதுபோலிருந்தவன். இந்த அரசனோடு ஆங்கிலேயர் செய்து கொண்ட உடன்படிக்கை தங்கத் தகட்டில் பகட்டாய்ப் பொறிக்கப் பெற்ற போதிலும் அது மாண்டுபோன மகாராச்சியத்தின் வாழ்விழந்த பிரதிநிதிக்கும் ஆங்கில வியாபாரிகளின் சாமானியப் பிரதிநிதிக்கும் சாதாரணமாக நடைபெற்ற ஒரு வியாபார உடன்படிக்கைதான். ஆனால் விதியின் விந்தைப் போக்கினால் இந்தியாவில் எதிர்கால ஆங்கிலத் தனிப் பேரரசுக்கே அந்த உடன்படிக்கை ஒரு மூல சாசனம் போலாகிவிட்டது.

1639-ம் ஆண்டு மார்ச்சு மாதம் முதல் தேதி கடற்கரையோரத்திலே பிறந்தது சென்னப்பட்டினம். இங்கே ஆங்கிலேயர்கள் பண்டசாலை ஏற்படுத்தி அதைச் சுற்றிக் கோட்டை கட்டி அகழியும் வெட்டினார்கள்.

ஆங்கில நாட்டின் காவல் - தெய்வத்தின் பெயரால் வழங்கும் ஸென்ட் ஜார்ஜ் கோட்டையையும், தூர்ந்து கொண்டிருக்கும் அகழியையும் இன்றும் காணலாம்.

கோட்டைக்குள் ஆங்கில வர்த்தகர்கள் வசித்து வந்தனர்; இந்தியர் எவரும் கோட்டையிலாவது கோட்டையைச் சுற்றியாவது குடியிருக்க அனுமதிக்கப்படவில்லை. அது வெள்ளைப்பட்டினம்; அதற்கு வடக்கேதான் ஆங்கில வியாபாரத்திற்குத் துணை புரிந்த இந்தியர்கள் வசிக்கலாயினர். அந்த இடத்தை இப்போது 'ஜார்ஜ் டவுன்' என்கிறோம். ஆனால் அந்நாளில் **கறுப்புப் பட்டினம்** (Black Town) என்றுதான் ஆங்கிலேயர்கள் அப்பகுதிக்குப் பெயரிட்டிருந்தனர். 1906-ல் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் இளவரசாகச் சென்னைக்கு வந்தபோதுதான் கறுப்புப் பட்டினத்திற்கு 'ஜார்ஜ் டவுன்' என்று பெயரை மாற்றி வைத்தார்.

சென்னப்பட்டினத்திலே எதிர்பார்த்த அளவுக்கு இயற்கை வசதியில்லையென்று தெரிந்து கொண்டதும் ஆங்கிலேயர்கள் தென்னாட்டு மக்களின் உதவியால் நாளடைவில் செயற்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்டனர். இந்தியாவில் ஆங்கிலப் பேரரசே தென்னிந்தியாவிலிருந்து தென்னிந்தியர்களின் உதவியால் தழைத்துப் படர்ந்ததுதானே. சென்னையிலிருந்து வர்த்தகம் செய்யத் தொடங்கிய ஆங்கிலக் கம்பெனியாரைத் தமிழர்கள் கும்பினியாரென்றும் கும்பினிக்காரரென்றும் சொன்னார்கள். தேசம் இருந்த அமைதியற்ற நிலையில் வர்த்தகத்திற்குப் பாதுகாப்பாகத் துப்பாக்கியும் பிடிக்கத் துணிந்தது தராசு பிடித்த கை. தென்னிந்தியாவில் விஜயநகர மகாராச்சியமும் மறைந்து போய் மொகலாய மகாராச்சியமும் தத்தளித்துக் கொண்டிருந்தபோது இந்தியச் சிற்றரசர்களும் இந்திய மக்களும் ஒற்றுமையின்றி யிருந்தனர். மன விரிவு கொண்டு மகத்தான

சிந்தனைகள் செய்த பேரறிஞர்களின் தாயகமென்று அறிஞர் **மாக்ஸ் முல்லர்** போற்றிய இப்பழம் பெருநாடு, 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வே' என்ற சாமானிய உலக அறிவும் இல்லாமல், சாதாரணமாய்ச் சொல்லுகிறபடி அவிழ்ந்து போன நெல்லிக்காய் மூட்டையாக இருந்தது. சிதறி உருண்டோடிக் கொண்டிருந்த நெல்லிக்காய்களைச் சேர்த்துக் கட்ட ஒரு கோணிப்பை இல்லையென்று கண்டதும், 'நாமே தயாரித்து விடலாம்' என்று 1742-ல் புதுச்சேரிக்குக் கவர்னராக வந்த **டியூப்ளே** என்னும் பிரெஞ்சுக்காரன் ஒரு பெருங்கனவு காணத் தொடங்கினன். ஆங்கிலேயர்களைப்போல் போர்த்துகேசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரராகிய வேறு ஐரோப்பிய வகுப்பினரும் இங்கே வியாபாரஞ் செய்ய வந்திருந்தனர். பொதுவாக அவர்களை யெல்லாம் நம்மவர்கள் 'வெள்ளைக்காரர்' என்றும், 'தொப்பிக்காரர்' என்றும், 'பறங்கிக்காரர்' என்றும் அழைப்பாராயினர். டச்சுக்காரரை 'உலாந்தர்' எனக் குறிப்பிட்டார்கள். பிரெஞ்சுக் கிழக்கிந்திய வர்த்தகக் கழகத்தினர் முதலில் தமிழ் நாட்டிலுள்ள புதுச்சேரியையும் வங்காளத்திலுள்ள சந்திரநாகூரையும் விலைக்கு வாங்கி அங்குப் பண்டசாலைகளைக் கட்டிக் கொண்டனர். போர்த்துகேசியரும் டச்சுக்காரரும் வலிமை குன்றி ஒடுங்கிய பின், பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்குமிடையே வர்த்தகப் போட்டியுடன் ஆதிக்கப் போட்டியும் ஏற்பட்டது.

டியூப்ளே புதுச்சேரிக்கு வந்த நான்கு ஆண்டுக்குப் பின் பிரெஞ்சுக்காரர் சென்னையைத் தாக்கிப் பிடித்துக் கொண்டனர். அப்போது கோட்டையில் அகப்பட்டுக் கொண்ட ஆங்கிலேயர்களில் ஒருவன் முஸ்லிமைப்போல் மாறுவேடம்பூண்டு தப்பி ஓடினன். அவனே டியூப்ளேயின் ஏகாதிபத்தியக் கனவுகளைச் சிதறடித்து, இந்தியாவில் ஆங்கில ஏகாதிபத்தியம் நிலைபெறுவதற்குத் தொடக்க

வேலைகள் செய்து வெற்றிபெற்றவன். கடலில் ஏழாயிரம் மைல் தாண்டி அந்நாளில் சென்னைக் கும்பினியாரிடம் குமாஸ்தாவாக வந்தவன்தான். இவன்தான் பிளாசி வீரனை **ராபர்ட் கிளைவ்.**

சீமையைவிட்டுப் புறப்படும்போது கிளைவுக்கு வயது பதினேழுதான் ஆகியிருந்தது; சென்னை வந்து சேரும் போது பதினெட்டு நிறைந்து பத்தொன்பதாம் வயது. பெற்றோரைப் பிரிந்து ஊரைவிட்டு நாட்டை விட்டுப் பதினைந்து மாதம் கடலோடிச் (அந்நாளில் கடற்செலவின் வசதி அப்படி!) சென்னை வந்து சேர்ந்த கிளைவ், கும்பினி யார் ஏற்றுமதிக்குத் தயாராக வைத்திருந்த மூட்டை களின் விவரங்களைக் கணக்குப் புத்தகங்களிற் பதிவு செய்து வைக்கும் வேலையில் அமர்ந்தான். சென்னைக் குமாஸ்தா பேனாவை வீசியெறிந்துவிட்டுத் துப்பாக்கியுந் தோளுமாகி இந்தியாவில் ஏற்பட்டிருந்த குழப்பங்களில் தனக்குப் புகழையும் ஆங்கில ஆதிக்கத்திற்குப் பெரு வெற்றியையும் தேடிக் கொண்டது உலக சரித்திரத் திலேயே ஓர் அதிசய வரலாறாகும்.

# அத்தியாயம் 2

# விதியும் மதியும்

நீலவானம் இளநகையரும்புவதுபோல் மென்மை யொளி வீசுகின்றது; காற்று மெல்ல மூச்சு விடுகின்றது. கடல் ஓரே பரந்த நீல அழகாய்க் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கின்றது. மரக்கலத்தின் மேற்றளத்தி லிருந்து விரிந்த கண்களுடன் ஓர் இளைஞன் அக்காட்சி யின்பத்தைப் பருகிக்கொண் டிருக்கின்ருன். இம்மரக் கலத்திற்கு முன்னே ஒரு மரக்கலம் சென்றுகொண்டிருக் கிறது; இரண்டும் மெல்லத்தான் போய்க்கொண்டிருக் கின்றன. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் லண் டன்-வர்த்தக சாலையைச் சேர்ந்த இவ்விரு கப்பல்களும் சீமையிலிருந்து இந்தியாவுக்கு வந்து கொண்டிருக்கின்றன. திடீரென்று அமைதி குலைந்து அலறல்கள் எழுகின் றன. ஒரு கப்பலின் மேற்றளத்திற் சாய்ந்த வண்ணம் கடலை நோக்கிக்கொண்டிருக்கும் இளைஞன், தனக்கு முன்னே போய்க்கொண்டிருந்த கப்பல் வழக்கம்போல் நிமிர்ந்து செல்லாது திடீரென்று சாய்ந்து, அழுகைக் குரல்களுக்கும் தொழுகைக் குரல்களுக்கு மிடையே அமிழ்ந்துபோவதைப் பார்க்கின்ருன். இக்கப்பலிலுள்ள வர்கள் உதவிசெய்ய முற்படுவதற்குள் அந்தக் கப்பலி லுள்ளவர்கள் எல்லாரும் ஒருவர் தப்பாமல் அப்படியே அமிழ்ந்துபோயினர். கடலில் மறைந்திருந்த ஒரு பெரும் பாறை தாக்கி அந்தக் கப்பல் சிறுவருடைய பொம்மைப் படகுபோல் மறைந்துபோய்விட்டது. இளைஞன் போய்க் கொண்டிருந்த கப்பல் தப்பிப் பிழைத்தது. இப்படிக் கூற்றுவனைக் கண்ணுரக் கண்ட இளைஞனுள்ளத்தில் அவ் வனுபவம் ஆழ்ந்து பதிந்துவிட்டது. இவன்தான் ராபர்ட் கிளைவ்.

இவன் ஏறி வந்த கப்பலும் வழியிலே ஒரு கரையில் மோதிக்கொண்டது; கப்பலும் சேதமாகி உயிர்ச்சேதமும் ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால் ஆழமான கடல்நீரில் அதைச் சேதமில்லாமல் மீட்டுக்கொள்வது சாத்தியமாயிற்று. கிளைவையும் இவனுடைய நல்விதியையும் சுமந்து சென்ற கப்பலல்லவா? கூற்றுவனின் மடியிலும் கிடந்து பிழைத்தெழக்கூடிய ஊழும் கிளைவுக்கு வாய்த்ததுண்டு. ஒரு சமயம் கப்பலின் மேற்றளத்திலிருந்து கிளைவ் தவறிக் கடலில் விழுந்துவிட்டான். காற்று விசையாக வீசிக் கொண்டிருந்ததால் கடல் கொந்தளிப்பாயிருந்தது. உடனே ஒரு மாலுமி வாளியையும் கயிற்றையும் வீசி உயிருக்கு ஊசலாடிக்கொண்டிருந்த கிளைவைக் காப்பாற்றி விட்டான். இது குறித்துத் தன் தந்தையாருக்கு எழுதிய கடிதத்தில், "நான் ஏறக்குறைய உயிரை இழந்துவிடும் நிலையிலே தானிருந்தேன்......எனது நல்லூழின் பயனாக மாலுமி வீசிய வாளியைப் பற்றிக்கொண்டேன்; இரண்டு சோடுகளையும் தொப்பியையும் இழந்துவிட்டேன்" என்று கிளைவ் குறிப்பிட்டிருந்தான்.

கிளைவ் சென்னைக்கு வந்தபோது இவ்வூர் ஆங்கிலேயரின் வசமாய் ஒரு நூற்றாண்டுக்கு மேலாகிவிட்டது. அதற்குள் செம்படவர் குப்பம் இரண்டரை லட்சம் மக்களும் கோடிக்கணக்கான ஈக்களுமுள்ள ஒரு நகரமாய் வளர்ந்திருந்ததென்று சற்று நகைச்சுவையுடன் வரலாற்றுப் பிரியர் ஒருவர் குறிப்பிடுகின்றார். ஐரோப்பியர் தொகை முந்நூறுதான்; அவர்களெல்லோரும் ஆங்கிலேயருமில்லை. எனினும் ஆங்கில வர்த்தகத்தொழில் ஓங்கி வளர்ந்திருந்தது. கோட்டை முதலதிகாரியை 'ஏஜெண்ட்' என்றும் 'கவர்னர்' என்றும் கூறுவதுண்டு. 'கனம் பொருந்திய கவர்னரு'க்கு ஆண்டுச் சம்பளம் முந்நூறு பவுன். வேலைத்திறனுக்காகக் கோட்டை அதிகாரிகள் சம்மானிக்கப் பெறுவதுமுண்டு. சொந்த நிலையில் தொழில்புரிந்து ஏராள

மாய்ப் பொருளீட்டிக்கொள்ளும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. கும்பினி வியாபாரிகள் செல்வச் செருக்குடன் தலை நிமிர்ந்து மிடுக்காக நடந்து செல்லும்போது அவர்கள் முகங்களில் சென்னை வெப்பம் தாக்காதவாறு பணியாளர்கள் மிக்க பணிவுடன் குடைபிடித்துச் செல்வர். சில சமயங்களில் அன்னார் சிவிகையூர்ந்து செல்வதுமுண்டு. பரிகள் பூண்ட இரதங்களிலும் ('ஸாரட்டு'களிலும்) இறுமாந்து செல்வர். பூங்காக்களால் சூழப்பெற்ற அழகிய மாட மாளிகைகளிலே விருந்துகளிலும் களியாட்டங்களிலும் மூழ்கிக்கிடப்பர். 'இவர்கள் வெள்ளை நவாபுக்களோ, மன்னர்களோ!' என்று வியக்குமாறு வர்த்தகர்கள் வாழ்க்கை நடத்திய அக்காலத்திலே கிளைவைப் போன்ற குமாஸ்தாக்களின் வாழ்க்கை வேறுவிதமாக இருந்தது.

இவர்கள் அதிகாலையில் 'பீரங்கி வேட்டு'க் கேட்டு விழித்தெழுந்து கோட்டைக்குள்ளிருக்கும் மாதா கோயிலில் பிரார்த்தனை செய்யவேண்டும். காலை ஒன்பதுமணிக்கு வேலைக்குப்போய் நடுப்பகலில் சிற்றுண்டி உண்டு மாலை வரை உழைப்பர். கப்பல் வரும்போதும் போகும்போதும் வேலை அதிகம். மற்றப்படி, பட்டாடைகளும் மஸ்லின்களும் மிளகு முதலான பொருள்களும் சுமந்து இடைவிடாமல் வந்து போய்க்கொண்டிருக்கும் மாட்டுவண்டிகளின் ஓசைகளுக்கிடையிலும் சென்னை ஈக்களுக்கிடையிலும் வெயிலையும் வேர்வையையும் கவனியாமல் குமாஸ்தாக்கள் உழைத்துக்கொண்டே யிருக்கவேண்டும். இத்தகைய வாழ்க்கையில் கிளைவுக்குச் சம்பளம் ஐந்து பவுன்தான்—மாதச் சம்பளமல்ல, ஆண்டுச் சம்பளம்! ஐந்து ஆண்டுகள் இப்படி உழைத்தபின் ஆண்டுச் சம்பளம் பதினைந்து பவுனாக உயரும். இன்னும் மூன்று ஆண்டுகள் இப்படிக் கழித்தபின்—அதாவது எட்டு ஆண்டுகள் இப்படி உழைத்து ஓய்ந்தபின்—இவர்களுக்குச்

சொந்த வியாபாரஞ்செய்து மேல்வரும்படி தேடிக்கொள்ளும் உரிமை கிடைக்கும். அதுதான் அந்நாளில் கும்பினிக் குமாஸ்தாக்களின் ஏணியேற்றத்திலே உயர்ந்த படி— அவர்கள் ஆசைப்பட்ட சொர்க்கம். அந்நாளில் கோட்டையிலிருந்த ஐரோப்பியர்களிடையே பல கெட்ட பழக்கங்கள் காணப்பட்டன. கோட்டை அதிகாரிகளில் ஒருவரான 'மாதாகோயிற் சாமியார்' என்ற பாதிரியார் அப்பழக்கங்களைக் கண்டித்துப் பேசுவார். அவருக்கும் அதிகாரம் அதிகம். அவர் தம் அதிகாரத்தைக் கொண்டும் அமிதக் குடி, சூதாட்டம், சண்டை சச்சரவு முதலியவற்றை மட்டுப்படுத்த முடியாமல் திணறினர். சச்சரவு செய்த அமிதக் குடியர்கள் தண்டிக்கப்பட்டனர்; பொய்யுரைப்போருக்கும் நான்கு அணு அபராதம் விதிக்கப்பட்டது. இரவில் எட்டு மணிக்குமேல் கோட்டைக்கு வெளியே சென்றவர்களுக்குக் கடுந்தண்டனை யுண்டு. இத்தகைய கட்டுப்பாடுகளுக்கிடையே கோட்டைக் குமாஸ்தாவாக வாழும் வாழ்க்கை, மிடுக்குந்துடுக்குமாய் ஊரிலே துள்ளித்திரிந்த பழக்கமுள்ள கிளைவுக்கு நரக வாழ்க்கையாகத் தோன்றியது.

சீமையில் பள்ளிக் கட்டுப்பாடுகளை வெறுத்துக் கலகஞ் செய்தவனுக்கு அவ்வாழ்க்கை இப்போது சொர்க்கம் போலத் தோன்றியது. கூரை வரையில் நானுவித இறக்குமதி ஏற்றுமதிச் சாமான்களை அடுக்கி வைத்திருந்த பண்டசாலையையும் கணக்குப் புத்தகங்களையும் கிளைவ் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சுவிட்டான். கோட்டைக்கு வெளியேயுள்ள லேவாதேவிக்காரரிடம் கடன் வாங்கிக்கொண்டே வந்தான். அக்கடன் சுமையும் நெஞ்சிலுள்ள கவலைச் சுமையை அதிகப்படுத்திவிட்டது. தனது அறையில் ஒரு நாள் தனித்திருக்கும்போது கிளைவ் பேனுவைக் கீழே போட்டுவிட்டு ஒரு 'பிஸ்டலை'த் தூக்கித் தன்னுடைய நெற்றியில் குறிவைத்துச் சுட்டுக்கொள்ள விரும்பினுன்.

ஆனால் 'பிஸ்டல்' ஒத்துழையாமை செய்து விட்டது. கோளாறு என்னவென்று சோதித்துப் பார்க்கும்போது, வேறொரு குமாஸ்தா உள்ளே வந்துவிட்டான். கிளைவ் அவன் கையில் பிஸ்டலைக் கொடுத்து, "பலகணி வழியாகச் சுட்டுப்பார்" என்றான். அப்படியே அவன் சுட்டுப்பார்த்தான்: 'பிஸ்டல்' சரியாகத்தான் சுட்டது. அந்தச் சொலிப்புக் கண்டும் 'வேட்டு'க்கேட்டும் திகைத்துப்போன கிளைவ், 'ஏதோ ஒரு பெரிய காரியத்தை நிறைவேற்றத்தான் விதி நம்மைக் காப்பாற்றி வைத்திருக்க வேண்டும்' என்று எண்ண மிடலானான். ஆனால் கணக்குப் புத்தகங்களாகிய சிறையிலிருந்து தப்புவது எப்படி? பிரெஞ்சுக்காரர் சென்னையை முற்றுகையிட்டபோது கிளைவ் மாறுவேடம்பூண்டு ஓடிப் போனானல்லவா? — கூடலூரிலுள்ள ஆங்கிலேயரின் ஸெண்ட் டேவிட் கோட்டைக்குப் போய்ச் சேர்ந்தான். தன்னைச் சாவிலிருந்து காப்பாற்றிக்கொண்டே வரும் விதி இப்போது தான் வெறுத்த பேனாவுக்கு மாறாகத் துப்பாக்கியைத் தூக்கிக் கொடுத்ததென்று நம்பினான். பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தை ஒழித்து ஆங்கில ஆதிக்கத்தைத் தென்னிந்தியாவில் நிலைநிறுத்துவதற்குத் தான் தன்னை விதி சென்னைக் குமாஸ்தாவாகச் சீமையிலிருந்து கடல் கடந்து இழுத்து வந்ததாகவும் நீண்ட கனவு கண்டான். எனினும், வட இந்தியாவிலும் ஒரு பிளாசி வெற்றி கிடைத்துக் கும்பினியாருக்கு ஒரு மகா ராச்சியத்தைத் தான் சம்பாதித்துக் கொடுக்கமுடியுமென்று கிளைவ் கனவு கண்டிருக்க முடியுமா?

கிளைவுக்கு முன்பே ஏகாதிபத்தியக் கனவு கண்டவன் பிரெஞ்சு வீரனான டியூப்ளே அல்லவா? ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் உலாந்தர்களுக்கும் முன்பே போர்த்துகேசிய அரசகுடும்பத்தைச் சேர்ந்த **அல்புகர்க்** என்ற தளபதியும் போர்த்துகேசிய ஏகாதிபத்தியத்தை

ஆசியாக்கண்டத்தில் நிலைநாட்டி விடலாமென்று கனவு கண்டான். அவர்களுக்கெல்லாம் வெகு காலத்திற்கு முன்பே-கிறிஸ்து பிறப்பதற்கும் முன்பே-கிரேக்க ஏகாதிபத்தியத்தை மகா அலெக்ஸாந்தர் இந்தியாவிலும் ஏற்படுத்த முயன்றான். ஆனால் பின்னாளில் சென்னையிலிருந்து பிரிட்டிஷ் இந்திய ஏகாதிபத்தியம் தழைத்துப் படர்ந்தது போல் போர்த்துகேசிய ஏகாதிபத்தியமோ, வேறு ஐரோப்பியப் பேரரசுகளோ படரமுடியவில்லை. மகா அலெக்ஸாந்தர், அல்புகர்க், டியூப்ளே ஆகியவர்களுடன் ஒத்துழையாமை செய்த விதி சென்னைக் குமாஸ்தாவான கிளைவுடன் ஒத்துழைத்துப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைச் சரித்திர உலகிலே ஓர் அற்புதமாக உருவாக்கிவிட்டது. இந்த விதிக்குக் கிளைவின் மதிவன்மையும் துணைபுரிந்த தென்றே கருதல்வேண்டும்.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

என்னும் திருவாக்கிலே குறிக்கப்படுவோருள் கிளைவும் ஒருவன் என்பதில் ஐயமில்லை. தென்னிந்தியாவில் ஆர்க்காடு முற்றுகையிலும் பிரெஞ்சுக்காரரின் ஆதிக்க ஒழிப்பிலும் கிளைவின் 'உலைவின்றித் தாழாது உஞற்' றிய முயற்சிப் பெருந்திறனைக் காண்கின்றோம். வட இந்தியாவில் பிளாசி யுத்தத்திலும், மனத்தின்கண் தாழ்வின்றி 'ஊழையும் உப்பக்கம்' கண்டு நினைத்தது முடிக்கும் உலையா முயற்சியைக் காண்கின்றோம். வங்காளக் கவர்னராகவும் சேனாபதியாகவும் நியமிக்கப்பெற்ற கிளைவ் கும்பினி ஆட்சியில் நிகழ்ந்த முறைகேடுகளைக் குறைப்பதற்குச் சில சீர்திருத்தங்களைச் செய்ததிலும் தன் மதி நலத்தையும் முயற்சித்திறனையும் வெளியிட்டதுண்டு.

1767-ம் ஆண்டுத் தொடக்கத்திலே கிளைவ் கடைசியாக வேலையைவிட்டு நீங்கிச் சீமைக்குப் போய் அரண்

மனை போன்ற கட்டிடங்களை விலைக்கு வாங்கிக்கொண்டு இந்திய நவாபுக்களிடமிருந்து தான் பெற்றிருந்த பெருஞ் செல்வத்துடன் அவர்களிடம் கற்றிருந்த இன்ப வாழ்க்கை வாழலுற்றான். கிளைவ் வெகுமதிகள் வாங்கியதுண்டென்று பாராளுமன்றத்தில் குற்றஞ் சாட்டியதும், அவன் தன் நாட்டுக்காக அரும்பெருஞ்செயல் செய்தவன் என்று குற்ற விசாரணை செய்த அம்மன்றம் தீர்மானித்துப் பாராட்டியதும் பலரும் அறிந்த வரலாற்றுச் செய்திகளே.

கடைசிநாளில் கிளைவின் மனவேதனை அதிகரித்தது. நவாப் சுராஜ் உத்தௌலாவின் முக்கிய அதிகாரிகளுடன் அன்று தான் சதி செய்தது ஓர் இந்திய வியாபாரிக்குத் தெரிந்துவிட்டதே யென்று அவனுக்கு முப்பது லட்சம் ரூபாய் கொடுப்பதாக அந்நாளில் கிளைவ் ஒரு பொய்ப் பத்திரம் எழுதிக்கொடுத்தான். அப்பத்திரத்திலே கிளைவுடன் கையெழுத்துப்போட வேண்டியிருந்த வாட்ஸன் என்பவன் தன் மனச்சான்றுக்கு அஞ்சிக் கையெழுத்திட மறுத்துவிட்டான். கிளைவ் அந்த நிலைமையிலும் 'நெஞ்சமே அஞ்சாதே நீ!' என்று மனச்சான்றைப் பேசா மடந்தையாக்கிவிட்டுப் பொய்ப் பத்திரத்தில் வாட்ஸன் துரையின் கையெழுத்தையும் தானே கைநடுங்காமல் போட்டுவிட்டான். அக்காலத்திலே கள்ளக் கையெழுத்திடுவோருக்கு ஆங்கிலச்சட்டம் தூக்குத் தண்டனை விதித்திருந்தது. அச்சட்டத்தின்படியே பிளாசிப் போர் நடந்து இருபது ஆண்டுகளானபின் மகாராஜா நந்தகுமார் என்ற இந்தியனுக்குக் கள்ளக் கையெழுத்திட்ட குற்றத்திற்காகக் கல்கத்தாவிலிருந்த ஆங்கில உயர் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தது. கிளைவையோ சட்டமும் பாராளுமன்றமும் பிரபு (Lord) வாக்கிப் பாராட்டின.

இவ்விதமாகக் கௌரவிக்கப்பெற்றும், ஒரு வெள்ளை நவாபாகச் சுகபோக வாழ்க்கை வாழ்ந்தும், மேலும்

மேலும் அபின் தின்றும், தனக்குத் தன் நாட்டிலேயே தன் வகுப்பினரான விரோதிகளால் ஏற்பட்ட அவமதிப்பினை உன்னி யுன்னிக் கிளைவின் மனக்கலக்கம் அதிகரித்த வண்ணமாயிருந்தது. வாழ்க்கை ஒரே அலுப்பாகவும் கசப்பாகவும் தோன்றியது. 1774-ம் ஆண்டு; கிளைவ் பிரபுவுக்கு வயது நாற்பத்தொன்பதுதான். பிஸ்டலை எடுத்துத் தன்னைச் சுட்டுக்கொள்ள எண்ணினான்; சென்னையில் சிறு குமாஸ்தாவாக இருந்த காலத்தில் தோன்றிய அதே எண்ணம், அதே தற்கொலை முயற்சி. ஆனால் இந்தத் தடவை எண்ணம் பலித்தது; குறி தவறாமல் குண்டு பாய்ந்துவிட்டது. பிரிட்டிஷ் மகாராச்சியத்தின் அடிப்படையை அமைப்பதற்காக எந்த உயிரை விதி காப்பாற்றி வைத்திருந்ததோ அந்த உயிரை அந்த வேலை முடிந்ததும் அதே விதி கொண்டுபோய்விட்டது.

## அத்தியாயம் 3

# தமிழர் நிலை

### (பிளாசிக்கு முன்னும் பின்னும்)

"இந்தியாவில் பிரிட்டிஷாரும் முஸல்மான்களும் ஆட்சிசெய்த காலத்தையே நாம் பெரிதாக எண்ணு கிருேமேயன்றி, அவர்கள் ஆட்சிக்குமுன் நீண்டநாள் ஆண்ட ஆட்சிகளைப்பற்றிச் சிந்திப்பதில்லை" என்று ராஜாஜி கூறியுள்ளார். பண்டைக் காலத்திலேயே நம் மக்கள் ஒழுங்கான ஆட்சிமுறைகளை அமைத்துக்கொண்டு கலை வளர்ச்சி, கல்விப் பெருக்கம், வர்த்தகப் பெருக்கம், கைத்தொழில் வளர்ச்சி, மதச் சுதந்திரம் முதலான அம்சங் களுடன் நல்ல நாகரிகத்தையும் பண்பாடுகளையும் உரு வாக்கி யிருந்தனரென்பதையும் ராஜாஜி சுட்டிக் காட்டு கிருர். இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன்பே மேலை நாட் டினர் இந்தியாவுடன், சிறப்பாகத் தென்னிந்தியாவுடன், வர்த்தகத்தொடர்பு கொண்டிருந்தனரென்பதற்குச் சான் றுகள் உண்டு.

கிரேக்கரையும் ரோமரையும் அந்நாளில் நம்மவர் 'யவனரெ'ன்று அழைத்தனர். இந்த யவன வகுப்பினர் சேரநாட்டின் கடற்கரைப் பட்டினங்களில் பண்டசாலை கள் அமைத்திருந்தனர். மதுரையம்பதியிலும் காவிரிப் பூம்பட்டினம் முதலிய நகரங்களிலும் யவனர்கள் காணப் பட்டதாகப் பண்டைத் தமிழிலக்கியம் அறிவிக்கின்றது. 'ஆதி இன்னதென்று ஓதுதற்கரிய வழுதியின் தொழு குலம்' என்று 'மனோன்மணீய' ஆசிரியரால் குறிக்கப் பெறும் பாண்டியர் குலத்தைச் சார்ந்த மன்னன் ஒருவன், கிறிஸ்து பிறக்க இருபது ஆண்டுகட்குமுன்பே ரோமாபுரிப் பேரரசுத் தலைவரான அகஸ்தஸ் ஸீஸரிடம் தூது அனுப்

பியதாகவும், யவனதேசத்திலிருந்து இந்தியா ஆண்டு தோறும் பெருஞ்செல்வத்தைக் கவர்ந்துகொண்டதாகவும் மேலைநாட்டாசிரியர்கள் தெரிவிக்கின்றனர். அந்த வாணிப உறவு திருஞானசம்பந்தர் காலமாகிய கி. பி. ஏழாம் நூற்றாண்டுவரையில் தொடர்ந்துவந்தது.

முத்துக் குளிப்பதொரு தென்க டலிலே ;
மொய்த்து வணிகர்பல நாட்டினர் வந்தே,
நத்தி நமக்கினிய பொருள்கொ ணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்க ரையிலே

என்றும்,

சீன மிசிரம் யவன ரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும்—மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு

என்றும் பாரதியார் பாடியிருப்பது உயர்வு நவிற்சியின்றி வெளியிடப்பெறும் சரித்திர உண்மைதான்.

தேவாரம் பாடிய மூவருள் இருவர் (திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும்) தங்கள் சைவப்பெருங்கொள்கைகளை உருக்கமான தமிழ்ப் பாடல்கள் வாயிலாகப் பரப்பிவந்த காலமாகிய கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அறபு நாட்டிலே இஸ்லாம் தோன்றி நாளடைவில் பல நாடுகளிலும் பரவலாயிற்று. அக்காலத்திற்கு முன்பே அறபியருக்கும் தமிழர்களுக்கும் வாணிப உறவு இருந்தது.

சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்குத்
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும்—நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு

என்று நம் தேசியக் கவிஞர் கூறுமாறு, திரைகடலோடிச் சென்ற தமிழர்கள் சிங்களம் கிழக்கிந்தியத் தீவுகள்

சீனு முதலிய நாடுகளுக்கும் மேலை நாடுகளுக்குமிடையே வாணிபஞ் செய்துகொண்டிருந்த அறபியர்களுடன் வாணிப உறவு கொண்டிருந்ததில் வியப்பில்லை. அறபியர்களின் மரக்கலங்களுக்குத் தமிழ் நாட்டுத் துறைமுகங்கள் தங்குமிடங்களாகவும் பண்டமாற்றிடங்களாகவும் உதவின. அறபியர் முஸ்லிம்களான பின்பும் கடல் வாணிபம் கைவிடப்படவில்லை; தமிழகத்திற்கும் அறபு தேசத்திற்கும் இடையே வாணிப உறவு தொடர்ந்து நீடித்தது.

முஸ்லிம் ஸூபிகள் என்ற தத்துவ அறிஞர்களின் கொள்கைகளுக்கும் ஆழ்வார்—நாயன்மார்களின் கொள்கைகளுக்குமுள்ள கருத்தொற்றுமையை ஆராயும்போது, வாணிபத் தொடர்பு சிந்தனைத் தொடர்புமாகிக் கலைப் போக்கையும் சமயக் கொள்கைகளையும் கூட ஒருவாறு உருவாக்கியிருத்தல் கூடுமோ என்பதும் ஆராய்ச்சிக் குரியது. "தமிழருக்கும் யவனருக்கும் இருந்த இத் தொடர்பு வியாபாரத்தோடு மட்டும் நின்றிருந்ததே தவிர, சமயம், கலை, பாஷை முதலியவைகளிற் சிறிதும் இடம் பெறவில்லை" என்று '**கிறிஸ்தவமும் தமிழும்**' என்னும் நூலின் ஆசிரியர் துணிகின்றார். அதன் உண்மை எப்படியிருந்தாலும், அறபியருக்கும் தமிழருக்குமிடையே பழங்காலத் தொடர்பு வாணிபத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. "தென்னிந்தியாவில்—முக்கியமாகத் தமிழ் நாட்டில்—கி. பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து சிறிது சிறிதாக இஸ்லாம் மார்க்கம் சமாதானத்தை அடிப்படையாகக் கொண்டு பரவிற்று" என்பர் '**சீதக்காதி வரலாறு**' என்னும் ஆராய்ச்சி நூலின் ஆசிரியரான டாக்டர் மு. ஹுஸைன் நயினார். சோழர் பேரரசு வீழ்ச்சியுற்ற பின்பு பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாலிக்காபூர் தென்னிந்தியாவில் படையெடுத்து வந்தான். அதற்குப் பின்பே "தமிழ் நாட்டு இஸ்லாமிய வரலாற்றில்

அரசியல் ஆதிக்கத்தின் விளைவுகள் சிறிது சிறிதாகத் தலையெடுக்க ஆரம்பித்தன" என்பர் டாக்டர் நயினார்.

அந்நாளில் விந்திய மலைக்கு இப்பாற்பட்ட பிரதேசங்கள் சுதந்திரத்துடனும் செல்வப்பெருக்குடனும் இருந்தன. சோழர் ஆண்ட இராச்சியத்தின் பெரும்பகுதியையும் ஹொய்சளர் தங்கள் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்து விட்டனர். தெற்கேயிருந்த பாண்டிய அரசு சுதந்திரத்துடன் கடல் வாணிபச் சிறப்பும் உடையதாகத் திகழ்ந்தது. இப்பிரதேசங்களிலுள்ள கோவில்களும் செல்வச்சிறப்புடன் பொலிந்தன. அளவு கடந்த மதப்பற்றும் கட்டுப்பாடுமுடைய முஸ்லிம் படைகளை ஒன்றுபட்டு எதிர்க்கும் மதிநலமின்றி இந்து அரசர்கள் வீழ்ச்சியுற்றனர். பாண்டிய நாட்டிலோ ஏற்கெனவே அரசியற்குழப்பமும் ஏற்பட்டிருந்ததால் மாலிக்காபூருக்கு மதுரையைப் பிடித்துக் கொள்வதும், ஊர்களையும் கோவில்களையும் சூறையாடுவதும் எளிதாகி விட்டன. அந்நிலையில் இந்துக்களின் பொருளுரிமை, சமய உரிமை, அரசுரிமைகளைக் காக்க எழுந்தது விஜயநகரப் பேரரசு. இப்பேரரசைச் சார்ந்த கம்பணவுடையார் என்பவன் முஸ்லிம்கள் ஆண்டுவந்த மதுரையைக் கைப்பற்றித் தமிழகத்தில் அமைதியை உண்டாக்கினான். சீரழிந்து கிடந்த மீனாட்சியம்மன் கோவில், திருவரங்கத்துக் கோவில் முதலான ஆலயங்களைப் பழுது பார்த்துப் பூசைகள் முதலியன வழக்கம் போல் நடக்குமாறு ஏற்பாடு செய்தான். பாண்டிய நாட்டையும் சோழ நாட்டையும் முறையே பாண்டியனொருவனுக்கும் சோழனொருவனுக்கும் அளித்து விஜயநகரப்பேரரசுக்கு உட்பட்டு ஆண்டுவருமாறு பணித்தான். இந்தப் பேரரசு ஏறத்தாழ இருநூற்றைம்பதாண்டுகளாகத் தென்னிந்தியாவில் அமைதியை நிலைநாட்டி வந்தது. இதன் ஆதிக்கத்தில் வடமொழி—தெலுங்கு—கன்னடப் புலவர்களோடு தமிழ்ப் புலவர்களும் ஆதரிக்கப்பெற்ற

னர். விஜயநகரப் பேரரசரில் கிருஷ்ணதேவராயர் பதினு ரும் நூற்றுண்டின் முற்பகுதியில் இணையற்றவராகத் திகழ்ந்தார். இவர், இந்தியாவில் தங்கி வாணிபஞ் செய்ய வந்த போர்த்துகேசியருக்கும் உதவிசெய்து தமது நாட்டின் வாணிப நலத்தைப் பேணிக்கொண்டார்.

இவர் தாமே பெரும் புலவராக இருந்ததுடன் புலவர் பெருமக்களைப் பெரிதும் பாராட்டி ஆதரித்தார். கிருஷ்ண தேவராயர் இயற்றிய தெலுங்கு நூல்களில் மிகச்சிறந்த தாகிய '**ஆமுக்தமால்யதா**' ஆண்டாளின்கதைதான். இவரால் ஆதரிக்கப் பெற்ற தமிழ்ப்புலவர்கள் பலர். அவர்களில் குமார சரசுவதி என்பவர் ராயரது ஆஸ்தான வித்துவான் களில் ஒருவராக இருந்தார். 'சூடாமணி' யென்னும் தமிழ் நிகண்டு செய்த மண்டல புருடரும் ராயரால் ஆதரிக்கப் பெற்றவர்.

கெடிமன்னர் வணங்கும் தாளான்
கிருட்டின ராயன் கைபோல்
கொடைமடம் என்று சொல்ப
வரையாது கொடுத்த லாமே

என்று இந்த ஆசிரியர் கூறுவது காண்க. சிறந்த வைணவ ராயினும் கிருஷ்ண தேவர் பரந்த சமரச மனப்பான்மை யுடன் பல்வேறு சமயக் கொள்கைகளையுடைய புலவர்களை யும் ஆதரித்தார். எல்லாக் கோவில்களுக்கும் திருப்பணி புரிந்ததுடன் இஸ்லாமியர்களான அரசதூதர்களின் சமய உணர்ச்சியையும் கிறிஸ்தவப் போர்த்துகேசியரின் மதப் பற்றையும் மதித்துக் கௌரவித்தார். அக் காலத்திலே— அதாவது கி. பி. பதினாரும் நூற்றுண்டிலே— தமிழிலக் கியம் சிறந்த நிலையில் இல்லாவிட்டாலும் கிருஷ்ணதேவ ராயராலும் அவரது பிரதிநிதிகளான நாயக்க அரசர் களாலும் நன்கு பேணப்பெற்று வந்தது. சேர சோழ மரபினர் அருகிப்போயிருந்த அக்காலத்திலே பழைய பாண்டிய அரசர்களின் கிளைஞர்களாய்க் கருதத்தக்க

அதிவீரராம பாண்டியனும் வரதுங்கராம பாண்டியனும் நற்றமிழ்ப் பணி புரிந்துள்ளாரென்பதை அறியாதார் யார்? இந்நூற்றுண்டின் இடைக்காலத்திலே சோழ நாட்டில் சமயத் தலைவர்களும் சமயப் பயிற்சியோடு தமிழிலக்கியப் பயிற்சிக்கும் துணைபுரிவாராயினர்.

இத்தகைய இலக்கிய வளர்ச்சியின் தொடர்ச்சியைப் பதினேழாம் நூற்றுண்டிலும் காணலாம். இந்த இலக்கியப் பணியில் சைவ மடங்களுக்குப் பெரும்பங்கு உரியது. இந் நூற்றுண்டின் முற்பகுதியில் பெரும் புகழ் பெற்ற தமிழ்க்கவிஞர் குமரகுருபரசுவாமிகள்; இவர் வட இந்தியாவுக்குச் சென்று இந்துஸ்தானி கற்றுச் சைவசித்தாந்தக் கொள்கைகளைப் பரப்பிவந்தார். பதினாறும் நூற்றுண்டின் பிற்பகுதியில் நிறுவப்பட்ட தருமபுர மடத்தின் நான்காவது பட்டத்தில் வந்த மாசிலாமணி தேசிகரின் சீடர் இப்பெரியார். நன்னெறி, பிரபுலிங்க லீலை முதலான நூல்களை இயற்றிய சிவப்பிரகாச சுவாமிகள் பதினேழாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவர்.

இந்நூற்றுண்டினை ஒளிபெறச் செய்தவர்களில் முஸ்லிம் கவிஞரான உமறுப் புலவரும் ஒருவர். இவரே முகம்மதியத் தமிழ்ப்புலவர்களில் தலைசிறந்தவர். இப்புலவரின் தந்தையார் பெரு வணிகர். "அறபு தேசத்து முகம்மதியர்கள், எகிப்து பாரசீகம் முதலிய நாடுகளை வென்று கைப்பற்றிய பிறகு, யவனர் நமது தேசத்துடன் வைத்திருந்த நேர்முகமான வியாபாரத் தொடர்பு தடைப்பட்டு விட்டது." ('கிறிஸ்தவமும் தமிழும்' : பக்கம் 2). அறபி முகம்மதியர்களே இந்தியப் பொருள்களை ஐரோப்பிய நாடுகளுக்குக் கொண்டுபோய் விற்றுப் பெரும்பொருளீட்டி வந்தனர். அவ்வணிகருட் பலர் தமிழ் நாட்டிலே தங்கலாயினர். நாளடைவில் தமிழ்நாட்டினரிலும் இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்டவருண்டு; இவர்களும் வாணிபஞ் செய்து பொருளீட்டலாயினர். இத்தகைய

முஸ்லிம் வணிகர் ஒருவரது அருமைப் புதல்வரான உமறுப்புலவர் தமிழிலே தக்க புலமை பெற்றுச் 'சீருப் புராணம்' என்னும் நூலை இயற்றியுள்ளார். இதில் இஸ் லாம் சமயத் தலைவராகிய நபிநாயகத்தின் வரலாறு பாடப்பெற்றிருக்கிறது. இவர் சீதக்காதி வள்ளலின் காலத்தவர்.

தமிழகத்தில் முஸ்லிமானவர்களில் மரக்கல மன்னராகிப் பொருளீட்டியவர்களை 'மரக்கலராயரெ' ன்றும் 'மரக்காயரெ' ன்றும் குறிப்பிடுவதுண்டு. இவர்களில் தமிழிலக்கியப்புகழ்பெற்று விளங்கும் வள்ளலார் சீதக்காதியென்ற ஷைகு அப்துல் காதிறு; இவர் மொகலாயப் பேரரசரான அவுரங்கசேபு காலத்தில் (1659—1707) வாழ்ந்தவர். "1650-ம் ஆண்டிற்குச் சிலகாலம் முன்னரோ பின்னரோ பிறந்திருப்பாரென்றும், 1720-ம் ஆண்டினையடுத்து இறந்திருப்பாரென்றும் கொள்ளலாம்" என்பர் டாக்டர் நயினார். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் சென்னையிற் பண்டசாலை ஏற்படுத்திக்கொண்ட பின் சீதக்காதி அவர்களுக்குப் பல கடிதங்கள் எழுதியதாக அறிகிறோம். ('சீதக்காதி வரலாறு': பக்கம் 7.) இந்த வள்ளல் இப்போதுள்ள இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த கீழக்கரையென்ற தென்காயலில் வாழ்ந்தவரென்பதும், இராமநாதபுரத்தை ஆண்ட 'கிழவன் சேதுபதி'யென்ற விசயரகுநாதத் தேவரின் நெருங்கிய நண்பரென்பதும் சேதுபதி மொகலாயப் பேரரசரிடத்தும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடத்தும் தொடர்பு கொள்ள வள்ளலாரை அரசாங்கத் தூதுவராக வைத்துக் கொண்டாரென்பதும், அந்நாளில் கீழக்கரை முக்கியத் துறைமுகமாக இருந்ததென்பதும், மேலேசொன்ன ஆராய்ச்சி நூலின் வாயிலாக அறியப்படும் செய்திகள். சீதக்காதியின் வள்ளன்மை அந்நாளில் தமிழை வளர்த்ததென்பது அனைவரும் அறிந்ததே. 'சீருப் புராண' த்தை இயற்றிய உமறுப் புலவரோடு, நமச்சி

வாயப் புலவர், கந்தசாமிப் புலவர், படிக்காசுப் புலவர் முதலியவர்களும் தமையக் கருணை செய்தவர் சீதக்காதி. ஹிந்து முஸ்லிம் புலவர்களிடையே வேற்றுமை பாராது உதவிய இவரது கொடைச் சிறப்பைத் தமிழ்நாடு இன்றளவும் மறந்து விடவில்லை.

இஸ்லாம் ஓரளவு தமிழை வளர்த்ததுபோல், கிறிஸ்தவமும் தமிழ் வளர்ப்பிற்கு உதவியிருக்கிறது. கிறிஸ்தவரால் தமிழ் மொழிக்கு உண்டான நன்மைகளைக் 'கிறிஸ்தவமும் தமிழும்' என்னும் நூல் நன்கு முறைப்படுத்திக் கூறுகின்றது. தமிழில் தனி வசன நூல் ஐரோப்பியரால் முதன் முதல் உண்டாக்கப்பட்டது என்பதையும், கி. பி. 1577-ம் ஆண்டிலேயே தமிழின் முதல் வசன நூலைக் '**கிறிஸ்தவ வேதோபதேசம்**' என்னும் பெயருடன் ஏசுவின் சபைப் பாதிரிமார் எழுதி வெளியிட்டனரென்பதையும் இந்நூலாசிரியர் சுட்டிக் காட்டுகிறார். அதனை யடுத்து 1579-ல் அச்சேறிய '**கிறிஸ்தவ வணக்கம்**' என்னும் தமிழ் வசன நூலின் பிரதியொன்று பாரிஸ் நகரப் புத்தகசாலையில் இருக்கிறதாம். பதினேழாம் நூற்றாண்டில் ராபர்ட்-டி-நொபிலி என்ற இத்தாலியர் தமிழ் நாட்டில் வாழ்ந்து சில வசன நூல்களை எழுதினார். இவரது இந்தியப் பெயர் 'தத்துவபோதக சுவாமி'. 'அருளானந்த சுவாமி' என்னும் புனைபெயருடன் வேறொரு ஐரோப்பியப் பாதிரியாரும் சில தமிழ் வசன நூல்கள் எழுதியதுண்டு. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்து தமிழ் நூல்கள் இயற்றிய **பெஸ்கி** என்னும் வீரமாமுனிவரின் பெயரையும் புகழையும் தமிழர் நன்கறிவர். இவருக்குத் 'தைரியநாத சுவாமிகள்' என்ற புனைபெயரும் உண்டு. இவர் காலத்தில் ஜெர்மன் தேசத்திலிருந்து வந்த சில பாதிரிமார்களும் சில தமிழ் வசனங்களை இயற்றினர். திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ மாதவச்சிவஞானசுவாமியென்ற பெரியார் சைவத் தொண்டுடன்

இலக்கியத் தொண்டும் ஆற்றிப் புகழ் பெற்ற செய்யுள் நூல்களையும் வசன நூல்களையும் இயற்றியதும் இந் நூற்றாண்டிலேதான்.

வீரமாமுனிவர் இத்தாலி நாட்டினர். இவர் தமிழில் முதன் முதல் **சதுரகராதி** என்ற புதிய அகராதியைச் செய்தாரென்பதும், 'தேம்பாவணி' யென்னும் காப்பியத்தையும் வேறு செய்யுள் நூல்களையும் வசன நூல்களையும் இயற்றினாரென்பதும் தமிழறிஞர்கள் நன்கறிந்தனவே. 'பரமார்த்த குருவின் கதை' நகைச் சுவையுடன் சாதாரண வசன நடையில் பாமரரும் படித்தின்புறுமாறு எழுதப் பட்டிருக்கிறது. 'ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம்' என்னும் இலக்கணம் இயற்றியவரும் இவரே. தமிழ்-லத்தீன் அகராதி ஒன்றையும், போர்த்துகேசியம்-தமிழ்-லத்தீன் அகராதி ஒன்றையும் இவர் இயற்றியுள்ளார். திருக்குறளில் அறத்துப்பாலையும் பொருட்பாலையும் இவர் லத்தீன் மொழியில் பெயர்த்தெழுதி யுள்ளார். சுப்பிரதீபக் கவிராயரிடம் இவர் தமிழ் கற்றுக்கொண்டவரென்பர். திருச்சிராப்பள்ளியை அக்காலத்தில் ஆண்டுவந்த சந்தா சாகிபைச் சந்தித்து அந்த நவாபுடன் நட்புக் கொண்டார். சாகிப் முனிவருக்குத் தந்தப்பல்லக்கு முதலியன தந்து முகமன் இயம்பி இவரைத் தனக்குத் திவானாக (அமைச்சராக) நியமனஞ் செய்தான். மொமாகலாய இராச்சியம் நிலை குலைந்ததும், அப்பேரரசின் தட்சிணப் பிரதிநிதியாக இருந்த ஹைதராபாத்து நிஜாம் சுதந்திர அரசனாகித் தென்கோடிப் பிரதேசங்களைத் தன் ஆதிக்கத்தின் கீழ் ஆர்க்காடு நவாபின் ஆட்சிக்கு உட்படுத்தியிருந்தான். 'அந்த நவாபின் பதவி யாருக்கு?' என்ற விவகாரம் சந்தா சாகிபுக்கும் முகமது அலிக்குமிடையே ஏற்பட்டதும், பிரெஞ்சுக்காரர் சந்தாசாகிபையும் ஆங்கிலேயர் முகமது அலியையும் ஆதரித்தனர். இந்தப் போரிலேதான் கிளைவ் திடீரென்று ஆர்க்காடு சென்று சந்தாசாகிபின் சேனை

யைத் தாக்கி வெற்றிபெற்று அக்கோட்டையையும் கைப்பற்றிக் கொண்டான். பிறகு சந்தாசாகிப் தன் மகனை அனுப்பி ஆர்க்காட்டை முற்றுகை செய்விக்க, கிளைவ் அம்முற்றுகையை இந்தியச் சிப்பாய்களின் உதவியால் சமாளித்து வெற்றிபெற்றது சரித்திரப் புகழ் பெற்றிருக்கிறதல்லவா? 1740-ம் ஆண்டில் சந்தாசாகிப் சிறைப்பட்ட பின் வீரமாமுனிவர் திருநெல்வேலியிலுள்ள மணப்பாடி யென்னும் ஊரில் சென்று இரண்டு ஆண்டுகள் வாழ்ந்த பின் மரணமடைந்தார்.

அக்கால நாட்டு நிலை மிகவும் குழப்பமானது. தஞ்சை, செஞ்சி, மதுரை, இராமநாதபுரம் முதலான இடங்களில் குறுநில மன்னர்களும், பல ஊர்களில் பாளையப்பட்டுக்காரர்களும் ஜமீன்தார்களும் ஆண்டு வந்தனர். தென்னிந்தியாவில் வன்மையுள்ள பேரரசு ஒன்றும் நிலவாததால் கொள்ளைக் கூட்டங்களும் அங்கங்கே அதிக அளவில் காணப்பட்டன. 'தடியெடுத்தவன் தண்டற்காரன்' என்றிருந்த அக்குழப்பநிலையைப் பயன்படுத்திக்கொண்டுதான் பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் தத்தம் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயன்றனர். அந்தச் சூழ்நிலையில் தமிழ் நாட்டிலே தமிழர் தலைவராகவும் பிரெஞ்சுக்காரருக்கு நண்பராகவும் திகழ்ந்து, பிரெஞ்சு ஆட்சியை நம் மக்களின் நன்மைக்கு இசைவிக்க முயன்றவர் ஆனந்தரங்கப்பிள்ளை. இவர் 'செந்தமிழ்த் தென்புதுவையென்னும் திருநகர்' என்று பாரதியாரால் பாடப்பெற்றிருப்பதும், இன்றும் அன்னிய அரசாகிய பிரெஞ்சு அரசின் வசமாயிருப்பதுமாகிய புதுச்சேரியில் வாழ்ந்தவர். இவர் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கூட்டத்தாரால் 1746-ம் ஆண்டில் திவான் பதவியில் நியமிக்கப்பட்டார். பிரெஞ்சுக்காரரின் நன்மதிப்பைப் பெற்று அவர்களுக்கும் நாட்டுச் சிற்றரசர்களுக்குமிடையேயுள்ள உறவை உறுதிப்படுத்த முன்னின்றார். பிரெஞ்சு அதிகாரத்தின் கீழிருந்த மக்களையன்றி

மற்றவரும் ஆனந்தரங்கப் பிள்ளையைப் பெரிதும் மதித்தனர். புதுவை மக்களோ கவர்னராயிருந்த டியூப்ளேயைக் காட்டிலும் ஆனந்தரங்கப் பிள்ளையையே தம்மை ஆளும் தலைவராக மதித்துப் போற்றுவாராயினர்.

இவர் பன்மொழிப் பயிற்சி பெற்றிருந்தவர்; பொன் மொழியாகத் தாய்மொழியைப் போற்றிப் புலவர்களை ஆதரித்து வந்தவர். இவரைப்பற்றித் தனிப் பாடல்கள் தமிழிற் பலவுள. 'ஆனந்தரங்கக் கோவை' என்ற நூலொன்றும் பாடப்பட்டிருக்கிறது; வேருெரு கோவைப் பிரபந்தமும் இவரைப்பற்றித் தியாகராயப் புலவரென்பவரால் இயற்றப்பட்டிருக்கிறது. இவர்மீது பண்ணேடு பாடக் கூடிய தெலுங்குப் பாக்களும் இயற்றப் பெற்றுள்ளன. இதனல் இப்பெருந் தமிழரின் பரந்த மனப்பான்மை இனிது புலனுகின்றது. 1752-ல் 'ஆனந்தரங்க விஜயம்' என்னும் நூலொன்றும் தோன்றியது. இவர் 'நகை முகம்' உடையரென்று ஒரு புலவர் பாடியிருக்கிருர். இவருடைய நாட் குறிப்புக்கள் சரித்திரப் பொக்கிஷமாகப் பயன்படுகின்றன. கண்டும் கேட்டும் இவர் குறித்து வைத்திருக்கும் குறிப்புக்கள் இவை. புதுவையிலும் பிற இடங்களிலும் பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் நிகழ்ந்த போர் விவரங்கள், அரசியற் சூழ்ச்சிகள், சமுதாய நிகழ்ச்சிகள், வாணிப நிலை, மொகலாயர் நிலை முதலியன இக்குறிப்புக்களில் காணப்படுகின்றன. இந்திய சரித்திரத்திற்கு மட்டுமல்ல, இங்கிலாந்து பிரான்சு முதலிய நாடுகளின் சரித்திரத்திற்கும் பயன்படத் தக்க நிகழ்ச்சிகளும் இக்குறிப்புக்களில் இடம் பெற்றிருக்கின்றன. சிறப்பாகத் தென்னுட்டு மக்கள் அந்நாளில் எத்தகைய வாழ்வு நடத்தினரென்பது இக்குறிப்புக்களினின்றும் அறியப்படுகிறது. "அவர் எழுதி வைத்திருக்கும் குறிப்புக்களைப் படிக்கும்போது அக்காலத்துத் தமிழ் நாட்டை நாம் சலனப்படக் காட்சியில் பார்ப்பதுபோன்ற

உணர்ச்சி நமக்கு உண்டாகிறது........எத்தனை விதமான உருவங்கள் தோன்றி மறைகின்றன! ஒவ்வோர் உருவமும் உயிரோடிருப்பதுபோலத் தோன்றுகிறது! ஊசியால் குத்தினால் அவ்வுருவங்களினின்று இரத்தம் வருமென்று நமக்குத் தோன்றும்; கிசுகிசுமூட்டினால் சிரித்து விடுவார்களென்று நினைப்போம்'' என்பர் பேரறிஞரான திரு. வ. வே. சு. ஐயர். ஆனந்தரங்கப் பிள்ளை பிளாசிச் சண்டை நடந்து நான்கு ஆண்டுகள் சென்றபின் காலமானார்.

இவரது நாட்குறிப்புக்களைத் தக்க முறையில் பயன் படுத்திக் கொண்டு நாட்டு நடப்பை நன்குணர்ந்து கொள்வதற்கு நாம் சில சரித்திர அம்சங்களை நன்குணர்ந்து கொள்ள வேண்டும். கிருஷ்ணதேவராயர் காலத்திலே காஞ்சீபுரம் உள்ளிட்ட தமிழகத்திற்கு மகாமண்டலேசுவரராக இருந்தவர் நாகம நாயக்கர் என்பவர். அவரிடம் கணக்கப்பிள்ளையாக இருந்தவர் காஞ்சீபுரத்தை யடுத்த ஒரு சிற்றூரைச் சார்ந்த அரியநாயக முதலியார். இவரை அரியநாத முதலியாரென்றும் கூறுவதுண்டு. நாளடைவில் இவர் விஜயநகரப் படைத் தலைவருள் ஒருவராக நியமிக்கப் பெற்றார். படைத்தலைவர் பதவியைத் தளவாய்ப் பதவியென்றும் கூறுவதுண்டு. எனவே அரியநாதர், தளவாய் அரியநாத முதலியார் என்று கூறப்படுவர். இவர் கிருஷ்ண தேவராயருக்கு அமைச்சராகவும் இருந்ததுண்டு.

அக்காலத்தில் சோழ நாட்டை வீரசேகரன் என்னும் சோழனும், பாண்டிய நாட்டைச் சந்திரசேகரன் என்னும் பாண்டியனும் ஆண்டு வந்தனர். இந்த இரண்டு தமிழரசர்களும் ஒற்றுமையுடன் வாழவில்லை. சோழன் பாண்டியனை வென்று அந்த நாட்டைப் பற்றிக் கொண்டான். நாடிழந்தவன் அரியநாதர் மூலமாகக் கிருஷ்ண தேவராயரை அணுகித் தன் குறையை முறையிட்டுக் கொண்டான். ராயரின் ஆணையின் வண்ணம் தட்சிண மகாமண்டலேசுவரரான நாகமநாயக்கர் பாண்டி

மண்டலம் சென்று சோழ அரசனை முறியடித்து நாட்டை மீட்டுக் கொண்டார். ஆனல் பாண்டியனது திறமைக் குறைவை அறிந்து தாமே நாட்டைக் கண்காணித்து வந்தார். இதைக் கேள்வியுற்ற ராயர் கடுஞ்சினங் கொண்டு நாகம நாயக்கரின் புதல்வராகிய விசுவநாத நாயக்கரையே தந்தையை அடக்க அனுப்பினர். விசுவ நாதருடன் அரியநாதரும் சென்றார். தந்தையாருக்கும் புதல்வருக்கும் நடந்த போரில் தந்தையார் தோல்வி யுற்றார். விசுவநாதர் பாண்டியனைச் சிங்காதனத்தில் அமரச் செய்தார். பாண்டியன் சில மாத காலத்தில் இறந்ததும் விசுவநாத நாயக்கரே பாண்டி மன்னரானர். அரியநாத முதலியார் அமைச்சராகவும் படைத் தலைவ ராகவும் அமர்ந்தார். அப்போது கிருஷ்ண தேவராயர் காலமாகி அவரது தம்பியான அச்சுத ராயர் விஜயநகரப் பேரரசராயிருந்தார்.

இப்பேரரசரே விசுவநாதரை மதுரை மன்னராக்கிச் செவ்வப்ப நாயக்கர் என்பவரிடம் சோழ நாட்டை ஒப்பு வித்தார். அப்போது சேர அரசனக இருந்தவன் விஜய நகரப் பேரரசுக்குக் கப்பத் தொகை செலுத்தாததால் அச்சுத ராயர் தம் உறவினரும் சேனைத் தலைவருமாகிய ராமராஜ விட்டலரைப் பெரும் படையுடன் தெற்கே அனுப்பி வைத்தார். விட்டல ராயர் மதுரைக்கு வந்ததும் விசுவநாதரின் புதல்வரான கிருஷ்ணப்ப நாயக்கரும் உதவியாகச் சென்றார். இப்படை வீரர்கள் மலைக் கணவாய் வழியாகச் சேர நாட்டுத் தென் பகுதியில் நுழைந்ததும் அக்குடிமக்கள் பட்ட துன்பக் காட்சிகளைத் தாம் நேரில் கண்ட பிரான்ஸிஸ் ஸேவியர் என்ற பாதிரியார் குறித்து வைத்திருக்கிறார். கடைசியாகச் சேரநாடு விட்டல ராயருடன் ஒப்பந்தஞ் செய்து கொண் டது. அந்த உடன்படிக்கைக்குப் பிறகு விட்டல ராயர் தட்சிண மகாமண்டலேசுவரராக நியமிக்கப் பெற்றார்.

அந்நாளில் விசுவநாதர் ஆட்சிக்குப் பாண்டிய நாடும் சோழ நாட்டின் ஒரு பகுதியும் கொங்கு நாடும் உட்பட்டிருந்தன. இந்நாட்டிலே ஒழுங்கை விசுவநாதர் நிலை நிறுத்த விரும்பினர். சேர சோழ பாண்டியராட்சியில் அங்கங்கே உயர் பதவிகளைத் தாங்கி வந்த பெருமக்களும், போர்க் குழப்பங்களில் சிறு படைத் தலைவர்களாகி ஊர்களையும் கோட்டைகளையும் கைக்கொண்டிருந்தவர்களும், கம்பணவுடையார் தென்னுட்டைக் கைக்கொண்ட காலம் முதல் தமிழகத்தில் அங்கங்கே குடியேறியிருந்த தெலுங்கரும் கன்னடருமான பெருமக்களும் நாட்டுக்குத் தொந்தரவு கொடாமலிருக்கும் பொருட்டு என்ன செய்யலாமென்று விசுவநாதரும் அரியநாதரும் ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தனர். அதற்கிணங்க அப்பெரு மக்களுக்கு உரிய நிலப் பகுதிகளை எழுபத்திரண்டு பாளையங்களாக வகுத்து அவர்களைப் பாளையக்காரராக்கினர்.

அவரவர் பாளையத்தில் வரி தண்டுதல் முதலான உரிமைகளைப் பெற்ற சிற்றரசராயிருந்தனர் பாளையக்காரர்கள். பாளையப் பராமரிப்புக்கு வேண்டிய படைகளை வைத்துக்கொண்டு இவர்கள் நாயக்க மன்னருக்கு வேண்டும்போது உதவி புரிந்தனர். இந்தப் பாளைய வகுப்புத் திட்டம் அரியநாத முதலியாரால் தயாரிக்கப்பட்டு ஆதியில் நாட்டைச் செம்மைப்படுத்த உதவியது. பாளையக்காரர் பின்னுளில் தென்னுட்டு ஜமீன்தார்களாயினர். நாளடைவில் பாளையக்காரர்கள் திமிருற்று மக்களைத் துன்புறுத்திக் குழப்பம் விளைத்தனர். அவர்களை ஒடுக்கிக் 'கள்வர் கரு அறுத்த வீரன்' என்று பெயர் பெற்ற ஒரு முஸ்லிம் வீரனுண்டு. தேசிங்குராஜன் கதைபோல் இந்த வீரன் கதையும் பொது மக்களிடையே பாடல் பெற்றுப் பிரசித்தமாக வழங்குகிறது. இவ்வீரன் 'கானு' என்றும், '**கான்சாயபு**' என்றும் '**கான்சாயபு கம்மந்தான்**' என்றும் தமிழர்களிடையே பேர்பெற்றுத் தன் புகழை நிலைநாட்டி

யிருக்கிறான். 'கான்சாயபு சண்டை' என்னும் பாட்டு நாடோடி இலக்கியமாக வழங்குகிறது. இவனுடைய உண்மைப் பெயர் முகம்மது யூசப்கான்; முந்திய இயற் பெயர் மருதநாயகம் பிள்ளை; இந்துவாயிருந்து முஸ்லி மானவன். பிளாசி யுத்தத்திற்கு முன் பிறந்தவன்.

கர்நாடக நவாபு ஸ்தானத்தைக் குறித்துச் சந்தா சாயபுக்கும் முகம்மது அலிக்கும் போர்கள் நிகழ்ந்தன அல்லவா? முதலில் யூசப்கான் சந்தா சாயபுவின் சேவ கத்தில் அமர்ந்திருந்ததாகவும், 1752-ம் ஆண்டுத் துவக் கத்தில் கிளைவின் படையில் உத்தியோகஸ்தனாயிருந்த தாகவும், இவன் சேர்ந்த பிறகே கிளைவ் ஆர்க்காட்டுக் கோட்டையைப் பிடித்துக் கொண்டதாகவும் சொல்லு கிறார்கள். யூசப்கான் உதவியினால் பிரெஞ்சுக்காரரைத் தோற்கடித்த ஆங்கில தளபதி ஒருவன், யூசப்கானை "ஒப்புயர்வற்ற வீரன்; அவன்தான் எனக்கு ஒரே தாரகம்" என்று புகழ்ந்திருக்கிறான். மேஜர் லாரென்ஸ் யூசப்கானைப் 'பிறவிப் போர் வீரன்' என்றும், 'சிறந்த தளகர்த்தன்' என்றும், 'வீரமும் மனவுறுதியும் வாய்ந் தவன்; சமயத்தில் வெகு நிதானமாய் அறிவுத்திறமை யுடன் நடப்பவன்' என்றும், 'இவனுக்குச் சமமான வீரனை இந்நாட்டில் நான் கண்டதில்லை; ஒவ்வொரு வேலையை யும் நேரில் கவனித்து ஓயாதுழைக்கிறான்' என்றும் புகழ்ந்தெழுதியிருக்கிறான். கிளைவைக் குறித்தும் இத் தகைய புகழ்மொழிகளை மேஜர் லாரென்ஸ் உபயோகிப் பதை ஊன்றி நோக்குவோர், கிளைவுக்குச் சமமான வீரன் யூசப்கான் என்று முடிவுகட்டவும் கூடும். ஆங்கிலேயக் கம்பெனியார் 1754-ம் ஆண்டில் தமது சிப்பாய்ப் படை களுக்கு யூசப்கானைச் சேனபதியாக்கிக் 'கம்மான்டண்ட்' (Commandant) என்னும் பட்டத்தையும் சூட்டினர். இப் பட்டம் தான் 'கம்மந்தான்' என்று தமிழில் மருவி வழங் கியது.

சந்தாசாகிப் தோல்வியுற்றுக் கொலையுண்டு நாட்டின் ஏகபோக ஆட்சி நவாபு முகம்மது அலியை அடைந்த பின்பும் மதுரை - திருநெல்வேலிச் சீமைகளிலிருந்த பாளையக்காரர்கள் தொந்தரவு செய்த வண்ணமாயிருந்தனர். அப்போது முகம்மது அலிக்காக அந்த நவாபின் தமையனுடனும், கம்பெனியாரின் சேனையுடனும் யூசப்கான் திருநெல்வேலிச் சீமைக்குச் சென்றான். அக் குழுவினரில் இலஞ்சம் வாங்காமல் ஒழுங்காக நடந்துகொண்டவன் யூசப்கான் தான். நவாபின் தமையனால் பாளையக்காரர்களை அடக்கவோ, வரிப்பாக்கிகளை வசூலிக்கவோ இயலவில்லை. நவாபு முகம்மது அலி தங்களுக்குக் கொடுக்க வேண்டிய கடன் அடைபடாததால் கம்பெனியார் திருநெல்வேலி மதுரைச் சீமைகளை நவாபிடமிருந்து குத்தகையாகக் கொண்டு அப்பிரதேசங்களைத் தாமே அடக்கி ஆள விரும்பினர். அந்த ஏற்பாட்டின்படி கம்பெனியார் யூசப்கானை அப் பிரதேசங்களுக்கு அனுப்பிவைத்தனர். யூசப்கான் தெற்குச் சீமையையும் பாளையங்களையும் ஒழுங்குபடுத்தி மதுரையிலும் முறைசெய்து சீராக்கினான். இத்தகைய உதவிகள் புரிந்ததற்காகக் கம்பெனியார் யூசப்கானுக்கு வெகுமானமளித்துத் தென்னாடுகளின் குத்தகையையும் கொடுத்தனர். ஆனால் நாட்டுக்கு உரியவன் நவாபானதால் நவாபுக்கே குத்தகைப்பணம் செலுத்தப்பட வேண்டும் என்று கம்பெனியார் மறு உத்தரவு அனுப்பியதும், யூசப்கான் தனக்கு நவாபின்மீதுள்ள வெறுப்பினால் அப்படிச் செய்ய மறுத்துவிட்டான்.

நாளடைவில் நவாபின் அதிகாரத்தை மீறத்துணிந்து யூசப்கான் படை திரட்டலானான்; 1763-ல் ஆங்கிலேயர் கொடியையும் எரித்து விட்டான். இதனால் அவர்கள் கடுஞ்சினமுற்றனர். இச்சமயம் கர்நாடக நவாபின் மேலதிகாரியான நிஜாம் அலி யூசப்கானைத் திருநெல்வேலி மதுரைச் சீமைகளின் கவர்னராக நியமித்து

ஓர் உத்தரவு அனுப்பினுன். நிஜாம் அலி அப்போது டெல்லியில் மொகலாய சக்கரவர்த்தியா யிருந்த ஷா ஆலம் என்பவனின் தட்சிணப் பிரதிநிதி. அவனுடைய உத்தரவினுல், கர்நாடக நவாபோ ஆங்கிலக் கம்பெனி யாரோ யூசப்கானின் அதிகாரத்தை அங்கீகரிப்பது அவசியமில்லாமற் போய்விட்டது. எனினும், 'வலி மையே உரிமை' யென்று கருதிவிட்டதுபோல் கம் பெனியின் நிர்வாக சபையார், 'யூசப்கானை முதல் மரத்திலே படைவீரர் காணத் தூக்கிலிடுவது எமக்கு முழுச் சம்மதம்' என்று உத்தரவு செய்துவிட்டார் கள். 1764-ல் மதுரைக் கோட்டையை முற்றுகை செய்து ஆங்கிலேயர் யூசப்கானைப் பிடித்துக்கொள்ள முயன்றனர். நவாபு முகம்மது அலி நேரில் வந்து,கோட்டை யைப் பிடித்துவிட்டால் படைகளுக்கும் தளபதிகளுக்கும் ஏராளமாய் வெகுமதி அளிப்பதாக விளம்பரப் படுத்தி ஞன். சில துரோகிகளின் சூழ்ச்சியால் யூசப்கான் பிடி பட்டுத் தூக்கிலிடப்பட்டான். கிளைவையொத்த வீரனுக மதிக்கப்பெற்றிருந்த கான்சாயபு கம்மந்தான் இந்த வித மாக மரணமடைந்தது அக்காலத்து நிலையை எவ்வளவு தெளிவாய்க் காட்டுகிறது!

கம்மந்தான் கதை இப்படி முடிந்த பத்தாண்டுகளுக் குப் பின், இந்திய ஆங்கில துரைத்தனத்தின் மூலபுருஷ னை கிளைவ் துரை தற்கொலை செய்துகொண்ட அதே ஆண்டில் வாரன்ஹேஸ்டிங்ஸ் சென்னை, பம்பாய், வங்காளம் என்ற மும்மாகாணங்களுக்கும் முதல் கவர்னர் ஜெனர லாக நியமிக்கப்பட்டான்.

# அத்தியாயம் 4

# ஏகாதிபத்திய வெற்றி

வாரன் ஹேஸ்டிங்ஸும் கிளைவைப்போல் குமாஸ்தாவாக இளமையில் இந்தியாவுக்கு வந்தவன்தான். சுராஜ் உத்தௌலா பிளாசி யுத்தத்தில் வீழ்ச்சியடைவதற்கு முந்திய ஆண்டில் கல்கத்தாவை ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டபோது கைதியான ஆங்கிலேயர்களில் ஹேஸ்டிங்ஸும் ஒருவன். விடுதலை பெற்றதும் படிப்படியாக உத்தியோக ஏணியில் ஏறி 1772-ல்—அதாவது கவர்னர் ஜெனரலாவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு—வங்காளக் கவர்னராகவும் சென்னைக் கவர்னர் சபையில் ஓர் உறுப்பினனுகவும் இருந்தான். அப்போது ஹேஸ்டிங்ஸ் ஆர்க்காடு நவாபின் சென்னைச் சேப்பாக் அரண்மனையில் ஆடம்பர விருந்து சாப்பிட்டதாகவும், நவாபு விருந்தாளிகளுக்குத் தட்சிணையாக 30,000 ரூபாய் கொடுத்ததாகவும் சென்னை வரலாறு தெரிவிக்கிறது.

வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாவதற்கு முன்பே வங்காளத்தில் முஸ்லிம் ஆட்சி முடிவடைந்து போயிற்று. சுராஜ் உத்தௌலாவின் வீழ்ச்சிக்குப் பின் கிளைவ் நவாபுக்குத் துரோகம் செய்த மிர்ஜாபரைப் பதவியில் அமரச் செய்தபோதே முஸ்லிம் ஆட்சி மறைந்து விட்டதென்றும், ஆங்கில ஆதிக்கம் அங்கே வேரூன்றி விட்டதென்றும் சொல்லலாம். மிர்ஜாபரின் ஆட்சியில் வங்கநாடு கடும் பஞ்சத்தால் வருந்தியது. அதனுல் ஏற்பட்ட கலகத்தைச் 'சன்னியாசிக்கலகம்' என்று வாரன் ஹேஸ்டிங்ஸ் குறிப்பிடுகிருன். ஓர் அறிக்கையில் பின்வருமாறு கூறியுள்ளான்: "அவர்களைச் சந்திப்பது எளிதன்று.

அவர்கள் ஓட்டத்தில் வல்லவர்கள்! ஓட்டத்திற்கு இடையூறாக இருக்கக்கூடிய கூடாரங்கள் முதலிய தட்டுமுட்டுச் சாமான்கள் அவர்களிடத்தில் இல்லை; துணிகளுங்கூட இல்லை யென்று சொல்லவேண்டும். திபெத்துக் குன்றுகளுக்குத் தெற்கே காபூலிலிருந்து சீனதேசம் வரையுள்ள தேசங்களில் அவர்கள் வசிக்கிறார்கள். அநேகமாய் ஆடையின்றியே திரிவது வழக்கம். வீடோ, குடும்பமோ இல்லை; எப்போதும் சஞ்சாரந்தான். அவர்கள் உடற்கட்டுள்ளவர்கள்; சுறுசுறுப்புள்ளவர்கள்......திடீரென்று வானத்திலிருந்து குதித்தாற்போல மாகாணத்தின் நடுவில் தோன்றிவிடுகிறார்கள்!'' வேறொரு அறிக்கையில் ஹேஸ்டிங்ஸ், "இச்சன்னியாசிகளின் தொல்லைகள் இல்லையென்றால் கம்பெனியாரின் இராச்சியத்தில் 'கிஸ்தி வருமானம்' குறைந்திராது'' என்கிறான். வங்காளப் பஞ்சம் தோன்றியபின், வேளாண்மைக்கு வேண்டிய விதைகளையும் தின்று கலப்பை முதலிய கருவிகளையும் விற்றுத் தின்றுவிட்டுப் பசியால் வருந்திய குடியானவர்களும் சன்னியாசிக் கூட்டத்தில் சேர்ந்து கொண்டனர். இந்தக் கலகத்தை அடிப்படையாகக் கொண்டுதான் '**ஆனந்த மடம்**' என்ற பிரசித்திபெற்ற சரித்திர நவீனம் **பங்கிம்சந்திர சட்டர்ஜி** என்ற வங்காள மேதாவியால் எழுதப்பெற்றிருக்கிறது. இந்த நவீனத்தில்தான் 'வந்தே மாதரம்' என்ற தேசபக்த மகாமந்திரம் அடங்கிய கீதம் வருகிறது. இதற்குப் பாரதியாரின் இரண்டு கவிதை-மொழிபெயர்ப்புக்கள் உள்ளன. காந்தியடிகள் சத்தியாக்கிரக இயக்கம் தொடங்குவதற்கு முன்பு 'ஆனந்தமடம்' கொலைவழியிலே புரட்சி விளைத்துத் தன்னரசு பெற இயலும் என்னும் நம்பிக்கைகொண்டிருந்த சில தேசபக்த இளைஞர்களுக்கு வழிகாட்டியாக உதவியதும் உண்டு.

வாரன்ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலானதும் ஆங்கிலேயருக்கு மகாராஷ்டிரர்களுடன் போர் விளைந்தது.

பதினேழாம் நூற்ருண்டின் இறுதியிலேயே தொடங்கிய மொகலாய வீழ்ச்சி பதினெட்டாம் நூற்ருண்டிலே பூர்த்தியாகி விட்டது; காரணம் மகாராஷ்டிரரின் எழுச்சியே. மகாராஷ்டிர மகாராச்சியமும் விரைவில் மறையவே போர்களுக்கும் குழப்பங்களுக்குமிடையே ஆங்கில ஆதிக்கம் வளமுற்று வளர்ச்சிபெற்றது. பதினெட்டாம் நூற்ருண்டிலே மூன்று மகாராச்சியங்கள் மோதிக்கொண்டதில் ஆங்கில ஆட்சி நிலைபெற்றுப் பரவுவதைக் காண்கிருேம். இந்த நூற்ருண்டிலே இந்தியாவின் அரசியல்-துறையில் மகாராஷ்டிரருடைய செல்வாக்கும் ஒரு முக்கிய அம்சமாக இருந்தது. எனினும், வாரன்ஹேஸ்டிங்ஸ் காலத்திலேயே, ஆங்கில ஆதிக்கம் இந்தியாவெங்கும் பரவி நிலைபெற்று விடுமென்பதற்குரிய அறிகுறி தோன்றி விட்டது. இது முற்றும் வெற்றி பெற்றது 1818-ம் ஆண்டிலே. அப்போது ஹேஸ்டிங்ஸ் பிரபு என்பவன் கவர்னர் ஜெனரலாக இருந்தான்.

மகாராஷ்டிர சரித்திரத்தை இருகூறுகளாய்ப் பிரித்து முற்பகுதியை 'மன்னர் காலம்' என்றும், பிற்பகுதியைப் 'பீஷ்வா காலம்' என்றும் கூறுவதுண்டு. 'பீஷ்வா கால'த்திலே தான் மகாராஷ்டிர ராச்சியம் ஒரு மகா ராச்சியமாக வளர்ந்திருந்தது. சிவாஜி உருவாக்கிய மகாராஷ்டிர இராச்சியம் மொகலாய ஆதிக்கத்தை வலியழித்ததென்ருல், பீஷ்வாக்கள் விரிவு செய்து பெரிதாக்கிய மகாராஷ்டிர மகாராச்சியம் விரைவில் முதிர்ந்து பழுதுற்றுத் தன் வலிமையை இழந்து ஆங்கில மகாராச்சியத்திலே மறைந்துவிட்டது. மூன்று மகாராஷ்டிர யுத்தங்கள் செய்தபின்பே ஆங்கில ஆதிக்கம் உறுதிப்பட்டதெனினும் வாரன்ஹேஸ்டிங்ஸ் காலத்தில் நடைபெற்ற முதல் மகாராஷ்டிர யுத்தத்திலேயே மகாராஷ்டிரப் பேரரசின் பலவீனம் புலஞகிவிட்டது. மகாராஷ்டிரர்களுக்குள்ளேயே ஏற்பட்ட ஒற்றுமைக்

குறைவையும் விவகாரங்களையும் ஆங்கிலேயர்கள் அதிகரிக்கச் செய்து வெற்றிபெற்றனரென்பது சரித்திரப் பிரசித்தமான செய்தி.

வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாக இருக்கும் போதுதான் மைசூர் ஹைதர் அலி தன் குதிரை வீரர்களுடன் படையெடுத்துச் சென்னைக்கு அருகேயுள்ள ஊர்களைப் பாழாக்கி, மக்கள் தன் பெயரைக் கேட்டதும் நடுங்கவேண்டுமென்று பெருங் கொடுமைகள் செய்தான். அந்தப் படையெடுப்பை 'ஹைதர் கலாபம்' என்றும், 'ஹைதர் கலாபனை' என்றும் தமிழர்கள் குறிப்பிடுவதுண்டு. ஹைதரின் குதிரைப் படை வீரர்களைக் 'குதிரைக்காரன் தண்டு' என்று சொல்வதுண்டு. ஹைதருக்கு அஞ்சிச் சென்னையிலும் சுற்றுப்பக்கத்திலுமுள்ளவர்கள் தங்கள் பணத்தையும் நகைகளையும் பூமிக்குள்ளே புதைத்து வைத்தார்கள். அந்தப் புதையல்கள் சென்னையைச் சேர்ந்த சிற்சில பிரதேசங்களில் கட்டிடம் கட்டக் கடைக்கால் எழுப்புவதற்காகப் பூமியைத் தோண்டும் சமயங்களில் குடங்களிலும் தோண்டிகளிலும் நகைகளாகவும் பொற்காசுகளாகவும் அகப்பட்டிருக்கின்றன.

ஒரு சாமானியப் போர்ச்சேவகனாகவும், தன் பெயரையும் எழுதத் தெரியாதவனாகவும் இருந்த ஹைதர் அலி அக்காலத்திலுள்ள பெருவீரர்களில் ஒருவனாகி மைசூர் இராச்சியத்தின் சிங்காதனத்தைக் கைப்பற்றிக்கொண்டு ஆங்கிலக் கம்பெனியாரையும் நடுங்கச் செய்தது தென்னிந்திய வரலாற்றிலே ஓர் அதிசயமான பகுதியாகும். அந்நாளில் அறப் போரென்பதில்லை. இராச்சிய விவகாரங்களில் வாக்குத் தூய்மையோ, நாணயமான நடத்தையோ ஆங்கிலேயரிடமும் காணப்படவில்லை; பிரெஞ்சுக்காரரிடத்திலும் காணப்படவில்லை. மொகலாய சக்கரவர்த்தி, அவருக்குக் கீழ்ப்பட்ட நவாபுக்கள், மகாராஷ்டிரர் ஆதி

யோரும் தத்தம் சொந்த ஊதியத்திற்காக வாக்கு மீறி உடன்படிக்கைகளைப் புறக்கணித்து ஒழுகுவாராயினர். ஹைதர் அலியும் அக்கால இராசதந்திரங்களைப் பின்பற்றி ஒழுகியவன்தான். பிரசித்திபெற்ற விஜயநகர மகாராச்சியம் வீழ்ச்சியுற்றபின் அதன் ஒரு பகுதியாக இருந்த மைசூர் ஒரு சுதந்திரத் தனி இந்து இராச்சியமாக இருந்தது. தட்சிணத்தில் வலிமை பெற்றிருந்த நிஜாமும் ஆர்க்காடு நவாபும் மைசூர் இராச்சியத்தைப் பிடித்துக் கொள்ளவில்லை. ஆனால் மைசூர் இராணுவத்தில் ஒரு சாமானியப் படைவீரனாகவும், பிறகு ஒரு படைத்தலைவனாகவுமிருந்த ஹைதர் அலி அந்த இராச்சியத்தைப் பிடித்துக்கொண்டதுடன் ஆங்கிலேயரையும் இந்தியாவை விட்டுத் துரத்திவிட வேண்டுமென்று துணிந்தான். ஆர்க்காடு நவாபான முகம்மது அலிக்காக ஆங்கிலக் கம்பெனியார் பல போர்கள் புரிந்தார்களல்லவா? அரசியல் விவகாரங்களில் ஒழுக்கத் தவறுகள் மிகுந்துள்ள அக்காலத்திலே முகம்மது அலி மற்றெல்லோரினும் மோசமாக இருந்ததுடன் வீர உணர்ச்சி யற்றவனாகவுமிருந்தான். அந்த நவாபையும் ஆங்கிலக் கம்பெனியாரையும் வெறுத்த ஹைதர் அலி, காஞ்சீபுரத்திற்கு அருகே கர்னல் பெய்லி என்ற ஆங்கிலேய தளகர்த்தனை முறியடித்துச் சிறைப்பிடித்தது ஹைதரின் பெருவெற்றி யென்றும், கம்பெனியாரின் கடுந் தோல்வி யென்றும் சொல்லப் படுகிறது. இந்தப் போரும் வெற்றியும் பெரிய ஓவியமாகத் தீட்டப்பட்டிருப்பதை ஸ்ரீரங்கப்பட்டணத்திலுள்ள அரண்மனைச் சுவரிலே காணலாம். வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காளத்திலிருந்து சென்னை அரசாங்கத்திற்கு உதவியாக அனுப்பிய சேனைதான் ஹைதரைத் தோல்வியுறச் செய்தது. ஹைதர் 1782-ம் ஆண்டில், வாரன்ஹேஸ்டிங்ஸ் தன் பதவி துறப்பதற்கு மூன்று ஆண்டுகட்கு முன்பு மரணமடைந்தான்.

ஹைதர் தன் மகன் திப்பு சுல்தானைப்போல் குறுகிய நோக்கமும் மதாவேசமும் கொண்டவனல்ல. அதிகாரிகளோ, மக்களோ எம்மதத்தினராயினும் ஹைதரால் வேற்றுமையின்றி நடத்தப்பட்டனர். இந்து உத்தியோகஸ்தர்களும் ஹைதரின் நம்பிக்கைக்கு உரியவராகவே நடந்துகொண்டனர். ஹைதர் திடீரென்று இறந்தபோது திப்பு சுல்தான் அருகே இல்லை; இராணுவ அலுவலாக வெகுதூரம் போயிருந்தான். அச்சமயத்தில் ஹிந்து மந்திரியான **பூர்ணையா** விரும்பியிருந்தால் துரோகம் செய்திருக்கக் கூடும். ஆனால் திப்புசுல்தான் திரும்பி வரும் வரை இம்மந்திரி சாதுரியமாகக் குழப்பத்திற்குச் சற்றும் இடங்கொடாமல் நடந்துகொண்டு திப்புசுல்தானையே அரியணை ஏற்றிவைத்தான். இத்தகைய இந்து மந்திரியை மதாவேசமுள்ள திப்புசுல்தானும் தனக்கு அமைச்சனாக்கிக்கொண்டான். இந்நிகழ்ச்சி இந்து-முஸ்லிம் நட்பு வரலாறுகளில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

ஹைதர் அலி ஆங்கிலக் கம்பெனியாருக்கும் ஆர்க்காடு நவாபுக்கும் விரோதமாகத் திருநெல்வேலிப் பாளையக்காரர்களின் உதவியை நாடியதுமுண்டு. பெருநெருப்போடு காற்றும் சேர்ந்துகொள்வதுபோல் பாளையக்காரர்களின் போர்வெறியும் சேர்ந்துவிடலாகாதே யென்று எண்ணிய ஆங்கிலேயர், ஒரு சமயம் திருநெல்வேலி ஜில்லாவை டச்சுக்காரர்களுக்கு விட்டு விடுவோமென்று கூடத் தீர்மானித்தார்களாம். எனினும், பிளாசி யுத்தத்தினால் கிளைவ் அமைத்த அந்த அடிப்படையிலே முதலாவது கவர்னர் ஜெனரலான வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆங்கில ஆட்சியை நிலைநாட்டி விட்டான். இந்தியர்களின் உரிமைகளைக் காலின் கீழிட்டுத் துவைத்து விட்டதாகவும் நாட்டைக் காடாகச் செய்துவிட்டதாகவும் ஆங்கிலப் பாராளுமன்றத்தின் ஜனப் பிரதிநிதி சபையிலே **பர்க்கு துரை** வாரன் ஹேஸ்டிங்ஸ்மீது குற்றஞ்சாட்டினான். மெக்காலே

துரையோ, "இவனுடைய குறைகளும் குற்றங்களும் எவ்வளவு தெளிவாக இருக்கின்றனவோ அவ்வளவு தெளிவாக இருக்கின்றது இவன் திறமையும்" என்று கூறியுள்ளான். 1785-ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் தன் உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்து விட்டு இங்கிலாந்துக்குத் திரும்பிய பின் 1788-ல் குற்ற விசாரணை ஆரம்பமாகி ஏழு ஆண்டுகளாக நீடித்து நடந்தது. பர்க்கு துரையின் வாக்கு வன்மை அவ்வளவும் வீணாகி வாரன் ஹேஸ்டிங்ஸ் விடுதலை செய்யப்பட்டான். பாராளு மன்றத்தின் உறுப்பினர் எழுந்து நின்று அவனுக்கு வணக்கமும் செலுத்தினர்.

கிளைவும் வாரன் ஹேஸ்டிங்ஸும் மிகவும் திறமையுள்ளவர்கள்; தைரிய சாகசமுள்ளவர்கள். மொகலாயரும் மகாராஷ்டிரரும் தத்தம் பேரரசுக்குள் இந்தியா முழுமையும் வந்துவிட வேண்டுமென்பதற்காக முயன்று முயன்று ஒருவரையொருவர் பலவீனப் படுத்திக் கொண்டனரென்பதை வாரன் ஹேஸ்டிங்ஸ் நன்கறிந்து கொண்டான். 'இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன?' என்ற இந்தியப் பொது மக்களின் மனநிலையையும் கிளைவும் வாரன் ஹேஸ்டிங்ஸும் அறிந்து கொண்டிருந்தனர். மொழிகளாலும் மதங்களாலும் சாதிகளாலும் பிரிக்கப்பட்டிருந்த மக்கள், ஒன்றுபட்டு நாட்டுப் பற்றுடன் நடந்து கொள்வது அரிது என்பதும் அவர்கள் நன்கறிந்ததே. கிளைவும் வாரன்ஹேஸ்டிங்ஸும் அந்நாளிலேயே பிரித்தாளும் சூழ்ச்சிக்கு விதை தூவி விட்டனர் எனலாம்.

பிளாசி யுத்தம் நடந்த 1757 முதல் 1792 வரை ஆங்கிலேயர் சென்னை, பம்பாய், கல்கத்தா என்ற மூன்று இராசதானிகளிலும் தங்கள் அரசையும் அதிகாரத்தையும் உறுதிப்படுத்திக் கொண்டனர். பிரெஞ்சுக்காரர்களின் எதிர்ப்பும் ஓய்ந்து மகாராஷ்டிர அரசும்

பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பலவீன முறத் தொடங்கி விட்டதால் ஆங்கிலேயர்களுக்குத் தங்கள் வசதிகளையும் இராணுவ பலத்தையும் பலப் படுத்திக் கொள்வதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. ஹைதர் அலியின் போர்த் திறனுக்கு அஞ்சி ஆங்கிலேயர் அவனுக்கு விரோதமாக மகா ராஷ்டிரரைப் போர்த் துணைவராகக் கொள்ள விரும் பினர். ஹைதர் அலி இறந்த பின்பு கார்ன் வாலிஸ் பிரபு கவர்னர் ஜெனரலாக இருந்தபோது ஆங்கிலேயர் மகாராஷ்டிரரையும் நிஜாம் அரசனையும் தங்கள் கட்சியில் சேர்த்துக் கொண்டு திப்பு சுல்தானுடன் போரிட்டு வெற்றி பெற்றனர். இந்த வெற்றியால் தட்சி ணத்தில் திப்புவின் ஆதிக்கம் அழியலுற்றது. தென்னிந் தியாவில் இராணுவத் தலைமை கார்ன் வாலிஸ் காலத் திலேயே ஆங்கிலேயருக்குக் கிடைத்து விட்டது.

வெல்லஸ்லி பிரபு கவர்னர் ஜெனரலாக வந்த பின்பு 1799-ம் ஆண்டில் நடைபெற்ற கடைசி மைசூர் யுத்தத்திலே திப்பு தோல்வியுற்றுப் போரில் மாண்டு போனன். அக்காலத்தில் நெப்போலியன் என்ற உலகப் பிரசித்தி பெற்ற பிரெஞ்சு வீரன் ஐரோப்பாவில் ஆங்கி லேயர்களுக்குப் பயங்கரனுக இருந்தான். 'மைசூர்ப் புலி' யென்று பேர்பெற்றிருந்த திப்பு சுல்தான் நெப்போலிய னுடன் நட்புக் கொண்டு ஆங்கிலேயரை இந்தியாவி லிருந்து துரத்தி விடலாமென்று கனவு கண்டு கொண் டிருந்தான். பிறகு ஆப்கானிய அரசனைத் தனக்கு உதவி செய்ய வேண்டினுன். நல்ல படிப்பாளியாகவும் அறிவாளி யாகவும் இருந்த திப்பு மத வெறியுள்ளவனுக இருந்தும் பொதுவாய்ச் செம்மையாக அரசு புரிந்தானென்றே சொல்லவேண்டும். திப்பு இறந்தபின் தக்க மரியாதையுடன் அவனைத் தந்தையின் பக்கத்திலேயே அடக்கஞ் செய்து அவனுடைய குடும்பத்தையும் பிள்ளைகளையும் வேலூரில்

குடியேறச் செய்துவிட்டு வெல்லெஸ்லி பிரபு மைசூர் இராச்சியத்தை ஹைதருக்கு முன் ஆண்டு வந்த இந்து அரச வமிசத்தின் சந்ததியான ஓர் ஆறு வயதுச் சிறுவனுக்கு அளித்து விட்டான். இது ஆங்கிலேயரின் சூழ்ச்சித் திறனுக்கும் ஒரு வெற்றியாகி விட்டது.

விரைவில் மகாராஷ்டிரரும் வீழ்ச்சி யுற்றனர். சிவாஜிக்குப் பின் எத்தனை வீரப் பெருமக்கள் மகாராஷ்டிரரிடையே தோன்றியிருக்கிறார்கள்! எத்தனை மதி மந்திரிகள், அரசியல் நிபுணர்கள், அறிஞர்கள்—ஆண்களோடு 'சரிநிகர் சமானமாக' நின்ற வீரப்பெண்மணிகள்! மிகத் திறமையாக அரசாண்ட அகல்யா பாயின் பெயர் இந்திய சரித்திரத்தில் நிலைபெற்றிருக்கிறது. மகாராஷ்டிரர்கள் இந்து மகாராச்சியத்தை இமய மலையிலிருந்து குமரி வரை ஏற்படுத்த முயன்றனர். பிளாசி யுத்தம் நடந்த நான்காம் ஆண்டில் (1761-ல்) மூன்றாவது பானிப்பட்டு யுத்தம் நடந்திராவிட்டால் பிளாசி யுத்தத்தில் கிளைவ் அடைந்த வெற்றியும் ஆங்கிலப் பேரரசுக்கு அடிப்படை அமைக்கப் பயன்பட்டிராது. இந்தப் பானிப்பட்டு யுத்தமும் ஆங்கிலேயருக்கு ஒரு பெருந்துணையாயிற்று.

இந்திய சரித்திரத்திலே மூன்று பானிப்பட்டு யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. **'பாணிபதம்'** என்ற பெயரின் சிதைவுதான் 'பானிப்பட்டு'. இது, டெல்லி மாநகருக்கு அருகிலுள்ள மாபாரதப் புகழ் பெற்றிருக்கும், **குருக்ஷேத்திரம்** என்னும் இதிகாசப் போர்க்களத்திற்கு அருகிலுள்ளது. குருக்ஷேத்திர யுத்தத்தை ஒரு 'யுக சந்தி' என்று கூறுவதுண்டு. அதாவது, ஒரு பழைய யுகம் மறைந்து புதிய கலியுகம் குருக்ஷேத்திர யுத்தத்திற்குப் பின் தோன்றியதென்பது நம்மவர் கொள்கை. பானிப்பட்டும் நமது தேச சரித்திரப் போக்கை மும்முறை மாற்றி உருவாக்கியிருக்கிறது. முதலாவது பானிப்பட்டு யுத்தத்திலே முளைத்தது

தான் மொகலாயப் பேரரசு. "காலையில் தொடங்கிய போர் நடுப்பகலுக்குள் ஆண்டவனருளால் நமக்கு முழு வெற்றியையும் ஒரு மகாராச்சியத்தையும் அளித்து விட்டது" என்று பேபர் சக்கரவர்த்தி எழுதி வைத்திருக்கிறான். இரண்டாவது பானிப்பட்டு யுத்தத்தில் அக்பர் வெற்றி மாலை சூடித் தன் பாட்டனாகிய பேபரால் முளைத்த பேரரசைச் சிறப்பான ஆற்றலுடனும் மதி வன்மையுடனும் பரந்த நோக்குடனும் வளர்க்கலானான். மூன்றாவது பானிப்பட்டு யுத்தம் மகாராஷ்டிரர்களுக்கும் ஆப்கானியர்களுக்குமிடையே நடந்தது. இந்த யுத்தத்தின் தொடக்கத்தில் ஆப்கானியர்கள் நிச்சயமாகத் தாங்கள் வெற்றிபெறக்கூடுமென்று நம்பவில்லையாம். ஆனால் அவர்களுடைய தலைவனான ஆமத்ஷா, மகாராஷ்டிரப் படையினர் பல்வேறு பிரிவினராய்ப் பிரிந்து சமையல் செய்வதைத் தூரத்திலிருந்து பார்த்து விட்டானும். "ஏன் அத்தனை நெருப்புகள் அங்கே?" என்று அருகிலிருந்தவர்களைக் கேட்டதும் "இந்துக்களல்லவா? பல்வேறு சாதியினர்; ஒரு சாதி தொட்டதை வேறு சாதி சாப்பிடுமா?—ஆகவே அத்தனை சமையல்கள்" என்று விடையிறுத்தனராம். உடனே "நமக்குத்தான் வெற்றி; ஐயமேயில்லை" என்று ஆப்கானியத் தலைவன் அக மகிழ்ந்து முக மலர்ந்தானும். இந்துக்களின் பலவீனத்தை உணர்ந்து கொண்ட ஆமத்ஷா புதியதோர் உவகையும் ஊக்கமும் கொண்டு வெற்றி பெற்றான் என்பர்.

ஒற்றுமைக் குறைவு சாதிப் பிரிவுகளோடு கூடிய இந்துக்களின் பலவீனம் மட்டுமன்று; சாதி வேற்றுமைகள் இல்லாத முஸ்லிம்களிலும் மிர்ஜாபரைப் போன்றவர்கள் ஒற்றுமைக் குறைவை உண்டாக்கி வந்தனர். இத்தகைய குறைகளுடன், உள்நாட்டுக் குழப்பங்களும் கலகங்களும், இராச்சியங்கள் எல்லைத் தொல்லைகளுடன் அமைந்திருந்த முறையும், தலைவரில்லாக் குறை

யும், இந்தியாவின் ஒருமையை உட்கொண்ட நாட்டுப் பெரும் பற்று இல்லாத குறையும், இராணுவ உணர்வின்மையும் சேர்ந்து கொண்டு ஆங்கில வெற்றிக்குக் காரணமாகி விட்டன. பத்தொன்பதாம் நூற்றூண்டின் தொடக்கத்திலேயே கம்பெனியாரின் அரசியல் நிலையும் ராணுவ நிலையும் மகாராஷ்டிரப் பேரரசை வீழ்த்தக்கூடிய நிலையில் உருப்பெற்றுவிட்டன. வெல்லெஸ்லி பிரபு நாட்டு நடப்பையும் கம்பெனியார் நிலையையும் நன்குணர்ந்து,

> கொக்கொக்க கூம்பும் பருவத்து; மற்றதன்
> குத்தொக்க சீர்த்த இடத்து

என்றவாறு காலமறிந்து செயலாற்ற வல்லவனுதலின், நான்காவது மைசூர் யுத்தத்தில் திப்பு சுல்தானை வென்றொழித்த பின் சமயம் பார்த்து மகாராஷ்டிர யுத்தங்களிலும் ஈடுபடலானுன்.

மூன்ருவது மகாராஷ்டிர யுத்தம் முடிவதற்கு முன்பே வெல்லெஸ்லி பிரபு இங்கிலாந்துக்கு அழைக்கப்பட்டான். இவன் காலத்தில் தென்னிந்தியா முழுவதும், வடஇந்தியாவில் கங்கையாற்றின் சமவெளி முழுவதும் ஆங்கில ஆட்சிக்குள் அடங்கி விட்டன. கவர்னர் ஜெனரலான ஹேஸ்டிங்ஸ் பிரபு வெல்லெஸ்லி பிரபு தொடங்கிய ஏகாதிபத்தியப் பணியை முடித்து வைத்து ஆங்கிலப் பேரரசை நிலைநிறுத்தி விட்டான். இறுதி மகாராஷ்டிர யுத்தத்திலே இரண்டாம் பாஜிராவ் என்ற இறுதிப் பீஷ்வாவும், ஹோல்கார், பான்ஸலே என்ற மகாராஷ்டிர மன்னர்களும் தோல்வியுற்று அடங்கிப் போயினர். பீஷ்வா ஆண்டு வந்த பிரதேசம் பம்பாய் மாகாணமாக அமைக்கப்பட்டது. இந்த விதமாக மகாராஷ்டிர ஆதிக்கம் முடிந்துபோனதையும், இமயமலை

யைச் சார்ந்துள்ள நேபாளமும் வடமேற்கிலுள்ள பஞ்சாபும் தவிர மற்றை இந்தியப் பகுதிகளெல்லாம் ஆங்கிலப் பேரரசிற் கலந்து ஐக்கியமாகி விட்டதையும், தனது குறிக்கோள் கடைசியாக நிறைவேறி விட்டதையும் 1818-ம் ஆண்டு வரை இங்கிலாந்தில் உயிரோடிருந்த முதல் கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸ் கேட்டுப் பரவசனாகிக் காலஞ்சென்றிருக்க வேண்டும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் அதிக எதிர்ப்பு இல்லாமலே ஆங்கில ஆதிக்கம் உரம் பெற்று உறுதிப் பட்டுவிட்டது என்பதும், இந்தியாவின் அரசியல் நிலையும் இராணுவ நிலையும் முற்றும் நிலைகுலைந்திருந்ததால் ஆங்கிலேயரின் வெற்றி எளிதாகி விட்டதென்பதும் சரித்திர ஆராய்ச்சிக்காரர்களின் தேர்ந்த கொள்கை. இந்தியப் பொது மக்களிடையே வீர சுதந்திர விருப்பம் காணப் படவில்லை; படைகளுக்கோ, சிற்றரசர்களுக்கோ பொது மக்கள் அந்தரங்க நம்பிக்கையுடன் ஆதரவு அளிக்கவுமில்லை. தேசத்தில் எப்படியாவது அமைதிநிலை பெற்றாற் போதுமே என்ற எண்ணத்துடனிருந்த மக்களுக்கு ஆங்கில ஆதிக்கத்தை அன்னிய ஆதிக்கமென்று வெறுக்கவும் மனமில்லை; எதிர்க்கவும் துணிவில்லை. "நம்முடைய உன்னதமான தத்துவம் தன்னரசு என்ற சுயராஜ்யம்; அதைஅடையத் தூண்டும் காரணமும் உன்னதமாகவே இருக்க வேண்டும்" என்பது **டெரென்ஸ் மாக்ஸ்வினியின்** கருத்து. தன்னரசு பெறுவதற்குரிய ஊக்கத்தை வளர்ப்பது நாட்டுப்பற்று—விடுதலைக்காதல். "நம்மைத் தட்டியெழுப்பி, நலிந்து கிடக்கும் நமது தேசத்தை ஒப்பற்ற அழகுடையதாகவும் வலிமையுடையதாகவும் செய்வதற்கு நாட்டுப் பெரும்பற்றைத் தவிர வேறொரு வழியுமில்லை" என்று மாக்ஸ்வினி அழுத்தமாய்க் கூறியுள்ளான். இதனாலேதான் நாட்டுரிமை பாராட்டும் பண்பினரைக் குறித்து,

சுதந்தரம் அவர்க்குயிர் ;
சுவாசமற் றன்று
(மனோன்மணீயம்)

எனக் கூறுகிறார்கள். அத்தகைய சுதந்திர விருப்பம் இந்தியாவின் எப்பகுதியிலும் தனக்குரிய பெருநிலையில் அக்காலத்திலே காணப்படாதது ஆங்கிலப் பேரரசு நிலை பெறுவதற்கு அதிமுக்கியமான காரணமென்பதில் ஐய மில்லை.

நம் மக்களின் இதயம் வீர சுதந்திர உணர்ச்சியற்று வறண்டிருந்த இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் பாலைவனத்திடையே பசும்புற்றரைபோல் விடுதலைக் காதல் விருப்புடன் தோன்றியதுமுண்டு. இதற்கு ஒரு சான்றாகப் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரனை **வீரபாண்டியக் கட்டபொம்முவைக்** குறிப்பிடலாம். இவன் 1790 முதல் 1799 வரை வாழ்ந்தவன். பாளையக்காரர்களில் ஒருவனேயாயினும் இவனது வீர சுதந்திரக் காதல் வீர மன்னரும் வியக்கத் தக்க நிலையிற் காணப்பட்டது. இக் குறுநில மன்னனின் குடும்பம் ஆதியில் தெலுங்கு தேசத்திலே பல்லாரிச் சீமையிலிருந்து திருநெல்வேலிச் சீமைக்கு வந்து குடி புகுந்தது. வீரபாண்டியக் கட்டபொம்மு, கம்பெனியார் வரி கேட்டபோது, "வரி யென்றால் கொடுக்க மாட்டேன்; தானமென்றால் தருவேன்!" என்று மறுத்து விட்டானும். துப்பாக்கி, பீரங்கி போன்ற ஆயுதங்களைக் கொண்ட கம்பெனியா ருடன் கத்தி, கட்டாரி, வேல், வாள் முதலான ஆயுதங்க ளுடன் கட்டபொம்மு போரிடத் துணிந்தான். கிழக்கிந் தியக் கம்பெனியின் கலெக்டரான ஜாக்ஸனுக்கும் இவ் வீரபாண்டியனுக்கும் 1798-ம் ஆண்டில் இராமநாத புரத்திலே சேதுபதியின் '**இராமலிங்க விலாசம்**' என்னும் மாளிகையில் வாதப்போர் தொடங்கி விரைவில் வாட் போராக மாறிவிட்டது. கம்பெனிச் சேனையின் உபதள

கர்த்தனை கிளார்க் என்பவனை ஈட்டியால் குத்தித் தள்ளி விட்டுக் கட்டபொம்மு பாஞ்சாலங்குறிச்சியை நோக்கி விரைந்து போய்விட்டான். இப்படித் தொடங்கிய போராட்டம் 1801-ம் ஆண்டு வரை நடைபெற்றது. வியக்கத் தக்க வீரச் செயல்கள் பல புரிந்த பின் வீர பாண்டியக் கட்டபொம்மு புதுக்கோட்டையில் பிடிபட்டுக் கயத்தாறு என்னும் சிற்றூருக்கு அருகே தூக்கிலிடப் பட்டான். கம்பெனியின் அதிகார நிலையைப் பாளையக் காரரும் பிறரும் கண்டு நடுங்கி ஒடுங்கி அடங்கிப் போக வேண்டும் என்னும் எண்ணத்துடன் அத்தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. "என் கோட்டையைப் பாதுகாத்துப் போர் முனையில் நான் இறந்திருப்பேனாால் நாட்டுக்கு மிகவும் நலமாயிருந்திருக்கும்" என்று கூறி வீரபாண்டியன் தானே தன் தலையைத் தூக்குக்கயிற்றில் மாட்டிக் கொண்டானும்.

இவ்வீரனுக்கு இத்தண்டனை விதித்த சேனாபதி பானர்மன் என்பவனே இவனது வீர சுதந்திர வெறியைப் பாராட்டிக் கம்பெனி அதிபதிகளுக்கு எழுதியுள்ள ஓர் அறிக்கையில் குறித்திருக்கிறான். அந்த விசாரணைக்கு வந்திருந்த மற்றைப் பாளையக்காரரை வீர பாண்டியன் அஞ்சா நெஞ்சனாய்ப் பழிப்போடு நோக்கியதாகவும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. மேலும் அவ்வறிக்கையிலுள்ள குறிப்புக்கள், வீரபாண்டியனது நெஞ்சுறுதியையும் ஆண்மை நிலையையும், வீரமும் மானமும் இழந்து பணிந்து நின்ற பாளையக்காரர் மீது இவ்வீரனுக்கிருந்த வெறுப்பையும் நன்கு புலப்படுத்துகின்றன. சற்றும் உளங்கலங்காது தூக்கு மரத்தை நோக்கிக் கம்பீரமாய் வீரபாண்டியன் நடந்து சென்றதாய், இவன் மீது கடுஞ்சினங்கொண்டு இவனது உயிரை முடித்த மாற்றானே வியந்து புகழ்வதிலிருந்து, எத்தகைய வீர சுதந்திரக் காதல் பலியாகி விட்டதென்பதை உய்த்துணர்ந்து

கொள்ளலாம். உபதளகர்த்தனை வீரபாண்டியன் கொன்ற பின்பும் அந்தக் கலகம் குறித்து இவ்வீரனை நேரிலழைத்து விசாரித்த கம்பெனி அதிபதிகள் இவனது வீரத்தை வியந்து சம்மானித்ததுமுண்டு. பிறகு இவனது தானாபதிப்பிள்ளையின் ஒரு வம்புச்செயலின் விளைவாகக் கம்பெனியாருக்கும் இப்பாளையக்காரனுக்கும் மீண்டும் கொடும்பகை ஏற்பட்டுப் போர் மூண்டது. அந்த நிலையில் வீரபாண்டியன் தன் கோட்டையிலிருந்து போராடி வெற்றியடைந்ததுமுண்டு. மறுபடியும் தானாபதியின் தவறான ஆலோசனைதான் வீரபாண்டியனைக் கோட்டையை விட்டு வெளியேறச் செய்தது. இடைவழியில் தன்னை வளைந்துகொண்ட படைகளை ஊடுருவி உடைத்துக்கொண்டு இவன் வெளியேறியதும் வியக்கத் தக்க ஒரு வீரச்செயலேயாகும். கடைசியாகப் புதுக்கோட்டையில் பிடிபட்டதற்குக் காரணம், அச்சிற்றரசனை நண்பனென நம்பி மோசம் போனது தான். விசாரணையினிடையே இவன் உரைத்த எதிர்மொழிகளும் வீர சுதந்திர மனப்பான்மையையே வெளியிடுகின்றன. வீரபாண்டியனின் தம்பியாகிய ஊமைத்துரையும் ஓர் அதிசய வீரன் தான். தன் தமையன் மாண்டபின் இத் தம்பி பாளையங்கோட்டைச் சிறைக் காவலை உடைத்து வெளியேறிப் பாஞ்சாலங் குறிச்சியில் மறுபடியும் கோட்டை கட்டிக் கடும்போர்கள் புரிந்ததும் தென்னிந்திய வீரசரித்திரத்தின் ஒரு பகுதியாகக் கருதத்தக்கதே.

இந்த வீரசகோதரர் இருவரையும் தமிழகம் மறந்ததில்லை. இவர்களால் கொல்லப்பட்ட ஆங்கிலேயரது சமாதிகளைப் பாஞ்சாலங்குறிச்சி வெளியில் இன்றும் பார்க்கலாம். பாஞ்சாலங்குறிச்சி நகரமும் கோட்டையும் அந்நாளிலேயே அழிக்கப்பட்டன; எனினும் தமிழ் மக்கள் உள்ளத்தில் கட்டபொம்மு ஊமைத்துரையென்ற இருவரது வீரமும் வண்மையும் தமிழ்மொழிப் பற்றும்

நிலைபெற்றுவிட்டன. ஆங்கில ஏகாதிபத்தியம் ஏறக் குறைய இந்தியாவெங்கும் நிலை பெற்று வந்த பதினெட் டாம் நூற்றாண்டின் இறுதியில் — அதாவது 1798-ம் ஆண்டு முதல் 1801-ம் ஆண்டு வரை — இந்தியாவின் தெற்குக் கோடியில் இரண்டு வீர சகோதரர்கள் ஆங்கில ஆட்சியை எதிர்த்துக் கடும் போர் புரிந்த வரலாறு சரித் திரப் போக்கிலே ஒரு சிறு நிகழ்ச்சியாயினும், நமது சுதந் திரம் வளர்ந்த கதையிலே அற்ப நிகழ்ச்சியாக ஒதுக்கத் தக்கதன்று. கட்டபொம்மு, ஊமைத்துரை ஆகிய இவர் களின் வீரப் புகழ் நாட்டுப் பாடல்களிலும் கர்ணபரம் பரைக் கதைகளிலும் கலந்து பொது மக்கள் உள்ளம் புகுந்து பாரித்துக் காண்கிறது. தென்பாண்டி நாட்டுக் கிராம மக்களிடையே கட்டபொம்மன் கதை தெருக் கூத்தாக நீண்ட காலமாய் நடிக்கப்பட்டு வந்திருக்கிறது. தமிழகத்தில் வாழையடி வாழையாக வந்த வீரப் பெரு மக்களின் வரிசையில், ஆதியில் ஆந்திர நாட்டிலிருந்து வந்து குடியேறிய குடும்பத்தைச் சார்ந்த வீரபாண்டிய கட்டபொம்மனுக்கும் ஓரிடத்தைத் தமிழ்ப் பொதுமக் களின் இதயம் அளித்திருக்கிறது.

1801-ம் ஆண்டில் ஊமைத்துரை தூக்கிலிடப்பட்ட பின், திப்புசுல்தானின் மைந்தரும் அக்குடும்பத்தினரான பிறரும் காவலில் வைக்கப்பட்டிருந்த வேலூரிலே சிப்பாய் கள் கலகஞ்செய்தனர். 1857-ம் ஆண்டில் 'இந்தியச் சிப்பாய்க் கலகம்' என்று சாதாரணமாய்ச் சொல்லப் படும் சுதந்திரப் புரட்சிப் போராட்டம் நடந்ததற்கு வேலூரில் நடந்த சிப்பாய்க்கலகம் ஓர் 'ஒத்திகை' போல் ஏற்பட்டதென்று கருதுவோருண்டு. வேலூரில் பழமை யான கோட்டையும் கொத்தளமும் உண்டு; திப்புவின் குடும்பத்தினர் அங்கே தூண்டுகோலாக இருந்தனர். மதம் மாற்றித் தங்களைக் கிறிஸ்தவராக்கி விடுவார்களோ என்ற அச்சமும் இந்து முகம்மதிய சிப்பாய்களுக்கு ஏற்

பட்டிருந்தது. இச் சிப்பாய்கள் கம்பெனி அதிகாரிகளைக் கொன்று வேலூர்க் கோட்டையையும் கைப்பற்றிக் கொண்டனர். இக் கலகம் சென்னையிலிருந்து திரண்டு வந்த கம்பெனிப் படைகளால் அடக்கப்பட்டது. திப்புவின் மக்கள் கல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டனர். இக் கலகத்திற்குப் பின்பே கடைசி மகாராஷ்டிர யுத்தத்தில் மகாராஷ்டிரரின் முயற்சிகள் பிளவுற்றுத் தோல்வியடைந்தன. சிவாஜியின் வழி வந்த ஒருவனைப் பொம்மையரசனாக்கிவிட்டு, நிஜாமையும் தங்கள் பாது காப்பில் வைத்துக்கொண்டு கம்பெனியார் ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்தி விட்டார்கள். இறுதிப் பீஷ்வா தனக்குக் கிடைத்த உபகாரச் சம்பளம் கொண்டு காலங் கழித்தவனாய் 1850-ம் ஆண்டில் காலமானான். இதற்கு ஏழாண்டுகளுக்குப் பின்பு 'இந்தியச் சிப்பாய்க் கலகம்' என்ற புரட்சிப் போராட்டம் தொடங்கியது.

ஆனால் 1857-ம் ஆண்டுக்கு முன்பே **ராஜாராம மோகனராய்** என்பவரால் தேசீயவித்து நாட்டிலே ஊன்றப்பட்டது. இவரது தேசத் தொண்டு முதலியவற்றை விவரிப்பதற்கு முன்பு ஒரு முக்கிய விஷயத்தை அறிந்து கொள்ளவேண்டும். ஆங்கில மகாராச்சிய நிலை பேற்றினால் பாரத பூமிக்கு விளைந்த ஒரு பெருந் தீமையை முக்கியமாகச் சுட்டிக் காட்ட வேண்டும். மத்திய அரசாங்கம் எப்படியிருந்தாலும் தேசமெங்கும் கிராமப் பஞ்சாயத்துகள் ஒவ்வொரு கிராமத்தையும் ஒரு 'குட்டிக் குடியரசு' போல நடத்தி வந்தன. தல விவகாரங்களைத் தீர்ப்பதிலும், பொருட் செலவின்றி நீதி வழங்குவதிலும், கிராமக் கல்வி, சுகாதாரம், கிராமப் பொருளாதார நிலை முதலியவற்றைக் கவனிப்பதிலும், கிராமப் பஞ்சாயத்து மத்திய அரசாங்கத்தின் தலையீடுதவின்றியே சுயேச்சையாக இயன்ற முயற்சிகளை மேற்

கொண்டது. மத்திய அரசாங்கத்தின் மாறுதல்கள் பாதிக்காதபடி கிராமப் பஞ்சாயத்துகள் செயலாற்றக் கூடிய நிலையில் அமைந்திருந்தன. எனவே, அன்னிய ஆதிக்கங்களின் அதிக்கிரமங்களுக்குக் கிராமவாசிகள் அதிக அளவில் இரையாகிவிடவில்லை. 'ஓர் இந்திய உத்தியோகஸ்தனின் சஞ்சார நினைவுகள்' என்ற நூலில் **மேஜர் ஜெனரல் ஸர். டபிள்யு. எச். ஸ்லீமன்** கிராம பரிபாலனத்தின் உயிராற்றல் குறித்துப் பின்வருமாறு எழுதியுள்ளான்: "கடலிலே செல்லும் மரக்கலங்கள் புயல்களைச் சமாளிக்குமாறு கட்டுப்படுவது போல் இந்தியக் கிராம பரிபாலன முறைகளும் அன்னியப் படையெடுப்புகளாலும் மத்திய அரசாங்கங்களின் சண்டை சச்சரவுகளாலும் புரட்சிகளாலும் பழுதடைந்து போகாமல் செயலாற்றுமாறு அமைக்கப்பட்டிருந்தன. ஏனென்றால், இந்திய பூமியில் படையெடுப்புக்களும் போர்களும் குழப்பங்களும் அவ்வளவு இயற்கையாக மக்களுக்குத் தோன்றின. இந்தியர்கள் வகுத்துக் கொண்ட கிராம ஆட்சி முறையால் எத்தகைய போர்க் கொடுமைகளும் படையெடுப்புத் தொல்லைகளும் விரைவில் சமாளிக்கப்பட்டன. பல்லாண்டுகளிலும் ஈடுசெய்ய முடியாத பல கஷ்ட நஷ்டங்களைக் கிராமவாசிகள் ஓராண்டிலோ, ஈராண்டிலோ சமாளித்து ஈடுசெய்து கொண்டனர்; அந்தத் தொல்லைகளின் வடுக்களும் மறைந்து போகுமாறு செய்யக் கூடிய ஆற்றல் கிராம வாழ்வு முறையில் அமைந்திருந்தது." இத்தகைய கிராம ஆட்சிமுறை எத்தகைய கொடிய அரசர்களாலும் சிதைக்கப்படவில்லை; தேசச் சுதந்திரம் பறிபோனாலும் ஊர்ச் சுதந்திரம் அழிந்துவிடவில்லை.

கிராமப் பஞ்சாயத்துகளால் மக்களுக்குக் கிடைத்த நன்மைகளைச் சமய உணர்ச்சி விரிவுபடுத்தி அரண் செய்து காத்ததுடன், கோவில்கள் சத்திரஞ் சாவடிகள் குளங்கள் கல்விநிலையங்கள் முதலியவற்றை நிலைநாட்டி

இந்தியாவின் ஒருமையையும் மக்கள் உள்ளத்தில் நிலை பெறச் செய்துவந்தது. காசி முதல் இராமேச்சுரம் வரை, கன்னியாகுமரி முதல் காஷ்மீரம் வரை அல்லது கைலாச - மானச மடுவரை, யாத்திரிகர்கள் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் தங்கிக் களைப்பாறுவதற்கு வழிநெடுக இடவசதிகளும் உணவுவசதிகளும் இருந்தன. தற்கால ரஸ்தாக்களைப்போல் இல்லாவிட்டாலும் நிழல் தரும் மரங்களை இருமருங்குமுடைய சாலைகள் அமைக்கப் பட்டிருந்தன. சாலைகளினிடையே கிணறுகளும் ஊற்றுக் களும் பூந்தோட்டங்களும் தண்ணீர்ப்பந்தல்களும் காணப் பட்டன. இவையெல்லாம் அறப்பற்றுள்ள செல்வர்களும் பொதுமக்களும் சமய உணர்வுடன் மேற்கொண்டு நடத்தி வந்த நாட்டுப் பணிகளாகும். அப்பணிகளை மேற்கொண் டிருந்த பலரும் பேரையோ புகழையோ விழைந்தவரு மல்லர். இத்தகைய நிலைமை பிரிட்டிஷ் ஆதிக்கம் நிலை பெறவே மாறிப்போய்விட்டது.

திடீரென்று இந்தியர்களின் பொதுநல உணர்வு நசித்துப் போகவில்லை; மெல்ல மெல்ல மாய்ந்துபோயிற்று. ஆதியில் ஆங்கிலேயர் நாடு பிடிப்பதிலும், பிடித்த பிரதேசங்களைத் தங்கள் ஆட்சி முறைக்கு உட்படுத் துவதிலும் கண்ணுங் கருத்துமா யிருந்ததால், பொது வாழ்விலும் கிராம வாழ்விலுமுள்ள பழைய நடை முறைகளை மாற்றுவது குறித்துச் சிந்தை செய்யவும் அவகாச மில்லாதிருந்தனர். பெருங் குழப்பத்திற் கும் பெருந் தொல்லைகளுக்கு மிடையே ஒரு பேரரசைக் கட்டி நிறுத்த முயன்று கொண்டிருந்த முதல் கவர்னர் ஜெனரலான வாரன்ஹேஸ்டிங்ஸ், இயன்ற வரையில் பழமையான நாட்டு நடப்பு முறைகளைக் குலைத்துவிடா மலே தன் போக்கில் போய்க்கொண்டிருந்தான். ஆனால் அவனுக்குப் பின்வந்த கார்ன்வாலிஸ், வெல்லெஸ்லி முதலானவர்கள் தொட்டதையெல்லாம் ஆங்கிலமயமாக்க

வேண்டுமென்ற மனப்பான்மையுள்ளவர்கள்; வாரன் ஹேஸ்டிங்ஸின் அறிவுக் கூர்மையும் அவர்கள்பால் காணப் படவில்லை. எனவே இந்திய நாகரிகத்தின் நல்ல அம்சங் களையும் களைந்தெறியக் கருதியவர்கள்போல் அவர்கள் நடந்துகொண்டனர். ஆங்கில ஏகாதிபத்தியக் கோணிப் பைக்குள்ளே இந்தப் பழம்பெரும் பரதகண்டத்தைத் திணித்துக்கொண்டவர்கள், இந்தியக் கிராம பரிபாலன முறைகளையும், சமய உணர்வால் தழைத்துவந்த பொது நலப் பணிமுறைகளையுங் கூட நிலைகுலையச் செய்துவிட்ட னர். குடிசைத் தொழிலாக நடைபெற்றுவந்த நெசவுத் தொழில் முதலியவற்றையும் ஒடுக்கி நசிக்கச் செய்துவிட்ட னர். அதனால் 1818-ல் இறுதி மகாராஷ்டிரயுத்தம் முடிந்து சுதந்திரம் முற்றும் மறைந்துபோவதற்குள்ளேயே இந் திய நாகரிகத்தின் சில பொதுநல அம்சங்களும் மறைந்து போய்விட்டன. தேச நிலைமை இவ்வளவு மோசமாக இருந்த காலத்திலே தோன்றிப் புதிய தேசீய சக்திகளை உருவாக்க முயன்றவர் **ராஜாராம மோகனராய்.**

# அத்தியாயம் 5

# காரிருளில் ஒரு கைவிளக்கு

வாரன்ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்ட 1774-ம் ஆண்டிலே இப்பெரியார் ராஜாராம மோகன ராய் பிறந்தார். இவர் ஒரு பெரிய படைத் தலைவரல்லர்; இராசதந்திரியுமல்லர்; சிறப்பான வசதிகளுடன் பிறந்தவருமல்லர். கிழக்கு வங்காளத்தில் ஒரு குக்கிராமத்திலே பிறந்தவர். தம் தாய்மொழியான வங்க மொழியுடன் வீட்டிலேயே பாரசீக மொழியும் பயின்றார்; பாட்னாவில் அறபி மொழி கற்றுக் காசியில் வடமொழிப் பயிற்சியும் பெற்றுத் தத்துவ விசாரணைகளில் ஈடுபடலானார். அந்நாளில் இவர் செய்ய விரும்பியது சமயச் சீர்திருத்தம்தான்; பிறகு சமுதாயச் சீர்திருத்தத்திலும் ஈடுபட்டு, அப்பால் அரசியல்வாதியாகவும் தேசீயவாதியாகவும் திகழலுற்றார். இருள் சூழ்ந்த அக்காலத்திலே,

மைவிளக் கியதே அன்ன
வயங்கிருள் துரக்க, வானம்
கைவிளக் கெடுத்த தென்ன

வந்த இராம மோகனராய், அக்காலத்துப் பிரிட்டிஷ் இந்திய வரலாற்றைத் தெளிவாகத் தெரிந்துகொண்டிருந்தார். வாரன்ஹேஸ்டிங்ஸ் இங்கிலாந்துக்குத் திரும்பியபின் குற்றஞ்சாட்டப்பட்டு ஒரு நீண்டகால விசாரணைக்கும் உட்பட்டு, பிரிட்டிஷ் மகாராச்சிய முன்னேற்றத்திற்காகவே அப்படியெல்லாம் செய்ததாகக் கருதப்பெற்றுக் கௌரவிக்கப் பெற்றானல்லவா? அந்த நிகழ்ச்சி இளைஞராகிய இராமமோகனருக்கு நன்றாய்த் தெரிந்திருக்க வேண்டும். அப்போதே இவருள்ளம் பொதுவாக இந்தியாவின் குழப்ப நிலையைக் குறித்தும், சிறப்பாக வங்க நாட்டின் பரிதாப நிலையைக் குறித்தும் சிந்தித்துக்கொண்டிருந்தது. இந்தியா எங்குமே ஒற்றுமையுணர்வும் இல்லை;

அரசியலுணர்வும் இல்லை; சமய உணர்வோ பெரும்பாலும் சாதியுணர்வுடன் கலந்து மூட நம்பிக்கைகளைத் தழுவிப் படர்ந்திருந்தது. போலி ஆசாரங்களும் பயங்கர வழக்கங்களுங்கூட மதப்போர்வை போர்த்துக்கொண்டிருந்தன.

வங்க நாட்டின் நிலை தென்னிந்தியாவைக் காட்டிலும் மோசமாயிருந்தது. கட்சிப் பிரதி கட்சிகளும், உடன் கட்டை ஏறுவதுபோன்ற கொடுமைகளுங்கூட மதக் கொள்கைகளாக மதிக்கப்பட்டன. சுருங்கக் கூறுமிடத்து, வங்காளம் அன்று பெரும்பாலும்,

‘பொய்ந்நின்ற ஞானமும்
பொல்லா ஒழுக்கும்’

மண்டிக்கிடந்த பிரதேசமாக இருந்தது. ஒருவன் பல பெண்களை மணப்பதிலும் ‘**குலீன் மணம்**’ என்ற ஒரு விபரீத முறை வங்கநாட்டில் மிக உயர்ந்த வகுப்பினராய்க் கருதப்பட்டவருக்குள் வழங்கி வந்தது. அவ்வகுப்பில் பெண்களின் தொகை மிகவும் அதிகமாயிருந்தது. ஒரு வயதுக்குட்பட்ட பெண்குழந்தைகளைக்கூட மணஞ் செய்து கொடுப்பதும், சிறுமிகளை அறுபது எழுபது வயதுக்கு மேற்பட்ட கிழவர்களுக்குக் கட்டிக்கொடுப்பதும் சாதாரண நிகழ்ச்சிகளாக இருந்தனவாம். ஒரு கிழவனுக்கு ஒரு வயது முதல் நாற்பது ஐம்பது வயதுவரையுமுள்ள நூற்றுக்கணக்கான மனைவிமார் இருக்கக்கூடும்! அவர்கள் தத்தம் பிறந்த வீடுகளில் தங்கியிருக்க, இந்தப் பொதுக்கணவன் ஊரூராய், வீடு வீடாய்ப் பவனி வந்து அவர்களிடம் காணிக்கைகளும் வரிசைகளும் அப்போதைக்கப்போது பெற்றுவருவானாம். கிழவன் மரித்ததும் நூறு பெண்கள் மங்கலமிழந்த விதவைகளாவர்; உடன்கட்டையேறிச் சொர்க்கத்தில் கணவனைச் சந்திப்பவருமுண்டு! அந்தப் பாழான நிலைமை இராமமோகனருள்ளத்தைப்

புண்ணுக்கி இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்துவிட்டது. அன்று தேசம் இருந்த நிலையில் இவர் தாம் செய்யக்கூடிய தேசியப்பணி பெரும்பாலும் சமயத்துறையிலும் சமுதாயத் துறையிலுமே பயன் தரக்கூடுமென்று நம்பினுர்.

இளமை தொடங்கி இவர் தம்காலத்து இந்து சமுதாய நிலையையும் சமய நிலையையும் உற்று நோக்கி ஆராய்ந்து வந்தார். கிறிஸ்தவ சமயத்தையும் நன்கறிந்து பழைய உபநிடதக் கொள்கைகளையும் ஆராய்ந்து பார்த்து வைதிக மதத்தின் பெயரால் நடைபெற்ற கொடுமைகளைக் கண்டித்து மூட நம்பிக்கைகளுடன் அஞ்சா நெஞ்சராய்ப் போர் தொடுத்தார். பன்னிரண்டு வயதுள்ள சிறுவராயிருந்த காலத்திலே இவர் தம்முடன் நெருங்கிய உறவுள்ள ஒரு பெண்மணி உடன்கட்டையேற நேர்ந்த கொடுமையை அறிந்து பரிதவித்தாராம்; அப்போதே இவருள்ளத்தில் ஒரு ஞானப்புரட்சி ஏற்பட்டு விட்டதாம். நாளடைவில் இவரது கண்டனங்களும் புதுமைக் கொள்கைகளும் பல விரோதிகளைத் தோற்றுவித்த தால் இவர் தற்காப்பு நியமத்தை மேற்கொண்டு ஆயுத பாணியாக இருக்கவும் நேர்ந்துவிட்டதாம். அந்த நிலையிலும் இராமமோகனர் உபநிடதங்களின் ஞானநெறியைப் பெரிதும் போற்றிச் சாதாரணமாகத் தம் காலத்தில் இந்து மதத்திலே காணப்பட்ட குற்றங்குறைகளைத் தைரியமாக அலசிக்காட்டினுர். அந்நாளிலே நமது சென்னை மாகாணப் பண்டிதர் ஒருவரும் இராமமோகனரின் கொள்கைகளைக் கண்டிக்க, அதற்கும் விடையாக இப்பெரியார் ஒரு நூல் எழுதினுராம். இந்த விதமாக நமது சமயத்திலும் சமுதாயத்திலுமுள்ள குற்றங்குறைகளை இவர் எடுத்துக்காட்டும்போதே, இந்து சமயத்தை முற்றும் கண்டித்து ஒழிக்க விரும்பியவர்களோடும் வாதப்போர் தொடுத்தார். மேடைச் சொற்பொழிவு வாயிலாகவும், பத்திரிகை வாயிலாகவும், ஆங்கில

மொழியிலும் வங்கமொழியிலும் வெளியிட்ட துண்டுப் பிரசுர வாயிலாகவும் இவர் தம் வேதாந்தக் கொள்கை களைப் பாதுகாக்கப் போராடினுர். தமது உபநிடத மதத் திற்குப் 'பிரமசமாஜம்' அல்லது 'பிரம சமயம்' என்று பெயர் சூட்டினுர். இச்சமயத்தைத் தாக்க முற்பட்டவர் களையெல்லாம் வாதப்போருக்கு அறைகூவி அழைத்தார். எத்தகைய இடையூற்றுக்கும் பணிந்து போகாமல் ஞான வீரராய் உண்மைப் பெரும் பணிவுடன் இறைவனுக்கும் தாய் நாட்டுக்கும் பணி புரிந்து வந்தார்.

1800-ம் ஆண்டு முதல் பதின்மூன்று ஆண்டுகள் இராமமோகனர் ஆங்கிலக் கம்பெனி உத்தியோகஸ்தராக இருந்தார்; கடைசியில் 'கலெக்டரின் திவான்' என்ற பதவியிலும் நியமிக்கப்பட்டார். அந்நாளிலும் பெயரள வில் சக்கரவர்த்தியாக இருந்த மொகலாய சக்கரவர்த்தி இராமமோகனருக்கு 'ராஜா' பட்டம் கொடுக்கும் வரை, மக்கள் இவரைத் 'திவான்ஜி' என்றே அழைத்து வந்தனர். 1813-ம் ஆண்டில், தமது நாற்பதாவது வயதில் இவர் உத்தியோகம் துறந்து தாய்நாட்டுப் பணியிலே தம்மை முழுக்க இழந்துவிடத் தீர்மானித்தார். அந்த ஆண்டு முதல் இருபது ஆண்டுகள் ஒருமையுள்ளத்துடன் பொதுநலத் தொண்டின் பல துறைகளிலும் ஈடுபடலானுர். 'உடன் கட்டையேறல்' முதலிய தீய வழக்கங்களைக் கவர்னர் ஜெனரலான பெண்டிங் பிரபு ஒழித்ததற்கு இராம மோகனரே முக்கிய காரணராக உதவினுர். கல்வித் துறையில் இந்தியருக்கு அனுகூலமாகச் செய்த சீர்திருத் தங்களிலும் இவர் கவர்னர் ஜெனரலுக்கு அரும் பெருந் துணையாக உதவினுர்.

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆரம்ப காலத்திலே கல்வி அபிவிருத்திக்குரிய செயலொன்றும் குறிப்பிடத் தக்க முறையில் செய்யப்படவில்லை. நாளடைவில் அர சாங்கம் நடைபெறுவதற்கு இந்திய உத்தியோகஸ்தர்

களின் கூட்டுறவு இன்றியமையாததெனக் கருதப்பட்டது. கார்ன்வாலிஸ் பிரபு கவர்னர் ஜெனரலாக இருந்த காலத்தில் இந்தியர் கீழ்த்தர உத்தியோகங்களுக்கே உரியவராயினர். பெண்டிங் பிரபு காலத்திலோ சாதி மத நிற வேற்றுமையின்றி உத்தியோகங்கள் அளிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதால் உயர்ந்த உத்தியோகங்களை வகிப்பதற்குரிய கல்விப் பயிற்சிக்கும் இந்தியர்கள் உரியராய்க் கருதப்பட்டனர். அப்படியானல் நாட்டு மொழிகளான வடமொழி, உறுது, அறபி முதலியவற்றைக் கற்பிப்பதா, ஆங்கில மொழியை முக்கிய மொழியாகக் கற்பிப்பதா என்ற வாதம் எழுந்தது. அப்போது நிர்வாக சபை உறுப்பினராக இருந்த மெக்காலே பிரபு ஆங்கிலக் கல்வியை வற்புறுத்தினன். இது சரித்திரப் பிரசித்தமான செய்தி. எனினும், பெண்டிங் துரை கவர்னர் ஜெனரலாக இருந்த காலத்தில் ஏற்பட்ட இந்தியக் கல்வி முன்னேற்றத்திற்கு ராஜா ராமமோகனரும் முக்கியமான காரணராவர். வங்காளம், பாரசீகம், அறபி, ஸம்ஸ்கிருதம் முதலான பல நாட்டு மொழிகளிலும் புலமை பெற்றிருந்த இராமமோகனர் ஆங்கிலத்திலும் புலவராகி அம்மொழியின் இலக்கியச் செல்வத்தையும் நம்மவர் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டார். இவ்வாசையின் பயனுகத் தோன்றிய கல்விச்சாலைகளில் மிகப் பிரசித்தி பெற்ற கல்கத்தா ஹிந்து கலாசாலை இன்றும் கல்வித் தொண்டாற்றி வருகிறது. இராமமோகனரும் ஓர் ஆங்கிலேயரும் ஒத்துழைத்துச் சமயப் பற்றுள்ள இந்துக்களின் பொருளுதவியுடன்தான் இக் கலாசாலையை உருவாக்கினர்கள். எனினும் இக்கலாசாலை விரைவில் மதக் கொள்கைகளை வேரோடு அசைக்கக்கூடிய புரட்சிக் கருத்துக்களையும் பரப்பத் தொடங்கியது. அந்த நிலைமை கண்டு இராமமோகனர் அக்கலாசாலைக் கழகத்தினின்றும் விலகிக் கொண்டார்.

ஆங்கிலேயரின் வழக்க ஒழுக்கங்களையும் அரசாங்க முறைகளையும் இங்கிலாந்துக்குச் சென்று நேரில் கண்டு வந்து, 'பட்ட மரமும் தளிர்த்துக் குலுங்குகிறது!' என்று வியக்குமாறு இந்தியாவும் தழைத்தோங்கப் பாடுபட வேண்டுமென்று இராமமோகனர் துடித்துக் கொண்டிருந்தார். டெல்லிச் சக்கரவர்த்தி தன் குறைகளை ஆங்கில மன்னருக்குத் தெரிவிக்குமாறு இவரைத் தூதனுப்ப விரும்பினான். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு இராமமோகனர் இங்கிலாந்திலும் தம் தாய்நாட்டுக்காகப் பாடுபடத் தீர்மானித்தார். ஏற்கெனவே 'ஸதி' என்ற உடன்கட்டையேறும் வழக்கத்தை இவரது கருத்திற்கிணங்கத் தடுத்து, பெண்டிங் பிரபு ஒரு சட்டத்தைப் பிரசுரித்திருந்தான். வைதிகக் கட்சியார் அதை எதிர்த்து இங்கிலாந்துக்கு விண்ணப்பஞ் செய்து கொண்டிருந்தனர். அங்கும் தாம் வாதித்து அக்கொடிய வழக்கத்தை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்ற உறுதியும் ராமமோகனரின் சீமை யாத்திரைக்கு ஒரு பெருந் தூண்டுகோலாயிற்று. இவர் இங்கிலாந்துக்கு 1831-ல் சென்றார். பார்ப்பன குலத்தினராகிய இவர் கடல் தாண்டிச் சீமைக்குச் சென்றதே சமுதாயச் சீர்திருத்த இயக்கத்திற்கு அப்போது ஒரு பெரிய வெற்றியாகி விட்டது. அதற்கு முன் உயர்குடிப் பிறப்பினரான இந்துக்களில் ஒருவரும் சீமைக்குச் சென்றதில்லை. இராமமோகனரின் அறிவுக் கூர்மையும் நெஞ்சுத் துணிவும் ஒழுக்க வன்மையும் இங்கிலாந்திலும் பலரால் புகழப்பட்டன.

சீமையில் இராமமோகனர், கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியில் தம் தாய்நாட்டின் நிலை மேன்மேலும் மோசமாகி வருவதைத் தைரியமாக எடுத்துக் காட்டினார். இவர் பிரான்சுக்கும் சென்று பிரெஞ்சு மன்னரின் விருந்தாளியாகவுமிருந்தார். இவரது புகழ் ஜெர்மனி, அமெரிக்கா முதலான இடங்களிலும் பரவியது. அந்நாடுகளையும்

பார்த்து வந்து இந்தியாவுக்கு மேன்மேலும் தொண்டாற்ற விரும்பினார். ஆனால் சீமைக் குளிரைத் தாங்க முடியாமல் 1833-ம் ஆண்டில் காலமானார். இவரை அடக்கம் செய்த இடத்தில் ஒரு கோரி கட்டப்பட்டு அதில் ஒரு சிலாசாசனமும் பொறிக்கப்பெற்றிருக்கிறது. அந்தச் சாசனத்தில் எழுதியுள்ளது வருமாறு : "இவர் தம் வாழ்நாளைப் பரம்பொருளின் பணிக்கே உரிமையாக்கினார். இயற்கையாக அமைந்த சிறந்த அறிவும் பன்மொழிப் புலமையும் இளவயதிலேயே இவரை அக்காலத்துப் பண்டிதர்களின் முன்னணியில் திகழச்செய்தன. இந்தியரின் முன்னேற்றத்திற்காக இவர் உழைத்த உழைப்பும்,......கடவுளின் பெருமையையும் மாந்தரின் நன்மையையும் பெருக்குவதற்கான துறைகளிலெல்லாம் இவர் இடைவிடாது ஆவலுடன் புரிந்த உதவியும், நன்றியறிவுள்ள இவரது நாட்டினரால் என்றும் மறக்கப்படா." இவருக்குத் தேசப் பணியும் தெய்வப் பணியும் ஒன்றே; நிறைந்த புலமையும் மாந்தர் பணிக்கு ஒரு சிறந்த வாய்ப்பேயாகும். இவர் செய்த உதவிகள் நாம் சுதந்திரம் பெற்ற கதையில் ஒரு கல்வெட்டைப் போல் அழியாது நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இப்பெரியார் மதச் சுதந்திரத்திற்கு மட்டும் போராடவில்லை; லௌகிகத் துறையில் மக்கள் உரிமைகளுக்காகவும் வாதாடினார். இவரது மதமோ, தேசியமோ குறுகிய நோக்குள்ளதன்று. கல்வித் துறையிலும் ஒரு பெரிய சீர்திருத்தக்காரராக இருந்தார். வாக்குச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் முதலான சுதந்திரங்களுக்கும் அந்நாளிலேயே வழிகாட்டினார். நிறவேற்றுமையின்றி நீதி வழங்கப்படவேண்டுமென்றும், கல்வித்திறனைக்கொண்டே உத்தியோக நியமனங்கள் செய்யப்படவேண்டுமென்றும் வாதாடினார். இராணுவப் பெருக்கம், வரிச்சுமை, மக்கள் வறுமை முதலான பல பிரசினைகளைக் குறித்தும் ஆணித்

தரமான கருத்துக்களை வெளியிட்டார். அந்நாளிலேயே இந்தியா விரைவில் தன்னரசு நாடாகவேண்டும் என்ற பொற்கனவையும் கண்டார். அத்தகைய புதிய இந்தியாவில் கிழக்கிலும் மேற்கிலுமுள்ள நாகரிகங்களின் நல்ல அம்சங்கள் கலந்தொளிர வேண்டுமென்பதாகவும் கனவு கண்டார். அத்தகைய இந்தியா ஆசியாவின் அறிவுக் கதிரோனைச் சுடரவேண்டுமென்று ஆசைப்பட்டார். இவரது கருத்துக்களையும், குறிக்கோளையும், முயற்சிகளையும் நோக்க நோக்க, இப்பெரியார் ஒரு நூற்றாண்டுக்கும் முன்பே காலஞ் சென்றவராயினும், நமக்கு எவ்வளவோ அண்மையிலிருப்பதாக அல்லவா தோன்றுகிறது?

இவரது வாழ்க்கை வரலாற்றை எழுதியிருக்கும் மிஸ். ஸோபையா டாப்ஸன் காலெட் என்ற அம்மையார் கூறியுள்ளதன் சாரம் வருமாறு: இவர் பழைய இந்து மரபினராக இருந்தும் தமது சூழ்நிலையைப் புதிய சக்திகளால் வளப்படுத்திக்கொண்டவர். தம் கீழ்த்திசைப் பண்பாடுகளைக் கைவிட்டு மேலைநாட்டுப் பண்பு மயமாகிவிட்டவரல்லர்; ஐரோப்பிய நாகரிகப் போர்வையால் தம்மை மறைத்துக்கொண்ட இந்துவல்லர். உண்மையாக ஐரோப்பிய ஆசிய ஆன்மஉறவுகளைத் தமது அகத்தே இணைத்துக் கொள்ள முயன்றவர் இவர். பழைய கீழ்த்திசை நாகரிகத்திலிருந்து, மேற்றிசைப் பண்பாடுகளின் வாயிலாகக் கிழக்கு மேற்கு என்ற வேறுபாடில்லாத ஒரு புதுமைப் பெருநாகரிகத்திற்கு வழிகாட்டுகிறார். இவரது சமயக் கொள்கை, இவரது முன்னேற்ற இயக்கத்திற்கும் பரந்த மனப்பான்மைக்கும் உள்ளுறை உயிராக அமைந்து, இவரது முயற்சிகளிடையே தொடர்பும் கட்டுப்பாடும் ஏற்பட உதவியுள்ளது. புதிய இந்தியாவின் முன்னோடியாகிய இராமமோகனரின் வரலாறு நாட்டுப்பற்றுள்ளவர்களுக்கெல்லாம் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கவல்லது. இந்தியாவின் எதிர்காலத்திற்கு மட்டுமா வழிகாட்டு

கிறார்? கிழக்கும் மேற்கும் சந்தித்து உறவாடி ஆசிய ஐரோப்பியப் பண்புகள் தம்முட் கலந்து பரிமளித்து மக்கட்குல முன்னேற்றத்திற்கு உதவவேண்டிய இப் பெருந்துறையிலும், இராமமோகனரின் வரலாறும் தொண்டுகளும் ஒரு நல்வழி காட்டுவதற்குரிய குறிப்புக் களை உதவக்கூடும்.

கல்கத்தாவில் 1828-ம் ஆண்டில் ஆகஸ்ட் இருபதாந் தேதி இராமமோகனராய் கண்ட பிரம சமாஜமும், 1830– ஜனவரியில் ஏற்பட்ட முதலாவது பிரமசமயக் கோவிலும் தற்கால இந்திய வரலாற்றிலே முக்கிய நிகழ்ச்சிகள் என் பதில் ஐயமில்லை. மேலைநாட்டு நாகரிகத்தின் மோதலால் ஏற்பட்ட ஒரு சீர்திருத்த மதமே இராமமோகனரின் பிரம சமயம் என மதிப்பிடுவதில் மட்டும் முழு உண்மையை யும் கண்டுகொள்ள முடியாது. ராஜா ராமமோகனரின் காலத்திலிருந்த இந்திய அறிவாளிகள் ஐரோப்பிய வர லாறும் இலக்கியமும் கற்று, பிரெஞ்சுப் புரட்சியையும் அதன் குறிக்கோளையும் அறிந்திருந்தனர். புரட்சி இயக் கத்திற்குப் பெரிதும் ஊக்கமளித்த ரூஸோ, வால்ட்டேர் முதலான அறிஞர்கள் மதஸ்தாபனத்திலுள்ள மூடப் பழக்க வழக்கங்களைக் கண்டித்து எழுதியிருந்த ஆணித் தரமான கட்டுரைகளையும் அந்நாளிலேயே இராம மோகனர் முதலான சிலர் அறிந்திருந்தனர். மார்ட் டின் லூதர் ஐரோப்பிய மதசிந்தனையில் செய்துள்ள புரட்சியையும் இவர்கள் அறிந்திருந்தனர். இத்தகைய புதிய அறிவுப் பெருக்கின் சிறந்த விளைவே ராஜா ராம மோகனர். வங்க இளைஞர்களுக்குப் பிரமசமயம் ஒரு புரட்சி-இயக்கமாகவே தோன்றியது. உற்றார் உறவினர் களைத் துறந்து சிந்தனைச் சுதந்திரத்தை நிலைநாட்டுவதில் அவ்விளைஞர்கள் உற்சாகங் கொண்டனர். எனவே, இந்தி யச் சுதந்திரத்திற்கே முதலாவது எல்லைக் கல்லாக நின்று வழிகாட்டியது பிரமசமயம் எனலாம். வாழ்க்கையின்

ஏதாவதொரு துறையில் விடுதலைக் காதல் ஏற்பட்டாலும் அத்துறைக்குள்ளே அது அடங்கி நின்றுவிடாமல் பல்வேறு துறைகளிலும் பரவிக் காண்பது இயல்பன்றோ? ராஜாராமமோகனரின் பிரமசமய உணர்வும், சிவாஜி முதலான மகாராஷ்டிர வீரர்களைத் தூண்டிவிட்ட மதபக்தியுணர்வுபோல், வங்க தேசபக்த வீரர்களையும் தூண்டித் தியாக நெறியிலே செலுத்த உதவியது எனலாம்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் தொடக்கத்திலே வங்கத்தில் ஏற்பட்ட அறிவுப் புரட்சி சமயத்துறையிலும் சமுதாயத் துறையிலும் பெரிய பெரிய சீர்திருத்தங்களை ஏற்படுத்த முயன்றது. கல்கத்தா ஹிந்து கலாசாலையை உருவாக்கி வளர்ப்பதில் பங்கு கொண்டிருந்த இராமமோகனரின் மரணத்திற்குப்பின், அதே கலாசாலையில் செல்வாக்குள்ள ஆசிரியராக இருந்த டெரோஸியோ (Derozio) என்பார், 1841-ல் 'கிழக்கு இந்தியன்' என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்து வால்ட்டேர் முதலானோர் பிரான்சில் செய்த அறிவுப் புரட்சிக்கான பணியை இந்தியாவிலும் செய்ய முயன்றார். இதே பணியைத் தாம் கலாசாலை ஆசிரியராக இருந்த காலத்திலும் செய்ய முயன்றவராய் இவர் வகுப்பு முடிந்ததும் மாணாக்கர்களைத் தம் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் அவர்களோடு சாதி, சமயம், அறிவுச் சுதந்திரம், பெண்விடுதலை முதலான பிரசினைகளை அலசி விவாதித்து வந்தார். கலாசாலையின் நிர்வாகக் கழகம் இவ்வாசிரியரை வேலையிலிருந்து நீக்கிவிடவே, இவர் பத்திரிகை வாயிலாக அறிவுப் புரட்சித் தொண்டினை இளைஞர்களிடையே தொடர்ந்து செய்ய முயன்றார். ஆனால் பத்திரிகை தோன்றிய அதே ஆண்டின் இறுதியில் மரணமடைந்தார். எனினும் இவரது நினைவு பல்லாண்டுகளாக வங்க இளைஞர்களிடையே புரட்சிக் கனலாகச் சொலித்துக்கொண்டிருந்ததாம். ராஜாராமமோகனர் தீவிரமாக விக்கிரக வழிபாடு முதலிய

கொள்கைகளைக் கண்டித்துவந்தபோதிலும் டெரோஸியோ போன்ற புரட்சிக்காரர் அல்லர்; ஆக்கவேலையில் முழுதும் ஈடுபட்ட ஒரு பெருஞ் சீர்திருத்தவாதியே ஆவர். எனினும், இராமமோகனரின் இயக்கம் சமயத்துறையில் ஒரு புதுமையாகத் தோன்றி அறிவுப் புரட்சிக்கும் காரணமாயிற்று. இந்த இயக்கத்திற்கு வேறு புரட்சிக் கொள்கைகளும் ஓரளவு படைத்துணையாக உதவி வங்க மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தன. இவ்விதமாக இந்தியாவிலேயே முதன்முதலாக மறுமலர்ச்சி தோன்றியது வங்கத்திலேதான். இம்மறுமலர்ச்சிதான் வங்கநாடு தேசீயப் போராட்டத் தொடக்கத்திலே முன்னணியில் நின்றதற்குக் காரணமாகும்.

ஆனால் இராமமோகனராயின் தேசீயப்பெருந்தொண்டு இடையறாது தொடர்ந்து வளர்ந்தோங்கவில்லை. இராமமோகனரின் மரணத்திற்கு முன்பே சிக்கியர் ஆண்ட இராச்சியம் தவிர இந்தியாவின் மற்றப் பகுதிகளெல்லாம் ஆங்கிலப் பேரரசில் ஐக்கியமாகிவிட்டன. 1831-ல் பெண்டிங் பிரபு சிக்கியத் தலைவனான ரணஜித் சிங் என்பவனைச் சந்தித்து நேசமனப்பான்மையுடன் சத்லெஜ் நதிக்கரையில் உரையாடினான். ரணஜித்சிங் ஆப்கானிய ஆதிக்கத்தை உதறித் தள்ளிப் பஞ்சாப் தேசம் முழுவதையும் காஷ்மீரத்தையும் சேர்த்து ஒரே இராச்சியமாக்கிக் கொண்டிருந்தவன். அவன் 1839-ல் மரணமடைந்தான். சில ஆண்டுகளுக்குள், அதாவது இராமமோகனர் மரணமடைந்த பதினாறு ஆண்டுகளில், சிக்கியர்களும் வெல்லப்பட்டுப் பஞ்சாபும் பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்ந்துவிட்டது. நண்பர்களாயினும் பகைவர்களாயினும் இந்திய அரசர்களெல்லாம் ஆங்கில ஆதிக்கத்திற்கு உட்பட்டுவிட்டனர். வடமேற்கில் ஆப்கானிஸ்தானத்தின் எல்லைவரையிலும் ஆதிபத்தியம் எட்டிவிட்டது; டலௌஸி பிரபு ஓய்வின்றி உழைத்து, கிளைவும் வாரன் ஹேஸ்டிங்ஸும் தொடங்கிய

ஏகாதிபத்தியப் பணியைப் பூர்த்தி செய்துவிட்டான். டலௌஸி இந்தியாவை விட்டுப் போனபின் 1857-ல் 'சிப்பாய்க் கலகம்' என்றும், 'பெரிய இந்தியக் கலகம்' என்றும் சாதாரணமாய்ச் சொல்லப்படும் **முதலாவது இந்தியச் சுதந்திரப் போராட்டம்** ஆரம்பமாயிற்று. இந்தப் போராட்டமும் இதன் விளைவுகளும் இராமமோகனராயின் விதைக்குத் தகுந்த மறுமலர்ச்சியைத் தாமதப்படுத்தி விட்டன.

பிளாசி யுத்தம் நடந்த 1757-க்குப் பின் துரிதமாக வெற்றிமேல் வெற்றி பெற்று ஒரே நூற்றாண்டில் இமயம் முதல் குமரி வரையிலும் ஆங்கிலக் கொடி பறந்ததும், உள்நாட்டுச் சச்சரவுகளெல்லாம் ஓய்ந்து சமாதானம் பிறந்ததும், உலக வரலாறு திகைத்து வியந்து பதிவு செய்துகொண்ட செய்திதான். ஏனென்றால் பிளாசி யுத்தம் நடந்த இருபது ஆண்டுக்குள் அமெரிக்க ஐக்கிய நாடுகள் பிரிட்டிஷ் ஆதிக்கத்தைத் தள்ளிவிட்டுத் தங்கள் சொந்தக் கொடியைப் பறக்கவிட்டன. பிளாசி யுத்தம் நடந்த முப்பத்திரண்டாம் ஆண்டில் பிரெஞ்சுப் புரட்சி இரத்த எழுத்துக்களில் 'சுதந்திரம், சமநிலை, சகோதர நிலை' என்று அரசியல்-வானில் எழுதிக் காட்டிற்று. மாஜினி, கரிபால்டி முதலான தேசபக்த சிங்கங்கள் மேற்கே புரட்சிகரமாகச் சுதந்திரப் பாதையில் சென்றுகொண்டிருந்த காலத்தில் இந்தியாவிலே சிக்கியர்களின் சுதந்திர விளக்கும் அணைந்துபோயிற்று; கிராமக் 'குடியரசுக'ளும் குடிசைத் தொழில்களும் அழிந்து போயின. இந்தியா தன்னம்பிக்கையையும் இழந்து தவித்த அத்தகைய காலத்திலே தோன்றிய இராமமோகனரை **இந்திய தேசீயத்தின் முன்னணித் தூதர்** என்றே சொல்ல வேண்டும். இவரது பிரமசமயத்தையும் நமது சுதந்திர இயக்கத்தின் வளர்ப்புப் பண்ணைகளில் ஒன்று என்றே கருதலாம்.

## அத்தியாயம் 6

# புரட்சி—வெள்ளம்

பிரிட்டன் என்ற சிறு தீவுக்கூட்டம், ஐரோப்பாவின் வடமேற்கிலிருந்து கடலில் ஏழாயிரம் மைல் கடந்து, அக் கடலாட்சி உதவியபேராற்றலால் இந்தியாவிலேவிரைந்து விசுவரூபமெடுத்த கதை ஏதோ ஒரு புராணக் கதை போல் அவ்வளவு அதிசயமாகத் தோன்றுகிறது. பிளாசி யுத்தத்தின் நூற்ருண்டுவிழா நடைபெறுவதற்குள்ளே, பிரிட்டிஷ் இந்தியா பெரிதாகிப் பெரிதாகி வந்ததும், போர் களும் உடன்படிக்கைகளும் நிகழ்ந்த வண்ணமாயிருந்ததும், கவர்னர்ஜெனரல்கள் வந்துபோனதும், சிற்றரசர்கள் பணிந்து ஒடுங்கியதும், இந்தியாவை நடுங்கச் செய்த ஆப்கானியர்களே நடுங்கிப்போனதும், கடைசியாகச் சச்சரவுகள் ஓய்ந்து சமாதானம் ஏற்பட்டதும், தபால் தந்தி இருப்புப்பாதை முதலான விஞ்ஞான வசதிகளோடு ஆங்கில மொழியையும் இலக்கியத்தையும் கற்கும் வாய்ப்பு இந்திய மக்களுக்குக் கிடைத்ததும் எல்லாம் வியக்கத்தக்க வரலாற்றுப் பெருநிகழ்ச்சிகளே. எனினும், புதிய அன்னிய ஆட்சியின் சுமையையும் சுரண்டல்களையும் பொறுக்க முடியாது இந்திய அன்னை திணறிப் பெரு மூச்சு விட்டாள்.

முதலாவது சுதந்திரப் போராட்டத்திற்கு நான்கு ஆண்டுகட்கு முன்பே முதலாவது இருப்புப்பாதை இந் தியாவில் அமைக்கப்பட்டது. அதனுல் போக்கு வரவு வசதிகள் அதிகரித்துப் பிரதேசப் பஞ்சங்களின் கொடு மையை மட்டுப்படுத்துவதும் எளிதாயிற்று. தபால்வசதி யும் இந்தியா என்ற குட்டிக் கண்டத்தை மூலைக்குமூலை இணைக்க உதவியது. டலெளஸி காலத்திலேயே தந்தி

வசதிகளும் ஏற்பட்டன. இவ்வசதிகளெல்லாம் ஏகாதிபத்திய ஆட்சியைத் திறமையாகவும் செம்மையாகவும் நடத்துவதற்கே அமைக்கப்பட்டன; பிறகு பொது மக்களுக்கும், நாளடைவில் இந்தியாவின் ஒற்றுமைக்கும், தேசீய உணர்ச்சி பரவுவதற்கும் பயன்படலாயின. முன்னுளில் பிரயாணம், போக்கு வரத்து என்ருல் பெருந் தொல்லைதான். ஒரு மாகாணத்திற்கும் மற்ரெரு மாகாணத்திற்குமிடையே காடுகள் அடர்ந்திருந்தன. மாட்டு வண்டிகள் மூலமாகவும், குதிரை வீரர்கள் மூலமாகவும், ஒட்டகை மீதும் தபால்கள் ஒரு பகுதியிலிருந்து மற்ரெரு பகுதிக்குப் போய்க்கொண்டிருந்தன. பெரு மழையோ, பெரும்புயலோ ஏற்பட்டுவிட்டால் தபால் போக்கு வரவு நின்றுவிடும். கொள்ளைக்காரர்கள் தபால் சேவகர்களை வழிமறித்து 'இன்ஷியூரன்ஸ்' பணத்தைப் பறித்துச் சுமையைக் குறைத்துவிடுவதுமுண்டு! இவ்விதமாக இந்தியாவின் பழைய தபால் - போக்குவரத்து விஷயமாக ஏற்பட்டிருந்த இடையூறுகளுக்கு இடையூருக முன்னின்று, 'மிகத் திறமையுள்ள கவர்னர் ஜெனரல்' என்று பேர்பெற்றிருந்த டலெளஸி பிரபு ஓரளவு பரிகாரம் தேடிச் சில அவசியமான சீர்திருத்தங்களையும் செய்து வைத்தான். முதன்முதலாகச் சிந்து மாகாணத்தில் தபால் முத்திரைகள் தயாரிக்கப்பட்டன. அந்நாளிலேயே அவை மிகச் சிறியதாகவும் அழகாகவும் தயாரிக்கப்பட்டன. குறுக்களவு ஓர் அங்குலங்கூட இல்லை; நீல நிறம் அல்லது செந்நிறமுள்ள சதுரக் கடுதாசியின் மத்தியில் இரு வட்டங்கள் போட்டு, இவ்வட்டங்களுக்கிடையே 'சிந்து ஜில்லாத் தபால் ஸெர்விஸ்' என்று பொறித்திருந்தனர். சிறிய வட்டத்தின் அடிப்புறத்தில் 'அரையணு' என்று பொறிக்கப்பட்டிருந்தது. தபால் முத்திரை வருவதற்கு முன்பு பம்பாயிலிருந்து கல்கத்தாவுக்கு ஒரு கடிதம் போகவேண்டுமானுல் தபால் கட்டண

மாக ஒரு ரூபாய் செலுத்தவேண்டி யிருக்கும்; நீண்ட தூரத்திற்குக் கட்டணம் அதிகமாகவும் இருந்தது. அதனால் பொது மக்களில் மிகச் சிலரே கடிதங்கள் எழுதி வந்தனர். சொற்பச் செலவில் முத்திரை ஒட்டிய தங்கள் கடிதங்கள் ஆயிரக் கணக்கான மைல் தூரம் யாத்திரை செய்யும் என்று தெரிந்துகொண்ட பின்புதான் ஏழை மக்கள் தங்கள் நண்பருக்கும் உறவினருக்கும் கடிதங்கள் எழுதித் தபால் போக்குவரத்தை ஆதரிக்கலாயினர். சமமான கட்டணங்களை ஏற்படுத்தித் தபால் முத்திரைகளைத் தயாரித்துப் பொது மக்கள் இவற்றை உபயோகிக்குமாறு உதவிய பெருமையும் டலௌஸி பிரபுவுக்கு உண்டு. ரஸ்தாக்கள் போட்டுப் பாலங்கள் கட்டவும், வாய்க்கால்கள் வெட்டவும் மராமத்து இலாகாவைப் புதிதாக ஏற்படுத்தியவனும் இந்தக் கவர்னர் ஜெனரல்தான். இவன் காலத்திலேதான் அரசாங்கத்தின் உருக்குச் சட்டமாகிய 'இந்திய ஸிவில் ஸெர்விஸ்' உத்தியோகத்தைத் தனிப் போட்டிப் பரீட்சையில் தேர்ந்தவர்களுக்குச் சாதி மத நிற வேற்றுமைகளின்றிக் கொடுப்பதாகவும் தீர்மானமாயிற்று.

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்
இனியிந்த உலகுக் கெல்லாம்

உய்வண்ணம் அன்றி மற்றோர்
துயர்வண்ணம் உறுவ துண்டோ!

என்றவாறு வெற்றிப் போராட்டங்களையும் பொது நன்மைக்கான சீர்திருத்தங்களையும் இராச நேசர்கள் கொண்டாட, டலௌஸி பிரபு 1856-ம் ஆண்டில் இந்தியாவை விட்டு இங்கிலாந்துக்குப் போய் நான்கு ஆண்டுகளுக்குப் பின் காலமானான். அடுத்த ஆண்டாகிய 1857-லேயே 'இந்தியப் படைக் கலகம்' என்ற சுதந்திரப் போராட்டம் ஏற்பட்டது.

அரசாங்கத்திலும் பழக்க வழக்கங்களிலும் மதக் கொள்கைகளிலும் ஏற்பட்டுவந்த மாறுதல்களைக் கண்டதும் பாமர மக்களுக்கிடையே திகில் ஏற்பட்டுவிட்டதென்றும், மேலை நாட்டு நாகரிக சின்னங்களைக் கண்டு தங்களை மத மாற்றம் செய்விக்கப் போகிறார்களென்று மக்கள் அஞ்சினார்களென்றும், இத்தகைய காரணங்களால் படைக்கலகம் தோன்றியதென்றும் சரித்திரப் பாடப் புத்தகங்களில் வாசித்திருக்கிறோம். "தந்தியாலும் இருப்புப்பாதைகளாலும் வெள்ளையர்கள் இந்தியாவைக் கட்டி விட்டார்களே!" என்று சீறிச் 'சிப்பாய்க் கலக'த்தில் சேர்ந்து கொண்டவர்களும் உண்டு என்பர். சுதேசச் சிற்றரசர்களின் நெஞ்சுப் புழுக்கமும் சிப்பாய்களின் அறியாமை, மூட நம்பிக்கைகளுடன் சேர்ந்து பெருங் கலகத் தீயாகப் புகைந்து கனன்று பொங்கிப் பரவி விட்டதென்றும் கூறுகிறார்கள். அயோத்தி தவிர மற்ற இடங்களிலே பொதுமக்கள் இம்முயற்சியில் கலந்து கொள்ளவில்லை யென்பதையும், சிக்கியரும் கூர்க்கர்களும் சச்சரவையடக்க ஆங்கிலேயருக்கு உதவிசெய்தனரென்பதையும் வற்புறுத்துகிறார்கள். மகாராஷ்டிர மகாராச்சியம் தேய்ந்து மாய்ந்துபோனது இந்துக்களின் மனக்கசப்பைத் தூண்டியதென்றும், அயோத்தி நவாபு பதவி இழந்தது முகம்மதியர்களின் மனக்கசப்பிற்குக் காரணமாயிற்றென்றும், ஆங்கில ஆட்சியில் ஏற்பட்ட சீர்திருத்தங்களும் லௌகிகக் கல்விப் பயிற்சியும் கிறிஸ்துமதப் பிரசாரமும் இந்துக்களுக்கும் இஸ்லாமியருக்கும் ஒருங்கே வெறுப்பு விளைத்தனவென்றும், இத்தகைய அதிருப்தி வேறு சில அதிருப்திகளையும் துணையாகக் கொண்டு இந்தியப்பெருங் கலகமாகிவிட்டதென்றும் இந்திய சரித்திரப் பாடப் புத்தகங்கள் போதித்து வருகின்றன. அப்படியானால் 1857-ம் ஆண்டு நிகழ்ச்சியை ஒரு பெருந் தேசீயப் புரட்சிப் போராட்டமாகக் கருதுவது பொருந்துமா?

பிரிட்டிஷ் இந்திய சரித்திரத்திலே மூன்று ஆண்டுகள்—1757, 1857, 1947—மிகவும் முக்கியமானவையென்று சொல்லலாம். 1757-ல் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அடிப்படை அமைத்த பிளாசிப்போர் அற்ப நிகழ்ச்சியானாலும் இமயத்தையும் குமரியையும் ஒரு சேரக் கட்டி ஒரே கோணிப்பைக்குள் திணித்துவைக்க உதவிய ஓர் அற்புத நிகழ்ச்சிதான். 1947 இந்தியா விடுதலை பெற்ற ஆண்டு என்பது அனைவரும் அறிந்ததே. இடையேயுள்ள 1857-ல், ஆங்கிலப் பேரரசின் கால்கோல் விழாவாகிய பிளாசி நிகழ்ச்சிக்கு ஒரு நூற்றாண்டு விழா மிகவும் பயங்கரமான முறையில் கொண்டாடப்பட்டது போலல்லவா 'பெரிய இந்தியப் படைக்கலகம்' ஏற்பட்டது? காய்தல் உவத்தல் அகற்றி வரலாற்றுப் பின்னணியில் '1857'-ன் காரணத்தையும் காரியத்தையும் ஒருங்கே உற்று நோக்கவேண்டும்; ஊடுருவிப் பார்க்கவேண்டும். இந்தியாவைப் 'பொன்விளையும் பூமி' என்று கருதியே மேலை நாட்டினர் வணிகராகவந்து அரசராகவும் பரிணமித்தனர்; 'பொன் காய்க்கும் மர'த்தை உலுக்க வந்து மணிமுடிகளும் அடிவிழக் கண்டு உரிமையாக ஆங்கிலக் கம்பெனியார் எடுத்து அணிந்துகொண்டனர். மொகலாய ஆட்சியிலும் இந்தியா செல்வம் நிறைந்த நாடாகக் காணப்பட்டதாய் ஐரோப்பிய யாத்திரிகர்களே எழுதி வைத்திருக்கின்றனர்; செல்வ நிறைவிற்குக் காரணமான கைத்தொழிற் சிறப்பையும் புகழ்ந்திருக்கின்றனர். பிளாசி யுத்தகாலத்திலும் இந்தியா செல்வங்கொழித்த நாடாக இருந்தது என்பதையும் மேலை நாட்டினர் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஆங்கிலேயரின் இராணுவத் திறமையைப் பாராட்டிய ஒரு முஸ்லிம் சரித்திர ஆசிரியரே, 'ஆனால் அவர்களுடைய (ஆங்கிலேயரின்) ஆட்சியில் பொதுமக்கள் வறுமையாலும் துயரங்களாலும் கதறுகின்றார்' என்று எழுதியுள்ளார். இந்த ஆசிரியரின் இக்

கருத்தினை மெக்காலே என்ற ஆங்கில அறிஞரும் எடுத்துக் காட்டுகிறார். இவ்வுணர்ச்சி டலெளஸி பிரபுவின் காலத்தில் அதிகரித்து அந்த ஆட்சியில் விளைந்த மாறுதல்களின் பயனாக அணைகடந்த வெள்ளமாகிவிட்டது. இதைத்தான் 'பெரிய இந்தியக் கலகம்' என்று அன்னிய உணர்ச்சி உள்ளவர்களும், 'இந்தியச் சுதந்திரப்போர்' என்று தீவிர தேசீய உணர்ச்சி உள்ளவர்களும் சொல்லி வருகிறார்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலேயே ஆங்கில ஆட்சியின் சுரண்டற்கொள்கையால் சுதேச வியாபாரமும் விவசாயமுங் கூட வெகுவாய்க் குன்றிப்போயின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே இந்தியா 'குபேரநாடு' என்பதெல்லாம் பழங் கதையாய்க் கனவாய்ப் போய்விட்டது. 1854-ல்—சிப்பாய்க் கலகத்'திற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு—இந்திய விவசாயிகளெல்லாம் கடனில் மூழ்கிக் கிடந்ததாக ஓர் ஐரோப்பியர் கூறியுள்ளார். 'கடலில் மூழ்கிப்போனாலும் கடனில் மூழ்கிப் போகாதே!' என்பதல்லவா விவசாயிகளின் மனப் பண்பாக இருக்கவேண்டும்? இந்த உணர்ச்சியைப் பதவியிழந்த சுதேச அரசர்களும் கனவான்களும் சிப்பாய்களும் பயன்படுத்திக் கொண்டனர் எனக்கருதலாம். 1856-ம் ஆண்டுக்குள் வடக்கே பனிமலை முதல் தெற்கே குமரிமுனை வரையிலும், மேற்கே ஆப்கானிஸ்தானம் முதல் கிழக்கே கடல் வரையிலும் பிரிட்டிஷ் கொடி இறுமாந்து பறக்கலாயிற்று. பர்மா, ஆப்கானிஸ்தானம் முதலான வெளிநாடுகளிலும் இந்தியப் பொருளைச் செலவிட்டு இந்திய இரத்தத்தையும் சிந்தி ஏகாதிபத்தியம் அதிகாரஞ் செலுத்த விரும்பியது. இத்தகைய பேராசைகளுக்கும் போராசைகளுக்குமிடையே பிறந்தது 'இந்தியப் படைக் கலகம்.' இதற்கும் பொதுஜனக் கொதிப்பிற்கும் தொடர்பில்லை யென்று கருதுவது சரியாகுமா?

ஆங்கில ஆட்சி, நகரங்களைக் காட்டிலும் கிராமங்களுக்குக் கேடு விளைத்தது. அங்கங்கே பெய்யும் மழையைத் தேக்கிவைக்கும் குளம்போல் பொருளைத் தேக்கி உதவியது இந்தியாவிலே கிராம ஆட்சி. பத்தொன்பதாவது நூற்றுண்டின் முற்பகுதியிலும் ஊராட்சி முறை நன்னிலையிலிருந்ததாக ஸர். தாமஸ் மன்ரோ பிரிட்டிஷ் பாராளு மன்றத்தின் பொது மக்கட்சபையில் தெரிவித்திருக்கிறுன். இத்தகைய கிராம ஆட்சி முறையைக் கம்பெனி ஆட்சிமுறை ஒழித்துக் கிராமக் கைத்தொழில்கள் முதலியவற்றையும் வீழ்த்திவிட்டது. இந்தியாவின் இத்தகைய வீழ்ச்சி நிலையில் டலெளஸி பிரபு சில நன்மைகளுக்கும் சீர் திருத்தங்களுக்கு மிடையே 1856-க்குள் கலக விதைகளை நன்கு விதைத்து விட்டுச் சீமைக்குப் பயணமாகிவிட்டான். கானிங் பிரபு புதிய கவர்னர் ஜெனரலாக வந்து சேர்ந்த ஓராண்டுக்குள் விதைகள் முளைத்துவிட்டன. 1857-மே மாதம் பத்தாங்தேதி மீரத்து நகரத்துச் சிப்பாய்கள்தங்கள் ஐரோப்பிய இராணுவ அதிகாரிகளைச் சுட்டுத் தள்ளினர் ; பிறகு டெல்லிக்குப் போய்ப்பெயரளவில் மொகலாயப் பாதுஷாவாக இருந்த பகதூர்ஷாவை இந்திய சக்கரவர்த்தியாக விளம்பரப் படுத்தினுர்கள்.

இந்தப் பெரு முயற்சிக்கு முன்பே 'பாளையக்காரர் சண்டை' 'வேலூர்ச் சிப்பாய்க் கலகம்' என்ற இரண்டு சிறு முயற்சிகள் நடைபெற்றிருந்தன அல்லவா ? 1801-ம் ஆண்டில் பாளையக்காரர்களின் சுதந்திர வெறியும், 1806-ல் வேலூர்ச் சிப்பாய்களின் முயற்சியும் நசுக்கப்பட்டன. இந்த இரண்டு சிறு முயற்சிகளும் தமிழ் நாட்டில் நடைபெற்றன. 'கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா ?' என்ற போக்கிலே சென்னை மாகாணத்தின் தெற்குக் கோடியில் ஆங்கிலப் பேரரசை எதிர்த்துப் போராடிய பாஞ்சாலங்குறிச்சிக் கட்டப் பொம்மன் தமிழ்ப் பொதுமக்கள் உள்ளத்திலே ஒரு பெருங் கதாநாயகனுக

வளர்ந்து விட்டான். வேலூர்ச் சிப்பாய்கள் வேலூர்க் கோட்டைமீது சுதந்திரக் கொடியைப் பறக்கவிட்டது மூன்று நாள் வாழ்வாகி, அவர்களும் தண்டிக்கப்பட்டனர். அப்பால் 1857-ல் வட நாட்டிலே இந்துக்களும் முஸ்லிம் களும் ஒன்றுபட்டு விளைத்த பெரும்போர்தான் 'முதலாவது இந்தியச் சுதந்திரப் போர் முயற்சி' என்று குறிப் பிடத்தக்கது.

இப்போராட்டத்திலே முக்கியமாகப் பங்குகொண்ட மகாராஷ்டிரத் தலைவர்கள் நாஞசாகிபும் லட்சுமிபாயும். நாஞசாகிபு மகாராஷ்டிர இராச்சியத்தின் கடைசிப் பீஷ்வாவாகிய பாஜீராவின் தத்துப் புதல்வன்; லட்சுமி பாய் ஜான்ஸிராணி—ஜான்ஸி என்ற மகராஷ்டிரப் பிர தேசத்தில் கடைசியாக அரசு செலுத்தியவள். இரண்டாம் பாஜிராவ் என்ற பீஷ்வா இராச்சியத்தைக் கம்பெனியா ரிடம் ஒப்புவித்துவிட்டுத் தனக்குக் கிடைத்த உதவிச் சம்பளத்தைக்கொண்டு கங்கையாற்றங்கரையிலே ஒரு கிராமத்தில் அமைதியாக வாழ்க்கை நடத்திவந்தான். அங்கேதான் 1827-ல் இரண்டரை வயதுள்ள நாஞ சாகிபைச் சுவீகாரஞ் செய்து கொண்டிருந்தான். அது நடந்து பன்னிரண்டாண்டு கழிந்தபின் பாஜிராவ் வசித்து வந்த கிராமத்திற்கு **மனுபாய்** என்ற நான்கு வயதுப் பெண் குழந்தையுடன் பெற்ரோர் வந்து சேர்ந்தனர். இப் பெண்குழந்தைதான் ராணி லட்சுமி பாய் என்று பின்ஞளில் பேரும் புகழும் பெற்றவள். நாஞசாகிபும் மனுபாயும் சேர்ந்து விளையாடுவதும் கதை கேட்பதுமாயிருந்தனர்; நாஞசாகிபு கல்வி கற்கும் போது மனுபாய் உடனிருந்து கவனித்துத் தானும் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டாள். நாஞசாகிபுடன் இவளும் இளமையிலேயே யானையேற்றம் குதிரையேற்றம் முதலான பயிற்சிகளைப் பெற்று வாளேந்திப் போர் புரியவும் கற்றுக்கொண்டாளாம். அப்படிச் சகோதரனும் சகோ

தரியுமாகப் பழகிவந்த இவர்கள் 1857-ல் நடைபெற்ற பயங்கர தேசீய நாடகத்தில் நடிகர்களாக வேண்டுமென்பது விதியின் சூழ்ச்சி.

1853-ல் லட்சுமிபாயின் கணவன் காலமானதும் அவள் ஒரு குழந்தையைச் சுவீகாரஞ் செய்துகொண்டாள். அந்த உரிமையைக் கம்பெனியார் ஒப்புக்கொள்ள மறுத்து ஜான்ஸியையும் தங்கள் பேரரசுடன் இணைத்துக் கொள்ளப் போவதாக அறிவித்துவிட்டனர். லட்சுமிபாயோ "என்னுடைய ஜான்ஸியை நான் கொடுப்பதா? போர் முனையில் எடுத்துக்கொள்ளட்டும்!" என்று தீர்மானித்து விட்டாளாம். இதற்கும் முன்பே, பீஷ்வா பாஜிராவ் இறந்துபோனதும் கம்பெனியார் அவனுக்கு ஆண்டுதோறும் கொடுத்துவந்த உதவித் தொகையை நானாசாகிபுக்குக் கொடுக்க முடியாதென்று மறுத்துவிட்டனர். இதற்கிடையே அயோத்தி நவாபையும் சிங்காதானத்திலிருந்து இறக்கிவிட்டு அந்தச் சிற்றரசையும் டலௌஸி ஆங்கிலப் பேரரசுடன் ஐக்கியம் செய்துகொண்டது முஸ்லிம்களுக்கும் ஆத்திரத்தை மூட்டி, அவர்களுக்கும் மகாராஷ்டிரர்களுக்கு மிடையேயிருந்த தீராப் பகையையும் தீர்த்துவிட்டது போலக் காணப்பட்டது. இத்தகைய சரித்திரப் பின்னணியிலே பொங்கியெழுந்த 'இந்தியப் படைக்கலகம்' என்ற சுதந்திரப் போராட்டம், இந்து முஸ்லிம் சமய உணர்ச்சிகளுக்கிடையிலும் ஒருவகைச் சமரஸ உணர்ச்சியையும் உண்டாக்கிவிட்டதோ என்று கூடத் தோன்றியது. பசுவின் கொழுப்பும் பன்றியின் கொழுப்பும் தோட்டாக்களில் தடவியிருந்தனவென்று கருதிய இந்து முஸ்லிம் சிப்பாய்கள், தங்களுடைய மதங்களைக் கெடுக்கவும் அரசாங்கம் முயற்சி செய்ததாக நம்பிவிட்டனர். அயோத்தியிலிருந்து இராணுவத்தில் சேர்க்கப்பட்ட சிப்பாய்களுக்கு ஆத்திரமும் ஆவேசமும் அதிகமாயின.

போராட்டம் தொடங்கிய மறுதினமே எண்பத்திரண்டு வயதுக் கிழவரான பகதூர்ஷா பாதுஷாவாக டெல்லியில் அறிவிக்கப்பட்டதும், பிறகு ஐந்து நாளில் கம்பெனி ஆதிக்கத்தின் அறிகுறியே டெல்லியில் இல்லாமற் போனதும் கல்கத்தாவிலிருந்த கவர்னர் ஜெனரலான கானிங்துரையைப் பிரமிக்கச் செய்து விட்டன. சிம்லாவின் குளிர்ந்த மலையுச்சிக்குப் போய்க்கொண்டிருந்த ஆங்கில தளபதியும் திகிலடைந்தான். அப்போது பாதுஷாவின் தட்சிண கவர்னரான நிஜாமுக்கு (இப்போதுள்ள நிஜாமின் பாட்டனுக்கு) முடி சூட்டுவைபவம் நடந்து கொண்டிருந்தது. டெல்லியின் வீழ்ச்சியென்றால் அந்நாளில் பிரிட்டிஷ் ஆட்சியின் வீழ்ச்சியென்றே பலரும் நினைத்து விட்டனர். ஆனால் அந்தப் புது நிஜாமின் அமைச்சனாகிய ஸாலர்ஜங் ஹைதராபாத்தில் கிளர்ச்சி பரவாதபடி முன்னெச்சரிக்கையாக நடந்துகொண்டான். "ஹைதராபாத்து மக்கள் நமக்கு விரோதமாய்க் கிளம்பியிருந்தால் சென்னையிலிருந்த முஸ்லிம் மக்களும் அவர்களைப் பின்பற்றிக் கலகம் செய்திருப்பர்" என்று அந்நாளில் இராணுவ அதிகாரி ஒருவன் தெரிவித்திருக்கிறான். 1857-ம் ஆண்டுவரை நிஜாம் மொகலாய சக்கரவர்த்தியின் பெயராலேயே தட்சிணத்தில் ஆட்சி செலுத்தியதாக ஒப்புக்கொண்டு அப்படியே நாணயங்களும் தயாரித்து வந்தான். எனினும் ஒரு நிஜாம் இறந்து போய்ப் புது நிஜாம் பட்டத்திற்கு வந்திருந்த அச்சமயம் அதிகாரமெல்லாம் ஸாலர்ஜங் என்ற அமைச்சன் கையிலிருந்ததால் தக்க முன்னேற்பாடுகள் செய்து தென்னிந்தியாவிலும் புரட்சி வெள்ளம் பெருகிவராதபடி தடுப்பது எளிதாயிற்று.

அந்நாளிலே அந்த அமைச்சனுக்கு அந்தரங்கச் செயலாளனாகவும், அவனுக்கும் பிரிட்டிஷ் ரெஸிடெண்டுக்குமிடையே நம்பிக்கை வாய்ந்த ஓர் அதிகாரியாகவும் அமர்ந்திருந்தவன் ராஜா கந்தசுவாமி என்ற தமிழன்.

'ரெஸிடென்ஸி'யை ஒட்டிய 'பஜார்'ப் பகுதியிலுள்ள ஒரு பெரிய பங்களா ஹைதராபாத்தின் அக்கால அரசியல் விவகாரங்களுக்கு ஒரு மூல நிலையமாக இருந்து இப்போது விரிவான சுற்றுப் புறத்துடனும், 'ராஜா கந்தசுவாமி கோடி' என்ற பெயருடனும் காணப்படுகிறது. 'கந்தசுவாமி சந்து' என்ற ஒடுக்க மான வழி மூலமாகத்தான் பங்களாவுக்குப் போகமுடியும். ராஜா கந்தசுவாமியின் தந்தை கட்டிட மேஸ்திரியான வீராசாமி 1800-ம் ஆண்டில் வயிற்றுப் பிழைப்பிற்காகச் சென்னையிலிருந்து ஹைதராபாத்துக்குப் போனான். அப்போதுதான் சென்னை எஞ்சினீர்கள் ஹைதராபாத்து ரெஸிடென்ஸிக் கட்டடத்தை நிஜாம் அரண்மனையோடு போட்டி போடத்தக்க ஓர் எதிர் அரண்மனையாகக் கட்ட முயன்று கொண்டிருந்தார்கள். அப்போது அந்த எஞ்சினீர்களுக்கு உதவியாகக் கட்டிடவேலையை மேற்பார்வையிட்டவன் வீராசாமி. இந்த மேஸ்திரி அந்நாளில் எஞ்சினீர்களுக்கும் ஆலோசனை சொல்லும் அறிவுத்திறமை படைத்தவனாயிருந்தான். அவனது அறிவாற்றல்களை வியந்து நிஜாம் அவனை ஒரு ஜாகீர்தாராக்கிக் கிராமங்களையும் அப்புதிய பதவிக்கேற்ற சில சின்னங்களையும் அளித்துக் கௌரவித்தான். வீராசாமியின் அருமைப்புதல்வனான ராஜா கந்தசுவாமி நவாப் ஸாலர்ஜங் என்ற பேர்பெற்ற இராசதந்திரிக்கும் சில ஆலோசனைகளில் வழிகாட்டியாக உதவினான் என்பர். ராஜா கந்தசுவாமியின் உதவியினாலும், நிஜாமின் பெயராலும் வடநாட்டுச் சிப்பாய்களுக்கிடையே எழுந்த கிளர்ச்சி ஹைதராபாத்து சமஸ்தானத்திலும் தென்னிந்தியாவிலும் பரவிவிடாதபடி தடுத்து ஸாலர்ஜங் ஆங்கில அரசாங்கத்திற்கு உதவி செய்தான்.

மீரத்து - எழுச்சி பற்றிய செய்தி கிடைத்ததும் அப்போது இந்தியாவின் தலைநகரமான கல்கத்தாவிலிருந்த

கவர்னர் ஜெனரல் கானிங் பிரபுவும், பஞ்சாபில் பிரதம அதிகாரியாயிருந்த ஸர் ஜான் லாரென்ஸும் புரட்சி மூண்டிருந்த முக்கிய இடங்களுக்கெல்லாம் ஆங்கிலத் துருப்புகளை அனுப்பமுயன்று வந்தனர். காசியி லுள்ள ஆங்கிலேயருக்கு ஆறுதலும் நம்பிக்கையும் அளிப் பதற்காகத் துப்பாக்கிப்படையொன்று சென்னையிலிருந்து ஜெனரல் நீல் என்பவன் தலைமையில் அனுப்பப்பட்டது. காசி மாகாணம் என்று அந்நாளில் சொல்லப்பட்ட அந்தப் பிரதேசம் முழுமையும் புரட்சி வெள்ளம் பரவி விட்டது. அங்கே ஜெனரல் நீல் வஞ்சம் தீர்த்துக்கொண்ட கொடிய முறைகளைக் குறித்து எழுதாமலிருப்பதே சிறந்த தென்று எழுதிவைத்திருக்கும் ஆங்கில சரித்திர ஆசிரியரு முண்டு. காசியிலிருந்து சுமார் எழுபது மைல் தொலையி லுள்ள அலகபாத்து (பிரயாகை) அந்நாளில் கல்கத்தாவி லிருந்து பஞ்சாபுக்கும் டெல்லிக்கும் போகும் முக்கியமான பாதைகளுக்கெல்லாம் இரத்தாசயம் போலிருந்தது. அந்தப் பிரதேசத்திலும் ஆங்கில ஆதிக்கம் விரைவில் மறைந்தது. காசியிலிருந்து ஜெனரல் நீல் தன் துருப்புகளுடன் வந்து அப்பிரதேசத்தில் இழைத்த கொடுமைகளும் கொஞ்ச மல்ல. இந்த நீல் துரையைத் தமிழர்கள் ‘நீலன்’ என்றன ளர். இவனது நினைவுக் குறியாகச் சென்னை நகரில் ஒரு சிலையும் நாட்டப்பட்டிருந்தது. காந்தியடிகளின் ஒத்துழை யாமைப் போராட்டத்தினிடையே தேசபக்தி பொங்கி யெழுந்ததும், ‘நீலன்’ சிலையை எடுத்துவிட வேண்டு மென்று தேசபக்தர்கள் கொதித்தெழுந்தனர். ராஜாஜி சென்னை முதல் மந்திரியானதும் அச்சிலையை அப்புறப் படுத்தி விநோதப் பொருட்காட்சிச்சாலையில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பழிக்குப்பழி வாங்கிய நீலன் கிளர்ச்சிக்காரர்களின் கொடுமைகளைப் பெருங்கொடுமைகளால் அடக்க முயன் ருன். ஆனல் அப்பெருங்கொடுமைகள் மேலும் பெருங்

கொடுமைகளுக்குக் காரணமாகிக் கிளர்ச்சிக்காரர்களின் மிருகத்தனத்தையும் தூண்டிவிட்டன. ஆங்கிலேயர்களின் முக்கிய இராணுவத்தலங்களில் ஒன்முகிய கான்பூரில் சிப்பாய்கள் நாஞசாகிபின் தலைமையில் கோட்டைக்குள்ளிருந்த வெள்ளையர்களைத் தாக்கவே அவர்கள் சரணமடைந்தனர். கான்பூரை விட்டு அவர்கள் அலகபாத்துக்குப் போக வேண்டுமென்றும், அதற்கு நாஞசாகிபு வசதி செய்துகொடுக்க வேண்டுமென்றும் தீர்மானமாயிற்று. எனினும், அவர்களைப் படகிலேற்றித் தீங்கின்றி அனுப்பிவிடுவதாகத் தான்கொடுத்திருந்த வாக்குறுதியை நாஞசாகிபு காப்பாற்றவில்லை; அல்லது காப்பாற்ற முடியவில்லை. அதற்கு மாமுக அவர்கள் ஏறியிருந்த படகு அசைந்ததும் மறைந்திருந்த சிப்பாய்கள் அவர்களில் பலரையும் சுட்டுக்கொன்றுவிட்டனர். எஞ்சியிருந்தவர்களும் கான்பூரை ஆங்கிலேயர் மீட்டுக்கொள்வதற்குமுன் கொல்லப்பட்டனர்.

'சிப்பாய்க் கலகம்' என்றும், இன்னும் சற்றுப் பெருமையாக 'இந்தியக் கலகம்' என்றும், மேலும் பெருமையாகப் 'பெரிய இந்தியக் கலகம்' என்றும் சாதாரணமாக வரலாற்றுப் புத்தகங்கள் குறிப்பிடுகின்ற இந்தப் போராட்டத்திலே கலந்துகொண்டவர்களில் வசீகரமான பேரும் புகழும் பெற்றவள் ஜான்ஸிராணி. அதிகாலையில் இவள் துயிலுணர்ந்து நீராடி வெண்ணிற ஆடை அணிந்து கழுத்திலே முத்து வடமும் கைகளில் வைர வளையல்களும் விரலில் வைர மோதிரமும் பூண்டு, 'வயிரமுடைய நெஞ்சு வேணும்' என்று பாரதியார் கூறியுள்ள அந்த வயிரமும் அதிகமாக வுடையவளாய்த் துளசி மாடத்தை மும்முறை வலம் வந்து வணங்கியபின் சிங்காதனத்தில் அமர்வாளென்றும், மறைகளோதிப் பண்டிதர்கள் ஆசி பகர்ந்ததும் சமய நூல்களுக்குச் சற்று விளக்கம் கேட்டுவிட்டு அரசியல் வேலைகளில் தலையிடுவாளென்றும்,

தலைப்பாகையும் நீலச் சொக்காயும் அணிந்து ஒட்டியாணத்திற்குப் பதில் பட்டுக் கச்சை தரித்து அதில் மணிகள் இழைத்த உடைவாள் தொங்க அத்தகைய ஆணுடையிலே தான் பெரும்பாலும் அரசு வீற்றிருப்பாளென்றும், நினைவாற்றலுடனும் அறிவுநுட்பத்துடனும் அரசியல் விவகாரங்களைச் சீர்தூக்கி ஆராய்ந்து தெளிவாய்த் திட்டமாய்த் தன் கட்டளைகளைத் தெரிவிப்பாளென்றும், வழக்குகளைத் தீர விசாரித்துத் தீர்ப்புச் சொல்வாளென்றும் வரலாற்றுக் குறிப்புக்கள் வழங்கிவருகின்றன. ஏழைகள் மீதும் படைவீரர் மீதும் அன்னைக்குள்ள பாசம் இந்த அரசிக்குண்டு என்பர். ஜான்ஸியை முற்றுகையிட வேண்டுமென்று கம்பெனியார் படைகளையும் பீரங்கிகளையும் ஏராளமாக அனுப்பினார்கள். கம்பெனிப்படைகளுக்கு ஹைதராபாத்து போபால் முதலிய சமஸ்தான அரசர்களும் உதவிபுரிந்தனர். சென்னையிலிருந்தும் பம்பாயிலிருந்தும் ஏராளமான இந்தியச் சிப்பாய்களும் படைத்துணையாயினர். **குவாலியரை** ஆண்ட ஸிந்தியா என்னும் மகாராஷ்டிரச் சிற்றரசனும் லட்சுமி பாய்க்கு விரோதமாய் ஆங்கிலேயருக்கு உதவி செய்தான். ஜான்ஸி ராணி தானே இராணுவத் தலைமை பூண்டு போராட்டத்தை நடத்தினாள். ஜான்ஸியில் தைரிய சம்பத்திற்குக் குறைவில்லையெனினும் இராணுவப் பயிற்சியும் ஒழுங்கும் கட்டுப்பாடும் குறைவாகவே காணப்பட்டன. எனினும் 'புல்லையும் வயிரப்படையாக்கிவிடலாம்' என்று நம்பியவள் போல் அரசி, தானே கோட்டைக் கொத்தளங்களையெல்லாம் பரிசீலனை செய்து அங்குமிங்கும் பம்பரம்போலச் சுழன்று திரிந்து போரைநடத்தி வந்தாள்.

இந்த வீரராணியின் ஜான்ஸியிலும் கூடத் துரோகிகள் இருந்தனரென்றும், அவர்களது உதவியால் ஆங்கிலேயர் முன்னேறத் தொடங்கியதும் இவள் ஒரு போர்வீரன்போல் மாறுவேடம் பூண்டு குதிரைமீது

அன்றிரவே ஜான்ஸியைவிட்டுப் புறப்பட்டாளென்றும், அப்போது தன் சுவீகாரக் குழந்தையை முதுகில் ஒரு பட்டுத்துணியால் கட்டிக்கொண்டு போனாளென்றும், அரசியின் தோழிகளும் போர்வீரர்கள்போல் மாறு வேடம் பூண்டு தொடர்ந்தனரென்றும், இவளுடைய தந்தையும் வேறு பல வீரர்களும் குதிரைகள் மீது இவளுக்குப் பாதுகாப்பாய்ச் சென்றனரென்றும், இவர்கள் எல்லாரும் கோட்டையிலிருந்து அபாயகாலத்தில் உபயோகித்துக்கொள்ளுமாறு அமைக்கப்பட்டிருந்த ஒரு சுருங்கை வாயிலாக நகரத்திற்கு வடக்கே போய்விட்டனரென்றும் கதை கதையாய்ச் சொல்வதுண்டு. இந்த நிலைமையில் லட்சுமி பாய் குவாலியரை நோக்கிச் சென்றதும் ஸிந்தியாவின் படைவீரர்கள் லட்சுமிபாயின் கட்சியை ஆதரித்ததால் ஸிந்தியாவும் அமைச்சரான தினகரராவும் குவாலியர்க் கோட்டையைக் கைவிட்டு ஓடிப்போய்விட்டனர். அக்கோட்டையைக் கைப்பற்றிக் கொண்ட லட்சுமிபாய் புதிய படைகளைத் திரட்டிக் கொண்டிருக்கும்போதே, ஆங்கிலப் பெரும்படைகள் ஸிந்தியாவுடன் வந்து கோட்டையை நாற்புறமும் சூழ்ந்து கொண்டன. இந்தப் போராட்டத்திலே லட்சுமிபாய் காட்டிய வீராவேசத்தை நேரிற்கண்ட ஓர் ஆங்கிலேயன், பிரம்மாண்டமான பிரிட்டிஷ் படையை அணுவளவும் பயமில்லாமல் இந்த அழகிய ராணி தாக்கத்துணிந்து முன்னணியில் நின்று பிரமிக்கத் தக்கவாறு போரிட்டதையும், ஒட்டகப்படைகளுக்கு முன் புரட்சிப்படைகள் நிற்க முடியாததால் ராணி மாத்திரம் போரிட்ட வண்ணம் முன்னேற முயன்றதையும் அதிசயமாக வருணித்திருக்கிறான். இப்படிப்பட்ட போரின் முடிவு தெரிந்ததுதானே? வீர ராணி எதிரிகளால் வெட்டப்பட்டுப் படுகாயமடைந்தாள். அருகேயிருந்தவர்கள் இவளை ஒரு குடிசைக்குக் கொண்டுபோக அங்கே இவள் ஆவி பிரிந்தது.

பஞ்சாபிலுள்ள சிக்கியர்களும் சிக்கிய மன்னர்களும் ஆங்கிலேயர்களுக்கு உதவிசெய்ய முன் வந்தனர்.

பூதலம் முற்றிடும் வரையும்,—அறப்
போர்விறல் யாவும் மறப்புறும் வரையும்,
மாதர்கள் கற்புள்ள வரையும்,—பாரில்
மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர்

என்று பாரதியார் பாராட்டியுள்ள ராஜபுத்திரர்களில் சில மன்னர்கள் ஆங்கிலேயருக்கு உதவ முயன்றபோதிலும், ராஜபுத்திரப் படைவீரர்களுக்குப் புரட்சியில் ஈடுபட்டிருந்த தங்கள் சகோதரர்களுக்கு விரோதமாய்ப் போராட மனமில்லை. மன்னர்களிலும் பலர் சிக்கிய மன்னர்களைப்போல் வெளிப்படையாக ஆங்கிலேயர்களுக்கு உதவிபுரிய முன்வரவில்லை. ராஜபுத்திர மக்களோ புரட்சிக்காரர்களிடம் அனுதாபம் காட்டினர். நிஜாம் சமஸ்தானத்தில் ஸாலர் ஜங் என்ற அமைச்சன் ஆங்கிலேயர்களுக்கு உதவி செய்ததைக் காட்டிலும் நேபாள முதல் மந்திரி மகாராஜா ஜங் பகதூர் அதிக உதவி புரிந்தான். இவனுடைய உதவி ஆங்கிலேயருக்குக் கிடைத்திரா விட்டால் நேபாளம் புரட்சிப் படைவீரர்களுடன் சேர்ந்திருக்கக் கூடுமென்பது ஸர். ரிச்சர்ட் டெம்பிளின் கருத்து. அக்காலத்திலே இந்தியாவில் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு உதவிபுரிந்த மூன்று அமைச்சர்களும்—நவாப் ஸர். ஸாலர் ஜங், மகாராஜா ஸர். ஜங் பகதூர், ராஜா ஸர். தினகரராவ்—ஆங்கில அரசாங்கத்தால் கௌரவிக்கப்பெற்றனர். அக்காலத்தை ஒட்டிப் புகழ் பெற்றிருந்த தென்னிந்திய திவான்கள் இருவர்: இவர்களில் ராஜா ஸர். டி. மாதவராவ் திருவிதாங்கூரிலும் பரோடாவிலும் திவானக இருந்து இரண்டு சமஸ்தானங்களையும் முன்னேற்ற மடையச் செய்தார்; திவான் ரங்காசார்லு மைசூரில் இருந்து புகழ் பெற்ருர். ஸர். ஸையத் ஆமத்

கானின் பெயரையும் ஆங்கிலேயர் போற்றுவதுண்டு. இவரும் அக்காலத்திலே ஆண்களும் பெண்களுமான ஆங்கிலேயர் பலரைக் காப்பாற்றியவர். அலிகார்க் கலா சாலை இவருடைய முயற்சியின் விளைவுதான். பின்னுளில் இவர் காங்கிரஸிலிருந்து முஸ்லிம்களைப் பிரிந்து நிற்கும் படியாகத் தூண்டினுர். இவருடைய சீடர்களின் முயற்சி யால் அகில இந்திய முஸ்லிம் லீக் தோன்றியது.

1859-ம் ஆண்டு ஜூலை மாதம் எட்டாம் தேதி கலகம் முடிந்து அமைதி ஏற்பட்டு விட்டதென்று கானிங் பிரபு அறிவித்தான். டெல்லியில் சக்கரவர்த்தியாகப் பட்டஞ் சூட்டப் பெற்றிருந்த பகதூர்ஷா குற்றவாளியாக விசா ரிக்கப் பெற்று ரங்கூனுக்கு அனுப்பப்பட்டான். இதற்கு முன்பே 1858 நவம்பர் முதல் தேதி விக்டோரியா மகா ராணி இந்திய ஆட்சியை ஏற்றுக் கொண்டாள். இந்தியச் சிப்பாய்களின் சுதந்திரக் கிளர்ச்சிகளையும் போராட்டங் களையும், அவற்றை ஆங்கிலேயர் அடக்கிப் பழிக்குப் பழி வாங்கின முறைகளையும் குறித்து எழுதும்போது ஓர் ஆங்கிலேய சரித்திரக்காரன், "தங்கள் சாதியையும் சமயத்தையும் காத்துக்கொள்ள வேண்டுமென்று நம்பிப் போரிட்ட கலகக்காரர்கள் ஆதரவற்ற பிள்ளைகளையும் பெண்களையும் இரக்கமின்றிக் கொன்று அழியாப் பழி தேடிக் கொண்டனர்" என்று குறிப்பிடுவதுடன், ஆங்கிலப் படை வீரர்களின் கொடுமைகளையும் பாரபட்சமின்றிக் கண்டித்திருக்கிறுன். அவர்கள் போன இடங்களிலெல் லாம் கிராமங்களைத் தீக்கு இரையாக்கியதையும், டெல் லியை விட்டுக் கலகக்காரர்கள் போன பிறகும் அவர்கள் குடிகளைப் படுகொலை புரிந்ததையும் எடுத்துக் காட்டி, வட இந்தியாவில் சிறிதும் கலகத்தில் தொடர்பில்லாத பல்லாயிரக்கணக்கான மக்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளால் அநியாயமாய்த் தூக்கிலிடப்பட்டனர் என்பதையும் தெளிவாய்க் கூறியுள்ளான். காந்தியடிகளின் சத்தியாக்

கிரகப் போராட்டத்தைக் கண்டிருப்போருக்கு, வெடியும் புகையும் கத்தியும் இரத்தமுமாய் மனக்கண்முன் ஓடி வரும் அக்காலச் சிப்பாய்களின் போராட்டம் உயர்ந்த குறிக்கோளில்லாத ஒரு பெரிய இந்தியக் கலகம்போலத் தோன்றக்கூடும். அம்முயற்சியில் இந்தியர் அனைவரும் ஒன்றுபடவுமில்லை; தென்னிந்தியா அதிற் கலந்து கொள்ளவேயில்லை. பம்பாய் மக்கள் சுக விருப்புற்றவரா யிருந்ததால் பம்பாய்ச் சிப்பாய்களுக்கு ஆதரவளிக்க வில்லை. பாளையக்காரரின் சண்டையோடும் ராய வேலூர்ச் சிப்பாய்களின் கலகத்தோடும் சென்னையின் சுதந்திரத் தினவு அடங்கிப்போய் விட்டதுபோலத் தோன்றியது! வடக்கே குடியேறி யிருந்த மகாராஷ்டிரர்களே ஜான்ஸி கான்பூர் முதலான இடங்களில் உக்கிரமாக இப் போரில் ஈடுபட்டனர். அவர்களுடைய வீரமும் உறுதியும் ஒற்றுமையும் தெற்கேயுள்ள மகாராஷ்டிர ரிடையே காணப்படவில்லை. நானாசாகிபின் தூதர்கள் தட்சிணத்திலும் புரட்சி வெள்ளத்தைத் திருப்பிவிட முயன்றனர். தட்சிணச் சிப்பாய்களிடையே மைசூர் வரையில் புரட்சிக் கருத்துக்கள் தெறித்த வண்ணமா யிருந்தன; ஆனால் தட்சிணத்திலுள்ளவர்கள் ஆலோசனை செய்த வண்ணம் தாமதஞ் செய்தனர். அதனால் அங்கு மிங்கும் மூண்டிருந்த சில்லறைப் புரட்சிகளும் மாண்டு போயின. கொல்ஹாப்பூரில் சிப்பாய்களைப் பொது மக்கள் ஆதரிக்கத் தவறி விட்டனர். நாகபுரி முதலிய பிரதேசங் களில் தோன்றிய புரட்சி-முயற்சிகளைச் சென்னையி லிருந்து வந்த சிப்பாய்கள் அடக்கி விட்டனர்.

எனினும் ஜான்ஸி ராணி முதலானவர்கள் வெளி யிட்ட வீரத்தை மறக்க முடியுமா? ஆயுதங்களையெல்லாம் கொடுத்துச் சரணமடைவோரை மன்னித்து விடுவதாகக் கவர்னர் ஜெனரல் கானிங் பிரபு ஒரு பிரகடனம் விடுத் திருந்தும், சுதந்திர வெறி கொண்ட புரட்சிக்காரர்கள்

தங்களுக்கு வெற்றி கிடைக்காதென்று தெரிந்த பின்பும் கடமைக்காகவும் கௌரவத்திற்காகவும் போரிட்டு எதிரிகள் பிரமிக்குமாறு வீரம் விளைத்தனர். இத்தகைய ஒரு கூட்டத்தின் போர்த்திறன் குறித்து ஓர் ஆங்கில தளபதி, "நான் இந்தியாவில் பல போர்களை நேரில் பார்த்திருக்கிறேன். 'வெற்றி அல்லது வீர மரணம்' என்ற ஒரே உறுதியுடன் போரிட்டிருக்கும் வீரர் கூட்டங்களையும் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்த வீர ஜமீன்தார்களைப் புல் பூண்டுகளை வாள் அறுத்துத் தள்ளுவதுபோல் எங்கள் பீரங்கிகள் சுட்டு வீழ்த்தியும், மேலும் மேலும் அணியணியாக இந்தக் கூட்டத்தினர் (செத்தவர் போக எஞ்சியிருந்தவர்கள்) எங்கள் பீரங்கிகளை நோக்கி முன் வந்த வண்ணமாயிருந்தனர். ஒரே ஒரு பீரங்கியைச் சுற்றி மட்டும் 125 பிரேதங்கள் கிடந்தன என்றால், அந்தத் தைரிய சாகசச் செயல்களை என்னென்பது?" என்று வாயாரப் புகழ்ந்திருக்கிறான்.

உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே!

என்று பாரதியார் பாடியுள்ள வீரம், வெள்ளமாகப் பெருக்கெடுத்தோடுமாறு நடைபெற்ற இத்தகைய வீரப் போராட்டத்தை ஒரு பேயாட்டம்தான் என்று கருதும் சரித்திர ஆசிரியர்களும் உண்டு. ஆனால் ஏதோ ஒரு நினைவுடன் ஆடிய பேயாட்டம்தான் என்பதை மறுக்க முடியுமா? அந்த நினைவிலே, அந்த வெறியிலே தன்னலம் மறக்கப்பட்டு இந்து முஸ்லிம்களுக்கிடையே மத வெறியும் மறைந்து போயிற்று. இந்தப் போராட்ட முயற்சிகளில் கலந்து கொண்டவர்களின் ஒரு பொற்கனவு இந்து முஸ்லிம் ஒற்றுமை. பகதூர்ஷா டெல்லியில் செய்த விளம்

பரத்தில் 'இந்து முஸ்லிம் சகோதரர்களே!' என்று நாட்டு மக்களை விளித்து விடுதலைப் போருக்குக் கச்சை கட்டுமாறு வேண்டிக் கொண்டிருந்தான். மத வெறியால் பிரிந்திருந்த இதயங்கள் தாற்காலிகமாயாவது சுதந்திர வெறியில் இணைந்து கொண்டன அல்லவா?

லண்டன் டைம்ஸ் 1859 மே மாதம் 20-ம் தேதி எழுதும்போது, "நேபாளத்திலிருந்து கூர்ச்சர எல்லை வரையிலும், ராஜபுதனப் பாலைவனத்திலிருந்து நிஜாம் சமஸ்தானம் வரையிலும் புரட்சித் தலைவர்கள் ஆங்கிலேயரை எதிர்த்து அதை ஒரு தேசீயப் புரட்சிபோல் தோன்றுமாறு செய்து விட்டனர்" என்று குறிப்பிட்டிருக்கிறது. "சில ஆண்டுகளுக்குள் இங்கிலாந்து தன் எண்ணிலாத முரண்பாடுகளுக்கும் ஆபத்தான போக்கிற்கும் பரிகாரம் செய்து கொள்ளாவிட்டால், எதிர் காலத்தில் புரட்சி-முயற்சிகள் இன்னும் அதி தீவிரமாகக் கூடும்" என்றும் லண்டன் டைம்ஸ் எழுதியது. அந்தப் பரிகாரம் தேடுவதற்கு 88 ஆண்டுகள் அல்லவா தேவையாகி விட்டன?

# அத்தியாயம் 7

# புரட்சிப் போருக்கு முன்னும் பின்னும்

இந்தியச் சிப்பாய்களின் புரட்சிப் போராட்டம் அடியோடு தோல்வியுற்றது. எனினும் பிளாசிப் போரின் விளைவாக ஏற்பட்ட ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியும் போய்விட்டது. விக்டோரியா மகாராணி இந்திய ஆட்சியை ஏற்றுக்கொண்டதும் ஓர் அரசியல்—பேரறிக்கைப் பத்திரம் வெளியிடப்பட்டது. அதன்படி மதச் சுதந்திரமும் சுதேச அரசர்களுக்குச் சுவீகார உரிமையும் அளிக்கப்பட்டன. ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டவர்களில் பிரிட்டிஷ் குடிகளைக் கொலை செய்ததில் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தவர்கள் தவிர, கொலைக் கருவிகளைப் போட்டுவிட்டுச் சரண மடைந்தவர்களுக்கெல்லாம் மன்னிப்பு அளிப்பதாகவும் வாக்களிக்கப்பட்டது. எனினும், 1859 ஏப்ரல் வரையிலும் போராட்டம் அயோத்தியில் தொடர்ந்து நடந்தது. இங்கிலாந்தின் அரசி 'இந்தியாவின் சக்கரவர்த்தினி' யாகி ஆங்கிலப் பாராளு மன்றத்தின் விருப்பத்திற்கிணங்க இங்கிலாந்திலுள்ள இந்தியா மந்திரியைக் கொண்டு இந்தியாவை ஆளவேண்டும் என்றும், இந்தியா மந்திரிக்குக் கீழ்ப்படிந்து இந்தியாவிலிருக்கும் அரசப்பிரதிநிதி என்ற வைஸ்ராய் இந்தியாவில் ஆட்சி செலுத்தவேண்டுமென்றும் புதிய ஏற்பாடு செய்யப்பட்டது. கவர்னர் ஜெனரலாக இருந்த கானிங் பிரபு முதலாவது அரசப் பிரதிநிதியாக நியமிக்கப் பெற்றான். கானிங் பிரபு உள்ளபடியே தயாள குணமுள்ளவன். இந்தியாவில் சமாதானம் நிலைபெற வேண்டுமென்றால் அது பொதுமக்களின் மனச் சமாதானமாக இருக்கவேண்டும்; அதற்காக அரசியல்—பேரறிக்கைப் பத்திரம் ஒரு புதிய இந்திய

அரசியல் யுகத்தின் தோற்றுவாயாக அமையவேண்டும் என்றெல்லாம் நல்லரசி நல்ல கனவுகள் கண்டாள். இக் கனவுகளை, 'விண்ட்ஸர் அரண்மனை, 1858-டிஸம்பர் 2-ம் தேதி' என்ற தலைப்புடன் அரசி முதலாவது அரசப் பிரதிநிதிக்குத் தான் எழுதியுள்ள திருமுகத்தில் குறிப் பிடுகின்றாள். எனினும் விக்டோரியாவின் கருணை யுள்ளமும், கானிங் பிரபுவின் தயாள சீலமும் பயன் பட்டுச் செயலாகவில்லை. "அவர்கள் (மக்கள்) நலமே எங்கள் வலிமை; அவர்கள் மனநிறைவே எங்கள் அரண்; அவர்களது நன்றி எங்கள் பரிசு!" என்று செவிக்கினிய செஞ்சொற்களை அறிக்கை வழங்கிய போதிலும், வெறுப் பும் பகைமையுணர்ச்சியும் அதிகாரிகளின் உள்ளத்திற் குள்ளே புகைந்து கொண்டிருந்தன. ரங்கூன் சிறையில் பகதூர்ஷா மரணமடைந்த 1862-ம் ஆண்டில், "இந்தியா வில் ஆங்கில ஆதிக்கம் நன்கு நிலைபெற்றுவிட்டது; இனி மேல் கவலைக்குக் காரணமேயில்லை" என்ற உணர்ச்சியுடன் முதல் அரசப் பிரதிநிதி சீமைக்குத் திரும்பினான்.

1757-ம் ஆண்டுப் பிளாசிப் போரில் கிளைவ் அடி கோலிய பிரிட்டிஷ் இந்திய ஆதிக்கம் வாரன்ஹேஸ்டிங்ஸ் காலத்திலே (1774—1785) நிலைநிறுத்தப்பட்டதல்லவா? அந்த முதலாவது கவர்னர் ஜெனரலே கிழக்கிந்தியக் கம்பெனியின் கீழிருந்த பிரதேசங்களில் ஒழுங்கான நிர்வாகத்தையும் ஏற்படுத்த முயன்றான். இந்திய வர லாற்றுப் போக்கு, பண்பாடு ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டே இந்தியாவின் நிர்வாகமுறை வளர வேண்டும் என்பது வாரன்ஹேஸ்டிங்ஸின் கொள்கை. பிறகு ஆங்கில ஆதிக்கம் விரிந்து படர்வதிலேயே முனைந் திருந்தது. அண்மையிலுள்ள பிரதேசங்களைக் கவர்தல், பெரிய நிர்வாக மாறுதல்களையும் பொருளாதார மாறு தல்களையும் ஏற்படுத்தல் ஆகியவை 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள். அப்பால் இந்தி

யாவைப் பற்றிய பொறுப்பும் அதிகாரமும் கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து பிரிட்டிஷ் சர்க்காருக்கு மாற்றப் பட்ட போதிலும், சிப்பாய்களின் உக்கிரமான போராட் டம் பயங்கரமாக அடக்கப்பட்ட பின் இருபத்தைந்து ஆண்டுகளாக இந்திய அன்னையின் முகத்தில் மகிழ்ச்சிப் பொலிவோ, உயிர்க்களையோ காணப்படவில்லை. அன்னை யின் பெருமூச்சே இதயத்துடிப்பிற்கு அறிகுறியாயிருந்தது. சிப்பாய்களின் முயற்சி படுதோல்வியடைந்து விட்டபின் வேறு வழிகளில் மக்கள் தம் அரசியல் உணர்ச்சிகளை வெளியிடவும் துணியவில்லை. 1858 முதல் 1883 வரை, சமயப் புரட்சி சமுதாயப் புரட்சிகளின் பெயரால் வங்க நாட்டில் சபைகளும் சமாஜங்களும் தோன்றி மறைந்த வண்ணமாயிருந்தன.

இந்தியாவில் கார்ல் மார்க்ஸ் போன்ற மேதாவியோ, டார்வின் போன்ற விஞ்ஞானியோ, தந்தி புகைப் படம் போன்ற விஞ்ஞானப் புதுமைகளைக் கண்டுபிடிக்க முயன்ற அறிவாளிகளோ தோன்றவில்லை. 'நாடுபிடிக்க வேண்டும்' என்ற ஆசையில்லாவிட்டாலும் புதிய நாடு களைக் கண்டு பிடிக்கவேண்டும் என்ற ஆசையுள்ளவர் களும் தோன்றவில்லை. எனினும், இந்தியா தன்னைச் சூழ்ந்துகொண்ட அடிமைப் பேரிருளிலும் சில மெய்ஞ் ஞானச் சோதிகளைத் தோற்றுவித்தது. இந்தச் சோதி களில், சிப்பாய்களின் புரட்சி - முயற்சிகளுக்கு முன்பே தோன்றி மறைந்த இராமமோகனரைக் குறித்து ஏற்கெனவே தெரிந்துகொண்டோம். வேறொருவர் ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்த தயானந்த சரஸ்வதி. இன் னொருவர் 'இராமகிருஷ்ண - விவேகானந்த சங்கம்' என்று உலகப்புகழ் பெற்றிருக்கும் குழுவினரின் 'சிகரஜோதி' யான இராமகிருஷ்ண பரமஹம்ஸர். இவர்களுடன் தமிழ் நாட்டில் தோன்றிய 'அருட்பெருஞ்சோதி' யாகிய இராமலிங்கரையும் சேர்த்துக் குறிப்பிடலாம்.

அந்நாளில் இந்து தேசமும் இந்து மதமும் 'கோமா' என்று சொல்வது போன்ற ஒருவகை மரண நித்திரையில் ஆழ்ந்திருந்தது போலக் காணப்பட்டன. இந்து நாகரிகத்தின் அரணாக இருந்த கிராமக் 'குடியரசுக'ளும் குடிசைக் கைத்தொழில்களும் அழிக்கப்பட்டபின், இந்திய வாழ்க்கையின் எத்துறையிலும் தன்னம்பிக்கையை இழக்கத் தொடங்கிவிட்டது. இந்தியர்களின் வாக்குச் சுதந்திரத்துடன் பத்திரிகைச் சுதந்திரத்திற்காகவும், சமய உரிமைகளோடு லௌகிக உரிமைகளுக்காகவும் இராமமோகனராய் அந்நாளிலேயே வாதாடிய போதிலும் அப்பெரு முயற்சி தொடர்ந்து நடைபெறுமற்போய் விட்டதால் நாட்டு மக்களுக்கு அத்துறைகளில் நற்பயன் விளைந்து விடவில்லை. எனினும் இராமமோகனரின் பிரம சமயம் சுதந்திர உணர்ச்சியை ஒருவாறு தூண்டி விட்டுச் சுதந்திர மனச்சான்றுக்காகப் போராடும் ஆற்றலையும் வங்க இளைஞரிடையே வளர்க்கலாயிற்று. பின்னாளில் விபினசந்திரபாலர் முதலானோர் புரட்சிமயமான தேச பக்தி-இயக்கத்திலே துணிந்து இறங்குவதற்கு இராம மோகனரின் பிரம சமய வித்தும் ஒரு முக்கிய காரணமாயிற்று. இத்தகைய 'தேசீய முன்னணித்தூதரா'ன இராமமோகனரைப்போல் ஆரிய சமாஜத்தை உருவாக்கிய தயானந்தருக்கும் நம் தேசீய வளர்ச்சி வரலாற்றிலே ஒரு குறிப்பிடத்தக்க இடம் உண்டு.

இராமமோகனர் இறக்கும்போது தயானந்தருக்கு ஒன்பது அல்லது பத்து வயதிருக்கலாம். சிக்கியர்களுடன் ஆங்கிலேயர் போராடிப் பஞ்சாப் மாகாணத்தையும் சேர்த்துக் கொள்ள முயன்ற காலத்திலே சுமார் இருபத்திரண்டு வயதுள்ள தயானந்தர் தம் வீட்டையும் துறந்து பல்வேறு துறவிகளுடன் நாடு காடு மலையென்ற வேற்றுமையின்றிச் சுற்றித் திரிந்துக் கொண்டிருந்தார். வடமதுரையில் விரஜானந்தர் என்ற பெரியாருக்குச் சீடராகி இரண்டரை ஆண்டு

கள் அருமறையின் பொருள் நுணுக்கங்களைத் தெரிந்து கொண்டார். பிறகு உண்மையான மறைப்பொருள் என்று தாம் கருதிய கொள்கைகளைத் தீவிரமாக வெளியிடத் தொடங்கினார். ஆங்கில வணிகர்களால் வளர்ச்சி பெற்று வந்த புது நகரங்களான பம்பாயிலும் கல்கத்தாவிலும், ஆங்கிலேயர்கள் சிக்கியரிடமிருந்து அப்போதுதான் கைப்பற்றியிருந்த லாகூர் நகரிலும், இந்தியாவின் பெரும் புனித நகரமான காசியிலும், இன்னும் பல இடங்களிலும் தயானந்தர் மூடநம்பிக்கைகளையும் சாதி வேற்றுமைகளையும் தாக்கித் தகர்த்தெறிய முயன்றார். வாதப் போர்க்களங்களில் தயானந்தருக்குக் கிடைத்த வெற்றிகள் ஆங்கிலேயருக்குச் சிக்கியப் போர்க்களங்களில் கிடைத்த வெற்றியைப் போல் அவ்வளவு வெளிப்படையான பயன்களைக் காட்டவில்லை. எனினும் தயானந்தர், இந்தியாவைச் சமய உணர்ச்சியால் ஒற்றுமைப் படுத்தப் பெருமுயற்சிகள் செய்து பார்த்தாரென்பதில் ஐயமில்லை. தயானந்தரின் கனவும் துணிவும், கிளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ், டலௌஸி முதலானவர்களின் கனவுகளுக்கும் துணிவுகளுக்கும் சிறிதும் குறைந்தவை யல்ல. தயானந்தர் ஒரே சமயக் கொடிக்கீழ் உலகம் முழுதும் வந்துவிடவேண்டும் என்று கூடக் கனக் கண்டார். ஆங்கிலேயர் சிக்கியரை வென்று பஞ்சாபில் வெற்றி பெற்றதுபோல் தயானந்தருடைய கொள்கைகளும் பஞ்சாப் மாகாணத்தில் சிறப்பாக வெற்றி பெற்றன. ஆங்கில ஆதிக்கத்தின் பஞ்சாப் வெற்றி இந்தியா முழுவதையும் ஒரு மாயச் சோர்வு நித்திரைக்கு உட்படுத்தியதல்லவா? ஆனால் தயானந்தரின் பஞ்சாப் வெற்றியோ அத்தகைய கொடிய உறக்கத்திலிருந்து இந்தியா ஒரு பெரிய ஞான விழிப்பை அடையுமாறு 'பள்ளியெழுச்சி' பாடுவதுபோலிருந்தது.

தயானந்தர் 'பிரமசரியம்' என்ற புலனடக்க நெறியையும் குருகுலக் கல்வி முறையையும் வற்புறுத்தினர். இளமை மணத்தைக் கண்டித்துப் பெண்களுக்கும் விடுதலை வேண்டுமென்ருர். சாதி வேற்றுமைகளைக் கண்டித்து இந்துக்களையெல்லாம் தமது ஆரிய சமாஜத்தின் மூலமாகச் சகோதரராக்க முயன்ருர். 'தீண்டாமை மாண்டுபோனுல் இந்தியா பிழைத்துப் போகும்; தீண்டாமை பிழைத்திருந்தால் இந்தியா மாண்டுபோகும்!' என்று முழக்கி, அந்நாளிலேயே சோர்ந்து சோம்பிக்கிடந்த சமுதாயத்திற்குச் சவுக்கடி கொடுத்து முன்னேற்றப் பாதையில் துரத்த முயன்ருர். சுருங்கச் சொன்னுல், இந்நாளில் சீர்திருத்தக்காரர்கள் செய்ய முயலும் பல சீர்திருத்தங்களையும் தயானந்தர் அன்றே எதிர்நோக்கி வற்புறுத்தி யிருக்கிருர். அரசியல்—கிளர்ச்சியில் தலையிட்டுக் கொள்ளாவிட்டாலும் அரசியல் விடுதலைக்கு அடிப்படையான கொள்கைகளிலும் இப்பெரியார் சிரத்தை காட்டினர். தயானந்தரின் வாழ்க்கையும் வீர வாழ்க்கை; மரணமும் வீர மரணம். போர்முனையில் உயிர்விடும் போர் வீரனைப்போல் ஞான வீரரான தயானந்தரும் உயிரைவிட்டார். இவர் தீரமாகவும் தீவிரமாகவும் வெளியிட்ட கொள்கைகளைக் கண்டு நடுங்கிப்போனவர்கள் இவருக்கு உணவிலே நஞ்சு கலந்து கொடுத்துவிட்டனர். உயிர் போகும் நாளிலும் அம்புப் படுக்கையிற் கிடந்த பீஷ்மரைப் போலக் கிடந்த இவர் வேதமந்திரங்களை ஓதி அன்பர்களை நோக்கி, "இறைவன் உங்களை நன்னெறியில் நடத்தட்டும்; எல்லோரும் ஒற்றுமையுடன் வாழுங்கள்" என்று ஆசி பகர்ந்தார். 1883-ல் லாலா லஜபதிராய் லாகூர்க் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது தயானந்த சரஸ்வதி ஆஜ்மீரில் காலமானுர். லாகூரில் கூடிய அனுதாபக் கூட்டத்திலே பேச எழுந்தவர்களெல்லாம் சாவி

லும் தயானந்தர் வெளியிட்ட மன அமைதியையும் கம்பீர நிலையையும் நினைத்து நினைத்து உருகியவர்களாய் ஒன்றும் பேச இயலாது அப்படி அப்படியே உட்கார்ந்து விட்டனர். ஆரிய சமாஜக் கட்டிடத்தில் கூட்டம் நிறைந்து இடமில்லாமற் போகவே மக்கள் மேற்கூரைமீதும் சுவர்கள் மீதும் கதவுகள்மீதும் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் ஏமாற்றத்தை அடையாதபடி லஜபதிராய், மற்றையோர் பேச முடியாமல் உட்கார்ந்துவிட்ட பிறகு எழுந்து ஒன்றரை மணி நேரம் உருக்கமாகவும் திறமையாகவும் பேசினார்.

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்,
வாக்கினிலே ஒளியுண் டாகும்

என்ற பாரதியாரின் வாக்கிற்கு ஓர் இலக்கியமாக அன்று லஜபதி திகழ்ந்தார். தயானந்தருக்கு ஒரு நினைவுக் குறியாக டி. ஏ. வி. கல்லூரி அவரது கொள்கைகளுக்கு இணங்க உருவாக்கப்பெற்றது.

ஆரிய சமாஜம், இராமமோகனரின் பிரம சமாஜத்தைக் காட்டிலும் கட்டுப்பாடு பெற்றதாய்த் தொன்று தொட்டு வந்துள்ள இந்திய நாகரிகத்திற்கும் பண்பாடுகளுக்கும் அதிக அளவில் இசைந்து பொருந்தியதாகத் தோன்றியது. சிப்பாய்களின் புரட்சி–இயக்கம் அடக்கப்பட்ட ஆண்டிலே, ராஜா ராம மோகனராயின் பேரன்பிற்குரிய சீடர்களில் ஒருவர் காடடர்ந்த இமயமலைப் பிரதேசத்தில் பதினெட்டுத் திங்கள் தியானம் முதலான சாதனங்களில் பழகியபின் சமயப் பணியையும் சமுதாயப் பணியையும் தொடர்ந்து செய்ய வந்து சேர்ந்தார். இவரே கவி ரவீந்திரநாத தாகுரின் தந்தையாரான மகரிஷி தேவேந்திரநாத தாகுர். இவர் பிரம சமாஜத்தில் சில புதிய அம்சங்களைப் புகுத்தினார். இவருக்குப் பின்வந்த கேசவ சந்திரசேனர் முதலான புதிய சீர்திருத்தக்காரர்

கள் பிரமசமாஜத்திலுள்ள இந்து அம்சங்களை முற்றும் விலக்கிவிட விரும்பி அச்சமயத்தை ஏறக்குறைய ஓர் அன்னிய மதம்போலச் செய்துவிட்டனர். எனவே இராம மோகனராயின் காலத்தில் இருந்ததைக் காட்டிலும் பிரம சமாஜம் பின்னுளில் இந்து சமுதாயத்திலிருந்து விலகி நின்றதுபோலத் தோற்றமளித்தது. ஆதிமறையே தமது கொள்கைகளுக்கு ஆதாரமென்று முழக்கிய தயானந்தரின் வாக்கும் வாழ்க்கையுமோ, இந்துக்களின் பழைய ஞானமே ஒரு புதிய ஆவேசம் பெற்றுவந்தது போலக் காணப்பட்டன. தியாகப் பெருவீரரான லஜபதிராயும் சிரத்தானந்தரும் தயானந்தரின் ஆரிய சமாஜத்திலே தோன்றிய கனிகள் என்ருல், இவரது கொள்கைகள் அந்நாளில் இந்திய சமுதாய மறுமலர்ச்சிக்கு எப்படிப் பயன்பட்டிருக்கவேண்டும் என்பதை ஒருவாறு உய்த்துணர்ந்து கொள்ளலாமல்லவா? இத்தகைய பெருந்தொண்டாற்றிய தயானந்த சரஸ்வதியைப் பாரதியார் 'அருமறையின் உண்மைதந்த சீரியர் மெய்ஞ்ஞான தயானந்தர்' எனப் போற்றியுள்ளார்.

ஆரியசமாஜம் தோன்றிய காலத்தை ஒட்டிப் 'பிரம ஞான சங்க'மும் (Theosophical Society) தோன்றியது. பிளாவட்ஸ்கி அம்மையாரும் கர்னல் ஆல்காட் என்பாரும் இந்து சமயத்திற்கு விரோதமாக எழுந்த வாதங்களைக் கண்டித்து இந்து நாகரிக மறுமலர்ச்சிக்கு அரும் பெருந்தொண்டாற்றினர். நாளடைவில் இச்சங்கத்தினர் சமுதாயப் பணிகள் பல புரிந்து கல்வித்துறையிலும் உழைக்கமுற்பட்டனர். கர்னல் ஆல்காட் பம்பாயில் தமது முதலாவது சொற்பொழிவை 1877-ம் ஆண்டில் நிகழ்த்தினுர். இந்தியா துயிலுணர்ந்தெழுந்து தன்னறிவுபெற்று உலகத்திற்கும் ஞானச் செல்வத்தை வழங்கவேண்டும் என்பதைக் கர்னல் ஆல்காட் அந்த நாளிலேயே தெளிவுபடுத்திஞர். இச்சங்கத்தின் வாயிலாக இந்தியாவுக்குத்

தனிப்பெருந் தொண்டாற்றியவர் டாக்டர் அனிபெஸன்ட் என்பதை அறியாதாரில்லை. இவர் அரசியலில் நேரடியாகக் கலந்துகொள்வதற்கு முன்பே இந்திய தேசீய எழுச்சிக்கு முன்னோடிகளில் ஒருவராகி விட்டார்.

கடைசியாகச் சமய உணர்ச்சியைத் தூண்டித் தேசீய எழுச்சிக்கு மக்கள் உள்ளத்தைப் பண்படுத்திய இயக்கம் இராமகிருஷ்ண-விவேகானந்த சங்கம். இராமகிருஷ்ண பரமஹம்ஸர் சிப்பாய்களின் புரட்சி இயக்கம் தோன்றுவதற்கு 21 ஆண்டுகட்கு முன்பு தோன்றினார். இவரை ஓதாதுணர்ந்த உயர் ஞானி என்றே சொல்லவேண்டும். இவர் நூல் ஒன்றும் எழுதவில்லை; சொற்பொழிவாற்றவும் இல்லை. சீடர்களுடன் முகமுகமாய் அகத்தோடு அகம் தொட்டு உறவாடி உரையாடினார். இந்த உரையாடல்களைக் கேட்ட சீடர்கள் அவற்றை இவரது உபதேசங்களாக எழுதிவைத் திருக்கின்றனர். "இராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய உபதேசங்கள் உபநிஷத்துக்குச் சமானமென்றால் மிகையாகாது" என்று ராஜாஜி தாம் எழுதிய 'இராமகிருஷ்ண உபநிஷதம்' என்னும் நூலின் தொடக்கத்திலே கூறியுள்ளார். இராமகிருஷ்ணர் பண்டைக் காலத்து முனிவர்களையும், நம் தமிழ் நாட்டில் அவ்வப்போது தோன்றியுள்ள ஆழ்வார், நாயன்மார்களையும் நினைவூட்டுகிறார். இராமமோகனராய் பன்மொழிப் புலவர்; ஆங்கிலத்தில் தக்க பயிற்சி பெற்றவர். தயானந்தர் ஆங்கிலப் பயிற்சி பெறாதவராயினும் வடமொழிக் கடலை நிலைகண்டுணர்ந்தவர். இராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கோ ஒரு மொழியிலும் பயிற்சியில்லை. எனினும் இவரை ஐரோப்பிய மொழிகள் பலவற்றுடன் வட மொழியிலும் வல்லுநராக விளங்கிய மாக்ஸ் முல்லர், 'பத்தொன்பதாவது நூற்றாண்டில் அவதரித்த ஒரு மகாத்மா' என்று குறிப்பிடுகிறார். "நாம் ஒருவரையொருவர் பார்க்கும்போது எவ்வளவு நிச்சயமும்

உறுதியும் நிறைந்த உணர்வோடு பார்க்கிறோமோ, அவ்வாறு இராமகிருஷ்ணர் எல்லாப் பொருள்களிலும் பகவானைக் கண்டார்.........தெய்விக வாழ்க்கை வாழ்ந்த மக்களின் பேச்சுக்கே ஒரு தனியான வேகம் உண்டு. அவர்களுடைய உபதேச மொழிகளுக்கு உள்ள சக்தி வெறும் படிப்பும் அறிவும் படைத்தவர்களின் தருமோபதேசத்துக்கு இருப்பதில்லை. மகரிஷிகள் பேசும்போது அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் பேசுகிறது; அறிவுமட்டுமல்ல. மீமாம்ஸ வாதங்களும் விமரிசனங்களும் எவ்வளவு அழகாகவும் பொருட்செறிவு கொண்டவைகளாகவும் இருந்தாலும் ஆண்டவன் அருள் பெற்ற மகான்களின் சம்பாஷணைகளில் காணும் வேகத்திற்கு ஈடாகாது'' என்று ராஜாஜி இவரது உபதேச இரத்தினங்களை உள்ளவாறு மதிப்பிடுகின்றார். இராமகிருஷ்ணர் சமய வேற்றுமைகளுக்கிடையே சமரசம் கண்டார். பக்திப் பெருநெறி பிடித்தொழுகிக் குறுகிய சாதியுணர்வு முதலியவற்றை விட்டுவிடுமாறு வாழ்க்கையாலும் உபதேசத்தாலும் வற்புறுத்தியுள்ளார். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் அசோக மன்னன் கல்லிலே வெட்டிவைத்த சமரசப் பெருநெறிக்கு இராமகிருஷ்ண பரமஹம்ஸரும் புத்துயிரளித்திருக்கிறரென்பதை ராஜாஜி சுட்டிக் காட்டியுள்ளார். ''மகாராஜாவுக்கு அதிக மகிழ்ச்சி எதுவென்றால், எல்லா மதத்தினரும் தத்தம் முறையில் தத்தம் ஆத்மசக்தியை விருத்தி செய்துகொள்வதே. பல துறைகளின் மூலமாக ஒருவன் இந்த ஆத்மசக்திப் பெருக்கத்தை அடையலாம்'' என்ற அசோகரின் கொள்கையைத்தான் பாமரர்களும் எளிதில் உணர்ந்துகொள்ளும்படி 'இராமகிருஷ்ண உபநிஷதம்' உவமைக்கதைகள் மூலம் எவ்வளவு தெளிவாக எடுத்துக் காட்டுகிறது!

இராமமோகனர் கவி ரவீந்திரரின் தந்தையான தேவேந்திரநாத தாகுரை இந்தியாவுக்கு அளித்தார் என்ருல், தயானந்தர் லாலா லஜபதிராயையும் சுவாமி சிரத்தானந்தரையும் தாய்நாட்டுக்கு உதவினுர் என்ருல், இராமகிருஷ்ணர் சுவாமி விவேகானந்தரை உதவி இந்தியாவுக்குச் சமயத் துறையில் மறுமலர்ச்சியும் உலகப் புகழும் அளித்திருக்கிருர். விவேகானந்தர் 1863 ல் தோன்றித் தாம் பி. ஏ. வகுப்பில் படிக்கும்போதே ஸ்ரீ இராமகிருஷ்ணரைச் சந்தித்தார். பிறகு அவரையே குருவாக ஏற்றுக்கொண்டார். 1886-ல் இராமகிருஷ்ணர் காலமானபின், விவேகானந்தர் இமயமலைமுதல் கன்னியாகுமரிவரையில் நடந்து யாத்திரை செய்து நம் மக்களின் நிலைமையை நன்கறிந்து கொண்டார். 1893-ம் ஆண்டில் அமெரிக்காவில் சிகாகோ மகாசபையில் பிரபல அறிஞர்களும் வியந்து கொண்டாடுமாறு இந்து சமயத்தின் உயர்ந்த தத்துவங்களைக் குறித்துச் சொற்பொழிவு நிகழ்த்தினுர். விவேகானந்தரின் சமயத்தொண்டில் தேசீய உணர்ச்சியும் நிறைந்திருந்தது. "ஒவ்வொரு தேசத்திற்குமுள்ள மூலாதாரக் கொள்கைகளைப் பற்றிக்கொண்டு தேசத்தின் பல துறைகளிலும் வேலைசெய்ய முடியும்" என்பது விவேகானந்தர் கண்டுபிடித்து நமக்குப் போதித்த உண்மையாகும். "விவேகானந்தர் எங்கும் வேதாந்த சமய உண்மை பற்றியே முழக்கம் செய்கின்ருர்....எனினும் பாரத அன்னையிடம் இவருக்குள்ள பக்தி சுடர்வீசிய வண்ணமாயிருந்தது. இந்திய தேசீய உணர்வின் அவதாரமாக ஸ்ரீ விவேகானந்தர் விளங்கினுர்" என்று விவேகானந்தருடைய ஐரோப்பியச் சீடர்களுக்குள் முதன்மைபெற்ற மிஸ். மார்கரெட் நோபிள் என்ற நிவேதிதை அம்மையார் கூறியுள்ளார். 1897-ம் ஆண்டில் விவேகானந்தர் வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியதும், பேலூர் என்னும் இடத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்

ின் தலைமை நிலையம் ஏற்பட்டது. விவேகானந்தரது உண்மையான மகிமையை முதன் முதல் அறிந்துகொண்டவர்கள் சென்னை வாசிகளான தமிழ் மக்களேயாவர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிப்பாய்களின் புரட்சிப் போராட்டத்திற்கும் முன்பே நம் தமிழ்நாட்டிலும் ஒரு மகாத்மா தோன்றியிருந்தார். இவர் 1823-ல், அதாவது இராமமோகனர் காலமாவதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்பு, தோன்றியவர்; ஒரு பெருங்கவிஞராகவும் திகழ்ந்து 'கல்லைப் பிசைந்து கனியாக்'கும் பாடல்களில் தமது சமரச சன்மார்க்கக் கொள்கைகளையும் உயிரிரக்கக் கொள்கை களையும் வெளியிட்டிருக்கிறார். இவர் சாதிவேற்றுமைகளை வெறுத்ததுடன் குறுகிய மனப்பான்மையையும் மூட நம்பிக்கைகளையும் கண்டித்துக் 'கண்மூடி வழக்க மெல்லாம் மண்மூடிப்போக' என்று தம் ஞானமுரசை முழக்கியுள்ளார்.

எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம்முயிர்போ லெண்ணி உள்ளே

ஒத்துரிமை யுடையவரா யுவக்கின்றார்
யாவரவ ருளந்தான், சுத்த

சித்துருவா யெம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தெரிந்தேன்; அந்த

வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ

என்னும் பாட்டிலே இராமலிங்கரது இதயமும், வாழ்க்கை முழுவதும் பேசுகின்றன எனலாம். "பெண்களுக்கு யோகம் முதலிய சாதனங்கள் அவசியம் கற்பிக்க வேண்டியது. மேலும் பேதமற்று அபேதமாய்ப் படிப்பு முதலியவையும் சொல்லிக்கொடுக்க வேண்டியது" என்று தாம் போதித்த 'நித்திய ஒழுக்கமுறை'யில் இராமலிங்க அடிகள் கூறியுள்ளார். "தொழிலொழுக்கம்பற்றிச்

சாதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன சமய ஏற்பாடு, சாதி ஏற்பாடு முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள்......... ஆதலால் மேல்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து சுத்த சிவ சன்மார்க்க சத்தியஞான ஆசாரத்தை வழங்கிப் பொது நோக்கம் வந்தால், மேற்படி காருணியம் விருத்தியாகிக் கடவுள் அருளைப்பெற்று அனந்த சித்தி முத்திகளைப் பெறக்கூடும்" என்று இப்பெரியார் 'நித்திய ஒழுக்க'த்தில் கூறியிருப்பதை இவரது உயிர்நிலைக் கொள்கையாகக் கருதலாம்.

பிரார்த்தனை குறித்துத் தம் கருத்தை வெளியிடும் போது "ஒருவன் பிரார்த்தனை செய்வதில் தனக்காக மட்டும் பிரார்த்தனை செய்வது சரியல்ல. இந்த உலகமெல்லாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும்" என்பர் இராமலிங்கர்.

> யாதும் ஊரே ; யாவரும் கேளிர்

என்ற சங்க காலத்துப் பண்பாடு இராமலிங்கரின் அருள் வாக்கிலே சமரச சைவமாகக் கனிந்து வெளிப்படுகிறது.

> எல்லாரும் இன்புற்
> றிருக்கநடம் ஆடுகின்றாய் ;
>
> வல்லாரின் வல்லாய் !
> மலர்ப்பாதம் நோவாதா ?

என்று பாடியிருப்பதில் இவரது நடராஜ தத்துவம் உலகத்திற்கே பொதுவான ஒரு நன்னெறியாகப் புலப்படுகிறதல்லவா? இவருடைய பாடல்களை ஆறு திருமுறைகளாக வகுத்துத் 'திருவருட்பா' என்ற பெயரால் வெளியிட்டிருக்கிறார்கள். இப்பாடல்கள் தமிழ்நாட்டில் மிகவும் பிரசித்தமாக வழங்கிவருகின்றன. இவற்றில் நன்கு புலப்படும்

அன்புப் பொதுநெறியைப் பரப்புவதற்காக இவர் வடலூர் என்ற 'உத்தரஞான சிதம்பர'த்தில் '**சமரச சுத்த சன்மார்க்க சங்கம்**' என்ற ஒரு சபையையும் ஏற்படுத்தினர். இராமலிங்க அடிகள் பாரதியாருக்குக் கவிதைத் துறையிலும் கொள்கைகளிலும் கூட ஒரு வழிகாட்டியாக விளங்கினர். அரசியல்-துறையிலும் இவர் கண்ட ஓர் ஆனந்தப் பொற்கனவு பின்வரும் பாட்டில் வெளிப்படுகிறது:

கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக;
அருள்நயந்த சன்மார்க்கர் ஆள்க;—தெருள்நயந்து
நல்லோர் நினைத்த நலம்பெறுக; நன்றுநினைத்(து)
எல்லோரும் வாழ்க இசைந்து.

காந்தியடிகளின் அரசியல் கொள்கைகளையும் குறிக்கோளையும் முன்கூட்டியே ஒருவாறு கணக்கண்டு இவர் சுட்டிக் காட்டுகிருரோ என்றுகூட நமக்குத் தோன்றுகிறதல்லவா?

இராமமோகனர், தயானந்தர், இராமகிருஷ்ண பரமஹம்ஸர், இராமலிங்க அடிகள் ஆகிய நால்வரையும் இந்தியாவில் பத்தொன்பதாவது நூற்றுண்டிலே 'கண்மூடி வழக்க'ங்களுக்கும், பேரறிஞரான **கார்ல் மார்க்ஸ்** முதலானவர்களின் உபதேசங்களால் உலகிற் பரவி இந்தியாவுக்கும் வந்து சேர்ந்த தெய்வ 'இன்மை'க் கொள்கைகளுக்குமிடையே நமது நாட்டின் பண்பாடுகளுக்கு இசைந்த வண்ணம் சமரச சன்மார்க்க மெய்யொளி காட்டவந்த **நால்வர்** என்று குறிப்பிடலாம். இத்தகைய பெரியோர்களைத் தோற்றுவிக்கும் நாட்டிற்குத் தன்னைத்தானே காலத்திற்கு இசைந்தவண்ணம் புதுப்பித்துக்கொள்ளும் உயிர்ச்சக்தி உண்டென்பது திண்ணம்.

எனினும் மெய்ஞ்ஞானம் தரும் உயிர்ச்சக்திக்கு அரணுக விஞ்ஞானமும் இன்றியமையாதது. "வெள்ளைக்காரர்கள் இந்த விஞ்ஞான நெறியில் தேர்ச்சி பெற்றவர்

கள்.........ஆங்கிலக் கல்விப் பயிற்சியால் நம் தேசத்தவர் புற உலக தத்துவங்களைக் கசடறக் கற்பாராயின்......... மங்கிக்கிடக்கும் மெய்ச்சமயம் தானாகவே ஓங்கி வளரும். இந்நிலை ஏற்படும்வரை, இந்தியர் அறிவிலும் குணத்திலும் திறனிலும் மேம்பாடு பெறும் வரை, ஆங்கில ஆட்சி ஓங்கியிருக்கும்'' என்று 'ஆனந்தமட'த்திலே சத்தியானந்தருக்குக் குரு உபதேசித்ததாக ஆசிரியர் **பங்கிம் சந்திரர்** கற்பனை செய்திருக்கிறார். சுதந்திர இந்தியாவிலாவது விஞ்ஞான தீபமும் மெய்ஞ்ஞான தீபமும் கலந்து ஒளி வீசி நாட்டின் அக இருள் போக்கி ஒரு புதுமைப் பெரு வாழ்வு அளிக்கும் என்று நம்புவோம்.

## அத்தியாயம் 8

# தமிழர் வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு

இந்தியாவை, நீண்ட காலமாக வேற்றுமைகளுக் கிடையே ஒற்றுமை கண்டு வந்த தேசம் எனக் குறிப்பிட லாம். 'ஒன்றாகக் காண்பதே காட்சி' என்ற ஔவைப் பிராட்டியின் அருள்வாக்கு இந்தியர் கண்ட மெய்ஞ்ஞான உலகில் ஒருமையை மட்டும் குறிப்பதன்று; காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையுமுள்ள இந்திய நாகரிகத்தின் ஒருமையையும் பண்பாடுகளையும் ஒற்றுமையையும் குறிப் பிடுவதுமாகும்.

*நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்*
*சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்*

*தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே*
*தெக்கணமும் அதிற் சிறந்த திராவிடநற் றிருநாடும்;*

*அத்திலக வாசனைபோல் அனைத்துலகு மின்பமுற*
*எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!*

என்று 'மனோன்மணீய' ஆசிரியர் சுந்தரம்பிள்ளை கூறுவது போல், தமிழ்ப் பெருமக்கள் தங்கள் நாட்டையும் தாய் மொழியையும் பரதகண்டத்தின் ஒரு பெருஞ் சிறப்பு வாய்ந்த பகுதியாகக் கருதி வாழ்ந்தனர். திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ் மொழியைக் குறித்துக் 'காஞ்சிப் புராண' ஆசிரியர்,

*அறைகடல் உலகிற்பாடை*
*அனைத்தும்வென் றாரி யத்தோ(டு)*
*உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை*
*உள்ளினுந் தேத்தல் செய்வாம்*

என்று பாடியிருக்கிறார். சங்க காலத்திலே தமிழ் மக்கள் மதச்சண்டைகளின்றி முருகன், திருமால், இந்திரன், வருணன், துர்க்கை என்னும் தெய்வங்களை வழிபட்டு வந்தனர். தமிழரசர்கள் எல்லா மதத்தினருக்கும் சம உரிமை வழங்கி வந்தனர். நாளடைவில் சமண பௌத்த சமயங்கள் வீழ்ச்சியுற்றபோதிலும் அவற்றின் சாரமான கொள்கைகளைத் தமிழ்ச் சைவர்களும் வைணவர்களும் தங்கள் கொள்கைகளுடன் இசைவித்துக்கொண்டனர். இஸ்லாமியக் கொள்கைகளும் தமிழ் நாட்டில் இந்துசமயக் கொள்கைகளுடன் பூசலிடாது பொருந்தி வாழ முயன்றன என்பது மாலிக்காபூரின் படையெடுப்பிற்கு முந்திய தமிழர் வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது.

தமிழ் நாட்டிலே ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோற்றுவித்த பக்தி இயக்கம் தமிழருடைய சமுதாய சரித்திரத்தையே மாற்றி ஒரு வகை மறுமலர்ச்சி இயக்கமாகத் தழைத்து வளர்ந்தது. துறவறத்திற்கே முதன்மை தந்த கொள்கைகளால் இசைக்கலையும் நாடகக்கலையும் குன்றிப்போயிருந்த நாட்டிலே ஆழ்வார்களும் நாயன்மார்களும் பொதுமக்களின் இதயத்தை வசீகரிக்கும் இசைப்பாடல்களைப் பாடி ஒவ்வொரு கோவிலும் இசை, நாடகம், ஓவியம், சிற்பம் முதலிய கலைகளுக்கு நிலைக்களமாகுமாறு செய்துவிட்டனர். இந்தப் பக்தி இயக்கம் பிறகு வட இந்தியாவிலும் பரவி இந்து சமயத்திற்கே புத்துயிரளித்திருக்கிறது. ராமானந்தர், கபீர், நானக், சைதன்யர், துளஸிதாசர், மீராபாய் முதலான வடநாட்டுப் பக்தமணிகளின் கொள்கைகளும் சாராம்சத்தில் நாயன்மார் - ஆழ்வார் கொள்கைகளை ஒத்திருக்கின்றன. வடநாட்டுப் பக்தி மதத்திலே முஸ்லிம் கருத்துக்களும் இந்து சமயக் கொள்கைகளுடன் கலந்து உறவாடின என்பதற்கு வெளிப்படையான சான்றுகள் உண்டு. தமிழ்நாட்டிலே ஆழ்வார் - நாயன்மார்களின் பக்திப் பெருங்கொள்கைகள்

பட்டினத்தார், தாயுமானவர், அருணகிரிநாதர், இராமலிங்க சுவாமிகள் முதலான பக்தமணிகள் வாயிலாக வாழையடி வாழைபோல் வளர்ந்து வந்திருக்கின்றன. நாளடைவில் தமிழர் நாகரிகத்திலும் பண்பாடுகளிலும் இஸ்லாமிய—கிறிஸ்தவ நாகரிகங்களும் பண்புகளும் சிறிது சிறிதாகக்கலந்து கொண்டன.

தமிழகத்தின் இருண்ட காலத்திலே தான்—வல்லரசு ஒன்றும் இன்றி அங்கங்கே சிறுசிறு பகுதிகளில் சிற்றரசுகள் நடைபெறப் பொதுவாகக் குழப்பம் அதிகரித்திருந்த காலத்திலே தான்—கம்பெனி ஆட்சி ஏற்பட்டது. அக்காலத்திலும் கோவில்களும் மடங்களும், தமிழையும் கலைகளையும் ஒருவாறு காப்பாற்றிச் சிற்சில புதிய வழிகளிலே தமிழ் வளத்திற்கும் காரணமாகித் தமிழ் மக்களுக்குத் தொண்டாற்றி வந்தன. நடிப்பதற்கேற்ற குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகம், நாடகக் கீர்த்தனைகள், சரித்திரக் கீர்த்தனைகள் முதலிய நூல்கள் தோன்றி இசையையும் நாடகக்கலையையும் காலத்திற்கேற்ற வடிவில் வளரச் செய்தன. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தைப் பொதுவாகத் தமிழ் முதலான இந்திய மொழிகளுக்கெல்லாம் ஒரு புதுயுகத் தோற்றம் என்று கூறலாம். வாணிபத்திற்காக வந்த ஐரோப்பியருடன் நமது நாட்டிற்கு வந்துசேர்ந்த பாதிரிமார் தமிழ் மொழியைக்கற்றுத் தங்கள் மதத்தைப் பரப்புவதற்காக நூல் இயற்றவும் தொடங்கியபோது தமிழிற் சில மாறுதல்கள் ஏற்படலாயின. அம்மாறுதல்களிற் சில, முன்னேற்றக் குறிகளாகவும் இருந்தன. வசன நடையில் நூல் இயற்றும் வழக்கமே ஐரோப்பியரின் தொடர்பினல் ஏற்பட்டதுதானே ?

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்பே சில வசன நூல்கள் தமிழிலே பாதிரிமார்களாலும் சிவஞான சுவாமியாலும் இயற்றப்பட்டிருந்த போதிலும் தமிழ்

வசனம் வேரூன்றி வளர்ச்சிபெறத் தொடங்கியது பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தான். பதினாறும் நூற்றாண்டின் இறுதியிலே ஏசு சங்கப் பாதிரிமார் முதலாவது தமிழ்வசன நூலை அச்சிட்டு இந்திய மொழிகளிலேயே முதலாவது அச்சுப் புத்தகம் தோன்றிய பெருமையைத் தமிழ் மொழிக்குத் தந்திருந்தபோதிலும், அரசியற் குழப்பங்களால் தமிழ் வசனம் இடையறாது தொடர்ந்து வளர்ந்தோங்கவில்லை. எனவே சென்னையில் கிழக்கிந்திபக் கம்பெனியார் பண்டசாலை ஏற்படுத்திக்கொண்டு வாணிபஞ் செய்து வந்த பதினேழாம் நூற்றாண்டையும், பிளாசிப் போரின் வெற்றி ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு இந்தியாவிலே அடிப்படை அமைத்த பதினெட்டாம் நூற்றாண்டையும் தமிழகத்தின் இருண்ட யுகம் என்று தான் பொதுவாகக் குறிப்பிடவேண்டும். ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக் காரருக்குமிடையே நடந்த சண்டைகளும், கர்நாடக நவாபுக்களின் போராட்டங்களும், உள்நாட்டுத் தொல்லைகளும், மைசூரிலிருந்து ஹைதர் அலி, திப்புசுல்தான் ஆகியவர்கள் நிகழ்த்திய பூசல்களும், மகாராஷ்டிரர்களின் படையெடுப்புகளும் தமிழ் மக்களுக்கு எண்ணிறந்த இன்னல்களை விளைத்து அறிவுவளர்ச்சியைத் தடைப்படுத்திவிட்டன. இக்குழப்பங்கள் ஓய்ந்து அச்சியந்திரங்கள் அங்கங்கே நிறுவப்பட்ட பின்பு தான் வசன நூல்கள் அதிகமாய் வெளிவரலாயின. பாதிரிமாரின் வெளியீடுகளோடு போட்டியிட்டு இந்து சமயச் சார்பான வசன நூல்களும் வெளியிடப்பட்டன. 'சென்னைக் கல்விச்சங்கம்' என்னும் ஒரு சங்கத்தை ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் தோற்றுவிக்க அச்சபை பாடப் புத்தகங்களையும் சில வசன புத்தகங்களையும் வெளியிட்டது. இந்நூற்றாண்டினிடையே தோன்றிய 'சென்னைப் பாடசாலைப் புத்தகக் கழகம்', உலக சரித்திரம், இந்திய சரித்திரம் முதலான மொழிபெயர்ப்பு நூல்கள் வெளிவரக் காரண

மாயிற்று. இங்ஙனம் வளரத்தொடங்கிய தமிழ் வசன நடையைப் பலருக்கும் விளங்குமாறு எளிமையாக்கு வதற்குச் செய்தித்தாள்களும் திங்கள்வெளியீடுகளும் வாரவெளியீடுகளும் துணைபுரிந்தன.

இந்த நூற்றாண்டிலே சிறந்த இலக்கிய மேதையாக விளங்கியவர் இராமலிங்க அடிகளே (1823-1874). ஆழ்வார்-நாயன்மார் காலந்தொட்டுக் கரைபுரண்டு பெருகி வந்த பக்திப் பெருவெள்ளம் குமரகுருபரர், தாயுமானவர் வாயிலாகப் புதிய வேகம் பெற்று, இராமலிங்கரின் கவிதை வாயிலாகச் சமரச ஞானவெள்ளமாய்க் காண்கிறது. இந் நூற்றாண்டின் பெருங்கவிஞர் இராமலிங்கர் என்றால், ஆறுமுக நாவலரைப் பெருங்கல்வியாளரென்று குறிப்பிட வேண்டும். இவர் யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்து தாய் மொழிப் பெரும்புலமையுடன் வடமொழிப் புலமையும் ஆங்கிலப் பழக்கமும் உள்ளவர். சைவசமயப் பெரும் பற்றுடன் தமிழ்மொழிக் காதலும் உடையவராய்த் தமிழ் நூல்கள் பலவற்றைப் பரிசோதித்து வெளியிட் டிருக்கிறார். இவரது பெரிய புராண வசனம் தமிழ்வச னத்திற்கே ஒரு நல்ல வழிகாட்டியாகும். இங்கிலீஷ்-தமிழ் அகராதி இயற்றியுள்ள பெர்ஸிவல் பாதிரியாருக்கு நாவலர் தமிழாசிரியராக இருந்து 'பைபிள்' என்ற கிறிஸ் தவ வேதத்தைத் தமிழாக்கவும் உதவினார். இராமநாத புரத்திலே சிறந்த தமிழ்வள்ளலாக விளங்கிய பொன்னுச் சாமித்தேவர் இவரது வாக்கு வன்மையை வியந்து 'நாவலர்' என்னும் பட்டத்தைச் சூட்டினார்.

இராமலிங்கர் பெருங்கவிஞராகவும் நாவலர் பெருங் கல்வியாளராகவும் விளங்கினரென்றால், திருவாவடுதுறை வித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை கலா விற்பன்னராக விளங்கித் தமிழ்ப்பாடம் சொல்லுதலை நோன்பாகக் கொண்டு தொன்று தொட்டுவந்த தமிழ்க் கல்வியறிவைப் பரப்பும் கொள்கையினராக இருந்தார். தமிழறிவை

வரையாது வழங்கிவந்த வள்ளலாகிய இவரையும் இராமலிங்க அடிகளுடனும் ஆறுமுக நாவலருடனும் சேர்த்துப் 'பத்தொன்பதாம் நூற்றுண்டுத் தமிழ்ப் பெரியார் மூவர்' எனக் கூறுவதுண்டு. மீனுட்சி சுந்தரம்பிள்ளையின் வாழ்க்கை வரலாறு அவரது சீடரான டாக்டர். உ. வே. சாமிநாதையரால் எழுதப்பெற்றுளது. இவ்வரலாற்றுப் புத்தகம் இரண்டு பகுதிகளாக வெளிவந்திருக்கிறது. இவ்விரண்டு பகுதிகளிலும் டாக்டர். சாமிநாதையர் தமது ஆசிரியர்பால் கொண்டுள்ள பேரன்பையும், அதன் பயனுக வாசகர்களுக்குப் புலனுகும் வரலாற்றுத் தலைவரின் தமிழ்ப்பணி மாட்சியையும் காணலாம். இவ்வாழ்க்கை வரலாறு தமிழ் வசனத்திற்கு ஒரு வழிகாட்டியாகவும், இன்றைய தமிழின் மெய்யணிகளில் ஒன்ருகவும் திகழ்கின்றது. மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளை பல தலபுராணங்கள், அந்தாதிகள், பிள்ளைத் தமிழ்கள், மாலைகள், கோவைகள், உலாக்கள் முதலியவற்றைத் தமிழன்னைக்கு உரிமையாக்கியிருந்தபோதிலும், அன்னையின் பெரும்பணிக்கு டாக்டர். உ. வே. சாமிநாதையரைச் சித்தமாக்கி அளித்துள்ள பெருமையேஅம்மகா வித்துவானுக்கு ஒரு தனிச்சிறப்பு நல்குவதாகும். ஏனென்ருல், மறைந்து கிடந்த பண்டைத் தமிழ் நூற்செல்வங்களைக் கண்டு பிடித்து டாக்டர். சாமிநாதையர் வெளியிட்டிருப்பதே தமிழின் புதுயுகத்திற்குப் பெருங்காரணமாகுமல்லவா ?

" பிற்காலத்து இலக்கியங்களையும் சில்லறைப் பிரபந்தங்களையும் கற்பதோடும், சொல்லணி பெருகக் கவிபாடுவதோடும் நிரம்பியதாகக் கருதப்பட்டுவந்த தமிழ்ப் புலமையின் நிலைமை, ஐயரவர்கள் பதிப்புக்கள் வெளியேறிய இவ்வரை நூற்றுண்டுக்குள் சங்கச்செய்யுட்களின் சொற்பொருள் நயங்களில் ஈடுபட்டுவப்பதும், சங்ககாலத்துச் சரித்திர வளங்களைக் கண்டு வியப்பதுமாக மாறிவிட்டது" என்றும், " பன்னெடுங்காலமாக அவர்கள் தேடிக்கண்டு

வெளியிட்ட பொருட்குவியல்களால் சொற்பொருளறிவும் ஆராய்ச்சியும் நாட்டில் விரிந்து பெருகலாயின'' என்றும் பண்டிதர். மு. இராகவையங்கார் கூறியிருப்பது பதிப்பாசிரியத் தலைமை பெற்று விளங்கும் டாக்டர். சாமிநாதையரின் நிகரற்ற தமிழ்ப்பணியை உள்ளவாறு மதிப்பிடுவதாகும். இவர் 'என் சரித்திரம்' என்ற தலைப் பெயருடன் தம் வாழ்க்கை வரலாற்றையும் எழுதத் தொடங்கி, அது முற்றுப்பெறுவதற்கு முன்பே உயிர் நீத்தார். தற்காலத் தமிழிலக்கியத்தின் பிரதிநிதியென்று பாரதியார் மதிக்கப்படுவதுபோல், பண்டைத் தமிழிலக்கியத்தின் பிரதிநிதியாக டாக்டர். சாமிநாதையர் மதிக்கப் பெற்றார். இவர் தமது இலக்கியத் தொண்டினால் தமிழ்நாட்டுச் சரித்திரத் தொண்டிற்கும் உதவியுள்ளார். தமிழுக்குரிய வரலாற்றுக்குறிப்புக்கள் பல இவர் பதிப்புக்களில் தொகுக்கப் பெற்றுள்ள பொருட் குறிப்புக்களிலிருந்து எடுக்கப்பட்டன என்பது பலரும் அறிந்ததே. இவர் தேடித் தொகுத்துள்ள நூற்செல்வங்களை முற்றும் முறையாகச் சோதித்துப் பார்ப்பவர்களுக்குத் தமிழக வரலாற்றிலும் தமிழ் வரலாற்றிலும் இன்னும் பல உண்மைகள் புலனாகக்கூடும். இப்படிச் சரித ஆராய்ச்சிக்கும் தமிழாராய்ச்சிக்கும் பயன்படுமாறு தனிப்பெருந் தொண்டாற்றிய பெரியார் தமது வாழ்க்கையையே தமிழ்த்தெய்வத்திற்கு அர்ப்பணஞ்செய்து விட்டார்.

> இருந்தமிழே உன்னால் இருந்தேன்; இமையோர்
> விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்;—திருந்த
> உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்
> பதிப்பிக்க வேகடைக்கண் பார்

என்று இவரது தக்கயாகப்பரணிப் பதிப்பின் முகவுரையில் காணப்படும் வெண்பா, இவரது வாழ்க்கையின் குறிக்கோளை நன்கமைத்துக் காட்டுகிறது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் ஸ்ரீ. தாமோதரம் பிள்ளை என்பாரும் பழந்தமிழ்ச் செல்வப் புதையலை எடுத்துக் காட்டும் பணியை மேற்கொண்டிருந்தார். டாக்டர். சாமிநாதையர் மேலைநாட்டுக் கல்விப் பயிற்சியின்றியே பதிப்புப் பேராசிரியராக விளங்கினுர். ஸ்ரீ. தாமோதரம்பிள்ளை மேலைநாட்டுப் பயிற்சிப் பண்பினை நன்ருக அறிந்துகொண்டவராய்த் தமிழிலக்கியப்பணியில் ஈடுபட்டார். இவர் யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவர்; ஆறுமுக நாவலரைப் பின்பற்றிச் சைவ சமயத்தில் பேரன்பு பூண்டு, தமிழ்ப் பெரும்புலமையும் பெற்றுக் '**கலித்தொகை**' '**சூளாமணி**' '**தொல்காப்பியம்**' முதலான நூல்களைப் பதிப்பித்தார். டாக்டர். சாமிநாதையரைப் போல் வசனநடை எழுதுவதிலும் வல்லுநராகத் திகழ்ந்தார். டாக்டர். சாமிநாதையர் பிறந்த 1855-ம் ஆண்டிலேதான் 'மனோன்மணீய' ஆசிரியர் சுந்தரம்பிள்ளையும், '**1800 ஆண்டுகட்கு முந்திய தமிழர்**' என்னும் அருமையான ஆராய்ச்சிப் பெருநூலை ஆங்கிலத்தில் வெளியிட்ட வி. கனகசபைப் பிள்ளையும் தோன்றினர். டாக்டர் சாமிநாதையர் பதிப்பித்த '**சிலப்பதிகார**'த்தைப் பெரும்பாலும் ஆதாரமாகக்கொண்டது இவரது ஆராய்ச்சிநூல். இந்நூலில் சிலப்பதிகாரத்தின் காலம், தமிழிலக்கியத் தொன்மை, தமிழ் வாணிபம், தமிழரசர் புலவர் வரலாறுகள், தமிழர் வாழ்க்கை நிலை முதலியன செம்மையாகஅறிவாற்றல் தோன்ற இனிய நடையில் ஆராயப்பட்டிருக்கின்றன. இந்த ஆராய்ச்சிநூல் முதன் முதல் '**மதராஸ் ரெவ்யூ**' என்ற ஆங்கிலப் பத்திரிகை வாயிலாகப் பகுதி பகுதியாய் வெளிவந்தது. இந்த ஆராய்ச்சிப் பெரும்பணி தமிழாராய்ச்சித் துறையில் ஒரு நல்ல வழிகாட்டியாக உதவியது.

தக்க ஆங்கிலப் பயிற்சிபெற்று மேலைநாட்டுக் கலைப் பண்பில் ஊறித்திளைத்துத் தமிழ்ப்பணி புரிய முன்வந்த

வர்களில் சுந்தரம்பிள்ளை தமிழாராய்ச்சி செய்ததுடன், 'மனோன்மணீயம்' என்னும் தமிழ்நாடகம் இயற்றிப் புதுப் பணியும் புரிந்திருக்கிறார்.

நிற்புகழ்ந் தேத்துநின் நெடுந்தகை மைந்தர்
பற்பலர் நின்பெரும் பழம்பணி புதுக்கியும்,
பொற்புடை நாற்கவிப் புதுப்பணி குயிற்றியும்
நிற்பவர் நிற்க, நீபெறும் புதல்வரில்
அடியேன் கடையேன் அறியாச் சிறியேன்.
கொடுமலை யாளக் குடியிருப் புடையேன்,
ஆயினும், நீயே தாயெனும் தன்மையின்
மேயபே ராசைஎன் மீக்கொள ஓர்வழி
உழைத்தலே தகுதியென் றிழைத்தஇந் நாடகம்
வெள்ளிய தெனினும், விளங்குநின் கணைக்காற்(கு)
ஒள்ளிய சிறுவிர லணியாக்
கொண்மதி அன்பே குறியெனக் குறித்தே

என்று இவர் தமது நாடகத்தின் பாயிரத்தில் கூறியுள்ளார். இந்த ஆசிரியர் மேலைநாட்டுத் தத்துவமுறையில் பயிற்சி பெற்றிருந்ததுடன் கோடக நல்லூர் ஸ்ரீ சுந்தர சுவாமிகளைக் குருவாகக் கொண்டு தத்துவ விசாரணைகளும் நிகழ்த்திவந்தார். தமது குருவின் அன்புக் குறியாகத்தான் நாடகத்திலே பாண்டிய மன்னனின் குலகுருவாக வரும் சுந்தர முனிவர் என்னும் உறுப்பினரைப் படைத்திருக்கிறார். இந்நாடக நூல் நடிக்க எழுதப்படவில்லை; படித்து அனுபவிக்கவே இயற்றப்பட்டதெனத் தோன்றுகிறது. இது ஆங்கிலக் கவிச் சக்கரவர்த்தியான ஷேக்ஸ்பியரின் நாடகப் போக்கைத் தழுவி ஐந்து அங்கங்களில் இயற்றப்பட்டிருக்கிறது. பழைய இலக்கிய முறைகளையும் தழுவியே இந்நூல் அமைந்திருக்கிறது. "இக்கதையை வேண்டுழி வேண்டுழி விரித்து ஆங்கிலேய நாடகரீதியாக ஜீவகனாதியராகிய கதாபுருஷர்

களுடைய குணாதிசயங்கள் அவர் அவர் வாய்மொழி களால் வெளிப்படும்படி செய்திருப்பதுமன்றி, 'வாழ்த்து வணக்கத்துடன்' தொடங்கி, 'நாற்பொருள் பயக்கும் நடை'யினைக் கூடிய அளவும் தழுவி, 'தன்னிகரில்லாத் தலைவனையும்' தலைவியையும் உடைத்தாய், 'மலைகடல்நாடு வளநகர் பருவம் இருசுடர்த்தோற்றம்' என்றின்னனவும் பிறவும் ஏற்புழிப் புனைந்து, 'நன்மணம் புணர்தலே' முடிவாகக்கொண்டு, 'மந்திரம் தூது செலவிகல்வென்றி' எனச் சந்தியில்தொடர்ந்து, 'அங்கம் களம்' என்னும் பாகுபாடுடைத்தாய் நிற்கும் இந்நாடகத்தில், தமிழ்க் காவிய வுறுப்புக்கள் பற்பல ஆங்காங்கு வருவித்திருப் பதும் அன்பொடு பார்ப்போர் கண்ணுக்குப் புலப்பட லாம்" என்று இவ்வாசிரியர் நாடக முகவுரையில் கூறுவதிலிருந்து, இந்நாடக நூல் பழமைக்கும் புதுமைக் கும் ஓர் இலக்கியப் பாலமாக இயற்றப்பட்டதென்பது தெளிவு. ஏறக்குறைய வாசக நடைக்குச் சமமான அகவற் பாவால் பெரும்பாலும் ஆக்கப்பட்டிருக்கும் இந்நாடகத் திலே புதுமையான விஞ்ஞானக் கருத்துக்களையும் காண லாம்; பழைய தத்துவக் கொள்கைகள் புதிய ஆராய்ச்சி நோக்குடனும் சமரச மனப்பான்மையுடனும் வெளிப்படு வதையும் காணலாம். பாரதியார் கவிதைமுரசு கொட்டு வதற்கு முன்பே பெண்களுக்குச் சமுதாயத்தில் தக்க இடம் அளிக்கப்படவேண்டும் என்பதையும் 'மனோன் மணீயம்' வற்புறுத்துகின்றது. தமிழரின் புதிய சமு தாய வாழ்விற்குப் பயன்படும் வேறு கொள்கைகளையும் உயர்ந்த இலட்சியங்களையும் இந்நாடகத்தினிடையே காண லாம். புதிய புதிய கருத்துக்களைத் தமிழ்மொழியில் எளிதாக வெளியிடக்கூடும் என்பதற்கு இந்நாடக முழு வதும் சான்றுதான். இதில் வரும் 'சிவகாமி சரித'த் திலே ஆசிரியரின் கவித்திறன் தனக்குரிய உச்சநிலையை எட்டியிருக்கிறது.

பாரதியாருக்கு முன்பே சுதந்திர தாகத்தையும் நாட்டுப்பற்றையும் தமிழர்களிடையே இவ்வாசிரியர் இந் நாடகத்தின் வாயிலாக விதைத்திருக்கிறாரென்பதையும் நாம் மறக்கலாகாது.

உரிமைமேல் ஆண்மைபா ராட்டார் சாந்தம்,
பெருமையில் பிணத்திற் பிறந்ததோர் சீதம்.
அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்
நாட்டபி மானமுள் மூட்டிய சினத்தீ
அன்றோ வாணோர்க் கென்றுமே உவப்பு!

என்று ஜீவகவழுதி வாயிலாக வருவது காண்க. இப் பாண்டிய மன்னன்,

விந்தம் அடக்கினேன் தந்தநற் றமிழ்மொழி
தற்சுதந் தரம்அறும் அற்பர்வாய்ப் படுமோ ?

என்று தமிழர்கள் தொன்று தொட்டுப் பேணி வந்திருக்கும் வீரசுதந்திர விருப்பத்தையும் தமிழ்க் காதலையும் எவ்வளவு பொருத்தமாக இசைத்து வெளியிடுகிறான்!

இந்த ஆசிரியர் மேலைநாட்டு விஞ்ஞான அறிவுடன் நமது நாட்டுத் தத்துவஞானம் கலந்து வளரவேண்டுமென்பதை அந்நாளிலேயே நன்குணர்ந்து கொண்டார். இவரது '**நூற்றொகை விளக்கம்**' என்ற நூல் 'தத்துவ சாஸ்திரத்தில் விஞ்ஞான சாஸ்திரத்தின் பாகுபாடு' என்னும் பொருள்பற்றியது. இந்நூலில் பல விஞ்ஞானச் சொற்களையும் தமிழில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார். தமிழிலக்கிய சரிதப்பெரு வழியிலே சில மைல் - கற்களை நாட்டி இலக்கிய சரித ஆராய்ச்சிக்கும் இவர் உதவி செய்திருக்கிறார். தக்க சரித்திரச் சான்றுகளால் இலக்கிய வரலாற்றை நிர்ணயிக்கும் தொண்டில் முதன் முதலாக முனைந்து நின்றவர் சுந்தரம்பிள்ளை. திருஞான சம்பந்தரின் காலத்தை ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியென முதன் முதல் வரையறுத்துக் காட்டியவர்

இவரே. தமிழிலக்கியச் சுவையைத் தமிழ் மக்களோடு பிறரும் அனுபவிக்க வேண்டுமென்னும் கருத்துடன் 'நெடுநல்வாடை' முதலான சில சங்க நூல்களை இவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

இறவாத புகழுடைய
புதுநூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்

என்பதைப் பாரதியார் தோன்றுவதற்கு முன்பே நன்குணர்ந்து 'மனோன்மணீய' நாடகம் இயற்றியவர்,

திறமான புலமையெனில்
வெளிநாட்டோர் அதைவணக்கஞ்
செய்தல் வேண்டும்

என்ற உண்மையையும் முன் கூட்டியே அறிந்து ஒழுகினர்.

இவரது சிறந்த தத்துவக் கொள்கைகள் காந்தி அண்ணலின் தூய வாழ்க்கையையும் தூய நல்லுரைகளையும் நினைவூட்டுவதுபோலவும் அமைந்திருக்கின்றன.

இத்தனி உலகில் எத்துயர் காணினும்,
அத்தனை துயரும்நம் அழுக்கெலாம் எரித்துச்
சுத்தநற் சுவர்ணமாச் சோதித் தெடுக்க
வைத்தஅக் கினியென மதித்தலே, உயிர்கட்(கு)
உத்தம பக்தியென் றுள்ளுவர்

என்றும்,

என்அனு பவம்இது! மன்னிய இவ்வருள்
தன்னிடை மூழ்கித் தானெனல் மறந்து
நெருப்பிடை இழுதென நெக்குநெக் குருகி
இருப்பவர், பிறர்க்கா யிராப்பக லுழைப்பர்;
ஒருபயன் கருதார், அருள்கரு துவதென்?

அகிலமுந் தாங்கும் அருளிலோ ரங்கமாச்
சகலமுஞ் செய்வர்; அஃதவர் சமாதி.
எங்கெலாந் துக்கங் காணிலும் அங்கெலாம்
அங்கம் கரையநின் றரற்றி, "ஐயோ!
எம்மையுங் காத்த இன்னருள் இவரையுஞ்
செம்மையிற் காக்க" எனமொழி குளறி
அழுதுவேண் டுவதே யன்றி
விழுமிய முத்தியும் வேண்டார் தமக்கே

என்றும் கருணாகரர் வாயிலாக 'மனோன்மணீய'த்தில் வருவதில் காந்தியடிகள் தம் விழுமிய வாழ்க்கையாலும் பொன்னுரைகளாலும் வெளியிட்ட பக்திப் பெருங்கொள்கையும் தொண்டு நெறியும் பிரதிபலிக்கின்றன. 'சுக விருப்பே நமைத் தொழும்புசெய் பந்தம்' என்று மனோன் மணி தோழியிடம் கூறி,

சொந்தமாம் இச்சைகள் துறந்து மற்றவர்க்(கு)
எந்நா ளும்சுகம் இயைந்திடக் கடமையின்
முந்துகின் றவரே முதற்றவ முனிவர்

என்று முடிப்பதும் காந்தியடிகளின் தூய பெருநெறியை நினைவூட்டுவதே.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் 'பரிதி மாற்கலைஞன்' என்னும் புனைபெயரால் புகழ் பெற் றிருந்த திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் 'ரூபாவதி' 'கலாவதி' 'மானவிஜயம்' என்னும் நாடகங்களையும், 'நாடக இயல்' என்னும் நாடக இலக்கண நூலையும் இயற்றியுள்ளார். இரண்டு நாடகங் களும் நடிப்பதற்கும் இசைவாக இயற்றப் பெற்றுள்ளன. 'ரூபாவதி' 1895-ல் 'சென்னை வித்யாபிமான சங்க'த் தினாலும், 'கலாவதி' 1897-ல் 'வித்வந் மனோரஞ்சனி சபை'யாலும் அரங்கேற்றப்பட்டன. அந்நாளில் தமிழ்

நாடகக்கலையைப் பாதுகாக்க நிறுவப்பட்ட நாடக மன்றங்களில் 'வித்வங் மனோரஞ்சனி சபை' போல் 'சுகுண விலாச சபா'வும் பெயர் பெற்றிருந்தது. 'சுகுண விலாச சபா' பம்மல் சம்பந்த முதலியாரது நன்முயற்சியால் புகழ் பெற்றிருந்தது. சூரிய நாராயண சாஸ்திரியார் 'மதிவாணன்' 'தனிப்பாசுரத் தொகை' முதலான நூல்களும் இயற்றியுள்ளார். 'தனிப் பாசுரத்தொகை'யிலுள்ள பாசுரங்களை டாக்டர். ஜி. யு. போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறூர். இத்'தனிப்பாசுரத் தொகை'யையும் 'மனோன்மணீயத்'துடன் தமிழின் புது முயற்சிகளென்று டாக்டர் போப் தமது திருவாசகப் பதிப்பின் முகவுரையில் குறிப்பிடுகின்றூர். 'தமிழ் மொழியின் வரலாறு' என்னும் ஆராய்ச்சிநூல் ஒன்றும் சாஸ்திரியார் இயற்றியுள்ளார். ஆங்கில மொழிக்கு ட்ரெஞ்ச் முதலான பேரறிஞர்கள் செய்திருக்கும் ஆராய்ச்சித் தொண்டினைத் தமிழ்மொழிக்குச் செய்ய அடிகோலியவர் இவ்வாசிரியர் என்பதற்கு இத் 'தமிழ் மொழியின் வரலாறு' சான்று தருகின்றது. இந்நூலில் 'பாஷையின் சீர் திருத்தம்' குறித்து இவர் வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் தமிழ் மொழியைக் காலத்திற்கிசைய வளர்க்க விரும்புவோரின் ஆழ்ந்த கவனத்திற்கு உரியன.

'மனோன்மணீயம்' குறித்து ஒரு விமரிசனம் அந்நாளில் கிறிஸ்தவ கலாசாலைப் பத்திரிகையில் 'கமலாம்பாள்' என்னும் சிறந்த நவீனத்தின் ஆசிரியரான ராஜமையரால் எழுதப்பட்டது. ராஜமையரைத் 'தமிழ் நவீனத்தின் தந்தை' எனக் கூறலாம். பத்தொன்பதாம் நூற்றூண்டின் இறுதியில் புகழ் பெற்று விளங்கிய தமிழறிஞர்களில் ராஜமையரும் ஒருவர். 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் சிறந்த தமிழ் வசனநூலின் ஆசிரியரான மாயூரம் வேதநாயகம் பிள்ளையும் அக்காலத்திலே புகழ்பெற்றிருந்த பெரியார். இசைத் தமிழிலும் மேம்பட்

டிருந்த இவர் 'சர்வசமய சமரசக் கீர்த்தனை'க்கும் ஆசிரியராவர். அந்நாளில் தமிழ்ப் புலமை வாய்ந்திருந்த சுதேசக் கிறிஸ்தவர்களில் இவரும், எச். கிருஷ்ணபிள்ளையும் சிறந்த தமிழ்ப்பணி செய்திருக்கிறார்கள். எச். கிருஷ்ணபிள்ளை இயற்றியது 'இரட்சணிய யாத்திரிகம்'. ஆங்கிலோ இந்தியக் கிறிஸ்தவரான **ரெவரெண்ட் பவர்** என்பார் 1886-ம் ஆண்டில் 'சீவக சிந்தாமணி'யின் சில பகுதிகளை அச்சேற்றி வெளியிட்டார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழ்ப் புலமை வாய்ந்த ஐரோப்பியக் கிறிஸ்தவர்களும் உண்டு. இவர்களில் எல்லிஸ் துரை, எட்வர்ட் ரேனியஸ், கால்டுவெல், டாக்டர் ஜி. யு. போப் ஆகிய பெயர்கள் குறிப்பிடத் தக்கன. எல்லிஸ் துரை சென்னை நகரம் முதலிய இடங்களில் கலெக்டராக இருந்து கசடறத் தமிழ் கற்றுத் திருக்குறளுக்கு ஆங்கிலத்தில் விரிவுரை யொன்றும் எழுதத் தொடங்கினார். அவ்வுரையிலிருந்து இவர் பண்டைத் தமிழ் நூல்கள் பல கற்றிருந்தாரென்பது தெரிய வருகிறது. இவ்வுரை முற்றுப்பெறவில்லை. 'இரங்கோன் சண்டை நாடகம்' முதலிய நூல்களை இயற்றிய இராமசந்திரக் கவிராயர் முதலியோருடன் நெருங்கிப் பழகித் தமிழ் நூல்களை ஏட்டுச் சுவடிகளிலிருந்து கற்றவர் எல்லிஸ் துரை. "எல்லீசர் இயற்றிய திருக்குறளுரை ஆங்கில அறிவாளர்க்கு ஒரு நல்விருந்து; தமிழ்க் கலைவாணர்க்கு ஒரு களஞ்சியம்" என்பர் பேராசிரியர். ரா. பி. சேதுப்பிள்ளை. எல்லிஸ் துரை பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். எட்வர்ட் ரேனியஸ் என்பவரும் இக்காலப் பகுதியில் வாழ்ந்து தமிழ் வசன நூல்கள் இயற்றினார். அக்காலத்தில் 'கவிராயர்' என்று சிறப்பித்துப் பேசப்பெற்ற இராமானுஜ கவிராயரிடத்தில் தமிழ் கற்றவர் இவர். 'ஆதித்தன் கிரணம்போல் அறிவைப் பரப்பிய இரேனியூசு' என்று இவருடன் நட்புரிமை

பூண்டிருந்த திருப்பாற் கடல்நாத கவிராயர் இவரைக் குறித்துத் தாம் பாடிய 'கையறுநிலை'ப்பா ஒன்றில் குறிப்பிடுகிறுர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த ஐரோப்பியத் தமிழ்ப் புலவர்களில் மிகச் சிறந்தவர்கள், கால்டுவெல் ஐயரென்றும் போப்பையரென்றும் பிரசித்தமாகித் தமிழரோடு தமிழராய்க் கலந்து தொண்டாற்றிய ரைட் ரெவரெண்ட் ராபர்ட் கால்டுவெலும், ரெவரெண்ட் ஜி. யு. போப்புமாகிய இருவருமாவர். இவர்களில் கால்டுவெல் ஐயர் தமிழ் மொழியின் தொன்மையையும் மாட்சியையும் மொழிநூற் புலமை நெறியில் ஆராய்ந்து, தென்னிந்தியாவில் வழங்கும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பிற மொழிகளையும் ஒத்து நோக்கித் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் பெரு நூல் ஒன்றினை ஆங்கிலத்தில் இயற்றியுள்ளார். போப்பையரின் தமிழ்த்தொண்டும் தமிழின் மாட்சியை உலகறியச் செய்தது. கால்டுவெல் ஐயரின் ஒப்பிலக்கண நூல் தமிழ்ப் பேரறிஞர்களின் கைக்கு அணியென்றுல், போப்பையரின் இலக்கணம் ஒவ்வொரு தமிழ் மாணுக்கர் கைக்கும் அணியாயிற்று. திருக்குறள், திருவாசகம், நாலடியார் முதலிய தமிழ்ப் பெருநூல்களை மொழிபெயர்த்து ஆங்கில உலகுக்கு உதவித் தமிழ் மாட்சியை விளங்கச் செய்தவர் போப்பையர். கால்டுவெல் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த இடையன்குடி யென்னும் கிராமத்தில் தங்கிச் சுமார் அரை நூற்றுண்டாகக் கிறிஸ்து மதத் தொண்டுபுரிந்தார். 'திருநெல்வேலிச் சரித்திரம்' என்னும் தலைப்பெயருடன் இவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூல் இவரது சரித்திர உணர்ச்சிக்குச் சான்று தருகிறது. இவர் தமிழில் இயற்றிய வசன நூல்கள் கிறிஸ்து சமயப் பிரசார நோக்கத்துடன் எழுதப்பட்டவை. சிப்பாய்களின் புரட்சி இயக்கம் தோன்றுவதற்கு ஓராண்டுக்கு முன்

வெளியிடப்பட்டது தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக் கண நூல். 1827-ல் நடைபெற்ற சென்னைப் பல்கலைக் கழகத்துப் பட்டமளிப்பு விழாவிலே கால்டுவெல் தாம் ஆற்றிய சொற்பொழிவினிடையே, தென்னாட்டுக் கோவில் —கல்வெட்டுகளிலுள்ள சரிதப் புதையலையும், தமிழர்கள் தங்கள் உரிமைச் செல்வமான பண்டைத் தமிழ் நூல்களை யும் வெளிப்படுத்த வேண்டிய அவசியத்துடன், மேலை நாட்டுப் புதுமைக் கலைச் செல்வங்களுக்குத் தமிழாக்கம் தரவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்திப் பேசினார்.

கால்டுவெல் பாதிரியார் தமிழ்த் தொண்டாற்றிய காலத்தில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த சாயர் புரத்திலே போப்பையரும் பணியாற்றலானார். அக்காலத் தில் மிகச் சிறிய ஊராக இருந்த சாயர்புரத்தைப் போப் பையர் கல்விப் பணிக்கும் சமயப்பணிக்கும் ஒரு சிறந்த இடமாக்கிவிட்டார். சிப்பாய்களின் புரட்சி இயக்கம் தொடங்குவதற்கு முன்பே இது நிகழ்ந்தது. சாயர்புரம் கல்லூரியில் தமிழிலக்கியம், ஆங்கில இலக்கியங்களுடன் லத்தீன், கிரீக், ஹீப்ரு மொழிகளும், சரித்திரம், தத்துவம், தர்க்கம், கணிதம் ஆகியவைகளும், கிறிஸ்தவ வேதமாகிய பைபிளும் கற்பிக்கப்பட்டன. அத்தகைய கல்லூரி நமது நாட்டில் வேறெங்கும் இல்லை. "போப்பையர் தாம் தமது கலாசாலையில் நல்ல சாப்பாடும் நல்ல படிப்பும் நல்ல அடியும் கொடுப்பதாகச் சொல்லுவாராம். அவரிடத்தில் மாணுக்கராயிருந்தவர் ஒருவர் பிற்காலத்தில் புகழ்பெற்ற குருவாகிப் பொறுப்பு வாய்ந்த பணிசெய்தார். அவரது காதில் ஒரு பகுதி குறைபட்டதாயிருந்தது. அவர் மாணுக் கராயிருந்த காலத்தில் சிறிது தசையை இழந்துவிட்டார். போப்பையர் அவருக்குக் கிரேக்கு மொழியில் புதிய ஏற் பாட்டைச் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தார். அவர் விரைவாய்ப் படியாமையால், ஐயர் செவியைக் கையால் பிய்த்துக்கொண்டே காதைத் துளைத்து மிக முயன்று

அறிவைச் செவிக்குள் திணித்துக்கொண்டே யிருந்திருக் கிறார். மாணவர் அறிவு பெற்றார்; ஐயர் மாணவர் காதின் ஒரு பகுதியைக் கையிற் பெற்றார்'' என்று 'புலவர் போப் பையர்' என்ற நூலின் ஆசிரியர் கூறியுள்ளார். மாணக் கர்களைப் புளியமரத்தின் விளார்களால் அடிப்பதும் அக்காலத்துக் கல்வித்திட்டத்தின் பகுதிதான்; தமிழ் நாடெங்கும் பிரம்பும் கையுமாகத்தான் உபாத்தியாயர்கள் மாணவர்க்குக் கல்வி கற்பித்து வந்தனர். போப்பையர் சாயர்புரக் கல்லூரியில் கையாண்ட போதனை முறையில் "சில சமயங்களில் உடலினின்றும் செங்குருதி பிலிற்ற ஆசிரியன்மார் அடித்தலும் உண்டு'' என்று 'புலவர் போப்பையர்'' என்ற நூல் தெரிவிக்கின்றது. போப்பை யர் 42 ஆண்டுகள் தென்னிந்தியாவில் வாழ்ந்து வந்தார்.

1885-ம் ஆண்டில் 'கோதீர்த்தபுரி' என்று தாம் குறிப்பிடும் ஆக்ஸ்பர்டு பல்கலைக் கழகத்தில் தமிழும் தெலுங்கும் கற்பிக்கும் பேராசிரியப் பதவி தாங்கி 23 ஆண்டுகள் அத்தொண்டில் முனைந்திருந்தார். பன் மொழிப் புலமை பெற்றிருந்த இவர், மற்றெம்மொழிக் காதலினும் தமிழ்க்காதல் நிரம்பியவராயிருந்தார். சென் னைப் பல்கலைக் கழகத்தார் தமிழகராதி வெளியிடத் தொடங்குவதற்குப் பல்லாண்டுகட்கு முன்பே போப்பை யர் அப்பெருமுயற்சியைத் தாமே மேற்கொண்டு முடித்து விடலாமென்று கருதி ஆரம்ப வேலையையும் இங்கிலாந்தில் செய்துவந்தார். "பழைமை மாறி வருகிறது; பழைய வழக்கங்கள் ஒழிந்துவருகின்றன. பாண்டியர் அரியணை யில் மற்றையோர் வீற்றிருக்கின்றனர். ஆயினும் தமிழர் இன்னும் பழைய நல்லொழுக்கத்தைக் காத்துவருகின்ற னர்....ஆங்கில நண்பர்கள் மேனாட்டினின்றும் கற்கக் கூடியவற்றை யெல்லாம் கற்பித்தாலும் திருக்குறள் காட்டும் ஒழுக்கநெறியைச் செம்மையாய் அறிந்தவர்களி டம், அவர்கள் மறந்துவிட வேண்டுமென்று சொல்லக்

கூடியது யாதொன்றுமில்லை" ('புலவர் போப்பையர்' பக்கம் 94) என்று தமது ஆங்கில மொழிபெயர்ப்புத் திருக்குறளின் முகவுரையில் கூறியுள்ளார். திருக்குறள் தோன்றிய தமிழ்நாடு நன்னெறி கடைப்பிடித்தொழுகும் மக்கள் வாழும் நாடாகத்தானிருக்க முடியும் என்பதும் தமிழ் பண்பட்ட மொழியாகவும், தென்னிந்திய மொழி களுக்குத் தாயாகவும், வடமொழிக்கு இணையாகவும் திகழ் கிறது என்பதும் போப்பையரின் தேர்ந்த கருத்து. ஊக்கத் துடன் ஆங்கிலக் கல்வி பயிலும் தமிழர்கள் "தங்களது இணையற்ற தாய்மொழியைப் புறக்கணிப்பது நோக்கி வருந்துகின்றேன்" என்றும், "இந்திய மக்களுள் முதன் மையானவர்கள் தமிழர்களே; இம்முதன்மைப் பேறு அவர்கட்குத் திருக்குறளாலும் நாலடியாராலும் வாய்த் திருக்கின்றது" என்றும் தமது 'நாலடியார்' மொழி பெயர்ப்பின் முன்னுரையில் போப்பையர் கூறியுள் ளார். இவரது முதுமைக்காலத் திருப்பணி திருவாசக மொழிபெயர்ப்பு. தம் வாழ்க்கையின் இறுதி வரை இவர் தமிழ்த் தொண்டாற்றிய வண்ணமாயிருந்தார்.

பத்தொன்பதாம் நூற்றுண்டிலும் தமிழ் வள்ளல்கள் என்று புகழ் பெற்று வாழ்ந்தவர்கள் உண்டு. இவர்களில் இராமநாதபுரம் சேதுபதி மரபினரான பொன்னுச்சாமித் தேவர், முத்துராமலிங்க சேதுபதி, பாண்டித்துரைத் தேவர், பாஸ்கர சேதுபதி ஆகிய நால்வரையும் குறிப்பிட லாம். இவர்களில் வள்ளன்மையுடன் புலமைத் திருவும் பெற்றுத் தமிழ் வளர்ச்சிக்கே தம் வாழ்நாளை உரிமையாக் கியவர்கள் பொன்னுச்சாமித் தேவரும், அவரது அருமைப் புதல்வரான பாண்டித்துரைத் தேவருமாவர். ஆங்கிலக் கம்பெனியாருடன் கூடிய கர்நாடக நவாபின் ஆட்சி தென்னுட்டில் ஏற்பட்டபோது மதுரை நாயக்க அரச வமிசம் மறைந்தது. நாயக்க மன்னர்களுக்குப் பெருந் துணையாயிருந்த சேதுபதிகளும் தங்கள் சுதந்திரத்தை

இழந்து விட்டனர். எனினும் இவர்கள் தங்கள் பரம்பரைத் தமிழ்ச் செல்வத்தை இழக்காது போற்றி வந்தனர். இம்மரபினரில் பொன்னுச்சாமித் தேவர், செந்தமிழ்ப் பேரறிஞர்களான மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை, யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் முதலியவர்களையும் வேறு புலவர்களையும் கௌரவித்து அவர்களுக்குப் பரிசுகளும் வரிசைகளும் வழங்கி ஆதரித்து வந்தார். இப்படி ஆதரிக்கப் பெற்ற புலவர்களில் மாம்பழக் கவிராயரும் ஒருவர். இவரது ஆசுகவித் திறமை கண்டு பொன்னுச்சாமித் தேவர் இவருக்குக் 'கவிச்சிங்கம்' என்ற பட்டஞ் சூட்டினுர். பொன்னுச்சாமித் தேவரின் புதல்வரான பாண்டித்துரைத் தேவர், மதுரையில் இன்றுமுள்ள நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவி நடத்தி வந்தார். சங்கத்தின் முதற் கூட்டத்தில் டாக்டர் சாமிநாதையர், வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், சேது சமஸ்தான வித்துவான் ரா. இராகவையங்கார் முதலிய பெரும் புலவர்கள் கலந்து கொண்டனர். தமிழாராய்ச்சித் துறை புத்துயிர் பெற்று வளர இச்சங்கமும், இதன் மாத வெளியீடான 'செந்தமிழ்'ப் பத்திரிகையும் துணை புரியலாயின.

பத்தொன்பதாம் நூற்றுண்டிலே தமிழ் வளர்ச்சியின் முக்கிய அம்சம் வசனநடை உருவாகியதுதான். இத்தகைய வசனநடை வளர்ப்பில் பாதிரிமார்களுக்கு ஒரு முக்கியமான பங்கு உண்டு. அச்சியந்திரங்கள் அதிகரித்ததும் வசன நூல்கள் அதிகரிப்பதற்குக் காரணமாயிற்று. பாதிரிமார்களின் முயற்சியாலும் அச்சியந்திரங்களின் பெருக்கத்தாலும் தமிழ்ப் பயிற்சியில் குறியீடுகள் முதலிய புது மாறுதல்களும் ஏற்பட்டன. நிகண்டுகளுக்குப் பதிலாக அகராதிகள் ஏற்பட்டிருப்பது, சாதாரண மக்களும் சொற்களையும், சொற்களின் பொருளையும் திட்டமாகப் பிழையின்றி அறிந்து வழங்கி வசனமெழுதுவதற்கு வசதி அளித்

திருக்கிறது. ஆறுமுக நாவலர், மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையர் போன்ற பெரும் புலவர்கள் நல்ல வசன நூல்களும் எழுதி உதவியிருக்கிறார்கள். கம்ப ராமாயண வசனம், பாரத பாகவத வசனங்கள், பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் முதலியன காவியக் கதைகளையும் புராணக் கதைகளையும் நல்ல தமிழ்ப் பயிற்சியில்லாதவர்களுக்கும் தெரிவிக்கும் முறையில் எழுதப்பட்டுள்ளன. பஞ்சதந்திர வசனமும் விநோதரச மஞ்சரியும் கற்றாரும் மற்றாரும் சுவைக்கத் தக்க முறையில் எழுதப்பெற்றுள்ளன. விக்கிரமாதித்தன் கதை, மயிலிராவணன் கதை, அறபிக் கதை முதலிய வசன நூல்களும் பொழுது போக்காகப் பலருக்கும் பயன் பட்டன. சஞ்சிகைகள் பத்திரிகைகளும் எளிய வசன நடையை உருவாக்க உதவின. நவீனம், நாடகம், கட்டுரை முதலியவை பெருகுவதற்கும், மொழிபெயர்ப்பு நூல்கள் பிறமொழிகளிலுள்ள அறிவுச் செல்வங்களை வழங்கி ஓரளவு அறிவுப் பஞ்சம் தீர்ப்பதற்கும் வசனநடை வாயி லாக வாய்ப்பு ஏற்பட்டது.

இந்நூற்றாண்டிலே உணவுப் பஞ்சங்களும் மக்களைப் பரிதவிக்கச் செய்தன. சிப்பாய்களின் புரட்சி இயக்கம் ஒடுக்கப்பட்ட பின்பும், 'மழை விட்டும் தூவானம் விடவில்லை' என்பதுபோலக் கூட்டங்கூட்டமாய்க் கலகக் காரர்கள் ஆயுதபாணிகளாகத் திரிந்துகொண்டிருந்தனர். அக்கூட்டங்களையெல்லாம் அழிப்பதற்குள் எத்தனை ஊர்கள், எத்தனை விளைநிலங்கள் அழிக்கப்பட்டன! 'சமாதானப் பிரபு' என்றும், 'தயாளப் பிரபு' என்றும் சொல்லப்பட்ட முதல்-அரசப்பிரதிநிதி கானிங் பிரபு ஓய்வு பெற்றுச் சீமைக்குச் செல்வதற்கு முன்பே 1862-ல் வட இந்தியாவில் ஆக்ரா பிரதேசத்தில் ஒரு கொடிய பஞ்சத் தைக் கண்ணாரக் கண்டு கொண்டான். அப்பஞ்சத்திலே உயிர் துறந்த மக்கள் சுமார் இரண்டு லட்சம் பேர்

என்பர். 1866-ல் ஒரிஸ்ஸாவிலும் சென்னையிலும் பஞ்சங்கள் ஏற்பட்டன. சென்னையில் சுமார் நாலரை லட்சம் மக்கள் மாண்டு போயினராம். 1869-ல் ஏற்பட்ட மூன்றுவது பஞ்சத்திலே வடநாட்டில் சுமார் பன்னிரண்டு லட்சம் பேர் உயிர் துறந்தனர். இதே ஆண்டில் சுதேச அரசுகளெல்லாம் (சுமார் 600) ஆங்கில முடியரசின் அடிமைகளாகிவிட்டன. 1873-74-ல் நான்காவது பஞ்சம் வங்காள-பீஹாரில் ஏற்பட்டது; அப்போது அரசப் பிரதிநிதியாக இருந்த நார்த்ப்ரூக் பிரபு ஓரளவு பஞ்ச நிவாரண உதவி புரிந்து உயிர்க் கொள்ளையை மட்டுப் படுத்தினன். 1876-ல் அரசப் பிரதிநிதியாக வந்த லிட்டன்பிரபு ஐந்தாவது பஞ்சத்தையும் அடுத்த ஆண்டிலே கண்டுகொண்டான்.

அரைக் கோடிக்கும் அதிகமான சென்னைமக்களை நமனுலகுக்கு அனுப்பிய பஞ்சம் இது. இதே ஆண்டில் தான் ஜனவரி முதல் தேதி டெல்லியில் அரசப் பிரதிநிதி பிரமாதமாக ஒரு தர்பார் நடத்தி ராணி விக்டோரியாவைக் **கெய்ஸரி ஹிந்த்** (இந்தியாவின் சக்கரவர்த்தினி) என்று விளம்பரப்படுத்தினன். இந்த ஆண்டுப் பஞ்சத்தைத்தான் **தாது வருஷப் பஞ்சம்** என்று தமிழ் மக்கள் குறிப்பிட்டனர். இப்பஞ்சத்தைக் குறித்து அழகிய சொக்கநாத பிள்ளையென்ற திருநெல்வேலிச் சீமைப் புலவர் நெல்லையில் கோவில் கொண்டிருக்கும் காந்திமதி அம்மையிடம் முறையிட்டுப் பாடிய பாடல்கள் வருமாறு:

* நாளுக்கு நாள்விலை யேறுதம்
மா; கடன் ஆகுதம்மா;
தேளுக்கு நேரிந்தப் பஞ்சத்தி
லேஎன்ன செய்வமம்மா?

---

*தமிழ்ப் பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப் பிள்ளை எழுதிய 'கால்டுவெல் ஐயர்' என்னும் நூலின் 69-ம் பக்கம்.

வாளுக் குவமை சொலும்விழிக்
காந்தி மதியம்மை! நின்

தாளுக்கு நாங்கள் அடிமைஎன்
றேவந்து சார்ந்தனமே.

'அம்மாஅம் மா'என் றழுங்குரல்
கேட்டிரங் காமலும்தாய்

'சும்மா கிடக்கட்டும் போ'என்ப
ளோ?பெற்ற தொந்தம்விட்டே

இம்மா திரிவன்மை கொண்டதென்
னே அன்னை யென்றிருந்தும்!

பெம்மான் நெல்லேசர் மகிழும்
இமாசலப் பெண்ணரசே!

திருநெல்வேலி மாவட்டத்தில் அப்போது பஞ்ச நிவாரண வேலையை மேற்கொண்டவன் கலெக்டர் பக்கிள் துரை. இவன் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி வேறு வகை உதவிகளும் புரிந்து பஞ்சத்தால் பரிதவித்த மக்களுக்கு ஓரளவு பாதுகாப்பளிக்க முயன்றான். இந்தக் கலெக்டர் செய்த பணியை மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பெரிதும் பாராட்டிப் பாடியிருக்கிறார்:

*வாழ்ந்தோம் என்றுரைப்பாரும், மேன்மேலும்
நாமடைந்த வறுமை மாறப்

போழ்ந்தோம் 'என்றுரைப்பாரும்', செழித்தோ-
மென்றுரைப்பாரும்; பொருமல் தீர்ந்து

தாழ்ந்தோம் பேரின்பத்தென் றுரைப்பாரும்
அல்லாமல், தாவாத் துன்பத்(து)

ஆழ்ந்தோ மென்றுரைப்பார்கள் ஒருவரிலை
பக்கிள் மன்னன் அதிகாரத்தே.

---

*கால்டுவெல் ஐயர் சரிதம்: பக்கம் 90.

தாதுப்பஞ்சம் ஏற்பட்ட அடுத்த ஆண்டிலே வட இந்தியாவிலும் பஞ்சம் ஏற்பட்டுச் சுமார் பன்னிரண்டரை லட்சம் மக்களைப் பலியாக்கிக்கொண்டது.

இப் பஞ்சங்களுக்கிடையே ஆப்கானியர்களோடு போரும் தொடுத்தான் லிட்டன் பிரபு. இந்தியச் செய்திப் பத்திரிகைகளின் சுதந்திரமும் 1878-ல் குறைக்கப்பட்டது. இதே ஆண்டில் அனுமதியில்லாதபடி ஆயுதங்களை வைத்திருக்கக் கூடாதென்று ஆயுதச் சட்டமும் பிறந்தது. சிப்பாய்களின் புரட்சி இயக்கம் அடக்கப் பெற்ற இருபது ஆண்டுகளில் ஆறு அரசப்பிரதிநிதிகள் அரசுபுரிந்தனர். இந்த ஆட்சிகளில் அதிமுக்கிய நிகழ்ச்சிகள் மேலே சொன்ன ஆறு பஞ்சங்களே! பிளாசிப்போர் முடிந்து பிரிட்டிஷ் இந்திய ஆட்சிக்கு அடிப்படை அமைந்த 1770 முதல் 1900 வரை—அதாவது 130 ஆண்டுகளில் மொத்தம் 22 பஞ்சங்கள் இந்தியாவில் ஏற்பட்டிருக்கின்றன என்பது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கணக்கு. இவற்றில் சிப்பாய்களின் புரட்சிப் போராட்டத்திற்கு முன் ஏற்பட்ட பஞ்சங்கள் பன்னிரண்டு. கம்பெனி ஆட்சி உறுதிப்பட்ட பின்பு இந்திய வணிகர்களின் வாணிப முயற்சிகளும் இந்தியப் பொது மக்களின் தொழில் முயற்சிகளும் அழிந்துபோனது இத்தனை பஞ்சங்கள் ஏற்பட்டதற்கு ஒரு முக்கிய காரணமாகும். பிரிட்டிஷ் ஆட்சி வெளியுலகத்தையும் புது நாகரிகத்தையும் இந்தியாவுக்கு அறிமுகப்படுத்தி அறிவுத்துறையிலும் ஒருவாறு வளர்ச்சி காட்டிய போதிலும், அன்னிய அரசாங்கத்தின் சுரண்டற்கொள்கை இங்குள்ள தங்கத்தையெல்லாம் வெளியேறச் செய்து நம் தொழில்வன்மையையும் வாணிபத் திறனையும் அழித்து விட்டதென்று தேசத்திலே அதிருப்தி ஏற்பட்டது. அடக்க முடியாத துன்பத்தை வெளியிடவும் பயந்திருந்த பரிதாப நிலையில் சுமார் 25 ஆண்டுகள் கழிந்தன.

இந்த நிலையில் ஏழாவது அரசப் பிரதிநிதி ரிப்பன் பிரபுவும் வந்து போனான். லிட்டன் பிரபுவைப் போல் போர்வெறியனல்ல; ஆடம்பரப் பிரியனுமில்லை, தயாள சிந்தையுடன் தல சுய ஆட்சி முறையை உருவாக்கி நகர சபை, தாலுக்கா போர்டு, ஜில்லா போர்டு முதலிய சபைகளை ஏற்படுத்தினான். லிட்டன் பிரபு தாய்மொழிப் பத்திரிகைகளின் மீது விதித்திருந்த தடையையும் ரிப்பன் பிரபு நீக்கிவிட்டான். இவன் இந்தியாவை விட்டுப்போன மறு வருஷம் இந்திய தேசீயக் காங்கிரஸ் பம்பாயில் தோன்றியது. உதயத்திற்குமுன் இருள் அடர்ந்து காண்பது போல் காங்கிரஸ் உதயத்திற்கு முன்பும் கால் நூற்றாண்டு அரசியற் சோர்வும் பஞ்சங்களின் கொடுமையும் ஒரே இருட்டாய்ப் பொது மக்களைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன.

# அத்தியாயம் 9

# காங்கிரஸின் தோற்றமும் பிள்ளைப் பருவமும்

சிப்பாய்களின் போராட்டத்திற்கு முன்பே 1849-ல் சட்ட வரம்பிற்கு உட்பட்ட அரசியல்–கிளர்ச்சி வங்காளத்தில் நடந்து தோல்வியுற்றதும் உண்டு. டலௌஸி பிரபு கவர்னர் ஜெனரலாக வந்த இரண்டாவது ஆண்டில் இரண்டாவது சிக்கியப் போர் நடைபெற்றுப் பஞ்சாப் மாகாணமும் அடைக்கலம் புகுந்து ஆங்கிலப் பேரரசு வட மேற்கே ஆப்கானிஸ்தானத்தின் எல்லைவரை எட்டி நின்ற காலம் அது. இரண்டாவது பர்மியப் போராட்டம் தொடங்குவதற்குச் சற்று முன்பு, வங்க நாட்டுப் பிரமுகர்கள் 'பிரிட்டிஷ் இந்திய சங்கம்' அமைத்துக் கொண்டு பொது நலத் தொண்டாற்ற முயன்றனர். ஏறக்குறைய அதே சமயம், 'இந்தியாவின் பெருங்கிழவர்' எனப் பின்னாளில் பெயர்பெற்றுத் திகழ்ந்த தாதாபாய் நவுரோஜியும் வேறொரு நண்பரும் பம்பாயிலும் அத்தகைய சங்கம் ஒன்றை அமைத்துக் கொண்டனர். பம்பாய்ச் சங்கம் 'பிரிட்டிஷ் இந்திய சங்கம்' போல் நீடித்துத் தொண்டாற்ற முயலாது மறைந்து போயிற்று. 'சென்னைச் சுதேசிச் சங்கம்' என்னும் பெயரால் சென்னையிலும் பொதுநல முயற்சி தொடங்கியதெனினும் அது தொடர்ந்து நடைபெறவேயில்லை. 1878-ல் ஜி. சுப்பிரமணிய ஐயர் ஹிந்து பத்திரிகையை ரங்கையா நாயடு, அனந்தாசார்லு முதலானவர்களின் உதவியுடன் நடத்தத் தொடங்கிய பின்பே அரசியலுணர்வு தென்னாட்டிலும் அரும்பியது. இதற்குச் சற்று முன்பு பீஷ்வாவின் தலைநகரமாயிருந்த பூனாவில் 'ஸர்வ ஜனிக ஸபா' தொண்டாற்

றத் தோன்றியது. இச்சபைகளுக்குப் பொதுவான அரசியற் கொள்கை இல்லை; மாகாண மனப்பான்மையுடன் ஆக்கவேலை புரியும் திட்டமும் ஒழுங்காக வகுக்கப்படவில்லை. வங்க மாகாணத்தில் மட்டும் தேசீய எழுச்சிக்குரிய அறிகுறிகள் தென்பட்டன. இந்த எழுச்சி பின்னாளில் அகில இந்திய தேசீயக் கிளர்ச்சியாகப் பரவியது.

அரசியல் கிளர்ச்சியை உருவாக்கி வளர்ச்சி பெறச் செய்த தொண்டிலே இந்தியப் பத்திரிகைகளுக்கு ஒரு முக்கியமான பங்கு உண்டு. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை இந்நாட்டில் பத்திரிகை முயற்சி ஆங்கிலேயரின் முயற்சியாகத்தானிருந்தது. முதன் முதல் இந்தியாவில் இந்தியர்களுக்காக இந்தியரால் நடத்தப்பட்ட பத்திரிகை இராஜாராம் மோகனராய் நடத்திவந்த ஒரு வங்க மொழிப் பத்திரிகைதான். பெரும்பாலும் சமய சமுதாயப் பிரசினைகளை அலசிப்பார்க்கும் நோக்கத்துடன் நடைபெற்ற பத்திரிகை அது. அந்நாளில் அரசாங்கத்தின் செயல்களையோ, கொள்கைகளையோ ஆராய்வது ஆபத்தாக இருந்தது. கம்பெனி ஆட்சி குறித்துக் காரசாரமாய் எழுதியதற்காக ஐரோப்பியப் பத்திராதிபர்களையும் அரசினர் நாடுகடத்தி ஐரோப்பாவுக்கு அனுப்பியதுண்டு. 1835-ம் ஆண்டுவரை அதிகாரிகளின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வடிகட்டிய செய்திகளே தினத்தாள்களில் வெளி வந்தன. பிறகுதான் ஓரளவு பத்திரிகைச் சுதந்திரம் கிடைத்தது. ஆனால் சிப்பாய்களின் போராட்டத்திற்குப் பின்பு சுமார் இருபத்தைந்து ஆண்டுகளாக,

அந்த அரசியலை—இவர்
அஞ்சுதரு பேயென் றெண்ணி
நெஞ்சம் அயர்வார்

என்று பாரதியார் கூறியுள்ள அயர்வு நிலையில் நாடு இருந்ததால், பொதுநலத் தொண்டின் பெரும் பகுதியும்

சமய சமூதாயச் சீர்திருத்த முயற்சிகளாகவே யிருந்தது. நாளடைவில் வங்க நாட்டிலே **'அமிர்த பஸார் பத்திரிகா'** போன்ற பல பத்திரிகைகளும், பம்பாய் மாகாணத்திலே **'பம்பாய் சமாசார்' 'மராட்டா'** போன்றவைகளும், சென்னை மாகாணத்திலே **'ஹிந்து' 'ஸ்டாண்டர்ட்' 'சுதேச மித்திரன்'** போன்றவைகளும் பொது மக்களுக்கு ஒருவாறு அரசியல்—கல்விப் பயிற்சி அளிக்கலாயின. 1875-ல் இந்தியாவிலே 478 செய்தித்தாள்கள் வெளியிடப்பட்டன என்றும், அவை பெரும்பாலும் நாட்டு மொழிப் பத்திரிகைகளாகவே யிருந்தன என்றும் அறிகிரும். 1878-ம் ஆண்டில் நாட்டு மொழிப் பத்திரிகைகளின் சுதந்திரத்தைக் குறைக்குமாறு லிட்டன் பிரபு பிறப்பித்த சட்டத்தை ரிப்பன் பிரபு 1882-ல் ஒழித்துவிட்டபோதிலும் அந்தநாளில் அரசியல் கிளர்ச்சி சரியாக வளர்ச்சி பெறவேயில்லை.

**பர்க்கு** துரையின் காலந்தொடங்கிச் சில ஆங்கில நண்பர்கள் இந்தியாவுக்கு உதவிபுரிந்து வந்தனரென்பதையும் நாம் மறக்கலாகாது. இத்தகைய நண்பர்களில் ஒருவனை **ஜான் ப்ரைட்** விக்டோரியா அரசியின் பேரறிக்கைப்பத்திரம் உருப்பெறுவதற்கு இயன்ற உதவி புரிந்தான் என்பர். இந்தியாவின் ஆங்கில நண்பர்களில் **சார்ல்ஸ் ப்ராட்லா**வின் பெயரை முக்கியமாகக் குறிப்பிடலாம். ஐரோப்பியக் குற்றவாளிகளை இந்திய மாஜிஸ்திரேட்டுகளும் விசாரித்துத் தண்டிக்கலாம் என்பதாக ரிப்பன்பிரபு சட்டம் செய்ய முயன்றபோது, இந்தியாவிலுள்ள ஐரோப்பியர்கள் **'இல்பெர்ட் மசோதா'** என்ற அம்மசோதா சட்டசபைக்கு வராதபடி தடுத்துப் பெருங்கிளர்ச்சி செய்ததை 1883-ல் ப்ராட்லா கவனித்து இந்தியா மீது விசேஷ அனுதாபங்கொண்டான். இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர்களில் **ஏ. ஓ. ஹ்யூம்** 'காங்கிரஸின் தந்தை' என்று போற்றப்படும் அளவிற்குப் பெருநண்பனுயிருந்தான். அந்நாளில் சார்ல்ஸ் ப்ராட்லாவுடன் தோழமை பூண்டிருந்த **அனிபெஸன்ட்**

அம்மையார், 'இங்கிலாந்து, இந்தியா, ஆப்கானிஸ்தான்' என்னும் தமது சிறு புத்தகத்தின் வாயிலாக இந்தியாவில் நடைபெற்ற ஆட்சிமுறையின் அலங்கோலங்களைச் சீமையில் வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கது.

பொதுவாழ்க்கையின் வேறு துறைகளில் நடைபெற்று வந்த சில முயற்சிகளும் நாளடைவில் அரசியல்-கிளர்ச்சிக்கு உரமாக அமைந்தன. இராமமோகனருக்குப் பின் பிரமசமாஜத்தை வளர்த்த மகரிஷி தேவேந்திரநாத தாகுரும் கேசவசந்திர சேனரும் தங்கள் சமயப் பணிகளால் வங்க மறுமலர்ச்சிக்குக் காரணமாயினர். 1865 முதல் 1875 வரையுள்ள பத்தாண்டுகளில் வங்காளத்தில் மறுமலர்ச்சி தோன்றித் திகழலாயிற்று. கவிகளும், பக்கிம் சந்திரர் முதலான 'நவீன' ஆசிரியர்களும் புதிய வங்க இலக்கியத்தைத் தோற்றுவித்தனர். முதன்முதல் ஐ. ஸி. எஸ். பரீட்சைக்காகச் சீமைக்குப் போய்த் திரும்பிய இரமேச சந்திர தத்தர் முதலானவர்களும், பின்னர் சுரேந்திரநாத பானர்ஜியும் தேசீயத் தன்மான உணர்ச்சி வங்காளத்திலே கிளர்ந்தெழுவதற்குக் காரணமாயினர். நாட்டில் வறுமை அதிகரித்து வந்ததும், வரிச்சுமை தாங்கமுடியாத நிலையில் இருந்ததும், சுதேசக் கைத்தொழிலும் வியாபாரமும் வீழ்ச்சியுற்றுப் பஞ்சம் அடிக்கடி ஏற்பட்டதும், இன வேற்றுமை நிறவேற்றுமைகளுடன் அரசாங்கம் பொது மக்களின் விருப்பங்களைப் புறக்கணித்து ஆட்சி புரிந்ததும், எல்லாவற்றுக்கும் மேலாக லிட்டன் பிரபு அரசப் பிரதிநிதியாக வந்து ஆயுதச் சட்டத்தாலும், நாட்டுமொழிப் பத்திரிகைகளின் வாய்ப்பூட்டுச் சட்டத்தாலும், ஆப்கானிய யுத்தத்தாலும் தேசமெங்கும் அதிருப்தியை அதிகரிக்கச் செய்ததும், பஞ்சகாலத்திலே ராணுவச் செலவையும் அதிகமாக்கி 'ரோமாபுரி எரியும்போது நீரோ பிடில் வாசித்த' கதைபோல் 1877-ல் டெல்லி தர்பார் கொண்டாடியதும், எல்லாம் சேர்ந்து ஒருவாறு தேசீய உணர்ச்சியை விசிறிக் கனலச் செய்தன.

1876-ல் கல்கத்தாவில் சுரேந்திரநாத பானர்ஜியும் வேறொரு நண்பரும் தோற்றுவித்த இந்திய சங்கம் அரசியல்-கிளர்ச்சியில் சிறப்பாக ஊக்கம் காட்டியது. சுரேந்திர நாதரின் கடல்மடை திறந்ததுபோன்ற வாக்குவன்மையும் சலியா உழைப்புத்திறனும் மனோபாவமும் வங்க இளைஞர்களை வசீகரித்துவிட்டன. ஒன்றுபட்ட சுதந்திர இந்தியாவைப் பற்றிய கனவுகள் லிட்டன் பிரபுவின் இருண்ட ஆட்சிக்காலத்திலேயே வங்க உள்ளத்தில் ஒளிரத்தொடங்கிவிட்டன. 'இந்திய சங்க'த்தின் திறப்பு விழாவன்று சுரேந்திரநாத பானர்ஜியின் அருமைப் புதல்வன் இறந்து போய்விட்டான். தாங்கமுடியாத அந்தச் சோகத்திலும் பானர்ஜி புதல்வனின் சடலத்தைத் தகனம் செய்வதற்கு முன்பே கூட்டத்திற்கு வருகை புரிந்து ஒரு வசீகரமான சொற்பொழிவும் செய்துவிட்டார். கடமையுணர்வையும், 'ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே' என்பதையும், அந்த நிலையில் அப்படி வற்புறுத்திய சுரேந்திர நாதர் தேசீய எழுச்சிக்கு ஒரு பெருந் தூண்டுகோலாக அமைந்ததில் வியப்பில்லை.

ரிப்பன் பிரபுவின் ஆட்சியும் அச்சத்தைப் போக்கிக் கிளர்ச்சிக்காரர்களின் நம்பிக்கையைத் தூண்டிவிட்டது. இந்த ஆட்சியில் 'இல்பெர்ட் மசோதா' சட்டசபைக்கு வராமற்போனது கிளர்ச்சியை மேலும் தூண்டிவிட்டது. இந்தக் கிளர்ச்சியால் எதிர்பார்த்த பயன் விளையவில்லையெனினும் தேசபக்தியும் அகில இந்திய மனப்பான்மையும் ஏற்பட்டன. ஏறக்குறைய இதே சமயத்தில் பங்கிம் சந்திரரின் 'ஆனந்தமடம்' வெளிவந்ததால், அதிலுள்ள அன்னை வழிபாடும் 'வந்தேமாதர' கீதமும் தேசபக்த உணர்ச்சிக்குக் கலையுருவம் தந்திருக்க வேண்டும். 1884-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் சென்னையிலும் ஜி. சுப்பிரமணிய ஐயர் தேசபக்தியுணர்வு தோன்றுமாறு 'மகாஜனசபை'யை நிறுவினார். இவர் சமுதாயச் சீர்திருத்தத்திலும் பெரும்

பற்றுள்ளவர். 1885-ம் ஆண்டுத் தொடக்கத்தில் **பம்பாய் இராசதானிக்கழகம்** நிறுவப்பட்டது. 1884-டிஸம்பரிலேயே சென்னை நகரில் திவான்பகதூர் ரகுநாதராவின் மயிலாப்பூர் மாளிகையில் பதினேழு தேசபக்தர்கள் கூடிக் 'காங்கிரஸ்' என்ற தேசீயப் பெருமன்றத்தை ஆண்டுதோறும் கூட்டிக்கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று தீர்மானித்தனர். இவர்கள் பற்பல மாகாண வாசிகள்; அநேகமாக இவர்களெல்லோரும் அந்த ஆண்டில் நடைபெற்ற திவ்யஞான சங்கக் கூட்டத்திற்கு (Theosophical Convention) வந்திருந்தவர்கள். இவர்களில் மணி ஐயர் என்றும், டாக்டர் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரென்றும் பின்னுளில் புகழ்பெற்ற பெரியாரும் ஒருவர்; மற்றைச் சென்னைவாசிகள் பி. ரங்கையா நாயடுவும் பி. அனந்தாச்சார்லுவும் ஆவர். வங்க நாட்டிலிருந்து சுரேந்திரநாத பானர்ஜி முதலானவர்களும், பம்பாயிலிருந்து தாதாபாய் நவுரோஜி முதலானவர்களும் வந்திருந்தனர். பூனு, காசி, அலகபாத், அயோத்தி முதலான இடங்களிலிருந்து வந்த பிரதிநிதிகளும் அங்குக் காணப்பட்டனர். திவான்பகதூர் இரகுநாதராவ் ஸி. எஸ். ஐ. தமது பட்டம் பதவிகளைக் காட்டிலும் பெரியவர். சர்க்கார் உத்தியோகஸ்தராக இருந்து இந்தூரில் திவானுகவும் வேலைபார்த்தவர். சமுதாயச் சீர்திருத்த இயக்கத்திலும் பற்றுள்ளவர். இவருடைய முன்னோர் பூனுவிலிருந்து தமிழகத்திற்கு வந்து குடியேறியிருந்தனர். பின்னுளில் கோகலே, திலகர் ஆகிய பூனு வாசிகளால் ஒளிவீசப்போகும் காங்கிரஸின் அடிப்படை-ஆலோசனைகள் இரகுநாதராவின் இல்லத்தில் நடைபெற்றது ஒருவாறு பொருத்தமுடையதுதான். இரகுநாதராவ் பல்வேறு பிரசினைகளைக் குறித்துப் பல பத்திரிகைகளில் நீண்டகாலமாய்த் தமது எண்பத்தொன்ரும் வயதுவரை (1912-ம் ஆண்டுவரை) எழுதியவண்ணமாய்த் தொண்டாற்றி வந்தார்.

அந்தப் பதினேழுபேர் விடுத்த அறிக்கை அடுத்த ஆண்டு (1885) டிஸம்பர் மாதம் முதலாவது காங்கிரஸ் பூனாவில் கூடவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தது. பூனா நகரில் வாந்திபேதி தோன்றியதால் காங்கிரஸ் பம்பாயில் கூடியது. முதலாவது காங்கிரஸுக்கு இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் அரசியல்வாதிகளும் அரசியல் முன்னேற்றத்தில் கருத்துள்ளவர்களும் வந்திருந்தனர். முதலாவது காங்கிரஸுக்குச் சென்னையிலிருந்து உறுப்பினராகவும் நண்பராகவும் போயிருந்தவர்கள் திவான்பகதூர் இரகுநாதராவ், மணி ஐயர், ரங்கையா நாயடு, அனந்தாசார்லு, ஜி. சுப்பிரமணிய ஐயர், வீரராகவாசாரியார், கேசவபிள்ளை, பேராசிரியர் சுந்தரராமன் முதலானோர். இந்த முதலாவது காங்கிரஸின் தலைவர் வங்காள வாசியான உமேச சந்திர பானர்ஜி. எனினும் 'காங்கிரஸின் தந்தை' யென்ற புகழுக்கு உரியவர் ஏ. ஓ. ஹ்யூம் என்ற பிரிட்டிஷ் பெரியாரேயாவர். அரசாங்கத்தில் உயர்தர அதிகாரியாக வேலைபார்த்து உபகாரச் சம்பளம் பெற்றுக் கொண்டதும் இவர் இந்திய தேசப்பணியில் சிந்தை செலுத்தினர். ஏழைகள் வரிச்சுமையால் வருந்துவதையும், அடிக்கடி பஞ்சமும் நோயும் நேர்ந்து மக்களை அழிப்பதையும் கண்டு நெஞ்சுருகி ஹ்யூம் துரை காங்கிரஸ் மூலமாக அரசாங்கம் இந்திய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்தார். இவர் திவ்யஞான சங்கத்தின் உறுப்பினராகவுமிருந்து இந்திய மக்களின் உணர்ச்சிகளை மதிக்கக் கற்றுக்கொண்டிருந்தார். சிப்பாய்களின் போராட்டம் நடந்தபோது வீரப்பணிகள் புரிந்து அரசாங்கத்தின் நன்னம்பிக்கைக்கும் உரியவராக இருந்து வந்தார்.

தென்னிந்தியாவில் 'பத்திரிகைத் தொழிலின் தந்தை'யாக இருந்து 'ஹிந்து' 'சுதேசமித்திரன்' என்னும் இரண்டு தினப் பத்திரிகைகளையும் தொடங்கித் தென்

ஞுட்டில் அரசியல்-கிளர்ச்சிக்குப் பேருதவி புரிந்த ஜி. சுப் பிரமணிய ஐயர், முதலாவது காங்கிரஸில் முதலாவது தீர் மானத்தைப் பிரேரித்து முதன் முதல் பேசினுர் என்ற பெருமைக்கு உரியராவர். பிரிட்டிஷ் ஆட்சியின் நன்மை களைக் குறிப்பிட்ட பின் (அக்காலத்து அரசியல் - சம்பிர தாயம் இது), அரசாங்கத்தாரின் செலவு அதிகரித்து வந்ததையும், இந்திய அதிகார வர்க்கம் தாங்கமுடி யாத சுமையாகி வந்ததையும், மக்களின் துன்பம் அதி கரித்துவந்ததையும், ஆங்கிலப் பாராளுமன்றம் இந்தியா வின் நிலையை அறிந்துகொள்ளாமலிருந்ததையும் இவர் சுட்டிக் காட்டி இந்தியாவின் ஆட்சிமுறை குறித்து விசா ரணை செய்ய ஒரு குழு (கமிஷன்) நியமிக்கப்படவேண்டு மென்னும் முதலாவது தீர்மானத்தைத் திறமையாகப் பிரேரித்துப் பேசி முடித்தார். இவர் பின்னுளில் மித வாத அரசியலைக் கைவிட்டு அதிதீவிரவாதியாகி வங்க நாட்டின் ஆவேச அரசியல்-கிளர்ச்சியைத் தமிழகத்திலும் கொண்டு வளர்த்தவர். ஆங்கிலத்திலும் தமிழிலும் திறமையாகவும் நேர்மையாகவும் எழுதுவார், பேசுவார். 'வளரும் தமிழ்' என்று சொல்லப்படுகிற இன்றைய தமிழுக்கு வித்திட்டவரும் ஜி. சுப்பிரமணிய ஐயரே. தாய்மொழியோடு தேச பக்தியை இசைத்து இரண்டுக் கும் உயிராற்றலை ஊட்டிவைத்தவர் இவர். இந்தக் காங் கிரஸில் தாதாபாய் நவுரோஜி என்ற பார்ஸிகுலப் பெரி யார் முக்கியமாகப் பங்குகொண்டார். '**லண்டன் டைம்ஸ் பத்திரிகை**'யின் பம்பாய்நிருபர் இந்த முதலாவது காங்கிரஸ் நடவடிக்கைகளைக் குறித்து அப்பத்திரிகைக்கு விவரமாகச் செய்தி யனுப்பியிருந்தார். ஆனுல் பத்திராதிபர் தமது குறிப்பில் காங்கிரஸ் இந்தியாவின் பிரதிநிதியல்ல வென் றும், முகம்மதியர்கள் ஒரு குழுமாக விலகி நின்று விட் டார்களென்றும் எழுதி விட்டார். ஆயுத வலிமையால் தான் இந்தியா வெல்லப்பட்டதென்றும், அதே வலிமை

தான் இந்தியாவை ஆள வேண்டுமென்றும் நாவன்மைக்கோ, பேனு வன்மைக்கோ அஞ்சி ஆங்கிலேயர் இந்தியாவைவிட்டுப் போகமாட்டார்களென்றும், அது கத்தி முனையில் நடக்க வேண்டிய காரியமென்றும், இக் கருத்திற்கிணங்கக் காங்கிரஸ் உறுப்பினர்கள் தங்கள் நிலை குறித்து மீண்டும் ஆலோசனை செய்து பார்க்க வேண்டுமென்றும் அந்தக் குறிப்பு முடிவாக வற்புறுத்தியது. முதல் காங்கிரஸை 'லண்டன் டைம்ஸ் பத்திரிகை' இவ்வாறு மதிப்பிட்டதிலிருந்து அப்போதிருந்த ஆங்கிலேயர்களின் மனப்பான்மையை நன்குணர்ந்து கொள்ளலா மல்லவா?

முதலாவது காங்கிரஸில் கலந்து கொண்ட எழுபத்திரண்டு பேரும் அறிவாளிகளாகவும் சிந்தனையாளராகவும் பொறுப்புணர்வு உள்ளவர்களாகவும் இருந்த போதிலும் பொது மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளல்லர்; இந்தியாவின் சிறந்த மனிதர்களின் ஒரு கழகமாகவே அதைக் கருதவேண்டும். இதைக் காட்டிலும் இரண்டாவது காங்கிரஸ் சிற்சில அம்சங்களில் மேம்பட்டிருந்தது. பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்: அவர்களில் முஸ்லிம்களும் காணப்பட்டனர். இந்தக் காங்கிரஸ் அந்நாளில் இந்தியாவின் தலைநகரமாயிருந்த கல்கத்தாவில் தாதாபாய் நவுரோஜியின் தலைமையில் கூடியது. தாதாபாய் நவுரோஜி தமக்கு இங்கிலாந்தின் மீதுள்ள நம்பிக்கையை வற்புறுத்தியதுடன் இந்தியாவின் வறுமையையும் சுட்டிக் காட்டிப் பரிகார முறையையும் தெரிவித்தார். பொதுவாக இந்தக் காங்கிரஸில் பேச்சுத் திறனுக்குக் குறைவில்லை; சுரேந்திரநாத பானர்ஜியின் வாக்குவன்மை சிகரமாக அமைந்தது. இந்தக் காங்கிரஸ் மேடையில் பண்டித மதனமோகன மாளவியா என்ற பெரியாரும் தோன்றித் தமது முதற் பேச்சைக் காரசாரமாக நிகழ்த்தி விட்டார். மகரிஷி

தேவேந்திரநாத தாகுரின் ஆதரவும் இந்தக் காங்கிரஸுக்குக் கிடைத்தது.

நமது சென்னை நகரில் மூன்றுவது காங்கிரஸ் கூடியது. இந்தக் காங்கிரஸின் அக்கிராசனர் **பத்ருடீன் தையாப்ஜி** என்ற முஸ்லிம் கனவான். இந்தத் தையாப்ஜி வம்சத்தினரில் ஒருவர் பின்னுளில் காந்தியடிகளின் உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டு சிறை புகுந்தார். கொச்சி—திருவாங்கூர்—மைசூர் அரசர்களும் இந்தக் காங்கிரஸுக்குப் பொருளுதவி புரிந்தனரென் பதும், இதன் வரவேற்புக் கழகத் தலைவர் திவானுகப் புகழ் பெற்றிருந்து ஓய்வும் உபகாரச் சம்பளமும் பெற்றுச் சென்னையில் வசித்து வந்த ஸர். டி. மாதவராவ் என்பதும் காங்கிரஸ் வரலாற்றிலே அதிசய நிகழ்ச்சிகள். இதில் நார்ட்டன் துரை என்ற பிரபல பாரிஸ்டரும் கலந்து கொண்டார். பின்னுளில் அதிதீவிர வாதியாகப் புகழ்பெறப் போகும் விபினசந்திரபாலர் சென்னைக் காங்கிரஸில்தான் முதன் முதல் பேசினுர். அப்போது சென்னைக் கவர்னராயிருந்த **கனிமாரா பிரபு** காங்கிரஸ் பிரதிநிதிகளின் வயிற்றுக்கும் விருந்தளித்தார். இதே 1887-ம் ஆண்டில் விக்டோரியா மகாராணியின் ஐம்ப தாம் வருட ஆட்சிப் பொன்விழாக் கொண்டாட்டமும் நடைபெற்றது.

இந்தக் காங்கிரஸின் வரவேற்புக் கழக உறுப்பினருள் ஒருவர் டபிள்யு. எஸ். வேங்கடராமாஞ்சுலு நாயடு. இவர் கம்பெனியின் முதலாவது சுதேச வைத்தியராக இருந்த 'டாக்டர்' சாமி நாயக்கரின் பேரப் பிள்ளை யாவர். சாமி நாயக்கர் பத்தொன்பதாம் நூற்ருண்டுத் தொடக்கத்தில் சென்னை நகரில் புகழ்பெற்று வாழ்ந்தவர். கர்நாடக—மைசூர்ப் போராட்டங்கள் முடிந்து ஓரளவு அமைதி நிலைபெற்றிருந்த 1803-ம் ஆண்டில் பிளாசி வீரனை கிளைவ் துரையின் மகனுகிய கிளைவ் பிரபு சாமி

நாயக்கரைச் சென்னையில் அம்மை குத்தும் இலாகாவில் முதலாவது சுதேசத் தலைமை அதிகாரியாக நியமித்திருந்தான். இதற்கும் முன்பே சென்னை ஜெனரல் ஆசுபத்திரி ஐம்பதாண்டுகளாகத் தொண்டாற்றி வந்திருந்தது. ஆனால் பொது மக்கள் அந்நாளில் அதை அதிகமாய்ப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. கோட்டையைச் சுற்றி அம்மை நோய் பரவி மரணம் விளைவித்த காலத்திலும் சென்னை வாசிகள் மூட நம்பிக்கைகளால் அம்மை குத்திக்கொள்ள விரும்பவில்லை. அந்த நிலையில் டாக்டர் சாமி நாயக்கர் கம்பெனியின் வைத்திய இலாகாவுக்கும் பொது மக்களுக்கும் இடையே ஒரு சிறந்த அதிகாரியாக அமைந்து தொண்டாற்றிப் பெரும் புகழ் பெற்றுக் கிளைவ் பிரபுவினால் சம்மானிக்கவும் பெற்றார். இந்த உத்தியோகம் கிடைப்பதற்கு முன்பு இவர் தம் இளமைப் பருவத்தில் பிரெஞ்சு-மகாராஷ்டிர யுத்தங்களில் காயமுற்ற படை வீரர்களுக்குச் சிகிச்சை செய்யும் 'டிரெஸ்ஸர்' (Dresser) வேலையிலமர்ந்திருந்து வயிற்றிலே ஒரு குண்டுக் காயமும் பெற்றதுண்டு. பின்னாளில் கம்பெனியார் இவர் அங்குமிங்கும் போய் வருவதற்கு ஒரு வெள்ளிப் பல்லக்கும் வெகுமதியாக அளித்துக் கௌரவித்தனர். 1828-ல் சாமி நாயக்கர் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் சொந்த நிலையில் வைத்தியத் தொழிலைத் தொடர்ந்து புரிந்து சென்னையின் முக்கியமான சீமான்களில் ஒருவராகித் திகழ்ந்தார். அந்நாளில் சென்னை நகரின் மிக்க அழகு வாய்ந்த பகுதியாக இருந்த கோமளேசுவரன் பேட்டையில் இவருக்கு இரண்டு மாளிகைகள் இருந்தன. இவர் சிறந்த பக்தராகவும் அறப் பற்றுள்ளவராகவும் விளங்கிப் 'பச்சையப்பர் கலாசாலை'யை நிலைநிறுத்திய பச்சையப்ப முதலியாரின் உறையுளுக்கு அருகே அவருடன் தோழமை பூண்டு வாழ்ந்தார்.

முதல் மூன்று காங்கிரஸ் கூட்டங்களும் பெரும் பாலும் பெரிய மனிதர்களின் பொழுதுபோக்குக் காட்சி களாகக் காணப்பட்டன. பம்பாய்க் கூட்டத்தினிடையே பிரதிநிதிகள் பேர்பெற்ற எலிபென்டா குகைக் கோவில் களைக் கண்டு களித்தனர். கல்கத்தாக் கூட்டத்தினி டையே ஹூக்ளி ஆற்றில் நூற்றுக் கணக்கான கொடி களால் அலங்கரிக்கப் பெற்ற அழகிய மரக்கலத்தில் அமர்ந்து இசைவிருந்து நுகர்ந்த வண்ணம் காங்கிரஸ் கழக உறுப்பினர் அரசியல் பிரசினைகளையும் கவனித் தார்கள். சென்னையிலோ அரசாங்க மாளிகையில் காங் கிரஸ் பிரதிநிதிகளுக்குக் கவர்னர் விருந்தளித்து முகமன் கூறினான். ஆனால் இந்த நிலைமை சில ஆண்டுகளில் மாறி விட்டது. அரசாங்க அதிகாரிகள் காங்கிரஸுடன் ஒத் துழையாமை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனினும் காங்கிரஸ் உடனே பொது மக்களோடு நேரடி யாக உறவுகொண்டு உரன்பெற முயலவில்லை. அரசாங் கத்திற்குப் பிரார்த்தனைகளும் விண்ணப்பங்களும் செய்து கொள்வதும், கண்டனத் தீர்மானங்கள் செய்வதும் தவிர வேறு வழியொன்றும், பாலகங்காதர திலகர் தலைவராகத் தோன்றுவதற்கு முன் காங்கிரஸுக்குத் தோன்றவில்லை யென்றுதான் சொல்லவேண்டும். அந்நாளில் ஆங்கிலோ-இந்தியப் பத்திரிகைகள் காங்கிரஸை 'ஹிந்து காங்கிரஸ்' என்றும், 'பாபு காங்கிரஸ்' என்றும், 'இராச நேசமில் லாத காங்கிரஸ்' என்றும் பேச்சாளர்களின் கூட்டமென் றும் இகழ்ந்த வண்ணமாயிருந்தன. 'லண்டன் டைம்ஸ்' வழக்கம்போல், காங்கிரஸை உரப்பி வந்தது.

ஐந்தாவது காங்கிரஸில் சார்ல்ஸ் ப்ராட்லா கலந்து கொண்டான். 1889-ம் ஆண்டுக் காங்கிரஸானதால் பிரதிநிதிகளின் தொகையும் 1889 ஆக வரையறுக்கப்பட் டிருந்தது. காங்கிரஸின் வரவேற்புரைக்குப் பதிலளிக்கும் போது ப்ராட்லா கூறிய பொன்மொழிகள் இன்றும்

தேசத் தொண்டர்களுக்கு ஒரு நல்வழி காட்டுவனவாகும். "நான் பொது மக்களுக்காகப் பாடுபடாது வேறு யாருக்குத்தான் உழைக்க வேண்டும்? பொது மக்களில் ஒருவனுகப் பிறந்து அவர்களின் நம்பிக்கைக்கு உரியவனுகி வாழும் நான் அவர்களுக்காகவே உயிரையும் கொடுப்பேன். எனது தொண்டிலே பூமி சாஸ்திர வரையறையோ இன வரையறையோ இல்லை.'' ஏழாவது காங்கிரஸுக்குச் சென்னைப் பெரியாரான பி. அனந்தாசார்லு தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் பாலகங்காதர திலகரும் கோகலேயும் பங்கெடுத்துக் கொண்டனர். ஆனால் திலகருள்ளத்திலே இன்னும் தீவிர உணர்ச்சி கொழுந்துவிட்டெரியவில்லை. 1892-ல் நடந்த எட்டாவது காங்கிரஸில் ஸர். பிரோஸ்ஷா மேத்தா, சுரேந்திரநாத பானர்ஜி, கோபாலகிருஷ்ண கோகலே, பாலகங்காதர திலகர், லாலா லஜபதிராய் முதலானவர்கள் கலந்துகொண்டனர். ஸர். பிரோஸ்ஷா மேத்தா 'பம்பாயின் முடிசூடாமன்னன்' னென்றும், உருவிலும் திருவிலும் அறிவிலும் சிறந்த ஒரு 'ஆண் சிங்கம்' என்றும் அந்நாளில் மதிக்கப்பெற்றிருந்தவர். ஆங்கிலத்தில் சிறந்த வாக்குவன்மை யுள்ளவர். சிறுபான்மையோரான பார்ஸி வகுப்பினராயிருந்தும் மேத்தாவும் தாதாபாய் நவுரோஜி போல் தம் வகுப்பிற்கென்று தனி உரிமைகள் வேண்டி அரசியல் பிரசினைகளைச் சிக்கலாக்கி விடாமல் காங்கிரஸ் இயக்கத்திற் கலந்துகொண்டிருந்தார்.

தாதாபாய் இரண்டாம் முறையாக ஒன்பதாவது காங்கிரஸில் தலைமை தாங்கினுர். இதற்காகவே சீமையிலிருந்து புறப்பட்டு வந்தார். சீமையிலே ஒரு தொகுதியில் அபேட்சகராகித் தேர்தற்போர் நடத்தி முதன் முதல் தோல்வியுற்றுப் பிறகு வெற்றி கண்டவர் இவர். முதலில் 'கன்ஸர்வேடிவ்' கட்சியைச் சேர்ந்த எதிரி வெற்றி பெற்றிருந்தான்; ஆங்கிலேயரின் 'லிபரல்' கட்சி

யைச் சார்ந்த அபேட்சகராயிருந்த தாதாபாய் தோல்வியுற்றும் தளராது வேறொரு தொகுதியை நாடிநின்றார். அப்போது ஆங்கிலப் பிரதமராகவும் கன்ஸர்வேடிவ் கட்சித் தலைவராகவுமிருந்த ஸால்ஸ்பரி பிரபு ஒரு சொற்பொழிவினிடையே, "நம் கட்சி அபேட்சகனை எதிர்த்தவன் ஒரு கறுப்பு மனிதன். மக்கட் சமுதாயம் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருந்தாலும், நாம் அருவருப்பை உதறித்தள்ளியிருந்தாலும், கறுப்பு மனிதன் ஒருவனை ஆங்கில வாக்காளர் தேர்ந்தெடுப்பது தகுமா?" என்று தம் நிற வெறியைப் புலப்படுத்தினான். "அக் கறுப்பு மனிதன் அவ்வளவு கறுப்பாகவுமில்லை!" என்பதையும் ஸால்ஸ்பரி தொடர்ந்து ஒப்புக்கொண்டான். உண்மையாகவே தாதாபாய் நவுரோஜி ஸால்ஸ்பரியைக்காட்டிலும் எலுமிச்சம்பழ நிறம் வாய்ந்த அழகராக இருந்தார். ஆனால் அந்நாளில் ஸால்ஸ்பரி போன்றவர்களின் அகராதியில் 'கறுப்பு' என்ற சொல் நிறத்தை மட்டும் குறிப்பிடாமல் 'தாழ்ந்த இன'த்தையும் குறிப்பிட்டது. உள்ளபடியே பண்பட்டிருந்த சீமை—ஆங்கிலேயர்களின் உள்ளத்தில் ஸால்ஸ்பரியின் நிறவெறி அருவருப்பையே விளைத்தது; விக்டோரியா மகாராணியின் உள்ளத்திலும் துயரம் விளைத்தது. இந்த நிலையில், தாம் நாடி நின்ற புதுத் தொகுதியில் 1892-ல் தாதாபாய் வெற்றிபெற்றார். ஸால்ஸ்பரியின் 'கறுப்பு மனிதர்'களில் முதன்முதல் ஆங்கிலப் பாராளுமன்றத்துப் பொது மக்கட் சபையில் உறுப்பினராக அமர்ந்தவர் தாதாபாய் நவுரோஜிதான்.

பத்தாவது காங்கிரஸ் மறுபடியும் சென்னையில் நடைபெற்றது. இந்தச் சென்னைக் காங்கிரஸில் தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களின் 'வாக்குரிமை' குறித்த ஒரு தீர்மானமும் நிறைவேறியது. இதற்குக் காரணராக இருந்தவர் காந்தியடிகளே. இவர் இன்னும் மகாத்மா ஆகவில்லை; மோகனதாஸ் கரம்சந்த் காந்திதான். 1888-ம்

ஆண்டில் பாரிஸ்டர் படிப்பிற்காகச் சீமைக்குப்போய் அங்கே தாதாபாய் நவுரோஜியைத் தரிசித்து அவரைத் தம் வாழ்க்கைக்கே ஒரு வழிகாட்டியாகக் கொள்ளவேண்டு மென்ற உணர்வுடன் சட்டம் பயின்று 1891-ல் பாரிஸ்ட ராகி இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். சுமார் இரண்டு ஆண்டுவரை, அதாவது 1893-ஏப்ரல் வரை வழக்கறிஞ ராகத் தொழில் நடத்திப் பார்த்தார். பிறகு தென்னுப் பிரிக்காவுக்குப் புறப்பட்டு மே மாதக் கடைசியில் **நேடால்** போய்ச் சேர்ந்தார். டர்பன் நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட், தலைப்பாகையை எடுத்துவிடுமாறு கட்டளையிட்டதும், காந்தி அப்படிச் செய்ய மறுத்துவிட்டு அங்கிருந்து வெளி யேறினார். இவரை அங்குள்ள பத்திரிகைகள் 'வேண்டாத விருந்தாளி' எனச் சுட்டிக் காட்டின. இந்தியர்களின் ஒற்று மைக் குறைவையும் அவர்களுக்குக் கிடைத்த அவமதிப்பை யும் கண்டு இவருள்ளம் உருகியது. அங்கே இருந்த இந்தி யர்களில் பெரும்பான்மையோர் தமிழரும் தெலுங்கரும் வட இந்தியருமான ஒப்பந்தத் தொழிலாளிகளானதால், 'கூலிகள்' என்று எல்லா இந்தியரையும் வெள்ளையர்கள் அழைக்கலாயினர்; காந்தியடிகளும் 'கூலி பாரிஸ்டர்' என்று அழைக்கப் பெற்றார். அங்குள்ள நிலைமையைத் தெரிந்துகொண்டு காந்தியடிகள் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். இங்கே ஆறு மாதம் தங்கி ஸர். பிரோஸ்ஷா மேத்தா, பத்ருடீன் தையாப்ஜீ, ஜஸ்டிஸ் ரானடே, பால கங்காதர திலகர், கோபாலகிருஷ்ண கோகலே முதலான காங்கிரஸ்காரர்களைச் சந்தித்துத் தென்னுப்பிரிக்காவி லுள்ள நம்மவரின் துயரங்களைத் தெரிவித்தார். இதன் பயனுகத் தான் சென்னைக் காங்கிரஸ் தென்னுப்பிரிக்க இந்தியர் குறித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. இது குறித்துப் பின்னர் நீண்ட தொடராக வரப்போகும் தீர் மானங்களுக்கு இதைப் 'பிள்ளையார் சுழி' எனக் கருதலாம்.

பூனாவில் கூடிய பதினொன்றாவது காங்கிரஸில் 'வங்காளத்தின் முரசொலி' என்று பிரசித்தமாகிவிட்ட பாபு சுரேந்திரநாத பானர்ஜி தலைமைப் பதவி தாங்கி 'இடி முழக்கம்' செய்தார். இதே காங்கிரஸில் பண்டித மதன மோகன மாளவியா அரசாங்கத்தின் மீது ஒரு குற்றப் பத்திரிகை படிப்பது போலப் பேசித் தீர்த்துவிட்டார். 1896-ல் கல்கத்தாவில் கூடிய பன்னிரண்டாவது காங்கிரஸில் **ரஹிம்துல்லா மகம்மது ஸயானி** என்ற முஸ்லிம் அறிஞர் தலைமை தாங்கினார். காங்கிரஸ் அக்கிராசனர்களில் இரண்டாவது முஸ்லிம் கனவான் இவர். முகம்மதியர்கள் காங்கிரஸில் கலந்துகொள்ள வேண்டாமென்று ஸர் ஸையத் ஆமதும் அவருடைய சீடர்களும் உபதேசம் செய்தது துண்டு; முகம்மது ஸயானியோ காங்கிரஸ் இயக்கத்தில் முகம்மதியர்களும் கலந்துகொள்ள வேண்டுமென்பதை வற்புறுத்தினார். இந்தக் காங்கிரஸில் தென்னாப்பிரிக்க இந்தியர் நிலைபற்றிய தீர்மானம் குறித்துப் பேசிய பரமேசுவரன் பிள்ளை 'சென்னையிலும் வாக்குவன்மை உண்டு' என்று வங்காளிகளும் வியக்குமாறு பேசித் தீர்த்தார். அடுத்த காங்கிரஸில் ஸி. சங்கரநாயர் (பின்னர் ஸர். ஸி. சங்கரநாயர்) தலைமை வகித்தார். பூனாவில் பிளேக் நோயைத் தடுக்க அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலமாக அங்கே கொந்தளிப்பு ஏற்பட்டு இரண்டு வெள்ளையர்களும் கொலையுண்டனர். அந்த நிலைமையை வியாஜமாகக் கொண்டு அரசினர் பாலகங்காதர திலகர் மீது குற்றஞ்சாட்டித் தண்டனைக்கு உட்படுத்தினர். இதனால் மகாராஷ்டிரத்தில் அரசியல் விஷயமான தீவிர உணர்ச்சி ஏற்படலாயிற்று.

சென்னையில் நடைபெற்ற பதினான்காவது காங்கிரஸ், புதிய வைஸ்ராய் கர்ஸன் பிரபுவுக்கு நல்வரவுச் செய்தி அனுப்பியது. சுரேந்திரநாத பானர்ஜி முதலியவர்கள் புதிய வைஸ்ராய் மீது தங்களுக்குள்ள அபார நம்பிக்

கையை வெளியிட்டுப் பேசினர். எனினும், அடுத்த காங்கிரஸிலேயே கர்ஸன் பிரபுவின் பிற்போக்குக் கொள்கையைச் சுரேந்திரநாத பானர்ஜியே வன்மையாகக் கண்டிக்கவும் நேர்ந்தது. கர்ஸன்பிரபு அரசாங்கத்தின் ஒவ்வொரு பகுதியையும் நுட்பமாகவும் செவ்வையாகவும் கவனித்து வந்தான். எனினும் இந்திய மக்களின் இதயத்தை இந்த அரசப் பிரதிநிதி அன்புடனே, அனுதாபத்துடனே அறிந்துகொள்ளவில்லை. இந்தியப் பல்கலைக் கழகச் சட்டத்தைப் பிறப்பித்துக் கல்வி நிலையங்களின் சுதந்திரத்தைக் குறைத்தது, விக்டோரியா மகாராணி இறந்து மூத்த புதல்வர் ஏழாம் எட்வர்ட் சக்கரவர்த்தியானதும் அம் முடிசூட்டு வைபவத்தை டெல்லியிலும் ஆடம்பரமாக ஒரு தர்பார் நடத்திக் கொண்டாடியது முதலான செயல்களால் கர்ஸன் பிரபு இந்திய மக்களின் வெறுப்பிற்கு உரியனுகிவிட்டான். பொது மக்களின் விருப்பங்களைப் புறக்கணித்து இந்த வைஸ்ராய் இழைத்த கேடுகளிலெல்லாம் வங்காளத்தை இரண்டு மாகாணங்களாகப் பிரிவினை செய்தது சிகரமாகக் கருதப்பட்டது. இதனுல் வங்காளத்தில் தேசீய உணர்ச்சி உரன் பெற்று வளரலாயிற்று. இன்றைய சுதந்திர யுகத்திலும் கிழக்கு வங்காளம் மேற்கு வங்காளம் என்னும் பிரிவு இருக்கிறதல்லவா? முகம்மதியர் அதிகமாயிருந்த பாகத்தைத் தனி மாகாணமாக்கி இந்து முஸ்லிம் பிளவிற்கு அன்றே வித்திட்டவன் கர்ஸன் பிரபு. அன்று வங்க நாட்டார் மனங் கொதித்துப் பெருங்கிளர்ச்சி செய்த வண்ணமாயிருந்தனர். அரசாங்கமோ அதைப் புறக்கணித்து அடக்கு முறையாட்சி நடத்தியது. வங்க நாட்டார் சுதேச விரதம் பூண்டு அன்னிய நாட்டுப் பொருள்களை விலக்கத் துணிந்தனர். நம் தேசத்திற்கு உகந்த தேசீயக் கல்வி முறையை மேற்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானித்தனர். சுதேசியம், அன்னிய விலக்கு, தேசீயக் கல்வி ஆகிய முப்பெருங்கொள்கை

யுடன் குறிக்கோளாகிய சுயராஜ்யத்தை அடைய விரும்பினர். இந்தச் சுதேசியக் கிளர்ச்சி இந்தியா வெங்கும் பரவியது.

1904-ல் பம்பாயில் நடைபெற்ற இருபதாவது காங்கிரஸுடன் மிதவாதிகளின் செல்வாக்கு மறைந்து ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டதென்று சொல்லலாம். 1905-ம் ஆண்டு, நமது தேச சரித்திரத்திலே ஒரு புதிய அருணோதயத்தைக் குறிப்பதாகும். இந்த நிலைமையைப் பாரதியார் தமது 'பாரதமாதா திருப்பள்ளி யெழுச்சி' யில் குறிப்பிடுகிறார் :

பொழுது புலர்ந்தது ; யாம்செய்த தவத்தால்
புன்மை யிருட்கணம் போயின யாவும் ;

எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கிய தறிவெனும் இரவி ;

தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்துநிற் கின்றோம் ;

விழிதுயில் கின்றனை இன்னும்எம் தாயே !
வியப்பிது காண் ! பள்ளி யெழுந்தரு ளாயே !

# அத்தியாயம் 10

# புதிய இந்தியா

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஆசியாக் கண்டத்திலே ஒரு புதிய உணர்ச்சி தோன்றியது. ஜப்பான் ஐரோப்பிய தேசமாகிய ரஷ்யாவைப் போரில் முறியடித்து வலிமை மிகுந்த நாடாகி முன்னணிக்கு வந்ததும், அந்தப் பதவியை ஒப்புக்கொண்டதன் அறிகுறியாகப் பிரான்சு முதலிய நாடுகள் ஜப்பானுடன் நேச ஒப்பந்தம் செய்து கொண்டதும் இந்தியாவிலும் தேசீய உணர்ச்சிக்குத் தூண்டுகோலாயின. ஐரோப்பாவில் பிறந்த சுதந்திரக் கருத்துக்களும் இந்திய தேசீய இயக்கத்திற்கு ஆதரவளித்தன. ஐரோப்பியர்களின் சுதந்திரதாகத்தைப் பாரதியார்,

மேற்றி சைப்பல நாட்டினர் வீரத்தால்
போற்றி நின்னைப் புதுநிலை யெய்தினர்;
கூற்றி னுக்குயிர் கோடி கொடுத்தும்நின்
பேற்றி னைப்பெறு வேமெனல் பேணினர்

என்று பாராட்டியுள்ளார். இவ்விதமாக வளர்ந்து கொண்டிருந்த தேசீய உணர்ச்சியை அரசப்பிரதிநிதி கர்ஸன் பிரபுவின் வங்காளப்பிரிவினை முதலான சர்வாதிகாரச் செயல்கள் தீவிர உணர்ச்சியாக்கி விட்டன. இதற்கு ஒரு சமய சஞ்சீவியாக உதவியது, 1906-ம் ஆண்டு முடிவில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸில், தாதாபாய் நவுரோஜி தலைமை வகித்து நமது அரசியல் குறிக்கோளைக் குறிப்பிட உபயோகித்த '**சுயராஜ்யம்**' என்னும் வார்த்தை. இப்போதுதான் இது முதன் முதல் உபயோகிக்கப்பட்டது. இதைஇந்தக் காங்கிரஸில் கலந்து கொண்ட பாரதியார், "பேச ஓர் வார்த்தை தாதா

சொல்லிவிட்டார்'' என்று 'நாம் என்ன செய்வோம்!' என்ற பாட்டில் குறிப்பிடுகிறார். தாதாபாய் நவுரோஜி யைக் குறித்துத் தமது நெஞ்சிலே பதிந்த உணர்ச்சிகளைப் பின்வரும் பாடல்களில் பதிவு செய்திருக்கிறார் :

கல்வியைப்போல் அறிவும்,அறி வினைப்போலக்
கருணையும், அக்கருணை போலப்

பல்விதஊக் கங்கள்செயும் திறனுமொரு
நிகரின்றிப் படைத்த வீரன்,

வில்விறலாற் போர்செய்தல் பயனிலதாம்
எனஅதனை வெறுத்தே உண்மைச்

சொல்விறலாற் போர்செய்வோன், பிறர்க்கன்றித்
தனக்குழையாத் துறவி யாவோன்.

மாதா,வாய் விட்டலற, அதைச்சிறிதும்
மதியாதே வாணாள் போக்கும்

தீதாவார் வரினும் அவர்க் கினியசொலி
நன்குணர்த்தும் செவ்வி யாளன்,

வேதாவா யினும் அவனுக் கஞ்சாமே
உண்மைநெறி விரிப்போன், எங்கள்

தாதாவாய் விளங்குறுநல் தாதாபாய்
நவுரோஜி சரணம் வாழ்க !

இந்தக் காங்கிரஸிலேயே அரசியல் மிதவாதிகளுக்கும் அமிதவாதிகளுக்கும் இடையேயுள்ள கருத்துவேற்றுமை கள் வெளிப்படையாக மூண்டெழுந்தன. பொதுவாக இளைஞர்கள், 'அமிதவாதம்' என்று அந்நாளில் குறிக் கப்பட்ட தீவிர தேசபக்திக் கொள்கைகளை உற்சாகமாய் வரவேற்றனர்.

1907-ம் ஆண்டில் பாலகங்காதர திலகரின் தலைமை யில் தீவிர தேசபக்திப் பிரசாரம் நாடு முழுவதும் நடை பெற்றது. தமிழகத்தில் தீவிர தேசீயக் கொள்கைகளைப்

பரப்பியவர்களில் முதன்மையானவர் 'கப்பலோட்டிய தமிழன்' என்று குறிக்கப் பெறும் வ. உ. சிதம்பரம் பிள்ளை. கவி சுப்பிரமணிய பாரதியாரும் அத்தகைய பிரசாரத்திற்குப் பேராதரவளித்தார். சிதம்பரம் பிள்ளையும் அவர் தோழரான சுப்பிரமணிய சிவாவும் சொல்மாரி பொழிந்து வளர்த்த வீரஞ் செறிந்த தேசீயக் கொள்கைகளுக்குப் பாரதியார் தமது கவிமாரியாலும், புதிய 'இந்தியா' பத்திரிகை வாயிலாகவும் பெருந்தொண்டாற்றினர். அரவிந்த கோஷால் ஆங்கிலத்தில் நடத்தப்பெற்ற 'வந்தே மாதரம்' என்ற பத்திரிகை போல் தமிழ் நாட்டிலே தீவிர தேசீய உணர்ச்சியைப் பரப்பி மக்களுக்குப் புத்துயிரளித்தது பாரதியாரின் 'இந்தியா'. இப்பத்திரிகையின் வாயிலாகப் பாரதியாரின் அருமையான தேசீயப் பாடல்களும் நாடெங்கும் பரவலாயின. இவ்விதமாகப் புதிய தேசீயக் கொள்கைகள் தமிழருள்ளத்திலும் ஒருவகைக் கொந்தளிப்பை உண்டாக்கியபோது விபினசந்திர பாலர் என்ற வங்கநாட்டுப் பேரறிஞர் சென்னைக்கு வந்து திருவல்லிக்கேணிக் கடற்கரையில் தொடர்ச்சியாகச் சொற்பொழிவுகள் செய்தார்.

இவரது வருகைக்கு ஜி. சுப்பிரமணிய ஐயர், பாரதியார் ஆதியோர் முயற்சி காரணமாயிற்று. இக்கடற்கரைச் சொற்பொழிவுகளை நேரில் கேட்டுக் கேட்டு அனுபவித்த திரு. வி. கலியாண சுந்தரனர் தமது 'வாழ்க்கைக் குறிப்புக்'களில் பின்வருமாறு குறிப்பிடுகிருர்: "நீர்க்கடல் ஒரு பக்கம்; ஜனக்கடல் இன்னெரு பக்கம். நடுவண் சிறு தீவென விளங்கியது மேடை; அதிலே பாலர் பொழிந்தார் அமிழ்தம்; சொல்லமிழ்தம்; வீரச்சுவை அமிழ்தம்......... மனிதக் கடலில் அமைதி. புலன்களெல்லாம் செவியைச் சேர்ந்தன........அந்நாளில் நாவன்மையில் சுரேந்திரநாதருக்கு அடுத்தபடி முன்னின்றவர் பாலரே. அக்காலத்தில் ஒலி பெருக்கி இல்லை. பாலருக்கு ஒலி பெருக்கி

எற்றுக்கு?.........ஒலி பெருக்கி பெருகப் பெருகப் பாலர் போன்ற நாவலர் தோன்றுவதும் அரிதாயிற்று. அப்பொழுது ஒலி பெருக்கி பாலரைக் கண்டிருப்பின், அஃது ஒலி சுருக்கியாய் ஒடுங்கும். பாலர் சொற்பொழிவு எனக்கு விற்பொழிவாகத் தோன்றியது. காண்டீபன் விற்பொழிவைச் சொற்பொழிவாக நிகழ்த்தப் பாலராக வந்தான் என்று கூறினால் என் உள்ளம் நிறைவடையும். பாலர் பேச்சை நேரில் கேட்ட காது இவ்வாறு உரைக்க உந்துகிறது. மெஸோரி-மெஸஸ்பி எத்தகைக் காட்சியளிக்கும்? பேரொலி! பெரு வெள்ளம்! பாலர் சொற்பெருக்குகள் கடலாயின; ஆவியாயின; மேகமாயின; மழையாயின. வறண்ட தென்னாடு பசுமையுற்றது.'' ஆம்; தெற்குக் கோடியான திருநெல்வேலிவரை யுள்ள மக்களின் மனப்பான்மை விபின சந்திர பாலரின் சென்னைக் கடற்கரைச் சொற்பொழிவுகளுக்குப் பின் பெரிதும் மாறிப்போயிற்று. பாரதியாரின் தேசபக்திக் கொள்கைகளும் விபின சந்திரரின் சென்னை விஜயத்தால் புரட்சிகரமான மாறுதலை அடைந்துவிட்டன எனலாம். தமிழகம் ஒரு புதிய சுதந்திர ஆவேசம் பெற்றது. அரசாங்கம் பலவந்தமாக விபினசந்திரரைச் சென்னை மாகாணத்தை விட்டு வெளியேற்றியது.

அந்நாளில் தெய்வவாழ்த்தைப் போல் சில பள்ளிக்கூடங்களில் அரச வாழ்த்தும் முக்கியமாய்க் கருதப்பட்டது. திடீரென்று பள்ளிச் சிறுவர்கள்,

வாஅழ்க திலகன் நாமம்
வாழ்க வாழ்கவே;
வீஇழ்க கொடுங்கோன்மை
விழ்க வீழ்கவே!

என்று பாடினார்களென்றால், உபாத்தியாயர்களுக்கு எவ்வளவு அதிசயம், எவ்வளவு அச்சம் ஏற்பட்டிருக்க வேண்டும்! எனினும் பிள்ளைகள் உற்சாகமாய்,

நாலு திசையும் ஸ்வாதந்தர்ய
நாதம் எழுகவே !

என்று பாடத் தொடங்கி விட்டார்கள். இராச வாழ்த்துக்குப் போட்டியாகப் பாரதியார் பாடிய 'திலகர் வாழ்த்து' இளந் தமிழகத்தை வசீகரித்து விட்டது. 'பிரிட்டிஷ் நாடுகளிலோ, குடியேற்ற நாடுகளிலோ நடைபெறுவது போன்ற சுயராஜ்யத்'தை நமது குறிக்கோளாகத் தாதாபாய் நவுரோஜி சுட்டிக்காட்டினரென்றால், திலகர் பெருமான் பரிபூர்ண சுயராஜ்யத்தைத் தமது பிறப்புரிமையாக வற்புறுத்தினர். நம் தேசத்தந்தையாகிய காந்தியடிகள் கட்டிய சுயராஜ்யமாளிகைக்கு அடிப்படை அமைத்தவர் திலகரென்று கருதலாம். இவரைப் பின்பற்றியே பாரதியாரும் வ. உ. சிதம்பரம் பிள்ளையும் தமிழ் நாட்டிலும் தீவிர அரசியற் கொள்கைகளைப் பரப்பலாயினர்,

வீரமிக்க மராட்டியர் ஆதரம்
மேவிப்பாரத தேவி திருநுதல்

ஆரவைத்த திலக மெனத்திகழ்
ஐயன் நல்லிசைப் பாலகங் காதரன்

சேரலர்க்கு நினைக்கவுந் தீயென
நின்றஎங்கள் திலக முனிவர்கோன்

சீரடிக்கம லத்தினை வாழ்த்துவேன்
சிந்தை தூய்மை பெறுகெனச் சிந்தித்தே

என்பதில் பாரதியாரின் திலக பத்தியைக் கண்டு கொள்ளலாம்.

லாலாலஜபதிராயும் புதிய தேசீயக் கொள்கைகளுக்கு அரணுயிருந்தார். இவர் தயானந்தரின் ஆரிய சமாஜக் கொள்கையினராகிச் சமுதாயத் தொண்டில் ஈடுபட்டிருந்தார். இவர் நாளடைவில் திலகர், அரவிந்தர், விபின

சந்திர பாலர் ஆகியவர்களின் தீவிர தேசீயக் கொள்கைகளை ஆதரிக்கலானார். 1905-ம் ஆண்டில் கர்ஸன்பிரபு இந்தியாவை விட்டுப் போய்விட்டபோதிலும் அதே அடக்குமுறை ஆட்சி தொடர்ந்தே நடைபெற்றதால் லஜபதிராய் திடீரென்று நாடு கடத்தப்பெற்றார். இவரை நாடுகடத்தியவிதமே அக்காலத்து விபரீத ஆட்சிமுறைக்கு ஒரு விநோதமான சான்றாகும். ஒரு வேலைக்காரன் வந்து லஜபதிராயிடம் "உங்களைப்பார்க்க இருவர் வந்திருக்கிறார்கள்" என்றான். வந்தவர்கள், கமிஷனரும் டெபுடி கமிஷனரும் லஜபதிராயை அவசரமாய்ப் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தனர். நீதிமன்றத்தில் தமக்கு வேலையிருப்பதாகவும், சற்றுப் பொறுத்துத் தாமே கமிஷனரைப் போய்ப் பார்ப்பதாகவும் லஜபதிராய் பதிலளித்தார். அதற்கு அவர்கள், சில நிமிஷங்களில் அவர் கமிஷனரைப் பார்த்துவிட்டுப் பிறகு நீதிமன்றத்திற்குப் போகலாம் என்றனர். லஜபதிராயின் 'வண்டி' புறப்பட்டதும் இரண்டு ஐரோப்பிய அதிகாரிகள் பளிச்சென்று ஏறிக்கொண்டனர். கமிஷனரின் அலுவலகத்தில் கவர்னர் ஜெனரல் ஒரு 'வாரண்டு' பிறப்பித்துள்ளார் என்ற செய்தி இவருக்குத் தெரிவிக்கப்பட்டது. 1857-ம் ஆண்டுச் சிப்பாய்க் கலக நினைவு இன்னும் அதிகாரிகளின் உள்ளங்களில் பசுமையாகவே இருந்தது. லஜபதிராயின் தூண்டுகோலால் சிப்பாய்க்கலகம் மீண்டும் கிளம்பக் கூடும் என்றே அவர்கள் நம்பினர். கர்ஸன் பிரபுவுக்குப் பின், முன்பு கவர்னர் ஜெனரலாயிருந்த மிண்டோ மரபினரான இரண்டாம் மிண்டோ பிரபு அரசப்பிரதிநிதியாக வந்திருந்தான். பஞ்சாபில் இராசநிந்தைப் பிரசாரம் செய்யப்படுகிறதென்றும், இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பதை எதிர்த்துச் சொற்பொழிவுகள் செய்யப்படுகின்றன என்றும், இத்தகைய செயல்களை லஜபதிராயே திரைமறைவிலிருந்து தூண்டி விடுகிறாரென்றும்

பஞ்சாபின் லெப்டினென்டு கவர்னர் அனுப்பியிருந்த ஒரு கடிதத்தை மிண்டோ பிரபு அப்போது இந்தியா மந்திரியாக இருந்த மார்லிக்குத் தன் குறிப்பு ஒன்றுடன் அனுப்பியிருந்தான். லஜபதிராயை நாடு கடத்துவதற்குத் தான் அங்கீகாரம் அளித்து 'வாரண்டு' பிறப்பித்தபின்பே அரசப் பிரதிநிதி இந்தியா மந்திரிக்குத் தகவல் தெரிவித்தான். இந்தியா மந்திரி மார்லியும் இந்த நடவடிக்கையை ஆதரித்து, லஜபதிராயை நாடு கடத்திபதற்குரிய காரணங்களை வெளியிடுவது பொது நன்மைக்குப் பொருந்துவதாகாது என்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்துப் பொதுமக் கட்சபையில் கூறினான். உண்மையில் அக்காரணங்களை இந்தியா மந்திரியே அறிந்திருக்கவில்லையென்பது பின்னர் நன்கு வெளிப்பட்டது.

ஏற்கெனவே திலகரும் விபினசந்திரரும் லஜபதிராயும் தேசீய மும்மணிகளாகப் போற்றப்பட்டு வந்தனர். பாஞ்சாலச் சிங்கம் நாடு கடத்தப்பெற்றாரென்ற செய்தி இளைஞருள்ளங்களையும் தீவிர தேச பக்தருள்ளங்களையும் உருக்கிவிட்டது. பாரதியாரின் கவியுள்ளமோ தேசீய கீதங்களில் சில கண்ணிகளை நமக்குப் புனைந்து தந்திருக்கிறது:

ஏதெல்லாம் பாரதத்தே இந்நாள் நடப்பனவோ?
ஏதெல்லாம் யானறியா தென்மனிதர் பட்டனரோ?

என்னை நினைந்தும் இரங்குவரோ? அல்லாது
பின்னைத் துயர்களிலென் பேரும்மறந் திட்டாரோ?

தொண்டுபட்டு வாடுமென்றன் தூய பெருநாட்டில்
கொண்டுவிட்டங் கென்னையுடன் கொன்றாலும் இன்புறுவேன்.

என்னும் கண்ணிகளில் லஜபதிராயின் தீவிர நாட்டுப் பற்றும் வீர மனப்பான்மையும் தக்க தமிழ்க் கவியுருவம் பெற்றுவிட்டன.

1907-ம் ஆண்டின் இறுதியில் சூரத்தில் நடந்த காங்கிரஸுக்குப் பாரதியார், 'கப்பலோட்டிய தமிழர்' என்று இந்நாளில் அழைக்கப்படும், சிதம்பரம் பிள்ளை முதலானவர்கள் போய் வந்தனர். அந்தக் காங்கிரஸ் தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் ஏற்பட்ட கொள்கை-முரண்பாட்டினால் குழப்பமுற்றுக் கலைந்தது. பிறகு தீவிரவாதிகள் திலகர் தலைமையில் கூடித் தங்கள் முற்போக்குக் கொள்கைகளைத் தேச மக்களிடையே விரைவில் பரப்ப விரும்பினர். தமிழகத்திலே புதிய கட்சிக்கு ஜன சக்தியைத் திரட்டும் பொறுப்பு சிதம்பரனாரிடம் ஒப்புவிக்கப்பட்டது. "தென்னாட்டில் சிதம்பரம் பிள்ளையே சிறந்த வீரரென்பது திலகரின் கருத்து" என்று ராஜாஜி ஒருசமயம் சென்னைப் பொதுக்கூட்டம் ஒன்றில் கூறியதுண்டு. அத்தகைய நம்பிக்கை வாய்ந்த திலகரின் சீடரைக் குறித்துத் 'தென்னாட்டுத் திலகர்' என்றே அந்நாளில் பொதுமக்கள் பெருமையுடன் பேசிக்கொண்டனர்.

குழப்பத்தில் முடிவுற்ற போதிலும் சூரத்துக் காங்கிரஸ் திலகரின் தீவிரக் கொள்கைகள் அதிதீவிரமாய்த் தேசமெங்கும் பரவியதற்கு உதவியது என்பதில் ஐயமில்லை. திலகர் கொள்கைகளில் பாரதியாருக்குப் பற்று அதிகரித்ததால் தீவிர தேச பக்தர்களைப் போற்றியும் மிதவாத அரசியற் கொள்கைகளைப் பரிகசித்தும் பாரதியார் தேசீய கீதங்கள் பாடலானார்; ஆவேசமாக வசனத்தின் வாயிலாகவும் சுதந்திரக் கனற் பொறிகளைத் தமிழ் நாடெங்கும் வீசலானார்.

பாரதியாரின் நண்பரான வ. உ. சிதம்பரம் பிள்ளை தென்பாண்டி நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் வீரபாண்டியக் கட்டபொம்மன் தோன்றிய பாஞ்சாலங்குறிச்சிக்கும், பாரதியார் பிறந்த எட்டையபுரத்திற்கும் இடையேயுள்ள ஓட்டப்பிடாரம் என்னும் சிற்றூரில் தோன்றி வழக்கறிஞராகத் தூத்துக்குடியில் பெரும் புக

மும் பெற்றிருந்தார். வங்கப்பிரிவினையால் கிளர்ச்சி அதிகரித்த காலத்தில் சிதம்பரனார் வழக்கறிஞர் தொழிலை விட்டு ஏகாதிபத்திய எதிர்ப்புப்போரில் முனைந்து நின்றார். சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்றை நிறுவிப் பதிவு செய்துகொண்டு புதிய கப்பல்கள் வாங்கிச் சுதேச வாணிபத்தையும் வளர்க்க முயன்றார்; கைத்தொழில் – விவசாய வளர்ச்சியிலும் சிந்தை செலுத்தினார். இங்ஙனம் தேசீய மறுமலர்ச்சிக்குப் பணிபுரிந்து வந்ததுடன், திருநெல்வேலியில் **தேசாபிமான சங்கம்** ஒன்று நிறுவி அடிக்கடி பொதுக் கூட்டங்கள் கூட்டித் திலகரின் கொள்கைகளைப் பரப்பி வந்தார். இப்பிரசாரத் தொண்டில் துறவி சுப்பிரமணிய சிவாவும் பெரும் பங்கெடுத்துக் கொண்டார். 1908-ம் ஆண்டில் அரசாங்கம் சிதம்பரனார்மீது அரச நிந்தனை வழக்குத் தொடர்ந்தது. நீதியின் பெயரால் சிதம்பரனாருக்கு ‘இரட்டை ஆயுள் தண்டனை’ விதிக்கப்பட்டது. இவர் சிறையில் பட்ட துன்பம் கொஞ்சமன்று. இந்தத் தேசபக்தரின் இப் பெருந்தியாகத்தை,

> கப்பலை யோட்டிக் கடுங்காவல் தண்டனையில்
> உப்பிலாக் கூழுண் டுடல்மெலிந்தோன்—ஒப்பிலாச்
> செந்தமிழ்ச் செல்வன் சிதம்பரனை அன்போடு
> சிந்தனைசெய் நெஞ்சே தினம்.

என்ற வெண்பாவில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாராட்டிப் பாடியிருக்கிறார். இந்தக் கொடுந் தண்டனையைக் கேள்வியுற்ற இந்தியா மந்திரி மார்லியும் உளம் பதைத்து அரசப்பிரதிநிதி மிண்டோ பிரபுவுக்கு எழுதிய கடிதத்திலே கொடுமையான அத்தகைய செயல்களை எக்காரணங் கொண்டும் தான் ஆதரிக்க முடியாது என்றும், அந்தப் பிழைகளையும் அத்தகைய மூடத்தனங்களையும் அரசப்பிரதிநிதி உடனே கவனிக்க வேண்டுமென்றும், மிதமிஞ்சிய கொடுமையால் ஒழுங்கை நிலைநிறுத்த

முடியாதென்றும், 'வெடிக் குண்டுக்கு (அராசக இயக்கம் பரவுவதற்கு) அதுவே வழியாகும்' என்றும் குறிப்பிட்டதுண்டு.

இந்தியா மந்திரி எதிர்பார்த்தவாறே 1908-ம் ஆண்டு முதல் 1913-ம் ஆண்டு வரை வெடிக்குண்டு இயக்கம் நாட்டில் பரவி அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் ஒருங்கே கேடு விளைத்தது. அதி தீவிர அரசியல்வாதிகளை அரசாங்கத்தின் அடக்குமுறை அடக்கிவிட்டது. சிதம்பரனார் தண்டனை அடைந்த அதேசமயம் பாலகங்காதர திலகரும் அரச நிந்தனைக் குற்றத்திற்காக ஆறு ஆண்டுத் தீவாந்தர சிட்சையும் அபராதமும் விதிக்கப்பட்டார். குருவும் சீடரும் சிறை புகுந்தது தமிழ் நாட்டிலும் வட நாட்டிலும் பேரதிர்ச்சியை உண்டாக்கிவிட்டது. சிதம்பரம் பிள்ளையின் தண்டனை ஆறு வருடக் கடுங்காவலாகக் குறைக்கப்பட்ட போதிலும் அரசியல் கைதிகளுக்கெனத் தனி உரிமை ஒன்றும் வழங்கப்படாத அந்நாளில் அவர் கேழ்வரகுக் கூழுண்டு செக்கிழுத்தல் முதலான வேலைகளையும் செய்யுமாறு சிறை யதிகாரிகளால் கட்டளையிடப்பட்டார். சிதம்பரனுருக்கு விதிக்கப்பட்ட தண்டனை போன்ற கொடுஞ்செயல்கள் தேசபக்த வெறிகொண்ட இளைஞர்களிடையே பெருஞ் சீற்றத்தையும் பழிக்குப்பழி வாங்கும் உணர்ச்சியையும் தூண்டிவிட்டன. பத்திரிகைகளும் சுதந்திரமிழந்து தவித்தன. பொதுஜனத் தலைவர்கள் அதிகாரிகளாலும், அதிகாரிகள் பொது மக்களாலும் அவமதிக்கப்பட்டனர். போலீஸ் ஒற்றர்கள் மாறுவேடம் பூண்டு திரிந்தனர். பள்ளிப் பிள்ளைகளும் பல்வகைத் தொந்தரவுகளுக்கு இலக்காயினர். பொதுக் கூட்டங்களை அதிகாரிகள் திடீரென்று தடுத்து விடுவார்கள், அல்லது கலைத்து விடுவார்கள். இந்த நிலையில் அரச நிந்தனை உள்ளுக்குள்ளே அராசக உணர்ச்சியாகப் பரவி அரசியல் — கொலைகளுக்கும் கொள்ளைகளுக்கும் காரணமாயிற்று.

இந்தப் பரிதாப நிலை குறித்துப் பாரதியார் நெஞ்சு புழுங்கிக் கண்ணீர் வடித்துக் கதறிப் பாடிய கண்ணிகள் '**சுதந்திரப் பயிர்**' என்னும் தலைப் பெயருடன் தேசிய கீதங்களினிடையே காணப்படுகின்றன.

தண்ணீர்விட் டோவளர்த்தோம்?
சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம்;
கருகத் திருவுளமோ?

மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில்
நோவதுவும் காண்கிலையோ?

எண்ணற்ற நல்லோர்
இதயம் புழுங்கிஇரு
கண்ணற்ற சேய்போல்
கலங்குவதும் காண்கிலையோ?

என்ற கண்ணிகளில் அக்காலத்து நாட்டுநிலையை ஒருவாறு கண்டுகொள்ளலாம்.

பாரதியாரின் 'இந்தியா' பத்திரிகை அதி தீவிரமாக அரசியல் – பிரசாரம் செய்துவந்ததால், அப் பத்திரிகை வெளியாவதற்குக் காரணமா யிருந்தவர்களைக் கைது செய்யுமாறு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. பாரதியார் 'இந்தியா' பத்திரிகையின் ஆசிரியராக இருந்த போதிலும் ஆசிரியரென்று வேறொருவர் தம் பெயரைப் பதிவு செய்துகொண்டிருந்ததால் அவரே கைது செய்யப் பட்டார். பிறகு பாரதியார் இரகசியமாகப் புதுச்சேரி போய்ச் சேர்ந்தார். 'இந்தியா' பத்திரிகை புதுச்சேரியிலிருந்து வெளிவந்தது. ஆனால் 1909-ல் இந்தப் பத்திரிகை இந்தியாவுக்குள் வரக்கூடாதென்று அரசாங்கத்தால் தடை விதிக்கப்பட்டது. இதனால் இப் பத்திரிகை

நின்றுபோயிற்று. ஒரு வெடிக்குண்டு வழக்கில் சிக்குண்டு விடுதலையடைந்த அரவிந்தகோஷ் '**கர்மயோகின்**' என்ற ஆங்கிலப் பத்திரிகையைக் கல்கத்தாவிலிருந்து கொஞ்சகாலம் நடத்திவந்தார். அப்போது பாரதியாரும் '**கர்மயோகி**' என்ற பத்திரிகையையும், பிறகு ஒரு தினசரிப் பத்திரிகையையும் புதுச்சேரியில் தொடங்கினர். ஆனால் இத்தகைய பத்திரிகைத் தொண்டுகள் 1910-ம் ஆண்டுக்குள்ளேயே முடிவுற்றன. 1911-ல் அரவிந்தகோஷ் புதுவைக்கு வந்தார். அதற்குச் சற்று முன்பே லண்டன்மாநகரில் கைதியாகும் நிலையிலிருந்த வ. வே. சு. ஐயரும் மாறுவேடத்தில் பல விபத்துக்களையும் சமாளித்துக்கொண்டு புதுவைக்கு வந்துவிட்டார். வ. வே. சு. ஐயர் அரவிந்தர் ஆகிய இருவர் கூட்டுறவும் பாரதியாருக்கு ஆறுதல் அளித்து இவரது கவித்திறனை நன்கு கனியச்செய்தது எனக் கருதலாம்.

இந்தியாவிலுள்ள தேசீயக் கிளர்ச்சியை அடக்குவது அசாத்தியமென்று அரசப் பிரதிநிதி மிண்டோ பிரபுவும் இந்தியா மந்திரி மார்லி பிரபுவும் 1909-ம் ஆண்டில் '**இந்திய சபைச் சட்டம்**' என்னும் சட்டத்தை ஏற்படுத்தினர். அச்சட்டத்திற்கிணங்க ஒவ்வொரு மாகாணத்திலும் சட்டசபை விரிவு செய்யப்பட்டது. சபையின் உறுப்பினரில் பலர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், அரசப் பிரதிநிதியின் நிர்வாக சபையிலும் இந்தியா மந்திரி சபையிலும் இந்தியர் ஒருவர் உறுப்பினராக இருக்க வேண்டுமென்றும் தீர்மானமாயிற்று. இந்த அரசியல்—சீர்திருத்தத்தைக் கொண்டு அரசாங்கம் மிதவாதிகளை அணைத்துக்கொள்ளவும் அமிதவாதிகளை அடக்கி ஒடுக்கவும் முனைந்தது. ஆனால் இந்த இராசதந்திரக் கொள்கை வெற்றிபெறவில்லை. 1910-ல் ஏழாம் எட்வர்ட் சக்கரவர்த்தி இறந்துபோன பின் பட்டத்திற்கு வந்த ஜார்ஜ் சக்கரவர்த்தி 1911-ம் ஆண்டின் இறுதியில் டெல்லி நக

ருக்கு வந்து அங்கே இந்திய சக்கரவர்த்தியாக முடி சூட்டப் பெற்றார். அப்போது பிரிக்கப்பட்டிருந்த வங்காளம் ஒன்று சேர்க்கப்பட்டதாகச் சக்கரவர்த்தி விளம்பரப்படுத்தினார். அதுமுதல் டெல்லியே இந்திய அரசாங்கத்திற்குத் தலைநகரமாயிற்று. எனினும் அடக்குமுறைப் புயல் கடுமையாக நாட்டில் வீசிக்கொண்டுதானிருந்தது. அரசியல் வானம் இருண்டே கிடந்தது. ஆனால் சொந்த நாட்டில் பிழைக்க வழியின்றி அயல்நாடுகளுக்குச் சென்றிருந்த நம்மவரும் இந்நாட்டின் அரசியல்-கிளர்ச்சியில் அக்கறை கொண்டனர். அந்த நாடுகளிலும் நம்மவர் நிலைமை மோசமாகவேயிருந்தது. உதாரணமாகத் தென்னாப்பிரிக்காவுக்குப் போயிருந்த நம்மவர் சரியாக நடத்தப்படவில்லை. வெள்ளையர் தென்னாப்பிரிக்காவைத் தமது நாடாக்கிவிடப் பெருமுயற்சி செய்தனர். '**ஆசிய மக்கள் பதிவுச் சட்டம்**' என்னும் ஒரு சட்டத்தின்படி தென்னாப்பிரிக்க அரசாங்கம் இந்தியரனைவரும் கைதிகளைப்போலப் பதிவுச் செய்து கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்தது. காந்தியடிகள் சட்டத்தை மீறிச் சிறை சென்றார். அரசினருடன் ஒத்துழையாமைப் போர் மூண்டது. சத்திய நெறியினின்று தவறாத முறையில் அடிகள் திட்டமிட்டு நடத்திய பொறுமைப் போரே சத்தியாக்கிரக இயக்கமாயிற்று. அப்போது இந்தியாவில் அரசப் பிரதிநிதியாக இருந்த ஹார்டிஞ்சு பிரபுவும் தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகிகளை ஆதரித்து ஒத்துழையாமை இயக்கத்தையும் வரவேற்றுப் பேசியதுண்டு. அச்சமயம் காந்தியடிகளின் சத்தியாக்கிரகம் வெற்றி பெற்றது.

வெளிநாடுகளிலுள்ள இந்தியர்களின் தன்மானம் சற்று உயர்ந்தது. காந்தியடிகளின் அந்த வெற்றி உலகப் பெருமக்களின் கருத்தைக் கவர்ந்தது. ரஷ்யப் பேரறிஞரான டால்ஸ்டாய் அந்த வெற்றியைப் பாராட்டிக் காந்தியடிகளுக்கு எழுதிய ஒரு கடிதத்தில், "உங்கள் தலைமை

யில் நடந்த அறப்போராட்டம் உலகில் நடந்து வரும் எல்லாச் செயல்களினும் மேலானதென்றும், மிகவும் முக்கியமானதென்றும் நாங்கள் கருதுகிறோம்" என்று குறிப்பிட்டார். அந்தச் சட்ட மறுப்புப்போரிலே சீற்றம், பகைமையுணர்வு, பழிக்குப்பழி முதலிய கெட்ட குறிகள் இல்லாமல், பட்டினிநோன்பு வேலைநிறுத்தம் சிறைபுகுதல் முதலியன கருவிகளாகப் பயன்பட்டதால், டால்ஸ்டாயின் உள்ளம் திருப்தியடைந்தது. தாம் சிறை புகுவதற்குக் காரணமாயிருந்த ஜெனரல் ஸ்மட்ஸ் துரைக்குக் காந்தியடிகள் சிறைக்கோட்டத்திலே ஒரு மிதியடி செய்து பரிசாக அளித்தாரென்றால் அடிகளின் அறப்போர்க் கொள்கையை என்னென்பது?

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்

என்ற கொள்கையை அரசியலிலும் பிணைத்திடத் துணிந்த அடிகளின் பெருமையை அந் நாளிலேயே இந்தியாவும் உலகமும் ஒருவாறு உணர்ந்துகொண்டன. இவ்விதமாகத் தென்னாப்பிரிக்காவில் தமது தொண்டினை ஒருவாறு முடித்துக்கொண்டு காந்தியடிகள் தாய் நாட்டுக்குத் திரும்பி வந்து இங்கே கோபாலகிருஷ்ண கோகலேயைப் பின்பற்றித் தொண்டாற்ற விரும்பினார். அப்போது கோகலே இங்கிலாந்திலிருந்ததால் அவரைக் கண்டு பேசியபின் தாய்நாடு செல்லவேண்டுமென்று கருதி 1914-ம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவில் கப்பலேறினார்.

காந்தியடிகள் சீமை வந்து சேர்வதற்கு முன்பே முதலாவது உலகப்போர் மூண்டுவிட்டது. ஜெர்மன் சக்கரவர்த்தியாக இருந்த கெய்ஸர் ஐரோப்பா முழுவதையும் அடிமைப் படுத்திப் பேரரசு புரிய விரும்பினான். அந்த உலகப்போரைப் பற்றியும், அதில் இந்தியர் எத்தகைய பங்கு கொள்ளவேண்டுமென்பதைப் பற்றியும் அடிகள்

சில அன்பர்களுடன் கலந்து பேசினர். போரில் இந்தியர்கள் ஆங்கிலேயருக்கு உதவவேண்டுமென்பதும், அத்தகைய அன்பினால் ஆட்சியாளரிடமிருந்த குறைகளைப் போக்க முடியுமென்பதும் அந் நாளில் காந்தியடிகள் கருத்து. இவர் இந்தியாவுக்குத் திரும்பியதும் பூனாவிற்குச் சென்று கோகலேயுடன் தங்கி அவருடனும், அவரது 'இந்திய ஊழியர் சங்க'த்தின் உறுப்பினர்களுடனும் எதிர்காலத் தொண்டுபற்றிக் கலந்து உரையாடினர். பிறகு ஆமதாபாத் நகரம் சென்று ஓர் ஆச்சிரமம் அமைத்துக்கொண்டு நாட்டுத்தொண்டு புரியவிரும்பினர். இந்தியா வந்த பின்பும், உலகப்போரை முன்னிட்டு ஆங்கிலேயர்களுடன் மனமுவந்து ஒத்துழைப்பது அவர்கள் உள்ளத்தை மாற்றிவிடும் என்றே நம்பினர். இந்த நம்பிக்கையுடன் ஆயிரக்கணக்கான மக்களைப் படைக்குத் திரட்டி அனுப்பினர். இப்பணியை மெச்சி அரசப் பிரதிநிதி 'கேஸரி ஹிந்த்' பதக்கத்தையும் காந்தியடிகளுக்கு அளித்தார். ஆனல் நாளடைவில் காந்தியடிகளின் நன்னம்பிக்கை குறைந்துபோயிற்று. இதற்கு முன்பே தண்டிக்கப்பட்டு மாண்டலேயில் ஆறுண்டுகளாகச் சிறையிருந்த பாலகங்காதர திலகரும் விடுதலை பெற்றுவிட்டார்.

இதற்கும் முன்பே 1913-ம் ஆண்டில் அனிபெஸன்ட் அம்மையார் இந்திய அரசியல்-கிளர்ச்சிக்கு ஆதரவளித்து 'ஹோம்ரூல்' என்னும் பெயருடன் சுதந்திர இயக்கத்தைப் புத்துயிரூட்டி வளர்க்கலானர். பாலகங்காதர திலகரும் பெஸன்ட் அம்மையுடன் ஒத்துழைக்கலானர். பெஸன்ட் அம்மையை 'வஸந்தா' என்றும், 'வஸந்தம்மை' என்றும் தமிழர்கள் வாய்குளிர மனங்குளிர அழைத்து வந்தார்கள். விவேகானந்தர் அமெரிக்காவில் இந்துசமயத்தின் சிகரத்தை அதிசயமாய்க் காட்டிக்கொண்டிருந்த காலத்தில் (1893) அனிபெஸன்ட் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். இங்கிலாந்தில் வீசியடித்த அந்த 'வாழ்க்கைப்

புயல்' இந்தியாவிலே வசீகரமான வசந்தக் காற்றாகி இந்துதர்மத்திற்குப் புத்துயிரளிக்க முயன்றது. இது பெஸன்ட் அம்மையின் திவ்ய ஞானத் திருப்பணியின் இன்றியமையாத பகுதி. 1893 முதல் 1898-ம் ஆண்டு வரை பெஸன்ட் அம்மையார் இந்தியாவிலேயே சமயத் துறையில் உழைந்துவிட்டு, அடுத்த ஐந்து ஆண்டுகளில் (1898—1903) கல்வித்துறையிலே உழைத்து வந்தார். இவரது கல்விப் பணிக்கு அடிப்படையாக உதவியதும் சமய உணர்வுதான். 1903-ல் இந்திய சமுதாயச் சீர்த் திருத்த விஷயங்களிலும் இவர் தலையிட்டார். அந்தச் சீர்த்திருத்தங்களுக்கும் தமது திவ்யஞான உணர்வினையே அடிப்படையாக அமைத்துக் கொண்டார். 1913-ல் இந்திய அரசியலில் தலையிட்டுக் கொண்டதற்கும் தூண்டு கோல் இவரது சமய உணர்ச்சியும் இந்தியாமீது இவருக் குள்ள பேரபிமானமும் தான். பெஸன்ட் அம்மையா ருக்குச் சமயம், கல்வி, சமூகம், அரசியல் என்ற நான்கு அம்சங்களும் சேர்ந்து வளர்வதுதான் தேசீய வளர்ச்சி, என்ற நோக்கத்தோடு 1914-ல் 'காமன்வீல்' என்ற ஆங்கில வாரப் பத்திரிகையை நடத்தத் தொடங்கினார். இதே ஆண்டில் 'நியூ இந்தியா' என்ற ஆங்கில தினச் செய்திப் பத்திரிகையையும் தோற்றுவித்தார்.

பெஸன்ட் அம்மையார் 'ஹோம்ரூல் லீக்' என்ற சங் கத்தைக் காங்கிரஸுக்குத் துணைக் கருவியாக ஏற்படுத்தி அரசியல்-கிளர்ச்சிக்குப் புதிய சக்தியும் புதிய வேகமும் ஊட்டினார். இதற்கும் முன்னே 'இந்திய இளைஞர் சங்கம்' (Y. M. I. A.) ஏற்படுத்தி, அதற்குச் சென்னைக் கோகலே ஹால் என்ற அழகான கட்டிடத்தையும் இனமாக அளித் தார். இந்தக் கட்டிடமும் சங்கமும் ஏற்படுவதற்கு முன், சென்னையில் வாக்குச் சுதந்திரத்துடன் தேசீயச் சொற் பொழிவு செய்வதற்கென்று கட்டிடமே கிடையாது. பொதுக் கட்டிடங்களில் அத்தகைய சொற்பொழிவுகள்

செய்வதற்கு அனுமதி கிடைப்பதில்லை. கடற்கரையில் வான விதானத்தின் கீழே தான் காரசாரமான அரசியற் பொழிவுகள் நடைபெற்றன. அந்த நிலையில் கோகலே ஹால் பெஸன்ட் அம்மையாரால் சென்னைக்குக் கிடைத்த சிறந்த பரிசுகளில் ஒன்றாகும். 1917-ல் பெஸன்ட் அம்மையாரின் தலைமையில் அடையாற்றில் 'இந்திய மாதர் சங்கம்' முதன்முதல் அமைக்கப்பட்டது. இப்படிப் பல துறைகளில் ஓய்வு ஒழிவில்லாமல் உழைத்துப் பெருங் கிளர்ச்சி செய்து வந்த பெஸன்ட் அம்மையாருக்குச் சென்னை அரசாங்கம் பல எச்சரிக்கைகள் விடுத்தது; கடைசியாக அம்மையாரையும் இவரது தளபதிகளான அருண்டேல், வாடியா ஆகியவர்களையும் உதகமண்டலத்தில் அரசாங்கம் பாதுகாப்புக் கைதிகளாக வைத்தது. அம்மையாரின் இந்தத் தியாகம் இந்தியாவின் மூலை முடுக்குகளிலும் அரசியலுணர்ச்சியைப் பரப்பிவிட்டது. இந்த நிலையில் கிளர்ச்சி மேலும் மேலும் ஓங்கவே அரசாங்கம் பெஸன்ட் அம்மையையும் இவருடைய சீடர்களையும் அதே ஆண்டில் விடுதலை செய்துவிட்டது.

உடல் நலம் இழந்தும் உளவலிமை சிறிதும் குன்றாது மீண்ட பெஸன்ட் அம்மையை மக்கள் உற்சாக வெறியுடன் வரவேற்றனர். 1917-ல் ஆகஸ்டில் பெஸன்ட் அம்மையார் இந்திய தேசீயக் காங்கிரஸின் அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். கல்கத்தாவிலே நடந்த அந்தக் காங்கிரஸில் பெஸன்ட் அம்மையார் தலைமைப் பேருரை நிகழ்த்தி, இந்தியாவின் கட்சியை உலகமெல்லாம் அறிந்து கொள்ளும்படியாகத் தெளிவுபடுத்தினார். அடுத்த ஆண்டில் (1918) காங்கிரஸின் நோக்கம் குறித்தும், 'ஹோம்ரூல்' சங்கத்தின் கொள்கை குறித்தும் நாடெங்கும் சொல்மாரி பொழிந்தார். இத்தகைய முயற்சிகளால் அரசியல்—கிளர்ச்சி பெரிதும் வளர்ச்சிபெற்றது. அப்போது அரசப் பிரதிநிதி செல்ம்ஸ்பர்ட் பிரபு; இந்தியா

மந்திரியாக இங்கிலாந்தில் வேலை பார்த்த மாண்டேகு இந்தியாவுக்கு வந்து செல்ம்ஸ்பர்ட் பிரபுவுடன் கலந்து ஆலோசித்து 1919-ல் சில அரசியல்-சீர்திருத்தங்களைச் செய்து வைத்தான். இந்தச் சீர்திருத்தங்களுக்கு மாண்ட் பர்ட் சீர்திருத்தங்கள் என்று பெயர். இதை 'இரட்டையாட்சி முறை' என்றும் சொல்வதுண்டு. 'இரட்டையாட்சி முறை' வெளியிடப்பெற்ற தினத்திலேயே பெஸன்ட் அம்மையார் இம்முறையை வன்மையாகக் கண்டித்தார். எனினும் நாளடைவில் சில மாறுதல்களுடன் இச்சீர்திருத் தங்களை ஒப்புக்கொள்வதே நலம் என்று தீர்மானித்தார். பெஸன்ட் அம்மையார் மிதவாதியாகிவிட்டார் என்று நாடு கருதியது.

அனிபெஸன்ட் அம்மையார் இந்திய அரசியலில் கலந்துகொண்ட மறுவருஷம் தொடங்கிய உலகப் பெரும் போர் சுமார் நாலரை ஆண்டுகளாக நடந்து 1918 (நவம்பரி)ல் 11-ம் மாதம் 11-ம் தேதி 11-மணிக்கு முடிவுற்றது. பர்மாவில் சிறையிருந்த பால கங்காதர திலகர் விடுதலை யடைந்ததை ஒரு மங்கள முற்குறியாகக் கருதியவர் களெல்லாம் காந்தியடிகளைப்போல் இப்பெரும்போரில் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதே நலமென்று கருதி யிருந்தனர். "பெல்ஜியத்தின் சுதந்திரத்தைக் காப்பாற் றுவதற்காக இங்கிலாந்து போரில் தலையிட்டுக்கொண் டிருக்கிறது; இங்கிலாந்துக்கு உதவி செய்தால் இந்தியா வுக்கும் சுதந்திரம் வழங்கக்கூடும்" என்று நம்பினார்கள். இப்போரில் ஜெர்மானியரின் ஆக்கிரமிப்பை எதிர்த்துச் சுதந்திர வெறியுடன் போராடி வீழ்ச்சியுற்ற சிறு நாடாகிய பெல்ஜியத்தைப் பாரதியாரின் வீர உள்ளம் வாழ்த்திப் பாடியிருக்கிறது. இந்த யுத்தத்திலே இந்தியச் சிப்பாய்களின் வீரம் உலகத்தையே பிரமிக்கச் செய்தது. ஆனால், ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா என்ற மூன்று கண்டங்களிலும் ஆங்கிலேயருடன் ஒத்துழைத்து

வெற்றி கண்ட இந்திய வீரத்திற்கும், இந்தியப் பொது மக்களும் தலைவர்களும் அளித்த ஒத்துழைப்பிற்கும் பரிசாக இங்கிலாந்து, இந்தியாவில் புதிய அடிமைச் சங்கிலிகளை அடக்குமுறைத் தொழிற்சாலையில் தயாரித்து வந்ததோ என்று பிரமிக்குமாறு, விசாரணை செய்யாமல் சிறை செய்யக்கூடிய அதிகாரத்தையும் 'ரௌலட் சட்டம்' அரசாங்கத்திற்கு வழங்கி விட்டதென்றால், நாட்டில் மனக்கசப்பும் குழப்பமும் ஏற்படாமலிருக்க முடியுமா? அந்த மனநிலையில் நம்மவர் பெஸன்ட் அம்மையின் பெரும் பணியையும் மறக்கத் தொடங்கினர். பெஸன்ட் அம்மையாரும் 'ரௌலட் சட்ட'த்தைக் கண்டித்தார். ஆனால், காந்தியடிகள் அதற்காக ஒத்துழையாமை செய்ய வேண்டுமென்றதும், அம்மையார் அந்த எதிர்ப்பு முறையை ஒப்புக்கொள்ளாமல் 1920-ல் நடந்த இந்திய தேசீயக் காங்கிரஸில் காந்தியடிகளின் ஒத்துழையாமைத் திட்டத்தை எதிர்த்து நின்றார். அந்தக் கூட்டத்தில் ஐவரே அம்மையாரை ஆதரித்தனர். பதினைந்து ஆண்டுகள் சிறந்த நிலையில் பத்திரிகைப்பணி புரிந்துவந்த 'நியூ இந்தியா'வும் மறைந்துவிட்டது; பெஸன்ட் அம்மையாரும் 1933-ம் ஆண்டில் மறைந்து விட்டார். ஆனால் இந்தத் திவ்ய ஞானப் பெருஞ் சோதிக்கு மறைவு ஏது, தோல்வி ஏது? மகாத்மா காந்தியே இவர் பணியைப் பெரிதும் பாராட்டி, "சுயராஜ்யம் என்ற வார்த்தை ஒவ்வொரு இந்தியனின் வாயிலிருந்தும் புறப்படுமாறு செய்தவர் பெஸன்ட் அம்மையார்" என்று கொண்டாடி யிருக்கிறார்.

நமது மாகாணத்திலே ஜஸ்டிஸ் கட்சி என்ற புதிய கட்சியால் இரட்டை யாட்சி முறை ஒப்புக் கொள்ளப் பட்டது. இக்கட்சியின் சார்பாக ஆங்கிலம் தமிழ் தெலுங்கு மொழிகளில் மூன்று தினப் பதிப்புகள் வெளியாயின. "ஜஸ்டிஸ் கட்சி சமூகச் சீர்திருத்தத் துறையில் இறங்கி உழைத்திருந்தால் நாட்டுக்கு நலனே விளைந்திருக்

கும்'' என்று கருதிய செந்தமிழ்ச் செல்வர் திரு. வி. கலி யாணசுந்தரனார், அக்கட்சியின் அரசியல்-கொள்கைகளைக் கண்டிப்பதற்காகவும், சுய ஆட்சிக் கிளர்ச்சியை வளர்ப்ப தற்காகவும் 1917-ல் 'தேசபக்தன்' ஆசிரியப் பதவியில் அமர்ந்து இரண்டரை ஆண்டு தொண்டாற்றினார். இவர் தமிழ்ப் போதகாசிரியராக இருந்து பத்திரிகாசிரியரான வர். சிறுசிறு வாக்கியங்களை அமைத்துக் கருத்துக்கள் எளிதில் விளங்குமாறு ஒரு தனிநடையைத் தமிழில் உரு வாக்குவதற்குத் 'தேசபக்தன்' ஆசிரியப் பீடம் கலியாண சுந்தரனாருக்கு ஒரு வாய்ப்பாயிற்று. இப்புது நடை குறித்து, ''என் நடை எங்கெங்கேயோ ஓடும்; திரியும்; அலையும்; பொருளுக்கேற்ற கோலந் தாங்கும்; இடத்துக் கேற்ற நடம் புரியும்'' என்று இவரே தம் 'வாழ்க்கைக் குறிப்புக்க'ளில் எழுதியிருக்கிறார். '''தேசபக்தன்' தமி ழாக்கிய அரசியல் சொற்களும், சொற்றொடர்களும், குறி யீடுகளும் இப்பொழுது பத்திரிகைகளிலும் மேடைகளி லும், பிறவிடங்களிலும் ஏற்றமுற்று அரசு புரிதல் வெள் ளிடைமலை'' என்று இவர் எழுதியிருப்பதும் உண்மை தான். திரு. வி. கலியாணசுந்தரனார் 'தேசபக்த'னை விட்டு விலகிய பின் வ. வே. சு. ஐயர் இவ்வாசிரியப் பதவியை ஏற்றுக் கொண்டார். இவர் காலத்திலும் 'தேசபக்தன்' சுதந்திரக் கிளர்ச்சியின் முன்னணியிலே நின்றது. ஆனால் வ. வே. சு. ஐயர் பத்திரிகையை ஓராண்டு கூட நடத்தவில்லை; அதற்குள் சிறைபுகுந்தார். அந்தச் சொற்ப காலத்திற்குள் வ. வே. சு. ஐயரின் அறிவுத் திறனும் தமிழ் நடைக்கு ஒரு புதிய வேகம் தந்தது எனலாம். வ. வே. சு. ஐயர் சிறை புகுந்தபின் படிப்படியே இப் பத்திரிகை மறையலாயிற்று.

'தேசபக்த'னை விடுத்தகன்றபின் கலியாண சுந்தரனார் 'நவசக்தி' என்ற வாரப்பதிப்பு ஒன்று தொடங்கி இருபது ஆண்டு நடத்திவந்தார். அரசியல்-பிரசாரத்துடன்

'நவசக்தி' சமூகச் சீர்திருத்தம், பெண்நலன், கலைவளர்ப்பு, சமதர்ம சன்மார்க்கம் முதலிய வேறு பல துறைகளிலும் தொண்டாற்றி வந்தது. "நவசக்தியின் தமிழ் நடம் வெளி நாடுகளிலும் புகுந்து இலங்கை, பர்மா, சையாம், மலேயா மொரிஷியஸ், நெட்டால், இங்கிலாந்து, பிரான்சு, ஜெர் மனி முதலிய நாடுகளிலும் 'நவசக்தி'யின் கலை வீசியது. தமிழ் நாட்டினின்றும் தத்தம் தாய்நாடு நோக்கும் ஐரோப்பியப் பாதிரிமார் பலர் 'நவசக்தி'யை மறப்ப தில்லை" என்று இதன் செல்வாக்கை உள்ளபடியே தம் 'வாழ்க்கைக் குறிப்புக்க'ளில் திரு. வி. க. குறிப்பிடுகிறார். காந்தியடிகளின் கொள்கைகளைத் தமிழ் நாட்டில் பரப்புவதில் திரு. வி. க. பெருந்தொண்டாற்றி யிருக் கிறார். திலகர் இந்தியாவில் இல்லாத காலத்தில் இந்தியச் சட்ட சபையில் உருவாகிய 'ரௌலட் மசோதா' சட்ட மாகும் குறி தோன்றியதும் காந்தியடிகள் அரசப்பிரதி நிதிக்கு விண்ணப்பமும் எச்சரிக்கையும் செய்தார். அராசகச் சிறு கூட்டத்தின் பொருட்டு அத்தகைய ஒரு கொடுஞ்சட்டத்தை அரசாங்கம் நிறுவி விசாரணையின்றி மக்களைத் தண்டிப்பது நாகரிகமாகாது என்ற கருத்தைக் காந்தியடிகள் வெளியிட்டுச் சத்தியாக்கிரகத்திற்கு நாட்டைப் பண்படுத்த முயன்றார். அப்போதே 'தேச பக்தனி'ல் கலியாண சுந்தரனார், காந்தியடிகளை ஆதரித்து ஆசிரியக் கட்டுரை எழுதியதுண்டு. 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்னும் தலைப்பெயருடன் எழுதியுள்ள நூலில் காந்தியடிகளின் இதயத்தைப் பளிங்கில் வைத்துக் காட்டுவது போல் இவர் காட்டியுள்ளார்.

# அத்தியாயம் 11

# தேசத் தந்தையார்

காந்தியடிகள் என்றதும் சத்தியாக்கிரகம் என்ற பெருங்கொள்கை சாதாரணமாக நினைவிற்கு வருகிறது. இதைத் தமிழில் 'பொய்யிலா நிற்பு' என மொழிபெயர்க் கலாம். இது ஓர் இலக்கியச் சொற்றொடர்: 'பொய்யிலா நிற்பில் நின்றன நீதி' என்பது கம்பன் வாக்கு. எத் தகைய இன்னல்கள் இடையூறுகள் வந்தாலும் பிறருக் குத் தீங்கிழைத்தலின்றி நீதியை முன்னிட்டு மேற் கொண்ட நற்பெருஞ்செயலில் மனவுறுதியுடன் ஈடுபட்டு உண்மையைக் கடைப்பிடித்துப் பொறுமைப் போர் புரி வது சத்தியாக்கிரகம். இதில் அஹிம்ஸையென்ற அரு ளொழுக்கமும் அடங்கும். உண்ணுநோன்பு, சிறைச் சாலையையும் தவச் சாலையாகக் கொள்ளல், இன்னு செய் தார்க்கும் நன்னயம்புரிதல் முதலியன சத்தியாக்கிரகப் பெரும்போரில் குறிதவருத படைக்கலங்கள். ஆனால் காஙகிரஸ் காந்தியடிகளின் சத்தியாக்கிரகத்தை ஓர் அரசியல் ஆயுதமாகவே கையாண்டது. எனவே சத்தி யாக்கிரகம் என்ற வார்த்தைக்குப் பதில் காங்கிரஸ் சம் பந்தப்பட்ட வரையில் 'சட்டமறுப்பு' என்ற சொற்றொடரை யாவது 'ஒத்துழையாமை இயக்கம்' என்ற சொற்றொடரை யாவது உபயோகிப்பது பொருத்தமாகும்.

தென்னுப்பிரிக்காவில் ஒத்துழையாமைப் போர் புரிந்து சட்டத்தை மீறிச் சிறை புகுந்து வெற்றியும் கண்டு அத்தகைய பொறுமைப் போரினுல் உலகத்திற்கே ஒரு புதுமைப் பெருநெறி காட்டலாமென்பதைக் காந்தியடி கள் ஏற்கனெவே உணர்ந்திருந்தார். இத்தகைய நெறியை இந்தியாவின் விடுதலைக்காகவும் தென்னுப்பிரிக்காவிலே

அடிகள் உருவாக்கிப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும் என்பதற்காகவே 1893-ஏப்ரலில் இவரை விதி அங்கு இழுத்துச் சென்றதாகத் தோன்றுகிறது. அதே ஆண்டில் மே மாதம் விவேகானந்த அடிகள் அமெரிக்காவுக்குப் பயணமானார். விவேகானந்தர் துறவியாகச் சென்றார்— அன்று சாதாரணத் துறவியாகத் தான். காந்தியடிகளோ அன்று சாதாரண பாரிஸ்டராகப் பொருள்தேடி வாழ்க்கை நடத்தப்போனார். இருவரும் முன்பின் தெரியாத, நிறத்திமிர் நிறைந்த, வெளிநாடுகளுக்குப் போனார்கள். விவேகானந்தரும் முதலில் அல்லற்பட்டார்; எனினும் காந்தியடிகள் அனுபவித்த இன்னல்களையும் இடையூறுகளையும் விதி விவேகானந்தருக்கு அளிக்கவில்லை. ஆனால் இருவருக்கும் அந்த இரண்டு வெளிநாடுகளும் உலகப்புகழ் அளித்துவிட்டன.

காந்தியடிகள் இந்தியாவிலும் முதன்முதல் சிறிய அளவில் அறப்போர்கள் நடத்திப்பார்த்தார். பீஹார் மாகாணத்தில் சம்பரான் மாவட்டத்தில் நிலம் பயிரிட்டு வியாபாரம் நடத்திவந்த ஓர் ஆங்கிலக் கம்பெனியார் குடிகளுக்குக் கொடுமை இழைக்க, அக்குடிகளுக்காகத் தம் பொறுமைப் போர் முறையிலே இவர் போராடி வெற்றி பெற்றதை ஓர் உதாரணமாய்க் காட்டலாம். சம்பரான் ஜில்லா மாஜிஸ்திரேட் விஷயமாக இவரது சத்தியாக்கிரக உள்ளம் நன்கு வெளிப்படுமாறு நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியையும் நாம் நினைவில் வைத்துக்கொள்வது நலமாகும். அந்த மாஸ்திரேட் அடிகளை அவமதித்து ஒரு கடிதம் எழுதிவிட்டார். சினம் தணிந்ததும், "அப்படி எழுதியிருக்கக் கூடாது, நாடு சிரிக்குமே!' என்று அஞ்சி அக்கடிதத்தைத் திருப்பி அனுப்புமாறு காந்தியடிகளை வேண்டிக்கொண்டார். அடிகளும் இணங்கவே, அருகிலிருந்த சீடர்கள், "அக்கடிதத்திற்கு ஒரு பிரதி எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று ஆலோசனை கூறினர். அதற்

குக் காந்தியடிகள் இசையவில்லை. "திருப்பிக் கொடுக்கிற மாதிரி நாம் பாசாங்கு செய்து கடிதத்தின் பிரதியை வைத்துக்கொள்வது உண்மைக்குக் கேடு சூழ்வதே; நமது தஸ்தாவேசுகளில் இது இருக்கவேகூடாது. இந்த நிகழ்ச்சி இனி நம் உள்ளத்தில் உறுத்திக் கொண்டிருக்கலாகாது" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். இத்தகைய அனுபவங்களும் மன நிலையுமுடைய காந்தியடிகள், முதலாவது உலகப் பெரும்போர் முடிந்ததும் பிரிட்டன் தான் கொடுத்திருந்த வாக்குறுதிகளை மீறத் தொடங்கியது கண்டு தமது பொறுமைப் போராட்ட முறையிலேயே நாட்டுக்கு நன்மை விளைக்க முன்வந்தார்.

போர் முற்றுப்பெற்றதும் பிரிட்டிஷ் பேரரசு இடது கையில் இரட்டையாட்சி யென்ற சீர்திருத்தமும் வலது கையில் அடக்குமுறையும் கொண்டு, பிரம்பு ஒரு கையிலும் கற்கண்டு ஒரு கையிலுமாகக் குழந்தையை மிரட்டுவோர்போல் இந்தியாவை மிரட்டிப் பார்த்தது. மக்களுடைய தனிப்பட்ட சுதந்திரத்தைக்கூடப் பாதிக்குமாறு ரௌலட் கமிட்டியார் ஓர் அறிக்கை விடுத்ததும், அந்த அறிக்கையை அரசினர் ஏற்றுக்கொண்டு இந்தியா சட்ட சபையில் ரௌலட் மசோதாவைக் கொண்டு வந்து சட்டமாக்கியதும், தேச மக்களுக்கும் தலைவர்களுக்கும் பேரவமானம் விளைத்தன. அக்கொடிய சட்டத்தின்படி ஐயம் கொண்டே எவரையும் விசாரணையின்றிக் காவலில் வைப்பதும், இரகசியமாக விசாரணை நடத்தித் தண்டிப்பதும் அரசினருக்குச் சாத்தியமாகும். அத்தகைய சட்டத்தை எதிர்க்கத் துணிந்தபோது, காந்தியடிகள் நோய்வாய்ப்பட்டு உரக்கப் பேசுவதற்கும் உரன் குன்றியிருந்தார்.

ஏற்கெனவே அடிகள் தென்னாப்பிரிக்காவில் தமிழருடன் அதிகமாய்ப் பழகியிருந்தவர். அங்கே முனிசாமி முதலியார் என்பவரின் மனைவியான வள்ளியம்மையென்ற

பதினறு வயதுத் தமிழ்ப் பெண்ணும் ஒத்துழையாமை செய்து சிறைப்பட்டிருந்தாள். சிறையிலிருந்து மீண்ட பின் மெலிந்து நோயுற்று இறந்துபோகும் நிலையிலிருந்தும் காந்தியடிகளிடம், "இப்போது என்னைக் கைதியாக்கினு லும் சிறைக்குப்போக நான் தயார்" என்று தெரிவித்தாள். சிறைத் துன்பங்களின் விளைவாகவே அப்பெண்மணி மரணமடைந்தாள். அந்த வள்ளியம்மையின் தியாகம், தமிழர்களிடம் இவருக்கு அன்பும் நம்பிக்கையும் அதி கரிக்குமாறு செய்திருந்தது. அடிகளைச் சென்னை நகரத் திற்கு வரும்படி 'ஹிந்து' ஆசிரியர் கஸ்தூரி ரங்கையங் கார் அழைத்ததும், அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு வந்து அடிகள் சென்னையில் 'திலகர் பவன'த்தில் தங்கி ஞர். அது கஸ்தூரி ரங்கையங்கார் மாளிகை; ஆனல் அங்கு வதிந்தவர் ராஜாஜி. அப்போதுதான் ராஜாஜிக்கு அடிகளிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் ரௌலட் சட்டத்திற்கு விரோதமாக எப்படிப் போராட்டத்தை நடத்தலாமென்று இருவரும் ஆலோசிக்கலாயினர். இர விலே கனவில் தமக்கு ஒரு வழி தோன்றியதாக அடிகள் ராஜாஜியிடம் தெரிவித்து, ஒரு நாள் உண்ணு விரதத்துட னும் வேலை நிறுத்தத்துடனும் எதிர்ப்பைத் தொடங்க வேண்டுமென்ருர். இவரது உள்ளொளி காட்டியதை ராஜாஜியின் பரந்த பகுத்தறிவும் ஒப்புக்கொண்டது. அதனல் காந்தியடிகளின் இந்திய சத்தியாக்கிரகத் திருமறை சென்னையில் பிறக்கும்போதே தக்கதோர் உரையாசிரியரையும் பெற்றுவிட்டது எனலாம். நமது பாரத பூமியில் நகரங்களும் கிராமங்களும் கருத்தொரு மித்துக் கால்கோளாக நடத்திக் காட்டிய அந்த 'ஹர்த்தால்' ஓர் அற்புதக் காட்சியென்று காந்தியடிகளே வியந்திருக்கிருர்.

பிரபல ஆசிரியரான எட்வர்ட் தாம்ஸன் காந்தியடிகளின் உள்ளொளி குறித்துப் பிரஸ்தாபிக்கும்போது, கில்பர்ட் மர்ரே முதலான பல பிரிட்டிஷ் அறிஞர்கள் மூன்று மணி நேரம் சரமாரியாகக் கேள்வி போட்டும் காந்தியடிகள் ஒரு விநாடிகூடக் கலங்காமல் தயங்காமல் பதில் சொல்லிவந்த அந்த நிகழ்ச்சியை அதிசயமாய் வருணிக்கிறார். இதிலிருந்து, "ஸாக்ரடிஸுக்குப் பிறகு இவர் மாதிரி அமைதியும் முழுத் தன்னடக்கமும் வாய்ந்த மனிதர் வேறு யாருமே உலகில் பிறந்ததில்லை என்று எனக்கு உறுதியாயிற்று" என்கிறார். இப்படி எழுதியதைத் தொடர்ந்து, 'ஸாக்ரடிஸைப்போல் இவருக்கும் ஓர் அதிதேவதை இருக்கிறது; அந்த அதிதேவதை பேசும்போது விவாதத்தைக் கண்டோ, விபத்தைக் கண்டோ காந்தி அஞ்சுவதில்லை' என்கிறார். மேலும் எழுதுகிறார் எட்வர்ட் தாம்ஸன்: "மிக்க ஏக்கத்துடன் லிண்ட்ஸே கேட்டது இன்னும் என் காதில் ஒலி செய்து கொண்டுதானிருக்கிறது. 'காந்தி! உங்கள் கொள்கை தவறாகவும் இருக்கலாமே; அப்படி உங்களுக்குத் தோன்றவில்லையா?' என்றார் லிண்ட்ஸே. ஆனால் அது சாத்தியமென்றே காந்திக்குத் தோன்றவில்லை. காந்தியின் அதிதேவதை பேசும்போது, பல்கலைக் கழக நிபுணர்கள் திரண்டு வந்து தருக்க வாதமிட்டால் என்ன? சாவு என்ற கரும் பாம்பு நச்சுப் பற்களை முகத்திலே பதித்தால் என்ன?—மகாத்மா அசைய மாட்டார்!" இந்த அதிதேவதை அல்லது உள்ளொளியே காந்தியடிகளின் ஐம்பதாவது வயதில் 'ரௌலட் மசோதா' சட்டமாக நிறைவேறிய தினத்திற்கு மறுநாள் (19-3-1918) ஒரு பெரிய சத்தியாக்கிரகத் தோற்றுவாயாகப் பொது மக்களின் உண்ணா நோன்பையும் பொது வேலை நிறுத்தத்தையும் கனவிலே மகாத்மாவுக்கு உபதேசித்திருக்க வேண்டுமென்று கருதக் கூடுமல்லவா?

ரௌலட் சட்டத்தை எதிர்த்து ஹர்த்தால் நடத்துவது நலமென்று அடிகள் சொன்னதை ராஜாஜி ஒப்புக் கொள்ளவே, ஆங்கிலப் பேரரசின் விதை சென்னையில் விழுந்து முளைத்துத் தேசமெங்கும் படர்ந்ததுபோல் விடுதலைப் போராட்டத்தின் வித்தும் இங்கிருந்து முளைத்துப் படரலாயிற்று. காந்தியடிகள் 'திலகர் பவன'த்திலே திரண்டிருந்த தேசபக்தர் குழாத்திலும், உலகப் புகழ் பெற்ற சென்னைக் கடற்கரையிலும், தொழிலாளர் கூட்டங்களிலும் தமது புதுமைக் கொள்கையை வெளியிட்டார். சத்தியாக்கிரக சபை ஒன்றைச் சென்னையில் அமைத்துச் சத்தியாக்கிரக உடன்படிக்கையில் விரும்புவோர் கையெழுத்திடலாமென்றார். சட்டத்தைப் பல வழிகளிலும் மீறவேண்டுமென்று தீர்மானித்ததுடன், அவைகளிலொன்று அரசாங்கத்தாரிடம் பதிவு செய்து கொள்ளாமல் பத்திரிகை வெளியிடுவது என்பதாகவும் அடிகள் கூறினார். அந்தச் சட்ட மறுப்புப் பணியாற்றச் சென்னையில் கஸ்தூரி ரங்கையங்கார், திரு. வி. கலியாண சுந்தரனார் உள்ளிட்ட சிலர் இசைந்தனர். ஆனால் குறித்த பத்திரிகையை அச்சிடாமலே தயாரித்து வழங்கியதால், அது அச்சுச் சட்டத்தின் கீழ் வாராதென்று தீர்மானித்த அரசினர் எவரையும் கைது செய்யவில்லை.

இதற்குள் காந்தியடிகள் பஞ்சாபிலும் டெல்லியிலும் நுழையக்கூடாதென்றும், பம்பாயை விடுத்து வெளியே செல்லக் கூடாதென்றும் அரசாங்கக் கட்டளை பிறந்தது. டெல்லி, அமிர்தஸரஸ், ஆமதாபாத், கல்கத்தா முதலிய இடங்களில் குழப்பங்களும் நிகழ்ந்தன. பஞ்சாலத்தில் ஜாலியன்வாலா பாக் என்னுமிடத்தில் முப்புறமும் மதில்கள் சூழ்ந்த ஒரு மைதானத்தில் மக்கள் ஒரு கண்டனக் கூட்டம் நடத்தினர். அதைக் கலைக்க வேண்டுமென்று ஜெனரல் டையர் என்பான் மக்களைச் சுட்டுக் கொன்று குவித்ததும், தேசபக்தர்கள் தரையில் ஊர்ந்து செல்லு

மாறு வலியுறுத்தப்பட்டதும், நாடெங்கும் அதிர்ச்சியை உண்டாக்கிச் சுயராஜ்ய வேட்கையையும் அதிகரிக்கச் செய்தன. 1920-ஆண்டில் திலகர் காலமானார். இதே ஆண்டில் திருநெல்வேலியில் நடைபெற்ற மாகாண மகா நாடு காந்தியடிகளின் சத்தியாக்கிரகக் கொள்கைக்கு ஆதரவளித்தது. 1920-ஆம் ஆண்டுக்குப் பின் இந்திய சரித்திரம் பெரும்பாலும் காந்தியடிகளின் சரித்திரம் தான். காங்கிரஸ் சத்தியாக்கிரகத்தை ஒத்துழையாமைப் போராக உருவாக்கி நடத்தத் துவங்கியது.

1922-ல் காந்தியடிகளை அரசாங்கம் இராசநிந்தனைக் குற்றத்திற்காகக் கைது செய்தது. நீதிபதி முன்பு காந்தியடிகள் கொடுத்த வாக்குமூலத்தில் இராசநிந்தனைக் குற்றத்தை ஒப்புக்கொண்டதோடு, "எனக்கு விடுதலை அளிக்கப்பட்டால் திரும்பவும் அதையே செய்வேன்" என்றும் தெளிவாகக் கூறினார். சில இடங்களில் மக்கள் சத்தியாக்கிரக விதிகளை மீறித் துராக்கிரகத்துடன் செய்த குற்றங்களுக்குப் பொறுப்பையும் தாமே ஏற்றுக்கொண்டார். நீதிபதியும் தம்முடைய உத்தியோகத்தை ராஜினமாச் செய்துவிட்டுத் தம்மைப்போல் நடந்துகொள்ளவேண்டுமென்றும், அல்லது தமக்குக் கடுமையான தண்டனை விதிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். ஆங்கிலேய நீதிபதி ராஜினமாச் செய்து சத்தியாக்கிரகியாகிவிடவில்லை! காந்தியடிகளுக்கு ஆறுண்டுச் சிறைவாசத் தண்டனை விதித்தார். அதற்கு முன் இத்தகைய குற்றவாளியைப் பிரிட்டிஷ் நியாய மன்றம் கண்டதில்லை. ஸாக்ரடீஸ், கிறிஸ்து பெருமான் போன்றவர்களின் விசாரணைகளை இவ்விசாரணை நினைவூட்டிச் சத்தியாக்கிரகத்தின் சக்தியை உலகமெங்கும் அறிவித்தது. ஆறுண்டுத் தண்டனை பெற்றிருந்தபோதிலும் காந்தியடிகள் இரண்டு ஆண்டிலேயே விடுதலை பெற்றார்.

தாம் விடுதலையானது முதல் அடிகள் ஆக்க வேலையில் ஈடுபட்டு இந்து முஸ்லிம் ஒற்றுமையை வளர்க்கவும், சமூகக் கொடுமைகளை ஒழிக்கவும் பாடுபடலானார். 1929-ல் லாகூரில் ஜவாஹர்லால் நேரு தலைமையில் நடந்த காங்கிரஸில் பூர்ண சுதந்திரத்திற்குக் குறைந்த எதையும் ஒப்புக்கொள்ள முடியாது என்ற தீர்மானம் நிறைவேறியது. பிரிட்டனுக்கு இந்நாட்டில் ஆட்சி புரிய உரிமையில்லை யென்ற முழக்கத்துடன் 1930-ல் தேசமெங்கும் முதன் முதலாகப் பூர்ண சுதந்திர தினம் கொண்டாடப் பட்டது. 1919-ம் ஆண்டுவரை இந்தியப் பொதுமக்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் கொள்கைகளைக் கண்டித்து வந்த போதிலும் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்கத் துணிந்ததே யில்லை. அதற்கும் முன்பே "நியாயமான அரசாங்கக் கட்டளைக்குத்தான் பணிவேன்; அநீதியான கட்டளைக்குப் பணிய மாட்டேன்" என்று எதிர்க்கத் துணிந்தவரும் மகாத்மா காந்தி ஒருவரே. 1920-ம் ஆண்டில் காந்தியடிகள் ஒத்துழையாமைக் கொள்கையைக் காங்கிரஸில் புகுத்தியதே ஒரு புதுவகைப் புரட்சியின் முதல் வித்து. அந்த வித்தின் விளைவே 1930-ம் ஆண்டுச் சட்ட மறுப்பு இயக்கம். 'அன்னிய ஆட்சியின் கீழ் வாழ்வது அவமானம் என்பதை இந்தியர்கள் எப்போது நினைத்துப் பார்த்துத் தேசீயத் தன்மான உணர்ச்சி கொள்கின்றனரோ, அப்போதே இந்தியாவிலிருந்து பிரிட்டன் வெளியேற வேண்டியதுதான்' என்று ஸர். ஜான் ஸீலி என்னும் ஆங்கில சரித்திர ஆசிரியர் கூறியுள்ளார். அத்தகைய உணர்ச்சியைக் கோடிக்கணக்கான மக்களுக்கு உண்டாக்கவும், பொதுமக்களுடைய எதிர்ப்புச் சக்தியை வளர்க்கவும் 1930-ஆம் ஆண்டுச் சட்டமறுப்பு இயக்கம் சிறப்பாகப் பயன்பட்டதென்று கருதலாம்.

இந்தச் சட்டமறுப்பு இயக்கத்தை 'உப்புச்சத்தியாக்கிரகம்' என்று கூறுவதுண்டு. மக்களுக்கு உப்பு இன்றி

யமையாத பொருள் என்றும், அதைச் செய்து கொள்ளவும் ஏழைகளுக்கு உரிமையில்லாதிருப்பது அநீதியென்றும் கருதிய காந்தியடிகள், 'தண்டி' என்ற கடற்கரை—உப்பளத்தை அடைந்து உப்புச் சட்டத்தை மீறினர். காந்தியடிகளின் சத்தியாக்கிரக தத்துவத்தைத் தமிழ் நாட்டிலே பரப்பி வந்தவரும், சேலம் ஜில்லாவில் புதுப் பாளையத்தில் 'காந்தி ஆசிரமம்' நிறுவித் தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு முதலான ஆக்கவேலைகளை நிறைவேற்றி வந்தவருமான ராஜாஜியும் தம் தொண்டர் படையுடன் வேதாரணியம் சென்று உப்புச் சத்தியாக்கிரகம் நடத்தினர். இந்த இயக்கம் சில மாதங்கள் நடந்தபின் சற்றுத் தளர்ச்சியடையத் தொடங்கிய போதிலும், இது பொதுமக்களின் மனப்பான்மையைப் பெரிதும் மாற்றிவிட்டது. மேலும் இந்த இயக்கம், முதல் தடவையாக ஓரிடத்தில் இந்திய ராணுவத்திலுள்ள சில சிப்பாய்களுக்கும் மனமாற்றம் விளைத்தது. ஒரு கூட்டத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமாறு படைத்தலைவன் உத்தரவிட்டபோது, அச்சிப்பாய்கள் சற்றுத் திகைத்துத் தீங்கு செய்யாத அம்மக்களை ஏன் சுடவேண்டும் எனக் கருதி அந்த உத்தரவைப் புறக்கணித்து விட்டனர். அச்சிப்பாய்கள் கடுந்தண்டனைக்கு உட்பட்டபோதிலும், அடிகளின் சத்தியாக்கிரகம் ஒரு சக்தி வாய்ந்த கருவிதானென்பது புலனுகி விட்டதல்லவா? 1857-ம் ஆண்டுச் 'சிப்பாய்க்கலகம்' என்ற இந்திய சுதந்திரப்போர் அடக்கப்பட்டபின் ஆங்கிலப் பேரரசு, இராணுவத்திலே பிரிட்டிஷ் அதிகாரிகளை அதிகமாய் ஏற்படுத்தி இந்தியர்களைக் 'கூலிப்பட்டாள' மாக்கி இப்பட்டாளத்திற்கும் பொதுமக்களுக்கும் சற்றும் தொடர்பில்லாமல் செய்து விட்டது. பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்க முடியும் என்ற நம்பிக்கையோ, அந்த ஆட்சியை எதிர்க்க வேண்டும் என்ற விருப்பமோ சிப்பாய்களின் உள்ளத்தில் எழுவதற்கே

வழியில்லாதபடி இராணுவத்தை அரசினர் மாற்றி அமைத்து விட்டனர். எனவே இராணுவத்தின் இராச பக்தி குறித்து 1930-ம் ஆண்டு வரை அரசாங்கம் கவலைப்படுவதற்கே வாய்ப்பு ஏற்படவில்லை.

1931-ம் ஆண்டில் அரசப் பிரதிநிதி இர்வின் துரை, காந்தியடிகளுடன் சமரசம் பேசி ஒப்பந்தம் செய்து கொண்ட நிகழ்ச்சியும், அடிகளின் சட்டமறுப்பு இயக்கத்தின் ஆற்றலுக்குச் சான்றாயிற்று. எனினும், 1931—36-ல் அரசப்பிரதிநிதியாக இருந்த வில்லிங்டன் பிரபுவின் ஆட்சிக் காலத்திலே அரசாங்கத்தின் பிரித்தாளும் சூழ்ச்சி வலுத்தது. ஹரிஜனங்களை இந்து சமுதாயத்தினின்று பிரித்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் 'தீண்டாதாருக்குத் தனித்தொகுதித் திட்டம்' வெளியிடப்பட்டது. அப்பெருஞ் சூழ்ச்சியை எதிர்த்துக் காந்தியடிகள் 'சாகும் வரை உண்ணாவிரதம்' செய்யத் துணிந்தார். அப்போது இவர் பூனாச் சிறையிலிருந்தார். அவ்வுண்ணா நோன்பின் பயனாகத் தாழ்த்தப் பட்டோரின் தலைவர்களும் சாதி-இந்துத்தலைவர்களும் ஒத்துப்போய் அந்தத் தனித்தொகுதி முறை நீங்கவே, அடிகளின் உண்ணாநோன்பு நின்றது. அப்போது கவி ரவீந்திர நாத தாகுர் காந்தியடிகளுக்குப் பழரசத்தைத் தாமே ஒரு கோப்பையில் கொண்டு வந்து கொடுத்தார். சத்தியாக்கிரக இயக்கத்தில் சுதந்திரம் போல் தீண்டாமை விலக்கும் அவ்வளவு முக்கியமாய்க் கருதப்பட்டது. அடிகள் தென்னாப்பிரிக்காவில் இருக்கும் போதே ஹரிஜனப் பிரசினை இவருள்ளத்தில் பெருங் கிளர்ச்சியை உண்டாக்கி யிருந்தது. அங்குச் சட்ட மறுப்பைத் தொடங்குவதற்கு முன்பு வழக்கறிஞர்-தொழில் நடத்திக் கொண்டிருக்கும்போதே இவர் அந்நாளில் ஐரோப்பிய நாகரிக ரீதியில் ஒரு மாளிகைபோல் அமைந்திருந்த தமது இல்லத்தில் தீண்டாமை விலக்கை ஒரு நோன்பாகக் கொண்டிருந்தார்.

காந்தியடிகள் ஹரிஜனங்களின் குறைகளைப் போக்கு வதற்குப் பிரசாரம் செய்துகொண்டே அகில இந்திய யாத்திரை செய்யத் தொடங்கினார். காங்கிரஸிலிருந்து விலகினின்று காந்தியடிகள் ஆக்க வேலைகளில் ஈடு பட்டிருந்த காலம் அது. அக்காலத்திலே—1934-ம் ஆண்டி லிருந்து 1940 வரை—காங்கிரஸ் சட்டசபைகளில் பிரவே சித்து நிர்வாகத்திறன், கட்சிக்கட்டுப்பாடு முதலிய வைகளில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுமாறு உழைத்து வந்தது. 1936-ல் பண்டித ஜவாஹர்லால் காங் கிரஸ் தலைவராகத் தமிழ் நாட்டில் யாத்திரை செய்து தமிழ் மக்கள் தம்மீது கொண்டிருக்கும் பேரன்பை உணர்ந்துகொண்டார். தமிழ் மக்களும் மகாத்மா காந் திக்கு அடுத்தபடியான தலைவரைத்தெரிந்துகொண்டனர்.

தமிழ் நாட்டில் ஓரிடத்தில் ஒரு ஜில்லாக் காங்கிரஸ் கழகத்தலைவர் பண்டித ஜவாஹரிடம் விடைபெற்றுக் கொள்ளவந்தபோது, மோட்டார்காருக்கு வெளியே தற் செயலாகத் தம் கையை ஜவாஹர்லால் தொங்க விட்டா ராம். அக்கை முழுதும் நகங்கள் கீறிய சிறு காயக்குறி கள் காணப்பட்டன. மேலே குறித்த காங்கிரஸ் தலைவர் திகைத்துப் போனார். "முந்தின நாள் இரவிலே தமிழ் மக்கள் ஜவாஹரின் கைகளைத் தொட்டுத் தொட்டுத் 'தரிசனம்' செய்த அடையாளங்களே அந்தப் புண்கள்" என்பதைத் தெரிந்துகொண்டார். தெரிந்து கொண்டதும், அவர் மனவேதனையுடன் ஜவாஹரை நோக்கி, "எங்கள் ஜில்லா வாசிகள் சரியாக நடந்து கொள்ளத் தெரியாமல் இந்த விதமாக உபத்திரவம் செய்து விட்டார்களே! மன்னிக்கவேண்டும்; நான் பெரிதும் வருந்துகிறேன்" என்றார். அதற்கு ஜவாஹர், "இந்தக் காயங்கள் வெகு விரைவில் ஆறிவிடும்; ஆனால் இந்த அடையாளங் கள் வெளியிடும் அன்பு என் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்து விட்டது" என்று சொல்லி இளநகை யரும்பினார். பழனி

யில் பண்டித ஜவாஹருக்கு வரவேற்புப்பத்திரத்துடன், நல்ல வேலேப்பாடமைந்த வெள்ளிப் பேழையொன்றில் பழனிப் பஞ்சாமிர்தமும் அளித்தார்கள். அந்தப் பஞ்சாமிர்தத்தைத் தமது அன்னேயாருக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்று சொன்ன ஜவாஹர்லால், "என் தாயாருக்குச் சுவாமியின் பிரசாதமென்றல் பெரு மகிழ்ச்சி" என்றராம். இத்தகைய ஜவாஹரின் நல்லுரை களேயும் தமிழ்நாடு 'பழனிப் பஞ்சாமிர்தம்' போல் தூய இனிய வாக்காகப் போற்றிப் பருகியது எனலாம்.

அந்நாளில் தேசீயக் குறிக்கோளுக்காகப் போராடுவதில் காங்கிரசுக்கு இணேயான சாதனம் வேறென்று மில்லேயென்பது மக்களுக்கு நன்கு புலனுகிவிட்டது. இந்தியத் தேசீயமும் காங்கிரசும் ஒன்றே என்ற எண்ணம் நமது தேசத்தில் மட்டுமல்ல, உலகமெங்கும் பரவலாயிற்று. "காங்கிரஸ் பணிக்கு எப்பொழுதும் நான் சித்தமா யிருப்பது எனது மதமாகியது. காங்கிரஸ் என் குருதியில் ஒன்றியது. எனக்கு நாடே காங்கிரஸாகத் தோன்று கிறது. காங்கிரஸ் நிர்வாகத்தில் சிலர் வருவர்; போவர். அவரை யான் கருத்தில் கொள்வதில்லே, என் கருத்தில் காங்கிரஸே நிற்கும்" என்று திரு. வி. கலியாண சுந்தரனுர் தமது நிலே குறித்துக் கூறியிருப்பது அக் காலத் தேசத் தொண்டர்களின் உயர்ந்த கருத்தை வெளியிடுவது தான். எனினும் பல மாகாணங் களிலும் காங்கிரஸ் சார்பிலே மந்திரிசபைகள் அமைந்த தில் அதிகார உணர்வு பெருகி நாட்டை மறக்கச் செய்த துமுண்டு. "தொடக்கத்தில் அச்சபைகளின் நெஞ்சில் காங்கிரஸ் இருந்தது; நாடு இருந்தது. நாளடைவில் அவைகளில் அதிகாரம் நுழைந்தது. அதிகாரம் காங் கிரஸை மறக்கச் செய்தது; நாட்டை மறக்கச் செய்தது" என்பதையும் கலியாணசுந்தரனுர் தம் 'வாழ்க்கைக் குறிப் புக்களி'ல் பதிவு செய்து வைத்திருக்கிறர். இந்த நிலேயில்

எதிர்பாராதபடி இரண்டாம் உலகப் பெரும்போர் 1939-ல் திடீரெனத் தொடங்கிற்று.

இப்போராட்டம் தோன்றியவுடன் ஆங்கிலப் பேரரசு இந்தியாவின் விடுதலை பற்றி வாக்குறுதி கொடுக்கத் தவறிவிட்டதால், சுத்த சுயராச்சியம் கிடைக்கும்வரை காங்கிரஸ் ஒத்துழையாமையைப் பின்பற்ற வேண்டும் என்றும், அரைகுறை சுயராச்சியத்தில் பதவியேற்பது முழு விடுதலையைச் சேய்மையில் தள்ளி மறைப்பதாகுமென்றும் தலைவர்கள் கருத்தொருமித்து முடிவுகட்டினர். எனினும், படித்தவர் பலர் இராணுவத்தில் சேர்ந்து வெளி நாடுகளுக்குச் சென்றனர். இவர்களுக்கு அங்கே ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டது. ஆங்கிலப் படைவீரர்களுக்குள்ள வசதிகள் இந்தியச் சிப்பாய்களுக்கு இல்லையென்பதையும், ஒரு சாதாரண ஐரோப்பியப் படைவீரன் இந்தியப் படை அதிகாரிகளைக்கூட மதிக்கவில்லை யென்பதையும், ஒரேவகை வேலைக்கு இந்தியர் குறைந்த சம்பளமும் வெள்ளையர் அதிக ஊதியமும் பெற்று வந்ததையும் இவர்கள் கண்டு வெறுப்புற்றனர். கொஞ்சம் படிப்புள்ள இந்தியச் சிப்பாய்களும் அந்த நிலைமையை வெளிப்படையாகத் தங்கள் அதிகாரிகள் முன்னிலையில் வெளியிடவும் துணிந்தனர். இவர்களுக்கிடையே இந்திய தேசீய உணர்ச்சி பரவலாயிற்று. இந்த உலகப் பெரும்போரில் ஜப்பானின் முன்னேற்றமும் ஆங்கிலேயரின் நிறத்திமிருக்கு ஒரு சூடு போட்டதுபோலத் தோன்றியது.

இந்தியாவின் விடுதலைக்காகப் போராடிய வீரர்களில் சுபாஷ்சந்திரபோஸும் ஒருவர். இவரை நேதாஜி — அதாவது தலைவர் பெருந்தகை—யென்று சிறப்பித்துப் பேசுவதுமுண்டு. இவர் காங்கிரஸ் இயக்கம் தீவிரக் கிளர்ச்சியாகக் குமுறி எழுந்தபோது அதிதீவிரமாக முன்னணியில் நின்று போராடத் துணிந்தார். உலகப் பெரும்போர் தொடங்கியபின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த

இவர் இந்தியாவிலிருந்து மாயமாக மறைந்தவர் போல் மாறுவேடத்தில் புறப்பட்டு வெளி நாடுகளில் இந்திய விடுதலைக்கு வழிதேட முயன்று, ஒரு விடுதலை – இந்தியப் படையும் திரட்டினர். தொடக்கத்தில் இவ்விடுதலை – இயக்கம் ஐரோப்பாவில் நடைபெற்றது. இன்று இந்தியாவில் தேசிய வணக்க முறையாகிவிட்ட 'ஜெய் ஹிந்த்' சுபாஷ் சந்திரபோஸ் ஐரோப்பாவில் தோற்றுவித்த இந்திய விடுதலை இயக்கத்தின் பயனாகத் தோன்றியது தான். போஸ் பிறகு சிங்கப்பூரில் நடைபெற்ற இந்திய விடுதலை – இயக்க மகாநாட்டில் கலந்துகொண்டு, ஓர் இந்திய தேசீயப்படையையும் தாற்காலிகஇந்தியவிடுதலை– அரசாங்கத்தையும் அமைக்க விரும்பினர். அந்த விருப்பத்திற்கிணங்க **இந்திய தேசீய ராணுவம்** அமைத்து, "டெல்லீ சலோ" (செல்க டெல்லி நோக்கி) என்று வீர முழக்கஞ் செய்தார். மலேயா, பர்மா, ஜாவா முதலான பல இடங்களிலும் தமது இயக்கத்திற்கு ஆதரவு தேடிக் கொண்டு தலைமை நிலையத்தை இந்தியாவுக்கு அருகில் ரங்கூனுக்கே மாற்றிக்கொண்டார். இந்த நிலையில் சுபாஷ் சந்திரபோஸும் இவருடைய ராணுவமும் இந்தியாவின் மானத்தைக் காப்பாற்றுகிறார்களென்ற உணர்ச்சி இந்தியச் சிப்பாய்களுக்கிடையே பரவியதுமுண்டு.

1943-ம் ஆண்டு அக்டோபர் மாதம் சுபாஷ் சந்திரர் சிங்கப்பூரில் மூவர்ணக்கொடியைப் பறக்கவிட்டு, அணி வகுத்து நின்ற இந்திய தேசீயப் படை வீரர்கள் முன்பு, "புனிதப் போரான இச்சுதந்திரப் போரைச் சுபாஷ் சந்திர போஸ் என்ற நான் என் இறுதி மூச்சு இருக்கும் வரை நடத்துவேன் என்பதாகக் கடவுளின் பெயரால் பிரமாணஞ் செய்து கொடுக்கிறேன்" என்னும் பிரமாண வாக்கியத்தைக் குமுறிப் பொங்கிய உணர்ச்சி வெள்ளத்

13

திற்கிடையே மும்முறை படித்துக் காட்டினார். இப்படையின் ஒரு முக்கியமான பகுதியாக 'ஜான்ஸி ராணுவப் படை' என்ற பெண்களின் இராணுவமும் ஏற்படுத்தினார். 1944-பிப்ரவரியில் நேதாஜியின் சுதந்திர இந்திய சர்க்கார் இந்தியாவின் மீது படையெடுத்தது. 1857-ம் ஆண்டுச்சுதந்திரப் போராட்டத்திற்குப் பின் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தைப் படைகொண்டு தாக்கத் துணிந்த இச்செயலைத் துணிவின் சிகரமென்றே குறிப்பிடவேண்டும். அஸ்ஸாம் மண்ணில் இந்திய சுதந்திரப் படையினர் அடிவைத்ததும் நேதாஜி போஸ் அவர்களுக்குப் பின்வரும் செய்தி அனுப்பினார்: "அதோ அந்த ஆறுகளுக்கும் காடுகளுக்கும் குன்றுகளுக்கும் அப்பால் தெரிவது நாம் பிறந்து விளையாடிப் புரண்டபூமி. அந்தத் தாய் நாட்டின் விடுதலைக்குப் போராடுவோம். வழியில் ஆபத்து வந்து விட்டால் வீரர்களாக மரணத்தையும் தழுவிக்கொள்வோம். நாம் மண்ணோடு மண்ணாய்ப் போனாலும் அந்த மண் படிந்த சாலை நமது லட்சிய பூமிக்குச் செல்லும் பாதையென்று ஆறுதல் கொள்வோம். சலோ டெல்லி"

இந்திய மண்ணில் இந்தியச் சுதந்திரப் படை அடிவைத்தவுடனே, அந்த வீரர்கள் தலை வணங்கிப் பக்தி செலுத்தியதும், 1944 ஜுலை மாதம் நேதாஜி மகாத்மா காந்திக்கு ரேடியோ மூலம் "தேசத் தந்தையே! இந்திய விடுதலையே நோக்கமாக நடைபெறும் இப்புனிதமான சுதந்திரப் போருக்கு உங்கள் ஆசியையும் வாழ்த்தையும் அருள வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்ததும் சரித்திரப் பிரசித்தமான நிகழ்ச்சிகள். காந்தியடிகளின் கொல்லா நோன்பிலும் கோழைக்கு இடமில்லை; சோர்ந்து சும்மா கிடப்பதற்கும் இடமில்லை. எனினும் அன்பு தவிர வேறு ஆயுதத்தையே நம்பாத காந்தியடிகளின் உள்ளம் தமது சத்தியாக்கிரகப் போராட்டத்தையே புனிதமான சுதந்திரப் போராகக் கருதியது. இந்தியர்

களுக்கு ஆங்கிலேயர் மீதுள்ள அவநம்பிக்கையே உரு வெடுத்துப் போனதுபோல் சுபாஷ் சந்திரர் இந்தியாவை விட்டு வெளியேறிப் போராடி வெற்றிபெற முயன்ருர். காந்தியடிகள் கண்ட மானிட இயல்பிலோ அத்தகைய அவநம்பிக்கைக்கு இடமில்லை. சுபாஷ் சந்திரரைப்போல் காந்தியடிகளும் அன்னிய ஆதிக்கத்தை வெளியேற்ற விரும்பி வெற்றியும் பெற்ருர்.

1942-ம் ஆண்டில் 'இந்தியாவை விட்டு வெளியேறு' (Quit India) என்ற தீர்மானம் காந்தியடிகளின் மேற் பார்வையில் நிறைவேற்றப்பட்டது. அதற்காகக் காந்தி யடிகளும் மற்றைத் தலைவர்களும் கைது செய்யப்பட்ட தும், 'வெள்ளையர் வெளியேற வேண்டும்' என்ற அந்த உணர்ச்சி தேசமெங்கும் பரவிவிட்டது. சிற்சில இடங் களில் ஆங்கில ஆட்சியே இல்லையென்ற நிலைமை கூடச் சொற்ப காலத்திற்கு ஏற்படலாயிற்று. அன்னிய ஆதிக் கத்தைக் கடுமையாகத் தாக்கியபோதிலும் காந்தியடிகள் அன்புகொண்டே தாக்கினுர். இந்தியர்களை வாழ்த்தியது போல் இவர் இதயம் அன்னியருக்கும் வாழ்த்து வழங்கியது. ஆனுல் இவரைப் பின்பற்றிக் கிளர்ச்சி செய்தவர்களெல் லாம் அடிகளின் பொன்னுள்ளத்திற்கிசைய அன்பு நெறி யில் நடந்துகொண்டனரென்று சொல்ல இயலுமா? இந்த 1942-ஆகஸ்டு புரட்சி ஒன்றில் தவிர, காந்தியுகத்தில் நடந்த மற்றைப் பெரு நிகழ்ச்சிகளிலெல்லாம் ராஜாஜிக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. 1942-ல் நடந்த இப்பெருங் கிளர்ச்சியையும் அரசாங்கம் ஒடுக்க முடிந்தது. சுபாஷ்சந் திரபோஸின் இந்திய தேசீய ராணுவமும் வெற்றிபெற வில்லை. எனினும், இனி இந்தியாவை அலட்சியம் செய்ய முடியாது என்ற நிலைமை இங்கிலாந்துக்கு ஏற்பட்டு விட்டது. இதற்கு ஒரு காரணம் இராணுவத்தினர் உள்ளிட்ட நம் மக்களின் மனப்பான்மையில் ஏற்பட்ட மாறுதல் எனக் கருதலாம்.

1942-ல் நடந்த நிகழ்ச்சிகளுக்குத் தாம் முழுப் பொறுப்பும் ஏற்பதாகவும், இந்திய தேசீய ராணுவம் குறித்துப் பெருமை கொள்வதாகவும் ஜவாஹர்லால் நேரு தெரிவித்தது, தேசமெங்கும் ஒரு புதிய உணர்ச்சியை எழுப்பியது. இந்திய தேசீய ராணுவத்தைச் சேர்ந்தவர் மீது டெல்லிச் செங்கோட்டையில் வழக்கு நடந்தபோது, அவர்களிடம் இந்தியப் பத்திரிகைகளும் பொது மக்களும் சிறப்பாக அனுதாபங் காட்டலாயினர். அரசாங்கத்தின் ராணுவமும் முனைந்து நின்று அனுதாபங் காட்டியதி லிருந்து, இந்திய ராணுவம் இனி அன்னியரின் கூலிப்பட் டாளமாக இராமல் தேச பக்தியுள்ள இந்திய ராணுவ மாக மாறிவிடுமென்பது புலனுயிற்று. இந்த அம்சத்துடன் ஒத்துழையாமை இயக்கத்தின் விளைவுகள் சேர்ந்து இறுதி யாகப் பலனளிக்கக் கூடிய காலமும் நெருங்கி வந்தது. ஒரு சமயம் நேதாஜி **பாங்காக்** ரேடியோவில் காந்தியடி களைக் குறித்துப் பேசும்போது, "இவர் இந்தியாவின் சுதந்திரத்திற்கு ஆற்றியுள்ள பெரும் பணிக்கு நிகராக வேருென்றை இவ்வுலகில் வேறெங்குமே காணமுடியாது" என்று குறிப்பிட்டது உண்மை தானே? 1944-ஆகஸ்டு மாதம் காந்தியடிகள் விடுதலையாஞர். 1945-ல் இரண் டாவது உலகப் பெரும்போர் முடிவு பெற்றது. இந்த யுத்தகாலம் உண்மையில் இந்தியாவுக்கு நற்காலம் தான்; வெளித் தோற்றத்திற்கு இருள் அடர்ந்திருப்பது போலத் தோன்றியபோதிலும் அருணேதயத்திற்கு முந்திய இருள் தான் அது.

1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் தேதி அரசப்பிரதி நிதி மௌன்ட் பாட்டன் பிரபு பிரிட்டிஷ் சர்க்காரின் அதிகாரத்தை இந்தியர் வசமாக மாற்றியதும், அத்தினம் சுதந்திர தினமாகக் கொண்டாடப்பட்டதும் இந்திய சரித்திரத்திலே ஓர் அற்புதம்போல் நிகழ்ந்தன. அன்று இரவு - பன்னிரண்டு மணி; "பல்லாண்டுகளாக நாம்

போராடிப் பெற முயன்ற சுதந்திரம் இந்த நன்னாளில் நமக்குக் கிடைத்திருக்கிறது. இப் போராட்டத்தின் தந்தையாகிய காந்தியடிகளின் ஆசி நமக்கு என்றும் உண்டு'' என்று பண்டித நேரு குறிப்பிட்டார். பண்டித நேரு இந்திய யூனியனின் அரசாங்கத்தை நிர்வகிக்கும் பிரதம மந்திரியானார். இந்திய மக்களின் விருப்பத்திற்கிணங்க மௌன்ட் பாட்டன் பிரபு மேலும் சில மாதங்கள் வரையில் கவர்னர் ஜெனரல் பதவி வகிக்க நேர்ந்தது. சமஸ்தான இலாகாவை மேற்கொண்ட ஸர்தார் படேல் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழிருந்த ஐந்நூறுக்கும் அதிகமான சமஸ்தானங்களை ஒன்று திரட்டி யூனியன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்து விட்டார். இதற்குச் சமஸ்தானாதிபதிகளின் மன மாற்றமும் நாட்டுப் பற்றும் ஸர்தார் படேலின் ஒப்பற்ற நிர்வாகத் திறனும் காரணமாகும்.

சுதந்திர இந்தியா, தனக்குரிய அரசியலை வகுத்துக் கொள்ளும் பொருட்டு அரசியல் நிர்ணய சபை ஒன்றைப் பாபு இராஜேந்திர பிரஸாதரின் தலைமையில் அமைத்துக் கொண்டது. இச்சபையின் உழைப்பினால் குடியரசுச் சட்டம் உருவாயிற்று. 1950-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26-ம் நாள் முதல் நமது தேசம் முழு உரிமை பெற்ற குடியரசு நாடாகி யிருக்கிறது. அன்றிருந்தே அரசியல் நிர்ணய சபை இந்தியப் பாராளு மன்றமாக அமைந்தது. பாபு இராஜேந்திர பிரஸாத் குடியரசின் தலைவராகிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார். இவரே நம் தேசத்தின் முதல் ஜனாதிபதி. 1930-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26-ம் நாள் நம் மக்கள், "முழு உரிமையே எங்கள் நோக்கம்" என்று சபதம் கூறி அச் சபதத்தை ஒவ்வொரு ஆண்டிலும் நினைவூட்டிக் கொண்டு வந்தனர். அச்சபதம் தொடங்கிய இருபதாம் ஆண்டாகிய 1950-ல் அதே ஜனவரி மாதம், அதே 26-ம்

நாளன்று இந்தியர்கள் முழு உரிமை பெற்ற இந்தியக் குடியரசின் மக்களாகி விட்டனர். இச்சுதந்திரத் திரு நாளும் ஓர் அற்புதம் போல் இந்திய சரித்திரத்திலே நிகழ்ந்திருக்கும் நிகழ்ச்சியல்லவா?

இச்சுதந்திரத் திருநாள் பழைய சரித்திரப் புகழ் பெற்றிருக்கும் டெல்லி மாநகரில் கொண்டாடப் பெற்ற போது, ஜனாதிபதி இராஜேந்திரரும் கடைசிக் கவர்னர் ஜெனரலான ராஜாஜியும் கொலு மண்டபத்தில் அமர்ந் ததும், அரசியல் நிர்ணய சபை அனுப்பிய அறிவிப்பை ராஜாஜி படித்துக் குடியரசின் தோற்றத்தையும் ஜனாதி பதியின் பெயரையும் அறிவித்ததும், உடனே ஜனாதிபதி இராஜேந்திரருடன் ராஜாஜி கை குலுக்கி அவரை அரி யணையில் அமரச் செய்து தாமும் பக்கத்தில் அமர்ந்ததும், இராணுவ வீரர்கள் தேசீய கீதம் இசைக்கப் பாராளு மன்றத்தினர் 'வந்தே மாதரம்' முழக்க ஜனாதிபதி பதவி யேற்றதும் இப்புதிய இந்தியா என்றும் மறக்க முடியாத காட்சிகளாகும். நம் நீண்ட கால சரித்திரத்திலே, ஒரே சுதந்திரக்குடியரசின் அமைப்பில் இந்திய மக்கள் கொண்டு வரப்பட்டது முதன் முறையாக அன்றுதானே நடை பெற்றது!

## அத்தியாயம் 12

# ஜவாஹரும் ராஜாஜியும்

"நாம் சுதந்திரத்தைச் சம்பாதித்துவிட்டோம்; சுதந்திரமாய் வாழத்தான் இன்னும் கற்கவில்லை" என்றும், "தேசபக்தி என்பதற்கு இன்று புது லட்சணம் வகுக்க வேண்டும். அதைப் புதிதாய் உணரவேண்டும். முன்னாட்களில் அது வெறும் போராட்டமாயிருந்தது; கிளர்ச்சியோடு அமைந்தது. இன்று கடின உழைப்பே தேசபக்தி; புது வீட்டைக் கட்டுவது போன்ற கடின உழைப்பு" என்றும் ராஜாஜி கூறியுள்ளார். உலகநிலையும் நாட்டின் நிலையும் காந்தியடிகளின் ஆன்மசக்தியும் போரின்றி ஆயுதமின்றி, அன்னிய வல்லரசின் மனமாற்றத்திற்கும் அதிகார மாற்றத்திற்கும் காரணமாகி நமக்குச் சுதந்திரப் புதுவாழ்வை அளித்திருக்கின்றன. எனினும், இந்தியன் யூனியன் என்றும், பாகிஸ்தான் என்றும் இரு கூறாக இந்தியா துண்டிக்கப் படுவதைத் தலைவர்கள் எதிர்த்து வந்தனர். கடைசியாக அவர்களும் எப்படியாவது வகுப்புக் கலகத்தைத் தவிர்த்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் பிரிவினையை ஒப்புக்கொண்டனர். "சேர்ந்து வாழும் குடும்பத்தில் சகோதரன் ஒருவன் பிரிந்து போய்த் தனி வாழ்வு நடத்தப் போகிறேனென்றால் அவனுக்குரிய பங்கைப் பிரித்துக் கொடுத்து விடுவதில் தவறில்லை" என்றார் ராஜாஜி.

இவர் மேற்கு வங்காளத்திற்குக் கவர்னராக நியமிக்கப்பெற்ற போது வங்காளம் முழுவதும் வகுப்புக்கலகத்தால் அமைதியின்றி வருந்தியது. அங்கு அமைதி ஏற்படுத்துவதற்காக மகாத்மா காந்தி பெரு முயற்சி செய்தார். ராஜாஜியின் பாரபட்ச மற்ற நல்லரசும் இராச

தந்திர மதிவன்மையும் மேற்கு வங்காளத்தில் அமைதியை நிலைநிறுத்துவதில் முழுவெற்றியும் பெற்றன. "காட்டு யானையைப் பார்த்திருக்கிறீர்களா? அது பொல்லாதது; நிரம்ப ஆற்றல் வாய்ந்தது; அதைப் பிடிப்பதும் அடக்குவதும் நமக்குப் பயன் படுத்துவதும் மகா சிரமமான காரியம். அரசியல் அதிகாரம் என்பது ஒருகாட்டுயானை. நாம் நிரம்பவும் கஷ்டப்பட்டு அதைப் பிடித்திருக்கிறோம். அதை அடக்கினால்தான் நமது நன்மைக்குப் பயன் படுத்த முடியும். அந்த வேலையைச் செய்யத் தேசம் இப்போது தயாரா யிருக்கவேண்டும்" என்பது ராஜாஜியின் உவம வாசகங்களில் ஒன்று.

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

என்பது தமிழர் பொதுமறை. சொல்லிய வண்ணம் செய்து முடிக்கும் திட்பமுடைய ராஜாஜி, அதிகாரம் என்ற காட்டுயானையை மேற்கு வங்க அமைச்சர்களின் நற்றுணையோடு அடக்கி ஆண்டு எல்லா வகுப்பினரின் நம்பிக்கைக்கும் உரியவரானார். இத்தகைய அரசியல் நிர்வாகத்திறன் மேலும் நன்கு புலனாகக்கூடிய வாய்ப்பு, மௌண்ட் பாட்டன் பிரபு கவர்னர் ஜெனரலாக இருந்த சமயத்தில் இவருக்குக் கிடைத்தது. அந்தக் கவர்னர் ஜெனரல் லண்டனுக்குப் போய்வரவேண்டி யிருந்ததால் தாற்காலிகமாய் இரு வார காலத்திற்கு ராஜாஜி ஆக்டிங் கவர்னர் ஜெனரலாக வேலை பார்க்க நேர்ந்தது. அந்தப் பதவியையும் பொறுப்பையும் திறம்பட வகித்தவர், கிளர்ச்சியும் போராட்டமுமா யிருந்த பழைய தேசபக்தியைப் புதிய நிர்வாகத் துறையில் பேராற்றலுடன் பயன் படுத்திக் கொள்வதிலும் வல்லுநரென்பது நாட்டு மக்களுக்கு நன்கு புலனாயிற்று. மௌண்ட் பாட்டன் பிரபு

விலகியதும் ராஜாஜியே இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகி அதை ஒரு ஜனநாயகப் பதவியாக வகித்து எளிய வாழ்க்கையும் வாழ்ந்து காட்டினர்.

காந்தியடிகள் 1948-ஜனவரியில் கொலையுண்டு அமரரானதும், " உலகிற்கு ஒளி வீசிய நந்தாவிளக்கு அணைந்து போயிற்று" என்ருர் ராஜாஜி. ஜடாயுவின் மரணத்தைக் கம்பன் 'தெய்வ மரணம்' என்று கூறுவதுபோலத் தான் காந்தியடிகள் பிரார்த்தனைக் கூட்டத்திற்குச் செல்லும்போது கொல்லப்பட்டதையும் குறிப்பிடவேண்டும். இம் மரணம் குறித்து ராஜாஜியின் உவம வாசகம் வருமாறு: "மகாத்மா இறந்தார். ஆனுல் அவர் என் மூலமாகவும் நேருவின் மூலமாகவும் வாழ்கிருர் என்று சொல்லுகிறீர்கள். இல்லை; அவர் பொதுமக்கள் அனைவர் வாயிலாகவும் வாழ்கிருர். ஒரு சிட்டிக்கை உப்பை நீரில் போட்டால் அத்தனை நீரும் உப்பாகிறது. மகாத்மாஜி உப்பைப் போன்றவர்." இது உண்மையாயினும் காந்தியடிகளின் ஆன்மசக்தி, சிறப்பாக ஜவாஹர்லால் நேரு வாயிலாகவும், ராஜாஜி வாயிலாகவும், பொன்னினும் அருமையான உள்ளம் படைத்த பாபு ராஜேந்திரர் வாயிலாகவும் இன்னும் சுதந்திர இந்தியாவுக்கு அரணுக இருக்கிறது என்பதில் ஐயமில்லை. எஃகினும் வலிமை வாய்ந்த ஸர்தார் படேல் வாயிலாகவும் ஐக்கிய இந்தியாவுக்குத் துணையாயிற்று. "நான் பதினுன்கு ஆண்டுகளாக உங்களுடன் நெருங்கிப் பழகி வந்தபோதிலும், என்னுல் அறிந்து கொள்ள இயலாத ஒரு சக்தி உங்களிடம் மறைந்திருக்கிறது என்பதை நினைக்க எனக்கு அச்சமாயிருக்கிறது" என்று ஜவாஹர் ஒரு சமயம் காந்தியடிகளை நோக்கிக் கூறியதுண்டு. அடிகளின் கொள்கை – நுணுக்கங்கள் அநேகருக்கு விளங்காமலிருந்தபோதிலும் பின்பற்றி ஒழுகுதல் எல்லார்க்கும் இயலும் என்ற கருத்தையும் ஜவாஹர் வேருெரு சமயம் வெளியிட்டிருக்கிருர்.

இத்தகைய குருவுக்கும் சீடருக்கும் இடையேயுள்ள உறவு குறித்து, "சீடரின் அறிவு போராடுகிறது; இதயமோ அடிகளைச் சுற்றி வலம் வருகிறது!" என்று கூறுவோருண்டு. இருவருக்குமிடையே கருத்துவேற்றுமை உண்டு; சில விஷயங்களில் அடிப்படையான கருத்து வேற்றுமைகளும் உண்டு. உதாரணமாக 1934-ம் ஆண்டில் பீஹாரில் பெரிய பூகம்பம் ஏற்பட்டபோது, காந்தியடிகள் தீண்டாமைப் பாவத்திற்கு ஆண்டவன் அத்தண்டனையை விதித்ததாக ஓர் அறிக்கையில் குறிப்பிட்டார். உடனே கவி ரவீந்திரநாத தாகுர் காந்தியடிகளின் அக்கொள்கையை மறுத்தார். விஞ்ஞான மனப்பான்மையுள்ள பண்டித ஜவாஹரும் அக்கொள்கையைப் பரிகசித்துக் காரசாரமாக எழுதியதுண்டு. காந்தியடிகளுடைய சமயக்கொள்கையை அரசியற் கொள்கையிலிருந்து பிரித்தல் இயலாது. சமயத்தின் துணை கொண்டுதான் தாம் வாழ்க்கையில் முன்னேற இயன்றதென்பதைக் காந்தியடிகள் வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருக்கிறார். ஜவாஹர்லால் தமது சுயசரிதத்திலே, "குருட்டு நம்பிக்கை, பிற்போக்கு, சாரமற்ற கொள்கை, பகைமை யுணர்வு, மூடப்பழக்க வழக்கங்கள், பிறரைச் சுரண்டுதல் முதலியன நிலைபெறுவதற்காக மதம் உபயோகிக்கப்படுவதை நான் பார்க்கிறேன்......தற்காலத்தில் சமயம் என்பது, அதன் பழைய வரலாறு எப்படியிருந்தபோதிலும், சாரமற்ற ஒரு சூனியமாகவே காணப்படுகிறது. மேலைநாட்டு மதங்களின் நிலைமையும் இது தான்" என்று கூறியுள்ளார். இத்தகைய கொள்கையுள்ள ஜவாஹரை நாத்திகச் சார்புள்ளவரென்று கருதுவோருமுண்டு; ஆனால் இது சரியன்று. ஆன்ம சக்தியைக் குறிக்கும் அக வளர்ச்சி எவ்வளவு முக்கியமென்று காந்தியடிகள் நினைக்கிறாரோ, அவ்வளவு முக்கியமாகப் புற நிகழ்ச்சிகளையும் புற வளர்ச்சியையும் கருதுபவர் ஜவாஹர்லால். பொருளாதார

நெருக்கடிக்கு இரையாகி யுள்ளவர்கள் அக வளர்ச்சி பெற்று ஆன்ம சக்தி பெறுவது எப்படி என்பது ஜவாஹரின் கேள்வி. அகவளர்ச்சிக்கும் புறச்சுதந்திரம் வேண்டியதுதானே ?

வாழ்க்கை – வளம் பெருதவர்களும், தொழில், வாணிபம், விஞ்ஞானம் முதலான துறைகளில் பிற்போக்குடையவர்களும் ஆன்ம சம்பத்தைப் பெற்றிருப்பதாகக் கருதித் தங்கள் தாழ்வை மறந்து ஆன்ம திருப்தி அடைவது பெருந் தவறு என்பது பண்டித ஜவாஹரின் கொள்கை. சமயங்களின் சாரமான சன்மார்க்கக் கொள்கையை இவரிதயம் மறுக்கவில்லை யென்பதை இவரது சுயசரித்திரம் இனிது புலப்படுத்துகின்றது. இதனுல்தான் ஜவாஹருக்குக் காந்தியடிகளின் சத்தியாக்கிரக இயக்கத்தில் கலந்து தொண்டாற்றுவது சாத்தியமாயிற்று.

ஜவாஹர் ஒரு சமயம் சாந்தி நிகேதனத்தில் கவி ரவீந்திரரைச் சந்தித்தபோது அவர் இவர் கைமீது தம் கையை வைத்து, "இளைஞரேறே! இந்தியாவின் வருங் காலம் உம்மிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது" என்ருர். அக்கவிஞர் ஒரு தீர்க்கதரிசியின் தொலையுணர்வுடன் அப்படிச் சொன்ஞர் என்றே கருதலாம். ஜவாஹரைக் காந்தியடிகளும் 'மக்கட் குலத்தின் ஒரு மாணிக்கம்' என்று கூறி, இவரைப் பெற்ற நாடு பேறு பெற்றிருக்க வேண்டுமென்ருர். இந்தியாவின் மேன்மைக்கு உழைப்பது போல் உலக சமாதானத்திற்கு இன்றும் உழைத்து வருகிருரல்லவா? இவரைத் தலைவராகப் பெற்றிருப்பது இந்தியாவின் பேறு மட்டுமல்ல ; ஆசியாக் கண்டத்திற்கே ஓர் அரும் பேறுதான். இவர் காந்தியடிகளின் ஆன்ம சக்தி குறித்துத் தமது சுயசரிதத்தில் குறிப்பிடுகிருர். மெலிந்து குறுகிய மேனியில் எத்தகைய பெரும் புறத் தோற்றமுள்ள சக்திகளையும் எதிர்க்கத்தக்க திண்மை குடிகொண்டிருப்பதை வியந்து பாராட்டுகிருர். "கவர்ச்சி

யில்லாத அவயவங்கள்; இடுப்பிலே ஒற்றைத் துணி; ஆனால் இவரிடம் ஓர் இராச களை இருக்கிறது" என்கிறார். "அடக்கமாயிருக்கிறார்; ஆனால் எப்படியாவது கீழ்ப் படிய வேண்டியதுதான் என்று சில சமயங்களில் நமக்குத் தோன்றுமாறு அதிகாரம் செலுத்தவும் வல்லவர்" என் றும் கூறியுள்ளார். காந்தியடிகளின் 'அமைதி நிறைந்த ஆழமான கண்களை'க் குறித்தும், இதயத்தை ஊடுருவிச் சென்று உணர்ச்சிகளைத் தட்டி யெழுப்பும் சொற் களைக் குறித்தும் ஜவாஹர் எழுதியிருப்பதிலிருந்தே, காந்தியடிகளின் ஆன்மசக்தி ஜவாஹரை எப்படி ஆட் கொண்டிருக்கிறது என்பதை ஊகித்துக் கொள்ளலாம். காந்தியடிகளின் சில கொள்கைகளைப் பிற்போக்குள் ளவையென்று ஜவாஹர் கருதிய போதிலும், "செய லிலோ பெரும் புரட்சிக்காரர்; எனவே சாதாரணமான தருக்க முறையில் இவருடைய செயல்களைக் கவனிக்க இயலவில்லை" என்கிறார். மகாத்மாவே இந்தியாவின் உண்மையான பிரதிநிதியென்றும், "வெறும் பிரதிநிதி யாக மட்டும் இல்லை; இந்திய மக்களின் இலட்சிய புருஷ ராகவும் திகழ்கிறார்" என்றும் கூறியுள்ளார். "தமது ஆசைகளையும் கோப தாபங்களையும் அடக்கித் தூய்மைப் படுத்திப் பாரமார்த்திகத் துறையிலே செலுத்தியவர்; ஏதோ ஒரு மின்சார சக்திபோல் அனைவரையும் தன்வச மாக இழுக்கும் தன்மையாளர்......விவசாய இந்தியாவின் சாதாரணத் துடிப்பைக்கூட கவனிக்கிறவர்" என்றெல் லாம் காந்தியடிகளைக் குறித்து ஜவாஹர் எழுதியிருப்பதி லிருந்து, ஜவாஹரின் உண்மையான அகநிலையையும் நாம் ஊகித்து அறிந்து கொள்ளலாமல்லவா?

புரட்சி மயமான சீர்திருத்தங்களைச் செய்துகொண்டு புதிய உரன் பெற்றுச் சுதந்திர இந்தியா முன்னேறு வதற்குப் பழம் பெருமை முட்டுக்கட்டையாகி விடக் கூடாது என்பதே ஜவாஹர்லால் நேருவின் கவலை.


C. Rajagopalachari

பழைய இந்தியாவின் பெருஞ்செல்வங்களான புத்தரின் தத்துவங்களும் கீதையின் போதனைகளும் தமக்கு வழி காட்டிகளாக உதவியிருக்கின்றன என்று புதுடெல்லி-பிர்லா மந்திரத்தில் நடைபெற்ற கீதா ஜயந்தி விழாவில் பண்டித ஜவாஹர்லால் நேரு ஒப்புக்கொண்டிருக்கிறார். பழைமை நமக்குச் சுமை மட்டுமல்ல; நம்மை உற்சாகப் படுத்தும் பரிசாகவும் உதவக்கூடும்; பழைமை அமுக்கி அமிழ்த்திவிடத்தான் செய்யுமென்பதில்லை; அது நாம் நீந்திக் கரையேறுவதற்குத் துணைபுரியக்கூடும். பழைய பழக்க வழக்கங்களிலும் சமூக ஆசாரங்களிலும் உள்ள தீமையான அம்சங்களைப் புரட்சிகரமாகவும் மாற்றித்தா னாக வேண்டும்; எனினும் அவசரமும் ஆத்திரமும் கொண்டு முள்ளும் புதரும் நிறைந்த குறுக்கு வழிகளில் விழுந்துவிடாமல் பெருநெறியாகிய அறநெறி பிடித்து ஒழுக வேண்டும். இது ஜவாஹரின் தேர்ந்த கொள்கை. புத்தர் பெருமானுக்குப் பின் அஹிம்ஸா தர்மத்தைக் கொண்டு கோடிக்கணக்கான உள்ளங்களையும் ஒருங்கே வசீகரித்துவிட்ட காந்தியடிகள் நுண்ணறிவாளரான ராஜாஜியை வசீகரித்தது போல் விஞ்ஞானப் புது நாகரிக புருஷரான ஜவாஹர்லாலையும் வசீகரித்துவிட்டார்.

இவரை மகாத்மாவுக்கு அடுத்த தலைவரென்று போற்றிவரும் மக்கள் ராஜாஜியைச் சிறந்ததொரு நிர்வாகத் தலைவராக மதித்து வருகிறார்கள். காந்தியடி களின் சத்தியாக்கிரகத்திற்கு ராஜாஜியைப் போல் உரை (பாஷ்யம்) கண்டவர் வேறு யாருமில்லையெனினும், கீதா சாரியனுக்குப் பார்த்தன்போல் பலருக்கும் மனக்கண் முன் நின்றவர் ஜவாஹரே எனக் கருதுவது மிகையா காது. ராஜாஜி காந்தியடிகளின் கொள்கைகளைத் தமது பேருரைக்கிணங்க அங்கீகரித்தார். மூலம் மாபாஷ்யத் திற்கு இணங்க மறுத்தபோது ராஜாஜி விலகி நின்றார். ஜவாஹரோ மாறுபட்ட போதிலும் சீடன் குருவைப்

பின்பற்றுவதுபோல் அடிகளைப் பின்பற்றி ஒழுகினர். 1942-ம் ஆண்டு ஆகஸ்டுப் புரட்சி இயக்கத்தில் ராஜாஜி கலந்து கொள்ளாமல் விலகி நின்றதும், வல்லபாய் படேல், இராஜேந்திர பிரஸாத் முதலான வீரர்களுடன் ஜவாஹர்லால் சிறைக்கோட்டம் புகுந்ததும் இருவருக்குமுள்ள மனப்பான்மையைப் பிரதிபலிக்கும் செயல்களாகக் கருதப்படலாம். எனினும் ஜவாஹரும் ராஜாஜியும் பழைய இந்தியாவின் பெருமைக்கும் பண்பாட்டுக்கும், புதிய இந்தியாவின் மேன்மைக்கும் வளர்ச்சிக்கும் அறிகுறியாக மதிக்கப்பட வேண்டியவர்களே.

ஜவாஹர்லால் நேருவின் அறுபதாம் ஆண்டு விழாவின்போது கவர்னர்ஜெனரலாக இருந்த ராஜாஜி ஒரு பூச்செண்டைப் பரிசாக அனுப்பி வைத்தார். பண்டித நேருவின் இளமையுணர்வும் உற்சாகமும் தேசப்பணியில் ஆர்வமும் நீண்டகாலம் வாடாத பூச் செண்டாகப் பரிமளிக்க வேண்டும் என்பது அப்பரிசின் உட்பொருளெனக் கருதலாம். சிக்கியர் ஜவாஹருக்குக் கத்தியைப் பரிசாக அளித்தனர். இப்பரிசு ஜவாஹரின் வீரத்திற்கு ஒரு நல்ல நினைவுக் குறி. சுதந்திர இந்தியாவின் மக்களையும் தொண்டர்களையும் ஓர் அன்புப் பூச்செண்டாக மகிழ்விக்கும் பண்டித நேரு, "நான் உயிர் வாழும் வரை இப்படியே தேசப்பணி புரிவேன். ஆனால் எப்போதாவது தேசம் நெறி தவறிச் செல்லுகிறதென்று தெரிந்தால், உடனே என்னுலியன்றவரை எதிர்த்து நிற்பேன்" என்று சிக்கியர்களுக்கு உறுதி கூறினர்.

சுதந்திர இந்தியாவுக்குத் தொண்டு பூண்டு உழைக்க விரும்புவோருக் கெல்லாம் ஜவாஹர்லாலும் ராஜாஜியும் தக்க வழிகாட்டிகளேயாவர். ஜவாஹர்லாலுக்குத் தமிழகத்தின் மீதும் தமிழ் மக்கள் மீதும் அன்புண்டு; இவர் தமிழ் மக்களின் தேசபக்தியையும் தமிழகத்தின் தொன்மை மாட்சியையும் பாராட்டியுள்ளார். ராஜாஜி

யின் தமிழகக் காதலைச் சொல்லவா வேண்டும்? ஜவாஹர் சொல்லுகிறார்: "இந்தியர்களின் உள்ளத்திலே ஒரு போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. எப்பொழுதும் போல் இந்தியா பழைமைக்கும் புதுமைக்கும் இடையே சமரசம் தேடுகிறது. தற்கால நாகரிகம் தடுக்க முடியாமல் முன்னேறிப் பழைய வழக்கங்களைத் தாக்கி வருவது கண்டும், இதை இன்றியமையாத வளர்ச்சி நிலைதான் என்று ஒப்புக்கொள்கிறது இன்றைய இந்தியா. ஒப்புக்கொண்டு, புதிய விஞ்ஞான நாகரிகத்தைத் தன் அடிப்படையான கொள்கைகளுடன் இசைத்துக்கொள்ள விரும்புகிறது. மனிதனின் அந்தராத்மாவுக்கும், சதா மாறிக்கொண்டிருக்கும் சுற்றுப்புறங்களுக்கும் ஓர் ஒற்றுமையை நிலைநாட்ட முயல்கிறது இந்தியா." இந்த உயர்ந்த இலட்சியத்தின் பேராசியர் காந்தியடிகள்; அருமைச் சீடர் ஜவாஹர்லால் நேரு; விரிவுரையாளர் ராஜாஜி.

கிளைவ் துரையின் விதியும் மதியும், பிளாசி யுத்தத்தால் 1757-ல் ஆங்கில ஆட்சியின் கால்கோள் விழாவை நடத்தின. சுதந்திர இந்தியாவின் கால்கோள் விழாவை நடத்திக் காட்டியது இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலான ராஜாஜியின் நல்லூழ். இருவரும் நமது சென்னையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள்; கிளைவ் சென்னைக் கோட்டையில் குமாஸ்தாவாக இருந்து போர்வீரனானவன்; ராஜாஜி சென்னையில் வழக்கறிஞராக இருந்தும், சென்னைக் கோட்டையில் முதலமைச்சராகியும் அரசியல் ஞான வீரராகத் திகழ்பவர். வயது ஏற ஏறத் துரு ஏறாமல் தீட்டிய கத்திபோல் சுடரும் அறிவுமாட்சியுள்ள ராஜாஜி, வயதிலும் காங்கிரஸுக்கு மூத்தவர்; அறிவுரை பகர்வதிலும் மூத்த தமையனாராக ஒழுகி வந்திருக்கிறார். கிளைவுக்கும் இவருக்குமிடையேயுள்ள சுமார் இருநூற்றாண்டுத் தூரத்தைச்சரித்திர யாத்திரை செய்து

பார்த்தும் பொருள் பொதிந்த நிகழ்ச்சிகளையும் காட்சி களையும் உண்மைகளையும் கண்டறிந்து கொள்வது தேசத் தொண்டில் முனைந்து நிற்க விரும்பும் இளைஞர்களுக்கெல் லாம் நலம் தரும் என்பது திண்ணம்.